அடமானக்
என் பணி கடன் செய்து கொடுப்பதே!
CENTUM
Optima Mortgages Inc.
Das Narayanasamy AMP
Lic# M08007147 Mortgage Agent
Cell: 416-543-6614
Tel: 905-470 2845 Fax: 905 470 2219
E-mail: das@centumoptima.com
Website: centumoptima.com



தாய் வீடு

THAIVEEDU மார்ச் 2009 HOME & LIVING



FREE REAL ESTATE CLASSES
வீடு வாங்க, விற்க மற்றும் வருமான வரி, அடமானக் கடன் சம்பந்தமான சகல ஆலோசனைகளுக்கும் அழையுங்கள்
SELVA VETTYVEL
Broker of Record
Cell: 416.568.4301
Bus: 905.201.9977
HomeLife Future Realty Inc. Brokerage
205-7 Eastvale Drive, Markham, ON L3S 4N8
*Independently Owned and Operated, REALTOR®


# ஒன்ராரியோவில் கடுங்குளிர்



ஒன்ராரியோவில் வழமைக்கு மாறாக அதிகரித்த குளிர் கடந்த மாதம் காணப்பட்டது. கடந்த 27ம் திகதி பகலில் **9˚C** ஆகக் காணப்பட்ட வெப்பநிலை அன்றையதினம் இரவு **-16˚C** ஆக வீழ்ச்சியடைந்தது. ஒரே நாளில் **25˚C** வீழ்ச்சி வழமையாக ஏற்படும் ஒன்றல்ல என வானிலையாளர்கள் தெரிவிக்கின்றனர். மார்ச் மாதத்தின் காலநிலை எதிர்வுகூறல்களும் நம்பிக்கையூட்டுவனவாக இல்லை. குளிர்காலத்தின் 20வீதமான பனிப்பொழிவு மார்ச் மாதத்திலேயே இடம்பெறுகிறது. வரும் ஏப்பிரல் மாதமும் வழமைக்கு மாறாக அதிக குளிருடன் கூடியதாகவே இருக்கும் எனவும் கூறப்பட்டுள்ளது. உலகப் பொருளாதாரம் போலவே இவ்வருட காலநிலையும் உள்ளதாகப் பலரும் பேசிக்கொள்கிறார்கள். அதிகாரபூர்வமாக வசந்தகாலம் ஆரம்பிக்க இன்னும் சில நாட்களே (மார்ச் 21) உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. படத்தில் கிருபா கந்தையா.

படம்: கருணா


RAMAN APPLIANCES
Air Conditioning & Heating
எமக்கூடாக Furnace வாங்கும்போது ஒன்ராரியோ அரசு வழங்கும் Rebateஐப் பெற்றுக்கொள்ளலாம்
General Contractors For:
• Air Conditioning • Gas Furnaces • Central Vacuum
• Air Cleaners • Gas Fireplaces • Garage Door Openers
• Security Alarm
Tel: 416.332.1989
Cell: 647.893.4414
Raman Chelliah
President
3021 Markham Rd., Unit 51,
Scarborough, ON - M1X 1L8

THE LAW OFFICE OF
Gary Anandasangaree
Tel: 416 321 1100 Fax: 416 321 1107
gary@galaw.ca

BUYING, SELLING,
INVESTING & MORTGAGE NEEDS CALL
SUN SANMUGATHAS
Broker & Manager
One stop shopping for all your mortgage & realestate needs.
Buying - Selling - Investing PROPERTY MAX Realty Inc. Brokerage
Dir: 416.948.0693
Bus: 416.291.3000
PMCI MORTGAGE CANADA

விபத்து
AAA
நேர்த்தியான நேர்மையான சேவைகளுக்கு.....
Accident Claim Services
Theven Kankesu
Tel: 416-720-6587
Fax: 416-849-5767

Buying - Selling - Investing PROPERTY MAX Realty Inc. Brokerage
PMCI MORTGAGE CANADA
One Source For Many Type of Properties & Mortgages
Mohan Subramaniyam
Broker of Record
416.321.2300

இனிய இல்லம் ஒளிமயமான எதிர்காலத்திற்கு அடித்தளம்
மகேன் சிங்கராஜா
Sales Representative
Direct: 416.302.7283 (SAVE)
E-mail: msingarajah@trebnet.com
web: www.mahenonline.com
RE/MAX Vision Realty Inc., Realtor
2210 Marham Road, Unit-1, Toronto, ON M1B 5V6
Tel: 416.321.2228, Fax: 416.321.0002

வீடு வாங்க, விற்க, வீட்டுக்கான பெறுமதியை(Appraisal) சட்டபூர்வமாக மதிப்பிட்டு அறிக்கையை பெற்றுக்கொள்ள தாமதிக்காது உடனே அழையுங்கள்.
www.chainc.ca
E-mail: chai@chainc.ca
Bus: 905-201-0929
Fax: 905-201-8482
CHAI CANADIAN HOME APPRAISALS INC.
Century 21
Affiliate Realty Inc.
Bus: 416-290-1200
S.K. Bales, CRA, CAR, MVA, FRI, CRES.
416.801.3219 (Cell)



வீடும் வீடுசார் விடையங்களுக்குமான பத்திரிகை


R&S AUTO SALES
HONDA - TOYOTA - GM MINI VANS ON THE SPOT FINANCING
சிறந்த சேவைக்கான பல விருதுகளைப் பெற்ற வாகன விற்பனை முகவர்
Tel: 416.412.3838
Fax: 416.412.1174
5310 Finch Ave, Unite 23, Scarborough
between Markham and middlefield
Radha


வீடு வியாபாரம் வாங்க விற்க நாடுங்கள்
• Residential • Industrial
• Commercial • Investment
HOMELIFE HIGHER STANDARDS
Professional & Friendly Services
Logan Appulingam
Sales Representative
Direct : 416-200-6120
Email : logan7@rogers.com
HomeLife/GTA Realty Inc., Brokerage*
1711 McCowan Road, Suite 206, Toronto, ON. M1S 3Y3
Bus.: 416-321-6969 Fax : 416.321-6963
Highest Standard Agents.... Highest Results!...


416.200.5470
ELECTRICAL - PLUMBING & DRAINAGE SERVICES
SANTHA
www.santha.ca
416-200-5470


மனம் பூரிக்க மங்களகரமான மனையைத் தேர்ந்தெடுங்கள்...
வருமானவரிச்சேவை
தனிப்பட்ட, வியாபார வருமான வரி
GST, PST RETURN, PAY ROLL
தேவைகளுக்கும் ஆலோசனைகளுக்கும்
இன்றே அழையுங்கள்
Year Round Service
வீடு வாங்கவும் விற்க்கவும்
குறைந்த வட்டி விகிதத்தில்
மோட்கேஜ் ஒழுங்கு செய்வதற்கும்
அழையுங்கள்
Ravi. Paramu
Broker
HomeLife Today Realty Ltd., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto, ON, M1P 4S6
Bus: 416-298-3200 Direct: 416-262-4176


வீடு வியாபார ஸ்தாபனம்
வாங்க விற்க
Logan Manikavasagar
Broker
Direct : 416.708.9903
Century 21
Percy Fulton Ltd. Brokerage*
Email : sales@loganhotproperties.com
Your #1 Choice
Kalai Logan
Sales Representative
Direct : 416.697.9903
Buy or Sell Your Properties? Real Estate is My Job...Worry Free for you...


HIGHPOINT LASER
100 IRONSIDE CRESCENT, UNIT #10, TORONTO, ONT M1X 1M9
Toll Free: 1.877.281-9997 • Fax: 416-297-6113
www.HighPointLaser.ca • email: Sales@HighPointLaser.ca
Brand Name Toner Cartridges for
Copy Machines
Laser Printers
Fax Machines.
brother EPSON DELL hp
LANIER LEXMARK Panasonic IBM
SAMSUNG PitneyBowes XEROX
SHARP Canon
1. TN 350 - $45
2. Q7551X - $70
3. Q6000 - $50
4. E250 Toner - $60
5. FX-10-104 - $45
6. QU6511A - $60
WE RECYCLE
Lower Cost - 100% Guaranteed - Call For Delivery - 416-297-9994

## 'கிபூட்' கிராமங்கள்

வன்னியில் ஒரு குறுகிய பரப்பளவில் உயிர் வாழ்வதற்காகத் துடித்துக் கொண்டுள்ள பல்லாயிரக் கணக்கான தமிழர்கள் மிகப் பாரிய நெருக்கடியையும் மனிதப் பேரவலத்தையும் சந்தித்துக் கொண்டுள்ளனர்.

மிகவும் குறுகிய பிரதேசத்திற்குள் உணவோ, தங்குமிடமோ, சுத்தமான குடிநீரோ, சுகாதார வசதிகள், மருந்துகளோ அற்ற நிலையில் இவர்கள் யுத்த நடவடிக்கைகளால் முடக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு பொதுமக்கள் மனிதாபிமான உதவிகளில் இருந்து திட்டமிட்டு ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளமையை ஏற்றுக் கொள்ள முடியாது என்று ஐ.நா. சபை, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், மனித உரிமைக் கண்காணிப்பகம், பொதுநலவாய மனிதஉரிமைகள் திட்டம் என்பன அறிவித்துள்ளனர்.

இந்த நிலையில் இந்த மக்களை அங்கிருந்து பலாத்காரமாக வெளியேற்றி இலங்கை அரசிடம் ஒப்படைக்கும் திட்டம் ஒன்று தீட்டப்படுகின்றது.

இலங்கை இராணுவத்தின் கைகளுக்குள் போகாமல் தப்பி வாழ விரும்பும் மக்களை 'மனிதாபிமானம்' என்ற பெயரில் அங்கிருந்து வெளியேற்றி இலங்கை அரசிடம் ஒப்படைக்கத் திட்டமிடுவதும், துணைபோவதும் இலங்கை அரசின் இன அழிப்புக்குத் துணை போவதாகும்.

அண்மையில் இஸ்ரேல் சென்றிருந்த இலங்கை அதிபரின் ஆலோசகரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பசில் ராஜபச்ச 'கிபூட்' கிராமங்களை இஸ்ரேலிய அரசு எவ்வாறு உருவாக்கி வருகின்றது என ஆராய்ந்து வந்துள்ளார். இலங்கை அரசாங்கமும் 'கிபூட்' கிராங்களை (Kibbutz Village) உருவாக்கும் திட்டங்களுக்கான முயற்சியில் ஈடுபட்டு வருகின்றது என்பது இதன்மூலம் இன்னும் உறுதிப்படுத்தப்படுகின்றது.

இஸ்ரேலியப் படைகள் பாலஸ்தீன மக்களை இடம்பெயர வைத்து, அவர்களை இராணுவப் பாதுகாப்புடன் அகதிமுகாங்களில் நீண்ட காலம் தடுத்து வைக்கின்றது. இதே நேரத்தில் பாலஸ்தீன மக்களின் சொந்த நிலங்களில் இஸ்ரேலியர்களை இராணுவப் பாதுகாப்புடன் குடியேற்றி அந்த மக்களுக்குத் தேவையான சகல வசதிகளையும் உருவாக்கிக் கொடுத்து சிறு சிறு கிராமங்களை அமைக்கும் புதிய குடியேற்ற முறையைத் தான் 'கிபூட்' கிராமங்கள் என அழைக்கப்படுகின்றது.

இதே போல வன்னியில் யுத்த முன்னெடுப்புகளால் மக்களை இடம்பெயர வைத்து, அவர்களை நீண்ட காலம் அகதி முகாம்களில் அடைத்து வைத்துக்கொண்டு, தமிழர் நிலங்களில் இலங்கைப் படையினரின் பாதுகாப்புடன் சிங்களவர்களைக் குடியேற்றும் திட்டத்தை நடைமுறைப்படுத்த இனவாத இலங்கை அரசு தயாராகிவிட்டது என்பதை நாம் சர்வதேசத்தின் முன்னால் அளுத்தமாக தெரிவிக்கவேண்டும்.

தமிழர்களின் பாரம்பரிய நிலங்களில் சிங்கள குடியேற்றங்களை நிலை நிறுத்த முயலும் சிங்கள அரசின் பேரினவாத திட்டத்திற்கு துணைபோகாதீர்கள் என்றும் சர்வதேசத்திடம் தொடர்ந்து வேண்டுகோள் விடுக்கவேண்டும்

பெயர் தோற்றாத கட்டுரைகளுக்கு ஆசிரியரே பொறுப்பு. கனடியத் தமிழ் வானொலியில் ஒலிபரப்பாகி பின்னர் எமக்குத் தரப்பட்ட விளம்பரங்கள் இலவசமாகப் பிரசுரமாகின்றன. அவற்றின் சரிபிழைகளுக்கு தாய்வீடு பொறுப்பல்ல. ஏனைய விளம்பரங்கள் இலவசமல்ல. ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியோரே பொறுப்பு.

கனடாவில் நடைபெறும் நிகழ்வுகளைப் பார்ப்பதற்கும்,
உங்கள் நிகழ்வுகளைப் பதிவதற்கும்.
www.inayam.net
416 400 6406

## இம் மாதத்திற்குரிய முக்கிய குறிப்புக்கள்

மார்ச் மாதக் குறிப்புகள்

- பகல்வெளிச்ச நேரத்தை சேமிப்பதற்கான (Daylight saving) நேரமாற்றம் இம்மாதம் 8 ஆம் திகதியாகும். இதனை நினைவில் வைத்திருங்கள்.
- School March Break இம் மாதம் 13ம் திகதியில் இருந்து 22ம் திகதி வரை, இதை பயனள்ளதாக மாற்ற முன் ஏற்பாடு செய்யுங்கள்.
- உங்கள் வருமானவரியை தயார்படுத்துங்கள் அல்லது வருமானவரியை நிவர்த்தி செய்வதற்கான வேலைகளைச் செய்து முடியுங்கள்.
- உங்கள் கம்பளங்கள் (Carpets) மற்றும் கால்துடைப்பான்களை (Rug) துப்பரவு செய்யுங்கள்
- திரைச்சேலைகளை vacuum அல்லது Steam அல்லது dry clean செய்யுங்கள்.
- வெப்பமேற்றும் மற்றும் குளிராக்கும் (Heating and Cooling System) இன் வெளிப்பகுதியில் இலைகள் மற்றும் ஏனைய அழுக்குகள் இருக்கிறதா என பார்த்து சுத்திகரியுங்கள்.
- சுவர்கள், நிலப்பகுதி, தளபாடம் போன்றவற்றை Vacuum செய்யுங்கள்.
- கதவுக்குமிழ்களை கீறலை ஏற்படுத்தாத தூய்மையாக்கிகளைக் கொண்டு துப்பரவு செய்யுங்கள்.
- கொதிகலன்கள் (Boilers) மற்றும் கனலடுப்பில் வைக்கப்படும் பாத்திரங்களைத் (Oven drip pans) துப்பரவு செய்யுங்கள்.
- வெப்பமேற்றியின் (Gas heater) புகை மற்றும் காற்று வெளியேறும் குழாய்களில் அழுக்கு மற்றும் தூசுகள் இருக்கின்றதா என்பதை சரிபார்த்து அகற்றுங்கள்.
- குளிர்காலத்திற்கென அமைத்த யன்னல்களை (Windows) அகற்றுங்கள்.
- வீட்டின் வெளிப்புறப் புற்தரை மற்றும் பூந்தோட்ட பாத்திகளை வசந்தகாலத்திற்கு ஏற்றதாக மாற்றி அமையுங்கள்.
- புற்தரைகளில் மீண்டும் விதையிடுங்கள்
- செடிகள், மரங்களை அவை பூக்கத் தொடங்குமுன்பாக அளவோடு கத்தரியுங்கள்.
- குளிரான காலத்தில் வளரக்கூடிய வெங்காயம், உருளைக் கிழங்கு, கோவா, கரட் போன்ற காய்கறிகளை தோட்டத்தில் பயிரிடுங்கள்.
- விதைகளை விதைக்க முன்பாக அல்லது தாவரங்களை நாட்ட முன்பாக திராட்சைக் கொடி மற்றும் ஏறுகொடித் தாவரங்களை படரவிடக்கூடிய கொடிக்கால்களை நாட்டுங்கள்.
- உங்கள் வீட்டைச் சுற்றிலும் மற்றும் நடைபாதைகளில் மின்விளக்குகள் சரியாக எரிகின்றதா எனச் சரிபாருங்கள்.

தொகுப்பு: மகேன் சிங்கராசா

Publisher & Editor : P.J. Dilipkumar
பதிப்பாளர், ஆசிரியர் : பி.ஜே. டிலிப்குமார்

ஆலோசகர் குழு : ஞானம் லம்பேட், மாமூலன், கருணா, பொன்னையா விவேகானந்தன், சுந்தர் சின்னத்தம்பி.

தட்டச்சு : கௌரி, கௌசலா, ஜீவா, பிரியதர்சினி, மஞ்சுளா ராஜலிங்கம்.

ஒப்புநோக்கல் : சாவையம்பதி சுப்ரமணியம், கௌரி. மஞ்சுளா ராஜலிங்கம்.

வரைகலை ஆலோசனை : கருணா (டிஜி வரைகலை அமையம்)

தொடர்புகள் - For More Info : Editor
P.O.Box #63581
Woodside Square
1571 Sandhurst Cir.
Toronto, ON. M1V 1V0

Toronto விநியோகம் : கிளி (சிவராஜா)
Montréal விநியோகம் : சுகுமாரன் சின்னையா 1-514-299-3186
Ottawa விநியோகம் : அலெக்ஸ் சிவசம்பு 1-613 -276-7253

Tel : 416-646-3422, 416.400.6406
Fax : 416.849.0594
Web : www.thaiveedu.com
E-mail : info@thaiveedu.com

#1 TEAM @ PROPERTY/MAX REALTY INC.



PROPERTY MAX
Realty Inc. Realtor
Mohan Subramaniyam
Broker of Record
416.321.2300

New Mortgage, Commercial Mortgage
New Immigrans, Ist, 2nd Mortgage
Re-Financing, New Home Buyers

Search More Properties @
www.realestatebrokerofrecord.info

WE BRING CANADA'S LEASING LENDER'S TO YOU
PMCI PROPERTY MORTGAGE CANADA INC.

PLEASE MENTION PROPERTY/MAX WHEN ENQUIRING ABOURT PROPERTIES!

# தற்காலிக போர் நிறுத்தமும் இடைக்காலத்தீர்வும்

- அ. கணபதிப்பிள்ளை -

இலங்கை அரசியலில் போர் நிறுத்தங்களும் இடைக்காலத் தீர்வுகளும் பற்றிய பேச்சுக் கள் மிக எளிமையான முறையில் சொல்லப்படுவனவாயினும் அதன் நடைமுறைச் சாத்தியம் என்பது இறுக்கமான நடைமுறைகளைப் பின்னணியாகக் கொண்டவை. இன்றைய போர்ச்சூழலில் இலங்கை அரசு எத்தன்மை யான போர்நிறுத்தத்துக்கும் தன்னை உட்படுத்திக் கொள்ளவிரும்பவில்லை. அடுத்தடுத்து ஏற்பட்ட இராணுவ வெற்றிகளை அனுபவித்த இலங்கை அரசுக்கு வன்னியின் இருதய நிலம் நிற்பாட்டும் குறிகாட்டியாக அமைந்து விட்டது.

இலங்கை அரசும் இந்திய அரசும் மாறி மாறி விடுதலைப் புலிகள் சரணடையவேண்டும் என்று வலியுறுத்தத் தொடங்கியி ருந்தன. நிபந்தனையின்றி ஆயுதங்களைப் போட்டுவிட்டுச் சரணடைய வேண்டும் என்றும் விடுதலைப் புலிகள் சரணடைந்தாலும் தொடர்ந்துவரும் பேச்சுவார்த்தை மேசையில் அவர்களை பங்குபற்றுனர்களாக ஏற்றுக் கொள்ள முடியாது எனவும் இலங்கைப் பிரதமர் குறிப்பிட்டிருந்தது புலிகளை முற்றாக அழித்து விட்டோம் என்றது போன்ற ஒரு மாயையைத் தோற்றுவித்திருந்தது.

போர் நடைபெற்றுக் கொண்டிருக்கும் பொழுது பொதுமக்கள் போர்ப் பிரதேசங்களை விட்டு வெளியேறி விடுவார்கள் என்ற எதிர்பார்ப்பு மேலோங்கியிருந்தமை தான் வன்னியின் முழுப்பிரதேசங்களையும் பிடித்ததும் விடுதலைப் புலிகளின் செயற்பாடுகள் யாவும் நிறுத்தப்பட்டுவிடும் என்ற முடிவுக்குக் காரணமாயிருந்தது.

வன்னிப் போரினைத் திட்டமிட்டு நடாத்தியவர்கள் இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் நடந்தது போன்றதொரு போர் நடவடிக்கையாகவே வன்னியிலும் இருக்கும் என்று ஆரம்பத்தில் எதிர்பார்த்திருந்தர்கள். விடுதலைப் புலிகள் போர்ப் பிரதேசங்களிலிருந்து பின் வாங்கும் செயற்பாடும் மக்களின் போரில் லாப் பிரதேசங்களினை நோக்கி நகர்வதுடன் இணைந்த தன்மையினைக் கொண்டதாக விருந்தது.

இன்று வன்னியில் புலிகளினால் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் ஒரு பிரதேசம் முன்னர் விடுதலைப் புலிகளின் ஆட்சிக்குட்பட்டிருந்த பிரதேசத்தின் சிறியதொரு வடிவமாகவே இருக்கிறது. பிரதேச எல்லைக் கோடு குறுகியதாக அமைந்திருந்தாலும் முன்னரிருந்த அதேகட்டமைப்பிலிருந்து மாற்றம் பெறாமலி ருக்கும் அரசியற் புவியியற் பாங்கானது பேணப்பட்டிருந்தமைதான் போர்ப் பிரதேச ஆய்வாளர்களுக்கு மிகுந்த ஆச்சரியத்தினைக் கொடுத்திருந்ததுடன் கிழக்குமாகாணப் போர்ப்பின்னணியிலிருந்தும் வேறுபடுவதாக அமைந்திருந்தது,

இத்தகையதொரு அமைப்புக்காணப்படுவதுதான் பொதுமக்களின் உயிரிழப்புக்கள் அதி கரிப்பதற்கும் இராணுவத்தினர் பொதுமக்கள் மீது விமானத்தாக்குதல்களையும் குண்டுத் தாக்குதல்களையும் மேற்கொள்ளுவதற்கும் அடிப்படையாக அமைந்தது. இலங்கை இராணுவம் பொதுமக்களை முதியவர் குழந்தைகள் பெண்கள் சிறுவர்கள் என்ற வேறுபாடின்றி கொல்லுவதற்குக் காரணமாயிருந்த செயற்பாடுகளில் முன்மையானது அரசாங்கத்திடம் மக்களைக் காப்பாற்றக்கூடிய திட்டம் எதுவும் இருக்கவில்லை என்பதேயாகும். போருக்குத் திட்டமிட்டவர்கள், புலிகள் தமது ஆட்சி அலகினைச் சிறியதாக்கிக் கொள்வார்கள் என்று நினைப்பதற்குப் பதிலாக புலிகள் வன்னிக் காட்டுக்குள் பதுங்கி விடு வார்கள் என்று தான் எதிர்பார்த்தார்கள்.

அரசாங்கம் பொதுமக்களைப் போரிலிருந்து காப்பாற்ற எடுத்த முயற்சிகளில் முதன்மையானது பாதுகாப்புப் பிரதேசப் பிரகடனமாகும். முதலில் விசுவமடுக் குளப்பகுதியிலிருந்து புதுக்குடியிருப்பு வரையான

> “இணைத்தலைமை நாடுகள் கொடுக்கப்போகும் அழுத்தம் விடுதலைப் புலிகளின் மீது மாத்திரம் இருக்குமாயின் அதன்மூலம் வரும் தற்காலிக அமைதி தமிழர்களுக்கு எத்தகைய சாதகமான விளைவினையும் ஏற்படுத்தப் போவதில்லை.”

பரந்தன் முல்லைத்தீவுப் பெருந்தெருவின் குடியிருப்புக்களில் உடையார்கட்டு தேவிபுரம் சுதந்திரபுரம் வள்ளிபுரம் போன்றன வரையறை செய்யப்பட்டிருந்தாலும் அதனுள்ளும் பொது மக்கள் மீது இராணுவத் தாக்குதல்கள் கட்டவிழ்த்துவிடப்பட்டன. இப்பாதுகாப்புப் பிரதேசம் இராணுவத்தினருக்குப் பாதுகாப்பினை வழங்கியிருக்கிறதேயொழிய பொது மக்களுக்கு எத்தகைய பாதுகாப்பினையும் கொடுக்கத் தவறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை இராணுவம் முல்லைத்தீவினைக் கைப்பற்றியதும் வடக்கே சாலையைக் கைப்பற்றியதும் கரையோரம் முழவதையும் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துவிட முடியும் என்ற எதிர்பார்ப்பில் அடுத்தபாதுகாப்பு வலயமாக முல்லைத்தீவுக்கு வடக்காயமைந்த புதுமாத்தளன், வலைஞன்மடம் ஆகிய பகுதிகளைப் பாதுகாப்பு வலையமாக மாற்றிக் கொண்டது இதன் மூலம் மக்கள் கரையோரத்தை நோக்கி நகரத் தொடங்கினர். இது முல்லைத்தீவினைக் கைப்பற்றிய இராணுவத்தினருக்குப் பாதுகாப்புக் கொடுக் கக்கூடிய தடுப்பு வலயம் என்றே நம்பி இருந்தார்கள். வடக்கிலிருந்தும் முல்லைத் தீவிலிருந்தும் கடற்பகுதியிலிருந்தும் இப் பகுதிகளில் தாக்குதல்களை மேற்கொள்வதும் இலகுவாக இருந்தது.

இத்தகைய மும்முனைத்தாக்குதல்களில் பெருமளவு தமிழர்கள் கொல்லப்பட்டும் காயமடைந்தும் வந்தமை தொடரும் செயற் பாடாக மாறிவிட்டது. இதன் மூலம் அரச படை நடத்துனர்கள் எதிர்பார்த்த முழுமை யான விளைவினை இராணுவம் பெற்று விடவில்லை. பொதுமக்கள் இராணுவத்தின் பிடிக்குள் சென்று விடுவார்கள் என்ற எதிர் பார்ப்பு அரசாங்கத்தின் பிரதேசக் குறைப்பினால் செயலற்றுப் போய்விட்டது. இராணு வத்தின் பிரதேசத்தினுள் போகின்ற மக்கள் ஒன்றில் விடுதலைப் புலிகளுடன் போர் நடைபெறுவதனால் போர்ப்பிரதேசத்துக்குள் அகப்பட்டுக் கொள்வார்கள் என்ற நிலை இருந்தது அல்லது இராணுவத்தினரினால் கடத்தப்பட்டு இடைத்தங்குமுகாம்கள் என்ற பெயரில் எங்கு கொண்டுசெல்லப்படுவார்களோ என்ற உறுதியற்ற நிலையும் இருந்தது. இதனால் மக்கள் தாங்கள் ஒன்றாக இருக்கவே விரும்பினார்கள்.

விடுதலைப்புலிகளே மக்களை வெளியே விடுங்கள் என்றுகூறும் இந்தியாவோ மற்றைய உலக நாடுகளோ மக்களது பாதுகாப்பின்மையினை தமது கருத்துக்குள் எடுத்துக் கொள்ளவில்லை என்பதும், ஒன்றில் விடுத லைப் புலிகளின் ஆயுதங்களை களைந்து விடுவதனையும் அல்லது அவர்களை முற்றாக அழித்து விடுவதனை கருத்திற்கொண்டே செயற்பட்டன என்பதும் தெளிவாகத் தெரிந்தமை குறிப்பிடத்தக்கது.

இடம்பெயருகின்ற மக்கள் தொடர்பான எத்தகைய கணக்கெடுப்புக்களையும் செய்யக் கூடிய உள்ளூர் நிறுவனங்களோ, பல் தேசியத்தொண்டு நிறுவனங்களோ ஏனைய தொண்டு நிறுவனங்களோ இதற்கென அனு மதிக்கப்படவில்லை. இடம்பெயரும் மக்களது நலனைப் பேணும் பொருட்டு மக்களுக்கான சரணாலயம் எதுவும் இல்லாதநிலையிருந்தது. ஒருவேளை இடம்பெயர்கின்றவர்கள் தங்கள் சொந்தக் கிராமங்களுக்குட் செல்ல அனுமதித்திருந்தாலும் மக்கள் அங்கு செல்வார்கள் என்பதற்குக்கூட எந்த உத்தரவாதமும் இல்லை. ஏனென்றால் அவை மக்களுக்கான பாதுகாப்புப் பிரதேசங்களாக இருக்கவில்லை. புதைத்துவைக்கப்பட்ட கண்ணிவெடிகளும் இராணுவ வாடிகளும் மலிந்த பகுதிகளில் மக்களின் பாதுகாப்பினை உறுதிசெய்யத்தக்க எத்தகைய செயற்பாடுகளும் இருக்கவில்லை.

இராணுவத்தின் கட்டுப்பாட்டுக்குள் வந்தவர்கள் அவசர அவசரமாக அலசாங்கத்தால் நிர்மாணிக்கப்பட்ட இடைத்தங்கல் முகாம்கள் என்ற வதைமுகாம்களுக்குளோ சிறைமுகாம்களுக்குள்ளோ தடை முகாம்களுக்குள்ளோ போடப்பட்டு இலங்கையின் ஏனைய மக்களிலிருந்து வேறுபடுத்திவைக்கப்பட்டு அதற்கு ஏற்றமுறையில் கவனிக்கப்பட்டு வந்தனர். இதில் இருப்பவர் கணக்கைத் தவிர கொல் லப்பட்டவர்களின் எண்ணிக்கையினை வெளியே கொண்டுவரக்கூடிய உத்தியோகப் பற்றுள்ள நிறுவனங்கள் எதுவும் இருக்க வில்லை.

செய்தித்தணிக்கைகள் ஒருபுறமும் செய்தி ஊடகவியலாளர்களின் அனுமதி மறுக்கப்பட்டும் இருக்கும் பகுதிகளினூடாகக் கொண்டு செல்லப்படும் இளைஞர் யுவதிகள் உட்பட பொதுமக்களின் பாதுகாப்புக்கும் எத்தகைய உத்தரவாதமும் வழங்கப்படவில்லை என்பது தெளிவுபடுத்தப்பட்டிருந்தமை இந்தியாவுக்கும் ஏனைய உலக நாடுகளுக்கும் தெரிந்ததொன்றாகும்.

போர்நடக்கும் பகுதிகளில் அன்றி ஏனைய பிரதான இராணுவக் கேந்திரங்களில் வெளி நாட்டு ஊடகவியலாளர்களையும் அனுமதித் திருந்த இலங்கை அரசும் இராணுவமும் இலங்கை இராணுவத்தின் போர் வெற்றிகளை வெளியிடுகின்ற ஊடகமாக அவர்களைப் பயன்படுத்தியதுடன் வேண்டுமென்றே அவர் களால் தயாரிக்கப்பட்ட இடம்பெயரும் தமிழர்கள் இலங்கை அரச செயற்பாடுகளில் நியாயமிருப்பதாக உறுதிப்படுத்திக் கொண்டிருந்தனர்.

ஐ.நா பிரதிநிதி ஜோன் ஹோம்ஸின் வருகையினை இலங்கை அரசு மிகச் சாதகமாகப் பயன்படுத்தியிருந்தது என்ற கருத்து மேலோங்கிவிட்டது. அவர் இலங்கை இராணுவப் பேச்சாளரா அல்லது இலங்கை அரசின் அதிதியா என்ற கேள்விகளின் மத்தியில் ஐ.நா. பாதுகாப்புச் சபைக்குத் தெளிவானதொரு விளக்கம் தேவைப்பட்டது. இரண்டு பகுதியினரும் யுத்தத்தினை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்ற கருத்து இன்று முன்வைக்கப்படுகின்றது. ஐ.நா. பிரதிநிதிகள் ஒருபக்கச் சார்பாகக்கூறிய கருத்தான புலிகள் ஆயதத்தினை கீழே போட வேண்டும் என்பது ஒரு திட்டமிட்ட கருத்துருவாக்கம் என்பது வெளிப்படையாயிருந்தது. இதேவிதமான கருத்தினையே இந்தியாவும் இலங்கையும் உட்படப் பல நாடுகள் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

விடுதலைப் புலிகளை ஆயுதங்களைக் கீழே போடச் சொல்லுவதன் மூலம் எத்தகைய விளைவும் ஏற்படப்போவதில்லை என்பது தெளிவாகிய நிலையில் ஐ.நா. பாதுகாப்புச் சபையானது தற்காலிக போர் நிறுத்தத்தினைக் கேட்டு நிற்கின்றன. அத்துடன் தென்னிந்தியாவுக்குச் சென்ற இந்திய வெளியுறவு அமைச்சர் பிரணாப் முகர்ஜி விடுதலைப் புலிகள் விடுத்த போர் நிறுத்தக் கோரிக்கை யினை இலங்கை பரிசீலனை செய்யவேண்டும் என்ற கோரிக்கை இலங்கை அரசுக்கு ஒரு

5ம் பக்கம் பார்க்க...



4ம் பக்கத் தொடர்ச்சி...

இக்கட்டான சூழலைத் தோற்றுவித்திருக்கிறது. இக் கோரிக்கை உத்தியோக முறையில் தமக்கு அறிவிக்கப்படவில்லை என்று இலங்கை போர் நிறுத்தமேயில்லை என பிடிவாதமாக இருந்தாலும் விடுதலைப் புலிகள் ஆயுதத்தைப் போட்டால் தானாகப் போர் நிறுத்தம் வந்துவிடும் என்ற வாதத்தினையே முன்வைத்திருந்த இலங்கையும் இராணுவமும் சற்றே சிந்திக்க வழிசெய்வதாக அமைந்திருந்தது.

தற்காலிகப் போர் நிறுத்தத்தின் மூலமாக விடுதலைப் புலிகள் ஆயதங்களைக் கீழே போடும்படி செய்யலாம் என்று இந்திய வெளியுறவு அமைச்சர் எண்ணுவதுடன் இணைத்தலைமை நாடுகளூடாக அதனை வலியுறுத்த முடியும் எனவும் நம்புகிறார். இணைத் தலைமை நாடுகளின் வற்புறுத்துதல் மூலம் விடுதலைப் புலிகள் ஆயதப் போராட்டத்தைக் கைவிடுவார்கள் என்ற கருத்தை இலங்கை அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது என்பதும் அத்தகைய அழுத்தம் விடுதலைப் புலிகளின் மேல் போடப்படுவது போரினை முடிவுக்குக் கொண்டுவர உதவும் என்றும் இலங்கை நம்புகிறது. ஆயினும் போர்நிறுத்தம் இனி ஒருபோதும் போர் செய்யக்கூடிய வாய்ப்பினைக் கொடுக்காது போய்விடும் என்றும் அதனால் புலிகளின் பேரம்பேசும் ஆற்றல் அதிகரித்துவிடும் என்பதனாலும் இலங்கை அரசு போர் நிறுத்தத்தை விரும்பவிலிலை. இலங்கை அரசு போரை விரைவில் முடித்துவிடும் என்ற எதிர்பார்ப்பில் இந்தியாவும் பேச்சளவிலேயே செயற்படுகிறது.

போர்ப்பிரதேசத்தினுள் அகப்பட்டுள்ள மக்களின் பாதுகாப்பு உறுதிசெய்யப்படாதவரையில் மக்கள் போர்ப்பகுதிகளிலிருந்து வெளியேறுவது சாத்தியமற்றது. வெளியேறுபவர்கள் இடைத்தங்கல் முகாம்களில் அடைக்கப்படுவார்களாயினும் அல்லது சுற்றிவளைப்புகளும் கைதுகளும் தொடருமாயினும் இடைக் காலப் போர் நிறுத்தம் கூட பொருத்தமானதொன்றாக அமைந்துவிடப் போவதில்லை.

இடைக்காலப் போர் நிறுத்தம் இறந்து கொண்டிருக்கும் ஈழத்தமிழர்களின் உயிரைக் காப்பாற்ற உதவி செய்வதாக அமையுமேயன்றி தமிழர்களுக்கென தனித்துவமான தீர்வுத் திட்டமில்லையெனில் அவர்களின் சுதந்திரத்துக்கு எத்தகைய உதவியினையும் செய்யப்போவதில்லை.

இணைத்தலைமை நாடுகள் கொடுக்கப் போகும் அழுத்தம் விடுதலைப் புலிகளின் மீது மாத்திரம் இருக்குமாயின் அதன்மூலம் வரும் தற்காலிக அமைதி தமிழர்களுக்கு எத்தகைய சாதகமான விளைவினையும் ஏற்படுத்தப்போவதில்லை.

விடுதலைப் புலிகளை உள்வாங்கியதொரு இடைக்கால அரசினை ஏற்படுத்துவதற்கு இணைத்தலைமை நாடுகள் அனுமதிக்குமாயின் அது மிகப்பெரிய மாற்றமாக இருக்கும். அமெரிக்காவும் இந்தியாவும் இலங்கையுடன் ஒப்பந்தம் செய்வதற்குப் பதிலாக விடுதலைப் புலிகளுடன் ஒருபேச்சுவார்த்தையினை ஏற்படுத்தி அதன் மூலம் ஏற்படுத்தப்படும் ஒப்பந்தம் இலங்கையின் நீண்ட காலப் போரினை முடிவுக்குக் கொண்டுவருவதாக இருக்கும்.

இதுபோன்ற ஒப்பந்தம் இதுவரையில் நிகழாததொன்றல்ல பாலஸ்தீனத்தில் ஜசீர் அரபாத்துடன் மேற்கொள்ளப்பட்ட உடன்பாடு இத்தகையதாயினும் அது பாலஸ்தீனத்துக்கு ஏற்புடையதாக இருக்கவில்லை. அதேமாதிரியானது இலங்கைக்குப் பொருந்தாதென உதறித்தள்ளிவிட முடியாது. இலங்கையின் கலாசாரப் பின்னணி இஸ்ரேல் பாலஸ்தீனத்திலிருந்து வேறுபட்டது. இத்தகைய நிலையில் இந்தியா தனது விதண்டாவாதப் போக்கினைக் கைவிட்டு விடுதலைப் புலிகளுடன் ஏற்படுத்தப் போகும் இணக்கப்பாடு அமெரிக்க அனுசரணையுடன் அமையுமிடத்து சாதகமானதொரு விளைவினை ஏற்படுத்தும்.

தற்கால போர்நிறுத்தம் விடுதலைப் புலிகளைத் தனிமைப்படுத்த நினைக்கும் தந்திரோபாயமாக இருப்பின் அது இலங்கை அரசுக்கு ஏற்படப் போகும் பெரியதொரு இழப்புக்கு அத்திவாரமிடுவதாகவே இருக்கும் என்று கூறமுடிகிறது.

kanapathi@thaiveedu.com

■ ■ ■

EXPERT BUILDING INSPECTIONS LTD

"Dedicated to Expert, Honest & Independent Inspections"

Tel: 905 940 0811 Fax 905 940 6108
Toll Free 1 866 373 3315

- Commercial Building Inspections
- Environmental Assessments
- Air Quality Investigations
- Problem Analysis & Solutions
- New Home Warranty Inspections
- Resale Home Inspections
- Complete Home Audit
- Thermal Imaging

www.expertinspector.com

- Tough and Thorough Inspections by **University of Toronto** educated Building Science Experts Specializing in Defect Recognition
- Our Inspectors are Registered Home Inspectors under the Province of Ontario 1994 Home Inspectors Act-Bill 158 and full members of **ASHI** and **CAHPI**-Ontario
- Exceed Nationally Recognized Standards
- Important Maintenance Advice & Follow Up Support For First Time Buyers
- On-Site Narrative Reports
- Seven Days a Week

ASHI MEMBER
CAHPI Ontario

HUNGRY!



PROPERTY MAX
HIGHER ACHIEVEMENTS
Realty Inc. Brokerage

FOR BUYING, SELLING, INVESTING......

Call Mohan @ 416-321-2300

**Mohan Subramaniyam**
**Broker of Record/President**
Property/Max Realty Inc, Brokerage
203 – 3321 Mcnicoll Ave,
Toronto, ON. M1B 5B3

New Listing ADDED!!!
www.mlscentre.com

ONE STOP REAL ESTATE & MORTGAGE NEEDS!!!

- Re-Financial
- New Mortgage (Residential, Commercial, Investment)
- Renewal
- No Down Mortgage

We Bring Canada's Leading Lenders To You!
PMCI PROPERTY MORTGAGE CANADA
416-332-9464

# Buying Selling Leasing

**Buy or Sell properties with us and WIN this New BMW****




$49,000




Excellent Convenience Store in a busy plaza. Almost $ 1700 from 6/49 Lotto commission. Low Rent.

**Justin William**- Broker
**Direct: 416-803-7344**

$299,000



3 Bedrm Bright House. In A Great Neighbourhood.Close To School & Ttc. No Sidewalk. 4 Cars Can Be Parked.

**Wilton Gnanapragasam**
Sales Representative
**Direct: 416-554-4747**

$271,900



3 Bedroom Detached House In Brampton. Lots Of Upgrades. Finished Basement With Separate Entrance.

**Ravi Raveendran**- Broker
**Direct: 416-817-8479**

$379,900



Beautiful 4 Bedroom House in Prime Scarborough area. Lots Of Upgrades. Close to Ttc, Schools & All Amenities.

**Justin William**- Broker
**Direct: 416-803-7344**

$92,500



Well maintained one bedroom condo. Close to all amenities. Spotless unit with wood flooring.

**Wilton Gnanapragasam**
Sales Representative
**Direct: 416-554-4747**

$92,900



2 Bedroom condominium. Priced to sell.Convenient location .Close to all amenities. Why pay rent?

**Ravi Raveendran**- Broker
**Direct: 416-817-8479**

$449,000



Beautiful house in Scarborough area. 4 Bedrooms with finished basement. Close to everything. Lots of Upgrades.

**Justin William**- Broker
**Direct: 416-803-7344**

$449,000



4 Bedroom Clean House. Great Location. Finished Basement. Harwood Floor On Main Floor.

**Wilton Gnanapragasam**
Sales Representative
**Direct: 416-554-4747**

## HomeLife GTA Realty Inc., Brokerage*

1711 McCowan Rd, Suite 206, Scarborough, On. **Office: 416.321.6969**

This is not intend to solicit properties currently listed for sale

*Independently owned and operated

** conditions apply



# RBC RESIDENTIAL MORTGAGES

- 1st Time Home Buyers
- Pre–Approvals
- Builder Rate Hold Programs
- Refinance, Renewals & Switch for Free
- Debt Consolidation
- Home Equity Line of Credit
- New Immigrant & Self Employed Programs



| RATE SPECIAL | |
|---|---|
| 4 Yrs Fixed | **4.29 %** |
| 5 Yrs Fixed | **4.34 %** |
| Variable Closed | **3.30 %** |
| Variable Open | **3.50 %** |

**Three Locations to Serve you**

**Royal Bank**
Eglinton & Sinnott
2043 Eglinton Ave E
Scarborough, ON
M1L 2M9

**Royal Bank**
Kingston & Steeple Hill
670 Kingston Road
Pickering, ON
L1V 1A6

- digi Media -

RBC



## Ram Krish

RBC Mortgage Specialist

Direct **416-526-4996**

Email: ram.krish@rbc.com

# எப்படி ஓர் ஈரப்பதனியை தெரிவு செய்தல்

# (How to Choosing a Dehumidifier)




மகேன் சிங்கராஜா

- வீடு விற்பனைப் பிரதிநிதி -


ஒரு வீட்டிற்கு ஈரப்பதனி எவ்வளவு அவசியமானது என்பதினை பலர் புரிந்து கொள்வதில்லை, இதனை கருத்தில் கொண்டு, இதன் நன்மையை தெரியப்படுத்துவதே எனது நோக்கம். ஒரு வீட்டில் உள்ள காற்றில் ஈரப்பதன் அதிகமாக இருந்தாலோ குறைவாக இருந்தாலோ பல பிரச்சினைகள் ஏற்படலாம். மிகவும் உலர்வான காற்று காரணமாக மூக்குத் துவாரங்கள், தோல் என்பவை காய்ந்து போகும் தன்மை, வீட்டுத் தளபடங்களில் வெடிப்பு ஏற்படுதல், கதவின் குமிழைத் தொடும் போது பொறி பறத்தல் போன்ற பாதகமான விளைவுகள் ஏற்படலாம்.

காற்று மிகவும் ஈரப்பதனுடையதாக இருந்தால், தோல், மூக்குத் துவாரங்கள் என்பன காய்ந்து போகும் தன்மை, கண்ணாடிகளில் நீர்படிதல், மற்றும் வீட்டின் சில பகுதிகள் ஈரலிப்பினால் பாதிப்படைதல், பூஞ்சணம் வளருதல், வீட்டின் மரப் பகுதிகள் அழுகுதல் போன்ற பாதகமான விளைவுகள் ஏற்படலாம்.

அளவுக்கு அதிகமான உலர்தன்மை அதிகளவான ஈரலிப்பு தன்மை ஆகிய அழற்சி ஏற்படும் நிலையை ஏற்படுத்தும் என்பதை அவதானிக்க வேண்டும். காற்றில் ஏற்படும் உலர்வான தன்மை காரணமாகவே முதலாவது குறிப்பிட்ட தன்மை ஏற்படுகிறது. காற்றில் பூஞ்சணப் படிவுகளும், நச்சுத்தன்மையான வித்திகளும் (Spores) மிதப்பதன் விளைவாகவே ஏற்படுகின்றது.

நீங்கள் உங்கள் வீட்டில் உள்ள ஈரப்பதனை (Humidity) மட்டுப்படுத்த முடியும். மிகவும் ஈரப்பதனுடைய காற்றினால் ஏற்படும் பிரச்சினைகளை தவிர்க்கக்கூடிய சில வழிமுறைகளைப் பற்றியும், ஒரு தரமான ஈரப்பதன் கருவியை எவ்வாறு தெரிவு செய்ய வேண்டும் என்பது பற்றியும் இந்த கட்டுரையில் விபரிக்கப்படுகின்றது.

## சார்பு ஈரப்பதன் என்றால் என்ன?

குறிப்பிட்ட ஓர் வெப்பநிலையை காற்றில் இருக்கக்கூடிய உச்ச அளவான ஈரப்பதனுக்கு சார்பானதாக காற்றில் எவ்வளவு ஈரலிப்பு உள்ளது என்ற சதவிகிதமே சார்பு ஈரப்பதன் என அழைக்கப்படுகிறது. உதாரணமாக குறிப்பிட்ட ஒரு வெப்பநிலையில், வளி ஆகக்கூடிய அளவு நீராவியை கொண்டிருக்குமானால் சார்பு ஈரப்பதன் 100 சதவிகிதமாக இருக்கும்.

- சார்பு ஈரப்பதன் 100 சதவிகிதத்தை விட அதிகமாக இருந்தால் காற்றில் இருந்து ஈரலிப்பு ஒடுக்கமடைய தொடங்கும்.
- காற்றில் இருக்கக்கூடிய நீரின் அளவு அரைவாசி மட்டுமே காணப்பட்டால் சார்பு ஈரப்பதன் 50 சதவிகிதம் எனக் கணக்கிடப்படுகிறது.

குளிரான காற்றை விட வெப்பமான காற்றில் அதிகளவு ஈரப்பதன் உள்ளது. வெப்பநிலை மாற்றம் அடையும் போது ஈரப்பதனின் அளவு மாறாது. ஆனால் காற்றின் சார்பு ஈரப்பதன் மாற்றம் அடையும். உதாரணமாக காற்று குளிர்வடையும் போது சார்பு ஈரப்பதன் அதிகரிக்கும்.

## சரியான ஈரப்பதன் மட்டம் என்றால் என்ன?

உங்கள் வீட்டில் இருக்க வேண்டிய சரியான ஈரப்பதன் மட்டம் அதாவது சார்பு ஈரப்பதன் 50 சதவீதத்திற்கும் குறைவாக இருக்க வேண்டும்.

சில சமயங்களில் இந்த சதவீதம் அதிகமானதாக இருக்கலாம். உதாரணமாக குளிரான காலங்களில் உங்கள் வீட்டுக் கண்ணாடிகளில் நீர் ஒடுங்குதல் ஏற்பட்டால் உங்கள் வீட்டினுள் சார்பு ஈரப்பதனை 30 சதவிகிதமாக குறைப்பதற்கு நல்லது.

உங்கள் வீட்டில் யாராவது ஆஸ்மா நோயாளியாக இருந்தால் படுக்கையறையினுள் உள்ள சார்பு ஈரப்பதனை 40 சதவீதமாக குறைப்பது நன்று. ஏனெனில் இவ்வாறான சதவீதமான ஈரப்பதன் அமையும் போது Dust mites என்ற நுண்கிருமிகளின் தூசுகள் படிதல் கட்டுப்படுத்தப்படுவதனால் ஆஸ்துமா நோயாளிகளுக்கு ஏற்படும் பாதிப்பு பெருமளவு குறைக்கப்படுகின்றது.


சில வேளைகளில் சார்பு ஈரப்பதனை குறைத்தல், ஈரப்பதனால் ஏற்படும் பிரச்சினைகளுக்கு தீர்வை ஏற்படுத்த மாட்டாது. குளிர்த் தடுப்பில் உள்ள குறைபாடுகள் அல்லது சுவர்களிலும் முகட்டிலும் உள்ள காற்றோட்ட தடைகள் என்பவை உங்கள் வீட்டினுள் சில இடர்களில் குளிர் கூடிய இடங்களை தோற்றுவிக்கலாம். நீர் ஒடுக்குதல் ஏற்படும் பகுதிகளிலேயே இவ்வாறான நிலை தோன்றுகிறது. இவ்வாறான நிலை ஏற்பட்டால் குளிர் தடுப்பு பற்றிய தொழில்சார் வல்லுநரின் அல்லது கட்டிடக்கலை நிபுணரின் ஆலோசனை பெற வேண்டும்.

## காற்றில் உள்ள ஈரப்பதன் எங்கிருந்து வருகிறது?

உங்கள் வீட்டினுள் ஈரப்பதன் உட்புகுதல் பல்வேறு வழிகளில் ஏற்படலாம். உங்களது வீட்டை சூழவுள்ள மண்ணின் மேற் பரப்பு நீர் வடிதல், ஈரலிப்பான வெளிப்புறக் காற்று என்பவை போன்ற வெளிப்புறக் காரணிகளால் வீட்டினுள் ஈரலிப்பு ஏற்படலாம். அதே சமயம், உங்களது வீட்டில் உள்ளவர்களினதும், உங்களது வளர்ப்பு பிராணிகளினதும் சுவாசம், வியர்வை ஆகியவை உங்கள் வீட்டில் ஈரலிப்பு ஏற்படுவதற்குரிய பிரதான காரணமாக அமையலாம். அத்துடன் குளித்தல் துணிகளை வீட்டினுள் உலர்த்துதல், பாத்திரங்களையும் தரையையும் கழுவுதல், ஈரப்பதனிகளை உபயோகித்தல் ஆகியனவும் வீட்டினுள் ஈரப்பதன் ஏற்படுவதற்கான காரணிகளாக அமையலாம்.



Heat Pump Humidifiers




பெரும்பாலான வீடுகளில் ஒன்றுக்கு மேற்பட்ட காரணங்களால் ஈரலிப்பு ஏற்படலாம். ஈரப்பதன் காரணமாக இடைக்கிடை அல்லது எப்பொழுதும் பிரச்சினைகள் ஏற்படலாம். சிறிய அளவான தற்பாதுகாப்பு முறைகளை மேற்கொள்வதன் மூலம் வீட்டினுள் இடைக்கிடை அல்லது தொடர்ச்சியாக ஏற்படும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும்.

## வீட்டினுள் உள்ள ஈரப்பதனின் மட்டத்தை அளவிடுதல்

ஈரப்பதன் உணர் கருவி (Humidity Sensor) அல்லது சார்பு ஈரப்பதன் காட்டி (Relative Humidty Indicator) என்று அழைக்கப்படும் Hygrometer என்ற கருவியின் மூலம் சார்பு ஈரப்பதனை அளவிட முடியும்.

## ஈரலிப்பு உட்புகுதலை தடுத்து நிறுத்துதல்

மேற்பரபபில் இருந்து நீர்க்கசிவு ஏற்படுமாயின், உங்கள் வீட்டைச் சூழவுள்ள மண்ணைச் சாய்வாக்குவதன் மூலம் அதனை சீர்செய்ய முடியும். நிலக்கீழ் வதிவிடப்பகுதியின் இடைவெளி (Crawl Space) சுவர்ப் பகுதியிலும் தரைப்பகுதியிலும் திருத்த வேலைகளை செய்வதன் மூலம் தரை மட்ட நீர்க்கசிவு ஏற்படுதலை நிறுத்த முடியும்.

ஈரப்பதனி கருவிகளை செயற்படாமல் நிறுத்துதல், உங்களது துணிகளை வெளிப்புறத்தில் காயவிடுதல் துணிகளைக் காயவைக்கும் கருவியில் இருந்து வெளியேறும் ஈரலிப்பை வீட்டுக்கு வெளியே செல்ல வழி செய்தல் ஆகியன ஈரலிப்பை கட்டுப்படுத்தக்கூடிய இலகுவான சில வழிகளாகும். சத்தம் ஏற்படுத்தாமல் இயங்குகின்ற குளியலறை சூழல் காற்றாடியை (Bathroom Fans) பயன்படுத்துவது ஈரலிப்பை குறைப்பதற்கான மிகச் சிறந்த வழிகளில் ஒன்று.

வெப்பமும், புழுக்கமுமான காலங்களில் உங்கள் வீட்டில் இருந்து சிறிய அளவு காற்றோட்டம் மட்டுமே ஏற்படக்கூடியதாக செய்யுங்கள். ஈரலிப்பு பிரச்சினைகள் ஏற்படக் கூடிய வாய்ப்புஇல்லாத உலர்வான காலங்களின் போது வெளியேறுவதற்கு வழிசெய்வது நன்று. எனினும் உலர்வான குளிரான காலநிலையின் போது காற்றோட்டத்தை அதிகரிப்பதன் மூலம் நீங்கள் சார்பு ஈரப்பதனை குறைக்க முடியும். வெப்பத்தை மீளப்பெறும் காற்றோட்டக் கருவி (Heat Recovery Ventilator) அல்லது வெளியேற்றும் சுழற்காற்றாடி போன்ற முழு வீட்டுக்குரிய காற்றோட்ட தொகுதியை பயன்படுத்துவதன் மூலமும் காற்றோட்டத்தை அதிகரித்து வீட்டினுள் உள்ள காற்றை உலரச் செய்ய முடியும்.

கோடை காலத்தின் போது காற்றுப் பதனிடும் கருவியைப் பயன்படுத்துவதன் மூலம் வீட்டினுள் வரும் காற்றில் இருந்து நீரை அகற்ற முடியும்.

13ம் பக்கம் பார்க்க...


COMPUTER TYPE SETTING

தமிழிலும் ஆங்கிலத்திலும் தட்டெழுத்து செய்து கொடுக்கப்படும். விரும்புவோர் தொடர்புகொள்ளவும்.

T.P. 416-551-3972



ROYAL SHUTTERS & BLINDS INC.

DIRECT FROM MANUFACTURER — Everything Factory Direct Prices



Sales - Service - Installations

Custom Made

Wood & Vinyl Shutters: California Style Shutters, Plantation Style Shutters, Traditional Style Shutters, Arches (We Do Any Colour Of Paint & Stain)

Blinds: Vertical Blinds, Venetian Blinds, Wood Blinds, Bamboo Shades, Roller Shades, And More

Draperies: Swags, Sheers, Valance, Curtains, And More

உங்கள் இல்லத்தின் உட்புறத்திற்கு ஏற்றவகையில் யன்னல்களை மறைப்புச் செய்திடவும் அழகு படுத்திடவும் நாடுங்கள்



Workmanship Guaranteed

Free Shop At Home

CALL FOR A FREE ESTIMATE:

தாஸ் Thaas Sivathason

13 Years of Experience in Shutter Business

Tel: (416) 562-0340

Full Satisfaction Guaranteed


All your Real Estate needs
வீடு வியாபார நிலையங்கள் வாங்க விற்க
Attractive low mortgage Rate
3.35% 3year closed
3.99 % 4year closed
Office: 416-321-6969
ஜூடி ஞானேந்திரன்
Sales Representative
416-629-9797
ஞானி நரசிங்கம்
Sales Representative
416-937-8090
Scarborough
Kennedy/Ellesmere
$93,900
Condo Apt with 2 bedrooms
Newly painted and new Carpet
Step to TTC and Kennedy Mall
One parking and one Locker
Down town
Tenanted
$289,900
Down town Condo Apartment
Good Investment.
Tenant willing to Stay
One bedroom with 9ft ceiling
In front of Air Canada Center
Scarborough
Neilson/Finch
$279,000
Power of Sale
Free hold Town House
3 bedroom & 2 Full washroom & half
Basement Finished with walk Out
Close to TTC, School.
Scarborough
Kennedy/Ellesmere
$240,000
Condo Town House
3 bedroom/2 wash rooms
Low maintenance
Recently Renovated
Scarborough
Kennedy/Lawrence
$ 289,900
Detached Brick Bangalow
3 bedrooms /full washrooms
Ba sement apt with separate
entrance & 2bedroom
Walk to TTC and Schools
Scarborough
SOLD
Middlefield/Finch
$184,900
2 bedrooms plus den
2 full washrooms 4 pc Ensuit
Split Bedroom nice layout
Step to TTC & GTA mall
Power of Sale
Markham
Brimley/Steeles
$375,000
Detached 2 Storey Brick H
4 bedrooms & 3 full &half
Wood floor, double garage
Basement w/Separate Ent
Scarborough
Pharmacy/Sheppard
$509,700
Newer detached 2 Storey
Over 2000 sq ft 4 bedrooms
Hardwood floor, oak staircase
Separate entrance to Basement
Scarborough
Kennedy & Finch
$899,000
Brand New Custom built home
Detached 2 story home
Approx 3700 sq ft 4 bedrooms
Hardwood &Finished basement
Markham
Brimley/Steeles
$379,000
Detached 2 Storey
3 bedrooms & 2 full &half
Wood floor,double garage
walk to school and park
Markham
Markham / Steeles
$299,999
Semi Detached 2 Storey
3 bedrooms & 2 full &half
Newer house Wood floor,
walk to school and park
Markham
Mccowan/Denison
$319,900
Power of Sale
Detached 2 Storey
3 bedrooms & 1 full &half
Basement Apt w/ Sep Entr
walk to school and park
Scarborough
Ellesmere / Meadowvale
$499,000
Brand new 2 storey
Detached brick
4 bedroom w/ 3full w/r
Close to 3000Sq ft
Markham
Warden/16th Ave
$1,389,000
Detached 2 storey
4 bedroom w/ 2 full washroom
finished basement w/ separate
entrance, walking distance to Ttc
Markham
SOLD
Kennedy/Denison
$399,888
Detached brick 2 Storey
4 bedrooms/ 3 full washrooms
Finished basement with w/r
Approx 3,000 square feet
Markham
Mccowan/Steel
$409,000
Power of Sale
4 Bedrooms/ 2 full washroom
Basement finished 2 bedroom
Apt with Separate entrance
Scarborough
Ellesmere / Conlins
$359,900
Detached 2 Storey Brick Home
3 Bedrooms/ 2 full washroom
Basement finished W/ Apart.
Close to U of Toronto TTC & shop
Scarborough
Markham/Ellesemere
$389,000
Detached 2 Storey Brick Home
4 Bedrooms/ 2 full washroom
Basement finished Rec. Room
Step to Woburn School, TTC &
Shopping
Ajax
$307,500
Detached brick 2 Storey
3 bedrooms & 2 full &half
Parti. Finished Basement
Approx 1800 sq ft, Cl 401
Toronto
Staines /Finch
$477,000
Detached brick 2 Storey
4 bedrooms/ 2 full washrooms
Sep. Entra. To basement
Approx 2000 square feet
Ajax
$400,000
Detached brick 2 Storey
3 bedrooms/ 3 full washrooms
Finished basement with w/r
Beautiful John boddy home
Toronto
Staines /Finch
$564,900
Detached brick 2 Storey
4 bedrooms/ 3 full washrooms
Newer House w/ wood Floor
Approx 3,200 square feet
Ajax
$399,900
Detached brick 2 Storey
4 bedrooms/ 3 full washrooms
Sep. Entra. To basement
Approx 2800 square feet
Scarborough
Morningside/Sheppard
$264,900
Power Of Sale
Detached Bangalow Rased
3 Bedroom & 2 full washroom
Basement apt w/ 2Bedrooms
Markham
Markham/14Th Ave
$597,000
Detached 2 Storey
Brick house Over 2600 sq ft
5 bedrooms & Library Room
Hardwood floor 9ft ceiling
Toronto
Staines /Finch
$399,500
Detached brick 2 Storey
4 bedrooms & 3 full &half
Prof Finished Basement
Brampton
Sandalwood/Tobram
$354,900
Detached brick 2 Storey
4 bedrooms/ 2full washrooms
Newer House w/ wood Floor
Approx 2,200 square feet
MoneyGram
$59,000
Convenience Store
Lawrence/Bellamy
Convenience Store/Variety
Reasonable Rent (TMI Included)
Lotto Commission & good weekley
sale, extra income from money gram
Family Medicine
Brimley/Eglinton
$ 529,000
• Golden Opportunity To Own Attractive Updated Medical / Prof Building
• Main Floor Has 5 Fully Equip Exam. Rooms,1 W/R,Reception Area And Waiting/ R.
• 2nd Floor Has 7 Ex R,2 W/R &Office.
• Ideally Set Up For All Types Of Medical & Professional Practices.
Building "A"
Markham / Steeles
For sale/Lease
$360,000
• For Sale and also for Lease
• Brand new 2 Retail Store s Available
• In high traffic area /many usage Facing to Markham Road
• Near to Walmart / Price shoppers
HOMELIFE
HIGHER STANDARDS
HomeLife GTA Realty Inc., Brokerage*1711 Mccowan Rd, Suit # 206 Toronto, ON M1S 3Y3
This is not intended to solicit properties currently under contract*Independently Owned and Operated**Some Conditions may apply

# இருதய மின்வரைவு
## (Electrocardiogram)

இதயம் மலர்கிறது - 10



கந்தையா செந்தில்நாதன்
- Echo - Cardiogapher -

இருதயத்தில் ஏற்படும் நோய்களைக் கண்டறிவதற்குப் பல முறைகள் உண்டு. இவற்றுள் மிகவும் எளிமையான உபகரணம் உடலொலிமானி (Stethoscope) ஆகும். 'Stethos' என்கின்ற கிரேக்க மொழி நெஞ்சைக் குறிப்பதாகும். 'Scope' என்றால் உபகரணம் என்றும் பொருள்படும். சிறு சிறு ஒலிகளின் பரிமாணத்தை அளப்பதற்குப் பயன்படுவதால் இதனை 'மானி' என்று குறிப்பிடலாம். அதாவது உடலினுள் நெஞ்சறைக்குள் ஏற்படும் இதயத்தின் ஒலிகள், சுவாசப்பைகளில் ஏற்படும் வித்தியாசமான ஒலிகள் என்பன மட்டுமல்லாது வயிற்றுப் பகுதியில் குடல்களில் ஏற்படும் சத்தங்கள், தாயின் வயிற்றில் தங்கியிருக்கும் சிசுவின் இருதயச் சத்தங்கள், இரத்தக் குழாய்களில் குருதி ஓடும் சத்தங்கள் என்பன கூட இந்த உடலொலிமானியால் அளக்கப்படுகின்றது. நெஞ்சறைமானி (Stethoscope) என்ற நேரடி மொழிபெயர்ப்பைத் தவிர்த்து 'உடலொலிமானி' என்கின்ற காரணப் பெயர் மிகவும் உசிதமாக இருக்கும் என நினைக்கின்றேன்.

படிப்படியாக முன்னேறிவரும் வைத்திய விஞ்ஞானம் கைநாடி, உடலொலிமானி, மின்வரைவுமானி என்று நின்று விடாமல் பல்வேறு கருவிகளையும் மிகவும் துல்லியமாக நோய்களைக் கண்டறியும் விதத்தில் உருவகித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இருதய மின்வரைவு என்று தலைப்பைக் கொடுத்து விட்டு வாசகர்களை உடலொலிமானி (Stethoscope) என்ற பதத்தில் சிறிது நேரம் தக்கவைத்துக் கொண்டமைக்கு மன்னிப்புக் கோருகின்றேன்.

அவனின்றி அணுவும் அசையாது என்பார்கள். அணுக்களில் இருந்துதான் மின்சாரம் உற்பத்தியாகின்றது. எமது உடலில் உற்பத்தியாகும் சிறு அளவிலான மின்சாரம் எமது உடற்பகுதிகளை இயக்கிக் கொண்டிருக்கிறது என்பதை யாவரும் அறிவர்.

இருதயம் தொழிற்படும் பொழுது, இருதயத்தின் வலதுபுறச் சோணையில் உள்ள மின்னாக்கற்கணு (Sino-Atrial node) ஒரு சீரான முறையில் மின்சாரத்தை உற்பத்தி செய்கின்றது. இந்த மின்னாக்கற்கணு (S.A Node) ஒருவித விசேடித்த கலங்களால் ஆனவை. தானாகவே துடிக்கக்கூடியவை. இதை ஆண்டவன் முடிச்சு என்று கூறினால் கூட மிகையாகாது.

இருதயத்தில் மின்னோட்டம் எப்படி உருவாகி, இதயம் முழுவதும் செலுத்தப்படுகின்றது என்பதை முதலில் அறிந்திருப்பது போதிய விளக்கத்தை ஏற்படுத்தும்.

### இருதய மின்னோட்டம்

படம் 3ல் காட்டப்பட்டவாறு வலது சோணையில் காணப்படும் மின்னாக்கற் கணுவாகிய இதயச் சோணைமுடிச்சு என்ற விசேடித்த கலங்கள் இயல்பாகவே தன்னைத்தானே தூண்டிக் கொள்ளும் முறையில் இயங்கி இதயத்தைத் தொழிற்படுத்தும் மின்சக்தியை உருவாக்குகின்றன. இங்கு உற்பத்தியாகும் சிறிதளவிலான மின்சாரம் இதயச் சோணைச் சுவர்களூடாகச் சென்று, இரு சோணை அறைகளிற்கும் (வலது, இடது சோணை அறைகள்) பரவுவதுடன் நின்று விடாமல் சோணை இதயவறை முடிச்சினையும் (Atrio Ventricular Node) உரிய நேரத்தில் வந்தடைகின்றது. அம்மின்சாரம் பின்பு அங்கிருந்து 'ஹிஸ்' நரம்புத் தொகுதி (Bundle of His) ஊடாக இதயவறைகளில் உள்ள வலதுபக்க, இடதுபக்க நரம்புகளுக்குக் கடத்தப்படுகின்றது. இறுதியில் 'பேர்சிஞ்' நரம்புகளில் மின்கடத்தல் முடிவுறுகின்றது.

ஒவ்வொரு தடவையும் ஆண்டவன் முடிச்சில் மின் உற்பத்தியாகி சோணை அறைத்தசைகள், இதயவறைத் தசைகள் என்பனவற்றின் ஊடாக செல்லும் பொழுது அதே ஒழுங்கைப் பின்பற்றி முறையே தசைச் சுருக்கங்கள் ஏற்பட்டு சோணை அறைகளும் இதய அறைகளும் மாறிமாறிச் சுருங்கி விரிகின்றன. அப்பொழுது ஒரு ஒழுங்குமுறையில் குருதிச் சுற்றோட்டம் நிகழ வாய்ப்பேற்படுகிறது.


வாசகர்களுக்கு இங்கு ஓர் ஐயம் வரலாம். அதாவது, சோணை அறைகளில் பாயும் மின்சாரம் ஏன் நேரடியாக இதய அறைகளுக்கு பாய்வதில்லை. மாறாக சோணை - இதயவறை (A.V Node) முடிச்சினூடாக பாய்கின்றதே என்று! காரணம் இங்கு சோணை அறைகளையும் இதய அறைகளையும் ஓர் வட்ட வடிவமான நார்த்தசைத்தட்டு பிரிக்கின்றது. இந்நார்த்தசைத்தட்டு மின்சாரத்தைக் கடத்தமாட்டாது. இதனால் மின்சாரம் ஒரு ஒழுங்கு முறையில் நரம்புத் தொகுதிகளூடாக மாத்திரம் கடத்தப்படுகிறது. மின்சாரம் செல்லும் ஒரேவழி இதுவாகும். இங்கு ஏற்படும் மின்சார ஓட்டங்கள் தான் மின்வரைவுப் பட்டியில் பதியப்படுகின்றன. (படம் Iஐ பாருங்கள்)

இருதயம் தொழிற்படும் பொழுது அங்கு சீராக ஏற்படும் மின்தொழிற்பாடுகள் ஒரு ஒழுங்கு முறையில் மின்சார அழுத்த வேறுபாடுகளை உருவாக்குகின்றது. இப்படியாக உருவாக்கப்படும் சில மில்லி வோல்ட்டுக்கள் அளவுள்ள மின்சாரத் தொழிற்பாடு தோலின் மீது தொடுக்கப்பட்டுள்ள மின் வாய்களினால் கடத்தப்பட்டு இருதய மின்வரை யந்திரத்திற்குச் செலுத்தப்படுகின்றது. அங்கு இம்மின்சாரத்தின் அளவு 15,000 மடங்காக உருப்பெருக்கம் பெறுகிறது. உருப்பெருக்கமடைந்த இம்மின்சாரம் பொறியிற் சக்தியாக மாற்றப் பெற்று ஓர் பேனா முனை போன்ற கூர் முனையைக் மின்சக்தி வேறுபாட்டிற்கு ஏற்ப இயக்குகின்றது. இப்பேனாவின் முனை சூடாக இருப்பதனால் அது வெப்ப உணர்வுள்ள மின்வரைவுப் பட்டி மீது நகரும் போது வரைவினை ஏற்படுத்துகின்றது. இதனை இருதய மின்வரைவுப் பட்டி என்று கூறுவர். இந்த வரைவினை வாசிப்பதன் மூலம் இருதயத்தில் உள்ள பலவிதமான நோய்கள், குறைபாடுகளை இனங்கண்டுகொள்ளலாம். தற்சமயம் பாவனையிலுள்ள நவீன இயந்திரங்கள் குறுகிய நேரத்தில் 12 இணைகளையும் (12 Leads) ஒரே பட்டியில் கச்சிதமாக வரைந்து சில அடிப்படை ஆய்வுகளையும் பட்டிகளில் பதிந்துதரக்கூடியவை. எப்படி இருப்பினும் இந்த மின்வரைவுப் பட்டிகள் இதயத்தில் ஏற்பட்டுள்ள எல்லாவித நோய்களையும் புலப்படுத்த மாட்டாது. இதயத்தில் ஏற்பட்டுள்ள நோய்களைக் கண்டறியும் கருவிகளில் உடலொலிமானிக்கு அடுத்தபடியாக இதைக் கொள்ளலாம். மேலும் பலவிதமான சோதனைக் கருவிகள் இருப்பதை முன்னைய கட்டுரைகளில் தந்திருந்தேன். எந்தப் பரிசோதனை செய்ய வேண்டுமென்று வைத்தியர்கள் நிர்ணயிப்பார்கள்.


நெஞ்சறையினுள் இருதய மார்ப்புப் பட்டை என்பின் இடதுபக்கத்தில் சற்று இடப்பக்கமாக சரிந்த நிலையில் இதயம் அமைந்துள்ளது. இதனால் இதயத்தின் நீளப் பக்க அச்சும் சரிந்த நிலையில் உள்ளது. இருதய மின்னோட்டமும் மேலிருந்து கீழ் நோக்கி இந்த நீள் பக்க அச்சுக்கு சமாந்தரமாக ஓடுவதனால் மின்விசையின் திசை கீழ்நோக்கிய வண்ணம் இருக்கும். இம்மின்னோட்டத்திற்குப் பரிமாணமும், திசையும் இருப்பதனால் இதைக் காவிக் கணியம் (Vector Quantity) என்பர்.

நவீன EKG அல்லது ECG இயந்திரத்தில் 12 இணைகள் (12 Leads) உண்டு. ஒருவர் சோதனைக் கட்டிலில் மல்லாக்கப் படுத்திருப்பார். அவரது கைகளில், கால்களில், நெஞ்சுப் பகுதிகளில் மின்தொடுவாய்கள் (Electrodes) 12 ஒட்டப்படும். அத்தொடுவாய்களில் 12 மின்வயர்கள் பொருத்தப்படும். 12 வயர்களும் மின்வரைவு இயந்திரத்துடன் தொடுக்கப்பட்டிருக்கும். சிலர் இந்த 'வயர்கள்' மூலம் மின்சாரம் தாக்கலாம் என்று பயப்-


13ம் பக்கம் பார்க்க...



படம்: 3



படம்: 2



படம்: 1



# Buy & Sell Residential & Commercial Properties



Raj. A. Rasaratnam B.Com.
Sales Representative

416-726-8055
416-299-8570

HomeLife
Higher Standards

HomeLife/ GTA Realty Inc.
Real Estate Brokerage*
*Independently own and operated

1711 McCowan Rd., Suite #206,
Scarborough, ON. M1S 3Y3

Bus: (416) 321-6969
Fax: (416) 321-6963




You can win!**
** Some terms and conditions apply

*Buy or sell any property with my help and enter the draw!*
*Don't miss out on these wonderful prizes!*

Mortgage arrangement, Business incorporation and corporate tax preparation

416-726-8055



# எமக்கென்று ஒரு தனிக்குடில்



சொந்த இல்லத்திற்கு தேவையான அடமானத்தை சுலபமாகப் பெறுவதற்கு பலவருட அனுபவம் பெற்ற முகாமையாளர்களை நாடுங்கள்

**TWO PROFESSIONAL MORTGAGE SPECIALISTS UNDER ONE ROOF WITH RATES YOU CAN'T BEAT**

**MAILVAGANAM (MIKE) AHILAN**
Senior Accounts Manager
Residential Mortgages
(2006 Platinum Award winner)
**416-220-1184**

**VINCE SINNADURAI**
Senior Accounts Manager
Residential Mortgages
(2006 Platinum Award winner)
**416-917-9462**

**416.438.1688**

**Fax: 416 438 1612**

RBC Financial Group

**1421 Kennedy Rd,**
**Scarborough, ON. M1P 2L6**

# “வீடு” வினாவும் விடையும்...



கருணா கோபாலபிள்ளை
- வீடு விற்பனை முகவர் -

மாற்றுக் கருத்துக்கள் ஆழமானதாக இருப்பினும் கூட ஒன்றுபட்ட சமூக சிந்தனையும் அதன் வெளிப்பாடாக ஒன்றுபட்ட ஓங்கிய குரல்களும் இன்றைய காலத்தின் கட்டாயம். ஆறுகள் சிறு அருவிகளாக வேறுபட்ட மையங்களில் தோன்றி பின்னர் ஒன்றிணைந்து கடலில் கலப்பது போல் நாம் புலம்பெயர் தமிழர், இன்றைய தேவைகளை உணர்ந்து எமது ஒவ்வொரு தாயகம் சார் செயற்பாட்டினையும் ஒரே அலைவரிசையில் இட்டுச் செல்ல வேண்டியது அவசியம். தனிப்பட்ட ஒருவரின் தன்னிச்சையான முன்னேற்பாடானது இதுவரை நாம் மேற்கொண்ட மற்றும் மேற்கொண்டு வருகின்ற நடவடிக்கைகளை மழுங்கடிக்க வல்லனவாக இருத்தல் ஆகாது.

எமது உரிமைப் போரானது எத்தனையோ அரசியல் மற்றும் பொருளாதார முட்டுக்கட்டைகளையும் தாண்டி, பல வல்லரசுகளின் பகடைக்காய்களாகி எத்தனையோ ஆயிரம், லட்சம் உயிகளை பணயம் வைத்து இன்று அடுத்த கட்டமான உலகளாவிய எடுத்துரைப்பு போராக மாறியுள்ளது. இம்மக்கள் போராட்டம் நியாயமானது என்பதனை பலரும் உணர்ந்துவருகின்ற காலகட்டம் இது. இதற்காக நாம் கொடுத்த விலை மிக அதிகம்தான். இன்றும், ‘அழுதும் பிள்ளையை அவள்தான் பெறவேண்டும்’’ என்பதுதான் விதி. அழ வேண்டிய காலம்தான் இன்றைய கேள்விக்குறி. கடமையுணர்ச்சியுள்ள புலம்பெயர் ஊடகத்துறையினருக்கு நன்றிகள் பல.

சரி வாசகர்களே, இம்முறை கிடைக்கப்பெற்ற தரமான கேள்விகளையும் அதற்கான பதில்களையும் ஆராய்வோம்.

### இன்றைய காலகட்டம், வீடு வாங்குவதற்கு உரியதா?

லக்குமணன் Scarborough

நீங்கள் வாங்கப் போகின்ற வீடு என்ன நோக்கத்திற்கானது என்பதனைப் பொறுத்ததே உங்கள் கேள்விக்குரிய பதில். அதாவது, அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, உறையுள் போன்றவையை தீர்மானிப்பது எமது அடிப்படை தேவையே. இவை தவிர்ந்த அனைத்துமே ஆடம்பரத் தேவையாகவே கருதப்படும். அடிப்படை தேவைகளை வேறு காரணிகளின் மூலம் தீர்மானிக்க முடியாது. கடந்த “தாய்வீடு” சஞ்சிகையில் வெளியான பங்குச்சந்தை பற்றிய ஓர் ஆய்வில் “ஆட்டுப் பங்கு” பற்றிய ஓர் சுவையான தகவல் ஒன்றினை படித்திருப்பீர்கள் என்று எண்ணுகின்றேன். பொருளாதாரம், ஏற்றத்தாழ்வுகள் மற்றும் சந்தை நிலவரங்கள் யாவும் முதலீட்டாளர்களின் செயற்கை விளைவுகள். இவை பற்றி அதிகம் அக்கறை கொள்ள வேண்டியவர்களும் அவர்களே.

உங்களின் அடிப்படைத் தேவையினை பூர்த்தி செய்வதற்கு பெற்றுக்கொள்கின்ற வீடு எக்காலத்திலும் நிறைவேற்றிக்கொள்ளலாம். மிக முக்கியமாக கனடா போன்ற நாடுகளில் உங்கள் முதன்மை வதிவிடத்தினை நீங்கள் பெற்றுக்கொள்வதற்காக எத்தனையோ அரச சலுகைகள் உண்டு. அதன் முக்கியத்துவம் கருதி கடன் வழங்குனர்களிடமிருந்து உங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கு கூட சட்டங்கள் நுகர்வோர் பாதுகாப்பு கருதியதாகவே காணப்படுகின்றது. அது மட்டுமன்றி சாதாரண வாடகை வீட்டுக்குரிய செலவுகளும் சுமார் சமதன்மையுள்ள வாங்குகின்ற வீடும் மிகவும் அண்மித்த செலவீனங்களையே கொண்டிருக்கும். ஆதலால் வசிப்பதற்குரிய அடிப்படை தேவையினை பூர்த்தி செய்வதற்காக நீங்கள் எக்காலத்திலும் வீடு வாங்கலாம்.

இருப்பினும்,

உங்கள் நோக்கம் ஓர் முதலீடாக இருப்பின் இதுவரை காலமும் நாம் அமெரிக்க விலை சரிவுகளின்பால் கொண்டிருந்த மனப்பீதியின் விளைவுகள் கனடிய பொருளாதாரத்தினை பெரிதும் பாதிக்கவில்லை. அதற்கான காரணம், முன்னைய காலங்களில் கனடா பெற்றுக்கொண்ட பாடமே. கனடிய வீட்டுச் சந்தையானது இன்றும் முதுகெலும்புடன் காணப்படுவதற்கு காரணம் இங்குள்ள கடன் வழங்கும் முறைகளாகும். இன்றைய கணிப்புக்களின் படி வீடு விற்பவர்களின் பருவம் முடிந்து இது வாங்குபவர்களுக்குரிய பருவம் (Buyers Market) அதாவது தெரிவுகள் அதிகம் கேள்வி குறைந்த காலம். காற்றுள்ள போதே தூற்றிக் கொள்வது புத்திசாலித்தனமானதே தவிர தூற்றாமல் விடுவதுதான் முட்டாள்தனம்.

> முன்னர் பொதுவாக மோட்கேஜ் பெற்றுக்கொள்ளும் வேளைகளில் ஐந்து வருடங்களுக்குரிய கால அளவினை பெறுவது வழக்கம். அவையும் *‘Prime Rate’* இலிருந்து குறைவானதாகவே காணப்பட்டது. மாறாக இன்றைய சந்தையில் *‘Prime Rate’*இனை விட சற்று அதிகரித்து காணப்படுவதால் நிலையான வட்டி விகிதத்தினை குறுகிய காலங்களுக்கு பெற்று நுகருதல் நன்று.

### மிகவும் குறைந்து காணப்படுகின்ற வட்டி விகிதத்தினை நமக்கு சாதகமாக்கிக் கொள்ள என்ன செய்யலாம்?

பார்வதி. Scarborough

‘Prime Rate’ என்று சொல்லப்படுகின்ற கனடிய வங்கியினால் அறிமுகப்படுத்தப்படும் வட்டி விகிதம் குறைந்து காணப்பட்டாலும் சாதாரணமாக வங்கிகளால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற வட்டி விகிதமானது சற்று அதிகமாகவே காணப்படுகின்றது. இதுபோன்ற காலங்களில்தான் மிகவும் அவதானம் தேவை. சுமார் 4-5 வருடங்களுக்கு முன்னர் நாம் பொதுவாக மோட்கேஜ் பெற்றுக்கொள்ளும் வேளைகளில் ஐந்து வருடங்களுக்குரிய கால அளவினை பெறுவது வழக்கம். அவையும் ‘Prime Rate’ இலிருந்து குறைவானதாகவே காணப்பட்டது. மாறாக இன்றைய சந்தையில் ‘Prime Rate’ இனை விட சற்று அதிகரித்து காணப்படுவதால் நிலையான வட்டி விகிதத்தினை குறுகிய காலங்களுக்கு பெற்று நுகருதல் நன்று.

கடன் அட்டைகள் பொதுவாக 19%-29% வரையான வட்டியினை கொண்டிருக்கின்றது. அவைகளை வேண்டுமானால் இக்குறைந்த மோட்கேஜ் வட்டி விகிதத்துடன் ஒப்பிடுவதன் மூலம் கணக்கிட்டு வீட்டில் சொத்துக்கள் இருப்பின் ‘Refinance’ முறை மூலம் சில சலுகைகளை நுகரலாம். மேற்கூறிய அனைத்துக்கும் வங்கிகளை அல்லது மோட்கேஜ் முகவர்களை அணுகி அவர்களின் ஆலோசனைப்படி நடத்தல் நன்று. ஒவ்வொருவரின் தேவையும் அவரவர் தகைமையும் வேறுபடக்கூடும்.

### நான் புதிதாக வாங்கிய வீட்டின் நிலக்கீழ் அறை சுவர்களிலும் மற்றும் தரையிலும் சில வெடிப்புக்கள் காணப்படுகின்றது. ஆனால் தண்ணீர் கசிவு ஏற்பட்டதற்கான அடையாளங்கள் இல்லை. இவ்வகை வெடிப்புக்களால் பாதகம் உண்டா?

சிவா.u Brampton

நிட்சயமாக இவ்வகை வெடிப்புக்களால் எந்தப் பாதகமும் இல்லை. இவை சாதாரணமாக எல்லா வீடுகளிலும் காணப்படுவதே. இருப்பினும் தண்ணீர் கசிவு ஏற்படுகின்ற பட்சத்தில் உங்கள் வீட்டின் Warranty முறை மூலம் திருத்திப் பெற்றுக்கொள்ளலாம். அது மாத்திரமன்றி உங்கள் வீடு அமைந்துள்ள மண்ணின் தன்மையைப் பொறுத்து வீடு படிமானம் பெறும் வேளைகளில் ஏற்படும் இவ்வகை வெடிப்புக்கள் ஒரு சதம் (Penny) நுழையக்கூடிய அளவு அகலமானதாக காணப்பட்டால், வீட்டினை பரிசோதித்து முடிவெடுத்தல் நன்று. தரைகளில் காணப்படுகின்ற வெடிப்புக்களின் பாதிப்புக்கள் மிக மிக குறைவு. மாறாக சுவர்களிலும், யன்னல் ஓரமாகவும் ஏற்படும் வெடிப்புக்கள் சர்ச்சைக்குரியவை. இவை பற்றிய ஓர் ஆய்வினை வீட்டு பரிசோதகர்களின் உதவியின் மூலம் பெறலாம். உங்கள் வீட்டின் ‘warranty’ காலாவதியாகியிருப்பின், இவை போன்ற வெடிப்புக்களை சரிசெய்வதற்கு சுமார் $300-$400 செலவு ஏற்படும். தகவல்களை Google முறைமூலம் ‘Crack Fixtures’ என்ற இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

### ‘Buyers Market’ என்று இன்று பரவலாக வானொலி தொலைக்காட்சிகளில் கூறுகிறார்கள். அதன் பொருள் வீடு விலைகளில் கணிசமான சரிவுகளை எதிர்நோக்கியதா? அல்லது சந்தையிலுள்ள வீடுகளை குறைந்த விலையில் வாங்கலாம் என்பதா?

லதா. க. Ajax

இன்றைய காலத்திற்கு ஏற்ற கேள்வி. நாம் அமெரிக்காவுக்கு அருகில் இருக்கின்றோமே தவிர, அமெரிக்காவில் அல்ல. இரண்டு நாடுகளும் அருகருகே இருப்பினும், சார்ந்திருப்பினும், தமக்கென பொருளாதார கொள்கைகளிலும் செயற்பாடுகளிலும் வேறுபட்டு காணப்படுகின்றது. பருவகாலங்கள் மாறி வருவது போல வீடு சந்தை நிலவரமும் பல காரணிகளால் ‘வாங்குபவர்களது பருவம்’, விற்பவர்களது பருவம்’ என மாறி மாறி வரும். அதற்கான விளக்கம்; விலைகள் சார்ந்ததாகத்தான் இருக்க வேண்டும் என்பது அல்ல. செயற்கையான பொருளாதார தாக்கம். அல்லது மந்த நிலையில் காணப்படும் பரிமாற்றங்கள், சுழற்சி முறையில் பொருளாதார எதிர்பார்ப்பின் மந்தநிலை இன்னும் பலவற்றைக்குறிப்பிடலாம்.

இன்றைய ‘Buyers Market’ பருவத்திற்குரிய காரணம் ‘Supply and Demand’ கருதியதே. அதாவது கேள்விக்கும் சந்தையிடப்பட்ட எண்ணிக்கைக்கும் உரிய ஒரு தாக்கமே. இன்றைய சந்தையில் கேள்வி சற்று குறைந்து காணப்படுகின்றது. அதற்கு ஓர் முக்கிய காரணம் ‘பொறுத்திருந்து பார்ப்போம்’ என்கின்ற பொது மனநிலை. ஆதலால் சந்தையிலுள்ள வீடுகள் கூடிய காலம் விற்பனைக்காக காத்திருக்க வேண்டிய தருணம். அது மட்டுமன்றி வீடு வாங்க நினைப்பவர்களுக்கு தெரிவுகள் அதிகம். வட்டி விகிதமும் கவர்ச்சிகரமானதாக காணப்படுவதால் அனேகர் தகுதியான வர்களாக காணப்படுகின்றனர்.

வீடு விலைகருதி, சிறிதளவு தாக்கங்கள் இருப்பினும், குறிப்பிடும்படியாக விலைவீழ்ச்சி Toronto பெரும்பாகம் மற்றும் சுற்றுவட்டாரங்களில் இல்லை.

### வீடு வாங்கும்போது கண்டிப்பாக காப்புறுதி வைத்திருத்தல் அவசியமானதா?

செந்தில். வே. Scarborough

வீட்டுக்காக நீங்கள் கடன் பெறும் வேளைகளில் கடன் வழங்கும் நிறுவனங்கள் இக் காப்புறுதியினை நிச்சயமாக கோருவார்கள். இவ்வகை காப்புறுதி தீயினால் ஏற்படும் சேதங்களை சரி செய்வதற்கான காப்புறுதியே (Fire Insurance) இருப்பினும் அதனுடன் சேர்த்து உங்கள் உடமைகளையும் இணைத்துக் கொள்வதற்கு சிறிதளவு கட்டுப்பணமே அதிகமாகும். சுமாராக இவ்வகை காப்புறுதிகளுக்கு மாதாந்தம் $50-$70.00 வரை செலவிட வேண்டி இருக்கும். நீங்கள் வாகன காப்புறுதி வைத்திருக்கும் நிறுவனங்களுடன் தொடர்பு கொள்வதன் மூலம் ‘Combo’ என்றழைக்கப்படும் வீடு/வாகன காப்புறுதி முறை மூலம் சிறிதளவு பணத்தை மீதப்படுத்த முடியும்.

இன்று எமது உரிமைகளை வென்றெடுக்கவும், உயிர்களை காப்பாற்றவும் உலகளாவிய ரீதியில் சாத்வீகப் போராட்டங்கள் இடம்பெற்றவண்ணம் உள்ளன. கனடாவைப் பொறுத்தவரை பல பொது ஊடகங்கள் எம்மையும் எமது எண்ணங்களையும் வெளியிடத் தொடங்கியுள்ள காலம். அதற்கு ஓர் முக்கிய காரணம் நாம் மக்கள் கருதிய ஓர் விழிப்புணர்ச்சியினை வெளிக்கொணர்ந்ததே. இருப்பினும் தமிழினத்தின் தனிப் பிரதிநிதிகளை சார்ந்திருக்காவிட்டாலும், அவர்கள் பற்றிய தவறான பரப்புரை கண்டிக்கப்பட வேண்டிய தொன்று. நாங்கள் வாழுகின்ற நாடுகளின் சட்ட விதிகளை கண்டிப்பாக மதிக்கவேண்டும். அப்போதுதான் எமது குரலுக்கும் ஓர் அங்கீகாரம் கிடைக்கும். அதேவேளை யாரையும் குறைகூறித்தான் எமது முன்னெடுப்புக்கள் அமையவேண்டும் என்பதல்ல.

நன்றி வாசகர்களே, அல்லலுறும் எம்மக்களின் (தமிழின்) விடிவு மிக விரைவில் மலரும் என்று வேண்டி, மீண்டும் தொடரும் இதழ்களில் இணைந்துகொள்வோம்.

karuna@thaiveedu.com

■ ■ ■

**Office Space for Lease**
(அலுவலகம் வாடகைக்கு)

Kennedy/ Ellesmere சந்திப்பில் ஓர் அலுவலகம் வாடகைக்கு உள்ளது. சிறு அலுவலகத் தேவைக்கு ஏற்ற இடம். 150 SQ feet.

தொடர்புகளுக்கு:
**416-321-8716, 416-302-7283**

# வீடு வியாபார நிலையம் வாங்க விற்க

**$174.000**

McCowan & Eglinton
2+1 Bedrooms 2 Washroom

**$419.000**


Western & Rutherford
3 Bedrooms 3 Washroom
All Wood Floor

**$354.900**

Sheppard & Morningside
4+1 Bedrooms 3 Washroom
Sep Ent. Basement

**$159.900**

Weston & Sheppard
2 Bedrooms 2 Washroom

**$339.900**



Torbram / Boviard
4 Bedrooms 3 Washroom
Hardwood Floor

**$369.000**
PHOTO NOT AVAILABLE
Suunymeadow & Sandalwood
3 + 1 Bedrooms, 4 Washroom
Finished Basement

*In Cambridge*
GAS STATION WITH CONV. + LOTTO 649 + WAREHOUSE +GARAGE
**$845.000**

*In Colborne*
GAS STATION
CAR WASH & CONV.
**$89.000**
with Property.
**$575.000**

*In Cornwall*
ULTRAMAR GAS STATION WITH 5 BEDROOM HOUSE & GARAGE
**$499.000**

*In Burlington*


**$159.000**

**$99.000**
Convenience Store with 6/49
McCowan / Hwy 7

**$549.000**
PHOTO NOT AVAILABLE
Keele & Major Mac.
5 + 2 Bedrooms, 3 Washroom
Sep Ent. Finished Basement



மேலும் பல GAS STATION களும் விற்பனை
நிலையங்களும் விற்பனைக்குண்டு
நம்பிக்கை நேர்மை நட்பான சேவைக்கும் அழையுங்கள்

## சத்தி மருதப்பா
Sales Representative
(முழுநேர வீடு விற்பனை முகவர்)

## 416-816-1500

*Some conditions may apply

Affiliate Realty Inc.
Brokerage
208 - 80 Corporate Drive,
Toronto, Ontario M1H 3G5
Bus: 416-290-1200
Fax: 416-290-1900
Century 21

brightsun print - 416-845-6565



# HOMELIFE FUTURE REALTY

HomeLife Higher Standards

7 Eastvale Dr #205
Markham, Ontario
L3S 4N8

Office: 905-201-9977
Fax: 905-201-9229



- 3 Bedrooms
- 3 Washrooms
- Upgraded Hardwood Floor



- 4 Bedrooms
- 3 Washrooms
- Open Concept



- 3+2 Bedrooms
- 4 Washrooms
- Close to all Amenities

## LOW INTEREST RATES!
## OPPORTUNITY TO BARGAIN!
## ACT NOW!!
## BUY NOW WITH LOKAN!



**LOKAN SUNDARAM**
*Broker*

*416-450-3984*
*lokan.homelife@gmail.com*

For Your Mortgage Needs
Contact
*Ragavan Ramanathan*
*Scotia Mortgage Development Manager*
*416-579-7533*

# இருதய மின்வரை...

9ம் பக்கத் தொடர்ச்சி...

படுவார்கள். இதுவோர் அர்த்தமற்ற பயம்.

மின்வரைவு எடுக்கும் பொழுது அசைவு, ஆட்டமின்றிப் படுத்திருத்தல் அவசியம். கை, கால்கள் அசையும் பொழுது மின்பதிவில் மாற்றங்கள் ஏற்படலாம். வாசகர்கள் பலர் மின்வரைவுப் பட்டிகளைக் கண்டிருப்பீர்கள். அதில் பட்டியின் கீழ்ப்பகுதியில் சரி அல்லது மேற்பகுதியில் சரி குறிப்பிட்ட இடைத்தூரத்திற்கு ஒருதடவை இணை 1 (Leads 1) இணை 2 (Leads 2) இணை 3 (Leads 3) இணைகள், $V_1, V_2, V_3, V_4, V_5, V_6$, (Leads $V_1$, $V_2$, $V_3$, $V_4$, $V_5$, $V_6$,) இணைகள் AVR, AVL, AVF என குறிப்பிடுவார்கள்.

இங்கு முதல் மூன்று இணைகளைப் பற்றி அறிந்துகொள்ளுதல் போதுமானது.

பல மின்வாய்கள் எமது உடல் மீது தொகுக்கப்பட்டிருந்தாலும் ஒரு தடவையில் இரு புள்ளிகளுக்கிடையில் உள்ள அதாவது இரு மின்வாய்களுக்கிடையில் உள்ள மின்னமுத்த வேறுபாடுகளே பதியப்படும்.

இப்படியாக வலது கையில் உள்ள மின்வாய்த் தொடுப்பையும், இடதுகையிலுள்ள மின்வாய்த் தொடுப்பையும் தொடுக்கும் பொழுது இணை 1 (Leads 1)இன் வாசிப்புப் பெறப்படுகிறது. மின்வரைவு இயந்திரம் மேற்கூறிய இணைகளைத் தானாகவே வேறுபடுத்திப் பதியும் முறையில் தானியங்கிச் சாதனங்கள் அதனுள்ளே அமைக்கப்பட்டிருக்கும். வலது கையில் உள்ள மின்வாயும் இடது காலில் உள்ள மின்வாயும் தொடுக்கப்படும் பொழுது இணை 2 (Leads 2) பெறப்படுகிறது. இதே திசையில் தான் இருதயம் சரியாக அமைந்து அதன் மின்னோட்டம் மேலிருந்து கீழாக ஓடுவதனால் இத்திசையில் மின்வழுவானது ஏனைய இணைகளைக் காட்டிலும் கூடுதலாக இருக்கும். இதன் காரணமாகத்தான் இந்த அலை மின் பருமனுக்கு ஏற்றவண்ணம் மேல் கீழ் திசைகளில் பெரிதாக இருக்கிறது.

இடது கையிலுள்ள மின்வாயும் வலது காலிலுள்ள மின்வாயும் தொடுக்கப்படும் பொழுது இணை 3 பெறப்படுகிறது. இப்படியாக அந்தந்த இணைகள் பெறப்படும் பொழுது உருவாகும் வரைவுகளின் கீழே அந்தந்த இணைகளுக்கான பெயர்கள் கொடுக்கப்படும்.

மேலே காட்டப்பட்டுள்ள வரைவு இருதயத்தில் இருந்து புறப்படும் பல கோடிக்கணக்கான அலைகளில் ஒன்றாகும். ஆனால் ECG என்னும் இருதய மின்வரைவில் பல கோணங்களில் இருந்து எடுக்கப்பட்ட பலவித அலைவடிவங்கள் உண்டு. இவ்வாசிப்புக்களை வைத்துக்கொண்டு ஒரு நிமிடத்திற்கு ஏற்படும் இதயத் துடிப்பு வீதம் இதயத் துடிப்பின் ஒழுங்கீனங்கள், மார்பு நோய், இருதய நரம்புகளில் ஏற்பட்டுள்ள தடைகள், மற்றும் செயற்கையான இதயத் தூண்டி (Pace maker) இயந்திரம் இயல்பாக தொழிற்படுகிறதா? என்பன போன்ற பல தகவல்களை அறிவதற்கு இந்த ECG உதவுகிறது.

### மின்னலை பற்றிய விளக்கங்கள்

### P – அலை

ஆண்டவன் முடிச்சில் இயல்பாகவே நிகழும் மின் தூண்டலும் அது இதயச் சோணை அறைகளின் சுவர்களூடாக பாயும் பொழுது ஏற்படும் மின் அலையே இதுவாகும். இவ்வலை இரு சோணைகளையும் சுருங்கச் செய்து குருதியை முறையே இரு இதயவறைகளையும் சென்றடையச் செய்கின்றது.

### PR – இடைவேளை

அலை Pயில் இருந்து QRS அலைச்சிக்கலின் தொடக்கம் வரைக்கும் உள்ள பகுதி இதுவாகும். இந்த இடைவேளை ஒரு சுகதேகியில் 0-12 செக்கனுக்கும் 0.20 செக்கனுக்கும் இடையில் இருத்தல் வேண்டும்.

### QRS இடைவேளை

Q அலையில் தொடங்கி S அலையின் முடிவு வரை QRS சிக்கல் அல்லது இடைவேளை என்று கூறுவர். இதன் கால அளவு, 0.6 செக்கன் தொடக்கம் 0-10 கால அளவு வரையாகும். இடைவேளைக் கால அளவு வேறுபட்டிருந்தால், இதயவறைப் பகுதியில் நோயினைக் குறிக்கும்.

### S-T இடைவேளை

S அலை முடிவிலிருந்து T அலை முடிவு வரைக்கும் உள்ள காலப்பகுதியாகும். இது இதயவறைகள் மீள் முனைவாக்கம் (Re – Polarization) பெறுதலைக் குறிக்கும். அதாவது அடுத்த கட்டம் இதயம் சுருங்குவதற்குத் தன்னைத்தானே தயார் செய்து கொள்ளும் கட்டமாகும்.

மேற்கூறிய பிரதான அலைகளைத் தவிர மேலும் பல அலைகள் உண்டு. எல்லாவித அலைகளிலும் உள் அளவீடுகளை வாசிக்கும் பொழுதுதான் ஓரளவு துல்லியமான விளைவுகளை வாசிக்க முடியும். இது தவிர உடற்பயிற்சியின் பொழுது எடுக்கப்படும் மின்வரைவுப் பட்டி மேலும் பல தகவல்களைக் கொடுக்கக் கூடியதாக இருக்கும்

senthil@thaiveedu.com

■ ■ ■


முதலுதவி கற்பதற்கும் ஆலோசனைகளிற்கும்

**Dr.Kandiah Senthilnathan**

(Registered Medical Officer - SLMC)

Echo-cardiographer - Canada,

First Aid & CPR Instructor

(Certified in Canada)

முதலுதவி கற்கும் ஆறு மாணவர்களுக்குமேல் சேருமிடத்தில்
உங்கள் இடத்திற்கு வந்து கற்பிக்கப்படும்.

**647-801-9252, 416-502-9252.**


# எப்படி ஓர் ஈரப்பதனியை...

7ம் பக்கத் தொடர்ச்சி...

தொடர்ச்சியாக பல மாதங்களுக்கு குளிரான ஈரலிப்பான காலநிலை அல்லது வெப்பமும், புழுக்கமுமான காலநிலை காணப்படும் பிரதேசங்களில் காற்றோட்டம் ஏற்படுதல் வீட்டினுள் உள்ள காற்றின் ஈரலிப்பை அதிகரிக்கச் செய்கிறது. ஈரப்பதனை அகற்றும் கருவி மூலமே ஈரலிப்பு தொடர்பான பிரச்சினைகளைத் தடுக்க முடியும்.

### ஈரப்பதனையகற்றும் கருவிகள் எவ்வாறு செயற்படுகின்றன?

### Heat Pump Humidifiers

ஈரப்பதனையகற்றும் கருவிகள் Heat Pump அல்லது இரசாயன உறிஞ்சிகளை பயன்படுத்தி, காற்றைக் குளிரச் செய்யாமல் காற்றில் உள்ள ஈரலிப்பை அகற்றுகிறது.

ஒரு Heat Pump Humidifiers கருவி வீட்டினுள் உள்ள காற்றை ஒரு சுழல் காற்றாடியின் மூலம் ஓர் வெப்ப பரிமாற்ற சுருளின் மீது இழுத்தெடுக்கிறது. காற்றில் உள்ள நீர் இந்த சுருளின் மீது படிந்து வடிகின்றது. மற்றுமொரு வெப்ப பரிமாற்ற சுருள் காற்றை மீண்டும் சூடேற்றுகிறது. பின்பு ஈரப்பதனகற்றும் கருவி அந்த காற்றை அறையினுள் இழுத்தெடுக்கிறது.

ஒடுக்கி (Compressor), Fan Motors ஆகியவற்றில் இருந்து இழக்கப்படும் வெப்பத்தை Heat Pump Dehumidifier காற்றில் பரவ விடுகின்றது. ஈரப்பதனை அகற்றும் கருவியினால் பிறப்பிக்கப்படும் வெப்பத்தை வீட்டினுள் உள்ள காற்றுக்கு திருப்பி அனுப்புவதன் காரணமாக நீராவி திரவ நீராக மாற்றப்படுகிறது.

### இரசாயன உறிஞ்சி ஈரப்பதன கற்றிகள் (Chemical Absorbent Dehumidifiers)

இவ்வகையான ஈரப்பதனகற்றிகள் சூடான சுவாத்திய நிலையுடைய நாடுகளுக்கு ஏற்றவை எனவே இது கனடாவிற்கு பொருத்தமற்றது.

### ஈரப்பதனை அகற்றும் காற்றோட்டக் கருவிகள் (Dehumidifying Ventilators)

இது ஓர் உணர் கட்டுப்பாட்டு கருவியையும் சுழல் காற்றாடியையும் கொண்டுள்ளது. ஈரப்பதன் குறிப்பிட்ட ஓர் மட்டத்தை அடையும் போது செயற்படக் கூடியதாக உணர் கட்டுப்பாட்டு கருவியை அமைக்கவும் வீட்டின் நிலக்கீழ் பகுதியில் ஈரலிப்பு உருவாகினால் ஈரப்பதனை அகற்றும் காற்றோட்டக் கருவி திறமையாக செயற்படக் கூடியது.


ஈரப்பதனை அகற்றும் காற்றோட்டக் கருவிகள் வெப்பத்தை மீட்டு எடுப்பதில்லை. ஆனால் அவை Heat pump ஈரப்பதனகற்றிகளை விட குறைந்த அளவு மின்சாரத்தை உபயோகிக்கின்றன. இவை வீட்டுக்கு வெளியே இருந்து அதிகளவு காற்றை வீட்டினுள் கொண்டுவரும் தன்மை உடையவை எனவே அவை வெப்பமும், புழுக்கமும் உள்ள வேளைகளில் சிறப்பாக செயற்பட மாட்டாது. அவை குளிரான காலநிலையின் போது மட்டுமே நன்கு செயற்படக் கூடியவை.

ஈரப்பதனை அகற்றும் காற்றோட்டக் கருவிகள் உங்களது வீட்டின் நிலக்கீழ் வதிவிடப் பகுதியைக் குறைப்பதனால் எரிவாயு வெளியேற்றத்தை ஏற்படுத்தலாம். உங்களது வீட்டில் உள்ள வாயு எரியுலை, நீர் சூடேற்றி ஆகியவற்றின் காற்றோட்டத்தை, Heating ஒப்பந்தக்காரர் மூலம் பரிசோதித்து அறிந்து கொள்ளுங்கள். ஈரப்பதனை அகற்றும் காற்றோட்டக் கருவியை பொருத்தினால் காபன் ஓர் ஒட்சைட்டு எச்சரிக்கை கருவியை பொருத்துவது சிறந்த பாதுகாப்பு முறையாக அமையும்.


உசாத்துணை:
http://www.cmhc-schl.gc.ca/en/corp/nero/retousar/2008/2008-12-12.cfm


mahen@thaiveedu.com

■ ■ ■

NuTek COMPUTERS

www.nuTechComputer.com

- Virus Removal
- Internet Sharing
- Computer Tune Up
- Computer Repair

அனைத்து கணணி திருத்த வேலைகளும்
உங்கள் வீட்டில் வந்து திருத்தி தரப்படும்

416.587.1619

techsupport@nutechcomputer.com

Raj Paramasamy

A+ Certified PC Technician

Microsoft Certified Professional

SALES - SERVICE - UPGRADES

# மருத்துவத்தில் மிளகாயின் பங்கு




சிவாஜினி பாலராஜன்

மிளகாயினை உணவில் பயன்படுத்தும் மக்களின் தொகையானது தற்போது உலகளாவிய ரீதியில் அதிகரித்துள்ளதாக கூறப்படுகின்றது. உலகின் பல பாகங்களிலும் உள்ள பல்லின மக்களும் மிளகாயின் சுவையினையும் காரத்தினையும் விரும்பி உண்ணுகின்றார்கள். கிட்டத்தட்ட உலக சனத்தொகையில் நான்கில் ஒரு பகுதி மக்களிலும்பார்க்க சிறிது அதிக தொகையான மக்கள் மிளகாயினை உணவில் சேர்த்துக் கொள்வதாக ஆராய்ச்சிகள் கூறுகின்றன. இம் மிளகாயானது மிகவும் முக்கியமாக நம்மவர்களால் பலவிதமான வடிவங்களில் உள்ளெடுக்கப் படுகின்றது. சுவையினடிப்படையில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த பொருளான உப்பிற்கு அடுத்ததாக மிளகாய் இடம்பிடித்துள்ளதாக கூறப்படுகின்றது. வாய்க்கு இதமாக சுவையினை மட்டும் கருத்திற்கொண்டு மிளகாயினை உட்கொள்ளும் மக்களின் மத்தியில் ஒரு சிலர் மட்டும் மிளகாயில் உள்ள மருத்துவக் குணங்களைக் கருத்திற் கொண்டு அவற்றை உட் கொள்வதாகக் கருதப்படுகின்றது. மரக்கறியாகவும், சுவையூட்டியாகவும் காணப்படும் மிளகாய் மருத்துவத் துறையிலும் முக்கியத்துவம்பெறத் தொடங்கியிருப்பதால் சாதாரண சமையலறை மிளகாய்க்கு பெருமளவில் பதவி உயர்வொன்று கிடைத்து மருத்துவ நிலையங்களிலும் மருத்துவ ஆய்வு கூடங்களிலும் தனது திறமையினையும் மதிப்பினையும் உயர்த்திக் காட்ட ஆரம்பித்துள்ளது.

## பரவலாக்கமும் வகைகளும்.

மிளகாய்ச்செடி தென்னமெரிக்காவில் கி.மு. 6000 – 7000 ஆண்டளவில் தன்னிச்சையாக வளர்ந்ததாக ஆய்வுகள் கூறுகின்றன. 15ம் நூற்றாண்டளவில் போர்த்துக்கேயரும் ஸ்பானியர்களும் தென்னமெரிக்காவினைக் கண்டுபிடித்த பின்னர் மிளகாய்ச் செடியானது




**Parts of Chilli**

மனிதர்களது பாவனைக்காகப் பெரும்பான்மையாகப் பயிரிடப்பட்டதாக தெரிய வருகின்றது. மிளகாய்களின் நிறமும் உருவ அமைப்புகளும் அளவும் இனத்துக்கு இனம் வேறுபடும். பொதுவாக மிளகாய் கப்சிக்கம் எனப்படும் குடும்பத்தினைச் சேர்ந்தது. இந்த கப்சிக்கத்தில் 400க்கும் மேற்பட்ட வகைகள் உண்டு. இவற்றில் பொதுவானவை

- Capsicum Annum: Bell peppers, Paprika and Jalapenos
- Capsicum frutescens : Cayenne and Tabasco peppers

> “மிளகாயிலுள்ள கப்சாசின் எனப்படும் *8-methyl-N-vanillyl-6-nonenamide*இற்கு இரத்த அழுத்தத்தினை குறைக்கும் தன்மையும், உடலின் கொழுப்புத் தன்மையினை குறைக்கும் தன்மையும், உடல் எடை குறைப்பிற்கு உதவும் தன்மை, இதய நோய்கள், பக்கவாதம், மற்றும் புற்றுநோய் போன்ற நோய்கள் வருவதனைத் தடைசெய்யும் தன்மையும் இருப்பதாக ஆய்வுகள் கூறுகின்றது.”

- Capsicum Chinese: habaneros and Scotch bonnets
- Capsicum Pubescens: Rocoto peppers
- Capsicum Baccatum : Chiltepin

மிளகாயின் காரத்தன்மை வெவ்வேறு இனங்களுக்கு வெவ்வேறான அளவாக இருக்கும். Scoville Organoleptic Test என்னும் பரிசோதனையினால் மிளகாயின் காரத்தன்மை கண்டுபிடிக்கப் படுகின்றது. இந்த பரிசோதனை Wilbur L. Scoville என்பவரினால் 1912ம் ஆண்டு செய்யப்பட்டது. இதனால் மிளகாயின் காரத்தினை அளக்கும் அலகு அவருடைய பெயரைக் கொண்ட scoville units என்னும் பெயரினால் அழைக்கப்படுகின்றது. இந்த அலகு கூடக்கூட மிளகாயின் காரத்தன்மை கூடிக்கொண்டு போகும். மிளகாயின் நடுவில் இருக்கும் வெண்மையான பகுதியும் விதையுமே காரத்தன்மைக்குக் காரணமாகும். கப்சாசின் என்னும் காரத்தன்மையான (alkaloid) ஒரு பொருள் நடுப்புறப் பகுதியிலும் விதையிலும் இருப்பதுதான் இக் காரத் தன்மைக்கு காரணமாகும்.

தற்போது மிளகாயின் காரத்தன்மையினை அளப்பதற்கு High Performance Liquid Chromatograph என்னும் உபகரணம் பாவிக்கப்படுகின்றது. இதன்படி சில மிளகாய் வகைகளின் காரத்தன்மை பாகுபடுத்தப்பட்டிருக்கின்றது.

0 -100 Scoville Units = Bell Peppers

2500 - 5000 Scoville Units = Jalapeno

5000 - 15000 Scoville Units = Serrano

30000 - 50000 Scoville Units = Cayenne & Tabasco

100,000 - 350,000 Scoville Units = Scotch Bonnet & Thai Chillies

200,000 - 300,000 Scoville Units = Habanero

Pure Capsaicin is around 16 million Scoville units

## மருத்துவத்தில் பங்கு

**Capsaicin**

```
         H3CO
           \____     O        CH3
           /  \      |         |
       HO-<      >-C-N-C-(CH2)4-
C=C-C-CH3
           \____/ ||       |||
                 H2 H       H H H
```

மிளகாயில் பலவிதமான நோய்களைக் குணப்படுத்தும் காரணிகள் இருப்பதாகக் கூறப்படுகின்றது. இவை வெறும் கூற்றுக்களல்ல. ஆராய்வுகளின் முடிவே ஆகும். மிளகாயிலுள்ள கப்சாசின் எனப்படும் 8-methyl-N-vanillyl-6-nonenamideஇற்கு இரத்த அழுத்தத்தினை குறைக்கும் தன்மையும், உடலின் கொழுப்புத் தன்மையினை குறைக்கும் தன்மையும், உடல் எடை குறைப்பிற்கு உதவும் தன்மை, இதய நோய்களை அல்லது பக்கவாதம், புற்றுநோய் போன்ற நோய்கள் வருவதனைத் தடைசெய்யும் தன்மையும் இருப்பதாகக் கூறப்படுகின்றது. அதுமட்டுமல்ல மிளகாய் குளிர் சுரம், தடிமன், மூட்டுவலி, sinusitis, bronchitis போன்ற நோய்களைக் குணப்படுத்தும் வல்லமை கொண்டதாயும் வலிகள் நோவுகளைக் குறைக்கும் தன்மை கொண்டதாயும் இருக்கின்றது. இதனால் இது வலி நீக்கியாக சில மருந்து தயாரிப்புகளில் பாவிக்கப்படுவதாகவும் ஆஸ்திரேலியாவில் டாஸ்மானிய பல்கலைக்கழக விஞ்ஞானியாகிய டாக்டர் ஆன்ரூ டேவிஸ் கூறியுள்ளார்.

உணவில் உடன் (Fresh) மிளகாயினை அதிகம் சேர்த்துக்கொள்வோர் நேரத்துடன் படுக்கைக்குச் சென்று அதிகாலை நேரத்துடன் எழும்பி விடுகின்றார்கள் என இவர்களது ஆராய்ச்சி கூறுகின்றது. அத்துடன் நாள் முழுவதும் சுறுசுறுப்பாக இருக்க விரும்பின் உணவில் அதிகம் மிளகாய் சேர்த்துக் கொள்ளுங்கள் எனக் கூறுகின்றார் டாக்டர் டேவிஸ்.

டாக்டர் டேவிஸ் தனது ஆராய்வில் 25 பேர் கொண்ட குழுவினை ஈடுபடுத்தி அவர்களுக்கு முதலில் சாதாரண உணவும் பின்னர் 30கிராம் மிளகாய் கொண்ட உணவும் கொடுத்து இந்த ஆராய்வினை மேற்கொண்டார். இது தொடர்ந்து எட்டு நாட்களுக்குச் செய்யப்பட்ட போது உணவில் உடன் மிளகாய் பாவிக்கப்பட்ட போது அவர்கள் சீக்கிரமே தூங்கி அதிகாலை நேரத்துடன் எழும்பியதாகவும் சுறுசுறுப்பாக இருந்ததாகவும் கண்டுபிடிக்கப்பட்டது.

சிவப்பு மிளகாயில் சதையி (Pancreatic Cancer), புரொஸ்ரேற் (Prostate Cancer) என்பவற்றில் புற்று நோயினைக் குறைக்கும் தன்மை இருப்பதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. கப்சாசின் எனப்படும் மிளகாயில் உள்ள அல்கலோயிட்டினை புறொஸ்ட்ரேற் புற்று நோயுள்ளவருக்கு தொடர்ந்து கொடுத்த போது அவரது புற்று நோய் கட்டி சிறுத்ததாகக் கண்டுபிடிக்கப்பட்டது. இந்தக் காரமானது (alkaloid) எங்கள் கலங்களில் உள்ள மைற்றோ கொண்டியாவில் மாற்றங்களை ஏற்படுத்துவதாக ஆராய்வாளர்கள் கூறுகின்றனர். ஒரு கலத்தின் அசைவு, அழிவு, புதிய கல உருவாக்கம் போன்றவற்றிற்கு சக்தியினை வழங்குவது எங்கள் கலங்களில் உள்ள இம் மைற்றொ கொண்டியாவாகும். அதாவது பொதுவாக இந்த மைற்றோ கொண்டியா எங்கள் கலங்களின் Power Houses என அழைக்கப்படும்.

அமெரிக்காவில் லொஸ்சேஞ்சலில் உள்ள புற்று நோய் ஆராய்ச்சி நிலையத்தில் வேலை செய்த டாக்டர் சாமுவேல் ஒஸ்சின் என்பவர் தனது மருத்துவக் கூடத்தில் செய்த ஆராய்ச்சியின் போது புரொஸ்ரேற் புற்று நோயுள்ளவருக்கு கப்சாசின் கொடுத்த போது அவரது கட்டியின் வளர்ச்சியில் சுருக்கம் காணப்பட்டதாக கண்டு பிடித்துள்ளார். அதாவது தேவையற்ற கலங்களின் அழிவினைத் தூண்டுவதற்கு கப்சாசின் ஒரு மிகச் சிறந்த காரணியாகும்.

20ம் பக்கம் பார்க்க...





RESIDENTIAL AND COMMERCIAL BUYING / SELLING & LEASING

* 1900 Sq.Ft
* 4 Bed Rooms
* 3 Washroom with
* Laundry in 2nd Floor
* Oak Stair Case
* Ceramic/ Hardwood Floor T/B

$369,900

Flexible Commission

Raja
V.S. Rajagopal
Sales Representative
Dir : 416.727.8647
Email : sinnarajagopal@hotmail.com
HomeLife/Future Realty Inc.,



I'm here to get your mortgage smarter and faster.
உங்களுக்கு அதிக கடன் பளு இருந்தால் அனைத்தையும் குறைந்த ஒரு மாதக்கட்டணத்தில் கொண்டுவருவதுடன் உங்களுக்கு அதிக பணத்தையும் சேமிக்க உதவுவேன்.

- **Residential**
- **Industrial**
- **Commercial**

**1st, 2nd, 3rd Mortgages**

வங்கி வட்டி வீதத்தை விட குறைந்தளவு வட்டி வீதம்

**NO FEE FOR RESIDENTIAL MORTGAGES**

- Rate discount up to 3%
- Give me a call for free consultation
- Mortgages without no down payment

நீங்கள் வங்குரோத்துக்கு போயிருந்தாலும் நிராகரிக்கப் பட மாட்டீர்கள். யாருமே நிராகரிக்கப் படமாட்டார்கள் அனைவரும் தகுதியானவர்கள். குறைந்த வட்டி வீதத்தில் ஈட்டுக்கடன் பெற்றுக்கொள்ளவும், கடன்கள் குறித்த இலவச ஆலோசனைகளுக்கும் அனைவரதும் நம்பிக்கைக்கு பாத்திரமான அகிலா செந்திலை அழையுங்கள்

**Our interest rates starts from 0%**

- First-time Buyers
- Renewal
- Refinancing
- Pre-Approval
- Self Employed
- Bankruptcies
- Poor Credit
- New Immigrants
- Debt. Consolidation
- Construction Loans

invis

**மாற்றமடைந்திருக்கும் இன்றைய மோட்கேஜ் தேவைகளுக்கான ஆலோசனைகளுக்கு அழையுங்கள்**

When it comes to finding the Right Mortgage Solution to meet your needs, Please call **ME** befor making any **Decision!!!**

**After Approval**

# Joy is yours
# Pride is ours





## அகிலா செந்தில்
## Akila Senthil, *AMP*
*Lic: M08002166*
*Senior Mortgage Consultant,*
*Team Leader, Platinum Award Winner*
*A Challenging Prosperity Long Term Experienced Team Leader*

**Cell: 416.895.4321**

104-5770 Hurontario St., Mississauga, ON L5R 3G5
Fax: 905-283-3339, Web: www.mortgageprincess.ca, E-mail: akilasenthil@invis.ca
Head Office: Invis Inc., 100-480 University Ave., Toronto, ON M5G 1V2



# specialize in

**• Storage**
Free of charge for Loading & Unloading

**• Cross Docking**

**• Pallets**
Custom Pallets
New & Used Pallets
We also buy used Pallets

**• Moving**
Also Available
24 ft Truck Rentel With Driver $145
**Call Kiruba**
**416-300-6458**







**GTA Special Rates!!!**
**For Straight Truck.**
**Dock to Dock**
***Direct***
***Rush***
***Sameday***
***TailGate Orders***

**11 years in Business**

**CONTACT: MURALI**
**416.569.4065**
89 Thournmount Dr., Unit 11&12, Scarborough, ON M1B 5V4
Morningside/Sheppard - Next to Home Depot
1 min. from Hwy401
fax: 416.724.8417, e-mail: emk4u@hotmail.com

emk ENTERPRISES INC
LOGISTIC & TRANSPORTATION

# வீடு வியாபார நிலையம் வாங்க விற்க...

வீடு வாங்க விற்க அல்லது அது சம்பந்தமான விபரங்களுக்கும் குறைந்த வட்டி விகிதத்தில் மோட்கேஜ் செய்யவும் நட்புடன் அழையுங்கள்....

**$89,000**

Keele & Finch
2 Bedrooms 1 Washroom

**$229,900**


Hwy 10 & Eglinton
2 Bedroom 2 Washroom
Close to School

**$279,900**

Birchmount & 401
3+1 Bedrooms 2 Washroom

**$299,900**

Meadowvale & Shappard
3 Bedrooms 3 Washroom
Finished Basement


**$179,900**

Brimley / Finch

**$305,000**

Hurontario & Burnhathope
2 + 1 Bedrooms 2 Washroom

**$325,000**

McCowan & Denision
3 Bedrooms 2 Washroom
Finished Basement

**$330,000**

McCowan & Ellesmere
3+2 Bedrooms 3 Washroom
Close to Scaboro town centre


**$389,900**

Manse / Lawrence
4+2 Bedrooms
3 Washroom



**$479,900**

14 th & McCowan
3 Bedrooms 3 Washroom
Good Location

**$499,900**

Eglinton & Kingbridge
4 Bedrooms 4 Washroom
Finished Basement Sep. Ent.

**$349,900**

Dundas Mavis
3 Bedrooms 3 Washroom
Finished Basement W / O

**$649,900**


McLaughin Rd & Derry Rd
5 Bedrooms 3 Washroom

brightsun print

**Ravi Logarajah** B.Sc
**Tharsi Rajenthiram** B.B.A
*Sales Representative

Call : **416-843-7474**

HOMELIFE HIGHER STANDARDS

**HomeLife Today Realty Ltd., Brokerage***
31 Progress Ave., Suite 210, Toronto, ON, M1P 4S6
*Independently Owned and Operated, Realtor

BUS: **416-298-3200** / FAX: **416-298-3440**

---

**பேரழிவினைக் கொண்டுவரும் நீரழிவு நோயினை**
**இரண்டே இரண்டு மாதங்களில் முற்றும் முழுதாக கட்டுப்படுத்த முடியும்!**

**ஊமைச் சதை பெருகுவதை தடுக்கிறது!**
**வாத வலியை நீக்குகிறது!**
**உடலுக்கு புதுத்தென்பைக் கொடுக்கிறது!**







**டயபீனா** தினமும் அருந்தக்கூடிய மூலிகை ஆரோக்கிய பானம். இது உடலில் மிகுதியான குழுக்கோசினை குறைக்கக்கூடியதும், இரத்தத்திலுள்ள அதிகளவு குழுக்கோசினால் ஏற்படக்கூடிய நோய்களை ஒழுங்கு முறையாக தடுக்கவும் உதவுகிறது. விறைப்புத்தன்மை, பாதங்களில் கழுக்கு, அலட்சியத் தன்மை மற்றும் மீண்டும் மீண்டும் வியாதிகளை படிப்படியாக நீக்கிவிடக் கூடியது. டயபீனா கண்டிப்பாக நீரிழிவு நோயினால் வருந்துபவர்கள் மட்டுமே பாவிக்கவேண்டியது.

**க்லுூட்டியலா** பானமானது மிகுதியான உடல் கொழுப்பை குறைக்கக் கூடியதும், குறிப்பாக உடலின் இடுப்பு, தொடை, தோற்பட்டை, கைகள் போன்ற பகுதிகளில் ஏற்படக்கூடிய ஊமைச் சதை பெருகுவதை தடுக்கவும், கொழுப்பினால் விளையக் கூடிய கெடுதியினை கட்டுப்படுத்தவும், உடல் வலியை நீக்கவும், அத்துடன் வாதத்தினால் ஏற்படக்கூடிய வலியினை குறைக்கவும் உதவுகிறது. க்லுூட்டியா உடலுக்கு புதுத்தெம்பைக் கொடுப்பதோடு நீண்ட சுகமான வாழ்விற்கும் வழிவகுக்கிறது.

Amazon Health Care
BBB ACCREDITED BUSINESS
SABONA & Gift

Tel: 416 264 8787
www.amazonhealthcare.ca
2602, Eglinton Ave East. (Midland/Eglinton)

# தண்ணீர்ப் பாவனை



வேலா சுப்ரமணியம்
- Certified Home Inspector -

**வீடும் விடியலும் - 37**

## நீர் அளவுமானி (Water Meter)

நீர் அளவுமானியின் முக்கியத்துவம் கருதி ஒரு மாதிரிப் படம் கீழே தரப்படுகிறது. WATER METERல் இருந்து செல்லும் சிறு WIRE எங்கு செல்கின்றது என்று சிலருக்கு ஆச்சரியம் இருக்கலாம். தண்ணீர் பாவனை யை அளவிடுவதற்கு மாநகர சபையில் இருந்து எவரும் வீட்டுக்குள் வருவதில்லை. மாறாக REMOTE மூலம் வெளியில் நின்று அளவினை அறியவே இந்த WIRE வெளிச் சுவரில் ஒரு கறுப்பு REMOTEல் பொருத்தப் பட்டிருக்கும். அத்துடன் தண்ணீர் குழாயுடன் பெரிய ஒரு செப்பு WIRE ஏன் பொருத்தப் பட்டிருக்கிறது என்ற கேள்வி பலருக்கும் எழுந்திருக்கலாம். வீட்டிற்குள் பொருத்தப் பட்டிருக்கும் மின்சார இணைப்புக்கு ஒரு ஸ்திரமான நிலக்கீழ் இணைப்பு அவசியம் (GROUND WIRE) தண்ணீர்க் குழாய் நிலத்திற்கு அடியில் இருந்து வருவதால் இதனை விட மிகத் திடமான இணைப்பு வேறு எங்கும் பெற முடியாது என்பதால் தான் பிரதான மின்சார இணைப்புப் பகுதியில் இருந்து (MAIN ELECTRICAL PANEL) வரும் செப்பு WIRE தண்ணீர் குழாயுடன் இணைக்கப்பட்டிருக்கிறது. இது தேவையற்ற ஒன்று என்று நினைத்து துண்டித்து விடக் கூடாது என்பதற்காகவே இது பற்றி இங்கு குறிப்பிடப் படுகிறது.

படங்கள் அவற்றை மேலும் விளக்குகின்றன.

மாநகர சபையின் ஊடாக வழங்கப்படுகின்ற தண்ணீர் உட் கொண்டு வரப்படும் குழாயின் ஆரம்பப் பகுதியில் நீர் அளவுமானி (WATER METER) பொருத்தப்பட்டிருக்கும். நாம் பாவிக்கும் தண்ணீரின் அளவை துல்லியமா கக் கணித்து அதற்குரிய கட்டணத்தை அற விடுவதற்காகவே இது ஆரம்பப் பகுதியில் பொருத்தப்பட்டிருக்கும்.

## நீர் அளவுமானி (WATER METER) படத்தை விளக்கும் சில குறிப்புக்கள்:

- அடிப்பகுதியில் MAIN SHUT OFF VALVE இருப்பதை அவதானிக்கலாம். வீட்டுச் சொந்தக்காரர் ஒவ்வொருவரும் தெரிந்து வைத்திருக்க வேண்டிய ஒன்று இது. வீட்டிற்கு வரக்கூடிய தண்ணீரை முற்றாக நிறுத்த வேண்டிய தேவை ஏற்படும்போது அதனைத்தேடிக்கண்டு பிடிக்கவேண்டிய அவல நிலை இருக்கக் கூடாது.

- சிறிய WIRE வீட்டுக்கு வெளியே உள்ள சுவரில் பொருத்தப்பட்டிருக்கும் REMOTE உடன் இணைக்கப்பட்டிருக்கும். இதன் மூலமே வெளியில் இருந்த படி தண்ணீர் பாவனையின் அளவு 3-4 மாதத்திற்கு ஒரு முறை மாநகர சபையால் கண்டறியப் படுகிறது என்பதைத் தெரிந்துகொள்ளவும்.

- அளவில் பெரிய HOPPER WIREன் ஒரு பகுதி இங்கும் மறுபகுதி வீட்டிற்குரிய மின்சார இணைப்பு (MAIN PANEL) பகுதியுடனும் இணைக்கப்பட்டிருக்கும். ஸ்திரமான நிலக் கீழ் (GROUND WIRE) இணைப்பைப் பெறுவதற்காக இவ்வாறு செய்யப்படுகின்றது. சிலர் நினைப்பது

போல் இந்த WIRES, WATER METERஐ இயக்குவதற்குரிய மின்சாரத்தைக் கொடுப் பதற்காக அல்ல என்பதைக் கவனத்தில் கொள்ளவும். WATER METER இயங்கு வதற்கு மின்சாரம் அவசியம் இல்லை.

பின்வரும் அம்சங்கள் பற்றி சற்று விரிவாக நோக்குவோம்.

- தண்ணீர் விரயத்தைத் தவிர்ப்பது எப்படி?
- தண்ணீர் பாவனையைக் கட்டுப் படுத்தக் கூடிய யுக்தி முறைகள்.
- கவனத்தில் கொள்ள வேண்டிய பராமரிப்பு முறைகள்.

## தண்ணீர் விரயத்தைத் தவிர்ப்பது எப்படி?

நாங்கள் விரும்பியோ விரும்பாமலோ பாவிக் கும் தண்ணீரை விட விரயமாகும் தண்ணீ ருக்கும் சேர்த்து மாதா மாதம் கட்டணம் செலுத்திக் கொண்டிருக்கிறோம். சிலர்






வீடுகளில் பாவிக்கும் தண்ணீரை விட விரய மாகும் தண்ணீரின் அளவு தான் அதிகமாக இருக்கிறது. ஆனால் அது பற்றி வீட்டுச் சொந்தக்காரருக்கு தெரியாததால் மாதா மாதம் தண்ணீர் வீணாக விரயமாவது போல் அதற்குரிய கட்டணமும் விரயமாகிக் கொண் டிருப்பதை உணர்ந்து கொள்வதில்லை.

மறுவார்த்தையில் கூறுவதானால் வீட்டிற்குள் உட் கொண்டு வரப்படும் தண்ணீர் WATER METERஐ கடந்தால் நாம் அதனைப் பயன் படுத்துகிறோமோ இல்லையோ அதற்கு இரண்டு விதமான கட்டணம் செலுத்தியே ஆக வேண்டும்.

1. தண்ணீர்க் கட்டணம்.
2. கழிவு நீர் அகற்றும் கட்டணம். (SEWER CHARGE)

தொடர் மாடிக் கட்டிடங்களில் வாடகைக்குக் குடியிருப்பவர்கள் தண்ணீர் விரயத்தைப் பற்றி அலட்டிக் கொள்வதில்லை. ஏனெனில் அதற்குரிய கட்டணத்தைச் செலுத்துபவர் வேறு யாரோ! அதே போன்று சில நகரவீட்டுத்

திட்டத்தில் (TOWN HOUSE) இருப்பவர் களும், CONDOMINIUM போன்ற அமைப் புகளில் இருப்பவர்களும் தண்ணீர் விரயத்தைப் பற்றிக் கவலைப் படாமல் இருக்க சந்தர்ப்பம் இருக்கிறது. ஏனெனில் அத்தகைய இடங்க ளில் அறவிடப் படும் மாதாந்த பராமரிப்புச் செலவில் தண்ணீர்ப் பாவனையும் உள்ள டக்கப் பட்டிருக்கும்.

ஆனால் மாதாமாதம் கட்டணம் செலுத்திக் கொண்டிருக்கும் வீட்டு உரிமையாளர்கள் இது பற்றி கவலை கொள்ளாமல் இருக்க முடியாது. பொதுவாக 4 பேர் கொண்ட குடும் பத்திற்கு அவர்களது பழக்க வழக்கத்திற்கு ஏற்ப $35-$45 வரை மாதாந்தச் செலவு ஏற்படுவது இயல்பானது. ஆனால் கட்டணம் சில வீடுகளில் மாதத்திற்கு $100ஐயும்

தாண்டி விடுவதையும் அவதானிக்க முடியும். அப்படியென்றால் எங்கோ பிழை இருக்கிறது என்பதே அர்த்தமாகும். தண்ணீர் கட்டணம் பொதுவாக 3-4 மாதத்திற்கு ஒரு முறை அறவிடப் படுவது தான் வழக்கம். எனவே அதற்குரிய கட்டண விபரம் கைக்கு எட்டி யதும் மாதத்திற்குரிய செலவைப் பிரித்து அறிந்து ஒப்பிட்டுப் பார்க்க வேண்டியது மிக முக்கியமாகும். மார்க்கம் போன்ற மாநகர சபைப் பகுதியில் மின்சாரக் கட்டணத்துடன் சேர்த்து இருமாதத்திற் கொருமுறை தண்ணீர் கட்டணமும் அறவிடப்படுகிறது. அத்தகைய HYDRO BILLல் தண்ணீர் கட்டணத்தையும் SEWER CHARGEஐயும் கூட்டிப் பார்த்தே தண்ணீருக்கான செலவைக் கண்டறிய வேண்டும்.

வீட்டில் தண்ணீர் விரயமாகிக் கொண்டிருக் கிறதா? என்று கண்டு பிடிப்பது எப்படி? என்பது முதற் கேள்வியாக எழுகின்றது. மிகச் சுலபம். நான் அறுதியிட்டுக் கூறுகிறேன். கீழ்வரும் முறைப்படி பரீட்சித்துப் பாருங்கள். நீங்களே ஆச்சரியப் படுவீர்கள். 50%க்கு மேலான வீடுகளில் எமக்குப் புலப்படாத விதத்தில் தண்ணீர் விரயமாகிக் கொண்டிருப்பதைக் கண்டு கொள்வீர்கள்.

படத்தில் குறிப்பிட்டிருப்பது போல் நிலக் கீழ் அறையில் பொருத்தப்பட்டிருக்கும் WATER METERஐக் கொண்டு இதனை இலகுவா கக் கண்டு பிடித்து விடலாம். WATER METERன் மேற்பகுதியில் ஒரு SPINNING WHEEL முக்கோண வடிவத்தில் அல்லது பல்லுச் சக்கரம் போல் பொருத்தப் பட்டிருப் பதை அவதானிக்க முடியும். தண்ணீர், தண்ணீர் மீற்றரைக் கடந்து போவதைக் காட்டிக் கொண்டிருப்பதே இதன் தொழிற் பாடாகும். அதாவது தண்ணீர் பாவிக்கப்படும் போது இந்த SPINNING WHEEL சுற்றிக்

கொண்டிருக்கும். இந்த WHEEL முற்றாகச் சுற்றாமல் நின்றால் தண்ணீர் பாவிக்கப் படவில்லை என்பதே பொருளாகும். எனவே வீட்டில் ஒருவரும் தண்ணீர் பாவிக்காத சந்தர்ப்பத்தில் இந்த தண்ணீர் மீற்றரை உற்று நோக்கும் போது SPINNING WHEEL முற்றாக அசையாமல் இருக்கிறது என்றால் தண்ணீர் வீணாக விரயமாகவில்லை என்பதே அர்த்தமாகும். ஆனால் பரீட்சித்துப் பாருங்கள் பல வீடுகளில் இந்த SPINNING WHEEL கடின உழைப்பாளியாக காட்சி தரும். அதாவது நாம் உறங்கினாலும் மாநகர சபைக்காக இந்த SPINNING WHEEL இரவு பகலாக உழைத்துக் கொண்டிருக்கும்.

வீட்டு உரிமையாளர்கள் 3 மாதத்திற்கு ஒரு தடவையாவது அதிகாலையில் எழுந்து அதாவது பலரும் நித்திரையாய் இருக்கும் வேளையில் நிலக்கீழ் அறைக்குச் சென்று WATER METERஐ அவதானித்து தண்ணீர் விரயம் உள்ளதா? என்று உறுதிப் படுத்திக் கொள்ளுதல் சாலவும் சிறந்தது.

தண்ணீர் விரயம் இருப்பதாகக் கண்டுகொண்ட பின்னர் எங்கு விரயமாகிறது? எப்படி அதனை நிவர்த்தி செய்வது என்பது அடுத்த கேள்வி யாக எழுகிறது. பொதுவாக வீடுகளில் இரண்டு வகையான இடங்களில் இத்தகைய தண்ணீர் விரயம் ஏற்பட்டுக் கொண்டிருப்ப தைக் காணலாம்.

அது பற்றி அடுத்த இதழில்...

vela@thaiveedu.com

■ ■ ■




தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம். விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.

E-mail:thaiveedu@gmail.com
Fax: 416-849-0594
Tel: 416-646-3422

# Want To Buy A Home In Your Budget?

"Your Satisfaction Is My Success..."

103,900



NEILSON/TAPSCOTT

352,900



PHARMACY/MCNICOLL

FOR LEASE
$2,300



14th Ave/9th Lane

Call:

**MANGA ARUNASALAM**



Real Estate Broker
Commercial & Residential
**HomeLife/Landmark Realty Inc. Brokerage**
Independently Owned & Operated
5200 Finch Avenue East, Suite 206
Scarborough, ON M1S 4Z4

HOMELIFE
HIGHER STANDARDS

CELL: (416) 816 8775 TEL: (416) 293 5093
RES: (905) 944 9604 FAX: (416) 293 5237



# வளமான வாழ்விற்கு வதிவிடம் வாங்கிட......

- House, Condos, Business
- Mortgage Arrangement
- Free Consultation

**Middlefield/Finch**



$174,900
2 Bedrooms, 1 Washroom
Bright Corner Unit With Many Upgrades, Split Bedrooms, Facing The Garden

**Morningside/Sewells**




$229,000
3+1 Bedrooms, 4 Washrooms
Fabulous And Spacious 3 Bed-room Townhouse With Walkout Basement

**Eglinton/Victoria Park**



$297,000
2 Bedrooms, 2 Washrooms
Bring On The Buyers. Move In To This Gorgeous Unit With 2 Bedrooms

**Birchmount/Danforth**



$309,900
3+2 Bedrooms, 3 Washrooms
Beautiful And Well-Maintained Home.
Move-In Condition

**Eglinton / Kennedy**



$339,900
3 Bedrooms,3 Washrooms
A Beautiful Open Concept Home In A Sought After Area. Close To Sq.One And Hwy 403

**9th/16th**




$349,900
3+1 Bedrooms, 3 Washrooms
Well Loved Family Home On A Corner Lot**Lots Of Lights**Many Upgrades Over The Last 4 Years

**Stains/Morningside**



$399,000
4 Bedrooms, 3 Washrooms
Freshly Painted Spacious Good Size Family Home.Close To Schools Park & Shopping Centre

**Kennedy/S Of Eglinton**



$299,900
3+2 Bedrooms, 2 Washrooms
Motivated Seller. Totally Reno-vated Main Floor! Ready To Move In! Great Investment

RED CARPET®
Royal Realty Ltd., Brokerage
INDEPENDENTLY OWNED AND OPERATED
Real Estate Services

சகல
விதமான
படிவங்களும்
நிரப்பிக் கொடுக்கப்படும்

To Fill any Forms
(Sponsors, ODSP, Tax & etc...)

செல்வா / இரஞ்சன் பிரான்ஸிஸ்
416.816.1220

**இரஞ்சன் பிரான்ஸிஸ்**
Sales Representative



Bus: 416.284.5555
Dir: 416.816.1220
880 Ellesmere Road. Suite 204, Scarborough, ON.

# இளைஞர்களே...



கே. எஸ். பாலச்சந்திரன்

பொதுவாக எங்கள் சமூகத்தில் தந்தைக்குப்பின் குடும்பபாரத்தைத் தாங்கும் பொறுப்பு குடும்பத்தின் மூத்த பிள்ளைக்கு தானாகவே வந்துவிடுகிறது. அவர்களையே நம்பியிருக்கும் தங்கைமார்கள் தங்கள் அண்ணன்மாரை எவ்வளவுதூரம் உயிருக்குயிராக நேசிப்பார்கள் என்றெல்லாம் நம்நாட்டில் நாவல்கள், சிறுகதைகள், நாடகங்கள் எழுதப்பட்டன. நான் அண்ணனாக நடித்த "தணியாத தாகம்" வானொலி நாடகம் இதற்கொரு உதாரணம்.

புலம்பெயர் வாழ்வு எமது சமூகத்தின் ஒரு பிரதான அம்சமாக மாறிவிட்ட நிலையில், ஆரம்பத்தில் பொதுவாக ஆண்பிள்ளைகளே இங்கு முதலில் வந்து, படாதபாடு பட்டு, இரவு, பகல் வேலை செய்து, தங்கள் குடும்பங்களை கஷ்டப்பட்டு வரவழைத்து, அவர்களை நிம்மதியாக, பயமின்றி வாழும் நிலையில் வைத்தார்கள்.

இப்பொழுது அடுத்த தலைமுறையின் காலம். ஆலமரங்களை தாங்குவதற்கு விழுதுகள் வந்து விட்டன. அவர்கள் கனேடிய வாழ்க்கை முறைக்கு பழக்கமானவர்கள். தங்கள் எதிர்காலத்தை எவ்வாறு அமைத்துக் கொள்ளவேண்டுமென்பதில், அனேகமாக தீர்க்கமான முடிவுகளை கொண்டவர்களாக இருப்பார்கள். அதை நோக்கி நடைபோடும் ஏகசிந்தனையுடன் இருப்பதில் தப்பொன்றுமில்லை.

ஆனால், பெற்றோர், குடும்பம், உறவுகள் என்ற சிறுவட்டங்களுக்கு வெளியே, எங்கள் சமூகம் என்ற ரீதியில் உங்கள் பங்கு முக்கியமானதே.

முக்கியமாக மொழி என்பதே ஒரு சமுதாயத்தின் பிரதான அடையாளம் என்பது நாமறியாதல்ல. தாய்மொழியை நேசிப்பது மொழிவெறியாகாது. "குரங்கு கைத்தலையணை பஞ்சுகளாய்" உலகெங்கும் சிதறிப்போய்விட்ட நாங்கள் எங்கள் அடையாளத்தை தொலைத்து விடாமல் இருக்க வேண்டும்.

> **"எங்கள் சமூகத்தின் அவலநிலையினால் அனாதைகளாகிவிட்ட பிள்ளைகளில் ஒன்றையாவது நீங்கள் ஒவ்வொருவரும் தத்தெடுத்து அவர்களுக்கு கைகொடுக்கவேண்டும்."**

நாங்கள் எங்கு வாழ்ந்தாலும் அந்த நாட்டின் சட்டநியதிகளுக்கு உட்பட்டுத்தானாகவேண்டும். ஆனால் எங்கள் சமூகம் பேணிப்பாதுகாத்த நல்லவிடயங்களை கைக்கொள்வதில் தடையொன்றும் இருக்கப்போவதில்லை.

சமூகத்திற்கான கடப்பாடுகள் இளைய சமூகத்தினருக்கு இருக்கின்றன. முக்கியமாக, எங்கள் சமூகத்தைபற்றிய நல்ல அபிப்பிராயத்தை உருவாக்குவதில் அவர்கள் பங்குதான் பிரதானமாகின்றது.

இதில் மகிழ்வை தரக்கூடிய விஷயம் என்னவென்றால், இளைய தலைமுறையினரிடம் அந்தப்பொறுப்பு வந்திருக்கிறது. தங்கள் அடையாளத்தைப் பேணிக்கொள்வதில் அவர்கள் அக்கறை காட்டத் தலைப்பட்டிருக்கிறார்கள்.

எப்பொழுதும் ஒரு புதிய நாட்டில் வாழத் தொடங்குகின்ற முதல்தலைமுறை எதிர் நோக்கிய பிரச்சினைகளை, அடுத்த தலை முறையினர் எதிர்நோக்குவதில்லை. முதல் தலைமுறையினர் கட்டிய அத்திவாரத்தில் இவர்களால் வாழ்வை நிலைநிறுத்தும் சௌகரியம் என்பதைவிட, வாழும் நாடு பற்றிய தெளிவும் இவர்களிடம் இருக்கிறது.

இவர்கள் குண்டுசட்டிக்குள் குதிரை ஓட்டுபவர்களாக நிச்சயமாக இருக்கப்போவதில்லை. புதியதுறைகளில், ஆற்றல் மிகு வீச்சுடன் இவர்கள் காலடி எடுத்து வைப்பதை அவதானிக்கிறோம். நாம் தாய்நாட்டில் வாழும்பொழுது ஆராதித்த "உத்தியோகக் கலாச்சாரத்தை' இவர்கள் மேல் சுமத்த தலைப்படுவது சரியாகாது.

ஆனாலும், தங்கள் கால்களை ஸ்திரமாக வாழ்க்கையில் பதியவைத்தபின் இவர்களின் கடமை முன்னர் குறிப்பிட்டதுபோல சிறிய வட்டங்களுக்கு அப்பாலும் செல்லவேண்டும்.

பெற்றோரை தாங்கும் ஆலமரவிழுதுகளாக இருப்பது அவசியமே. அதேபோல நிழல் தேடி வருபவர்கட்கு ஆதரவுக்கரம் நீட்டும் ஆலவிருட்சமாக நீங்கள் வளரவேண்டும்.

இந்தநேரத்தில் என்மனதில் எழும் சில எண்ணங்களை உங்களோடு பங்கிட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

எங்கள் சமூகத்தின் அவலநிலையினால் அனாதைகளாகிவிட்ட பிள்ளைகளில் ஒன்றையாவது நீங்கள் ஒவ்வொருவரும் தத்தெடுத்து அவர்களுக்கு கைகொடுக்கக்கூடாதா?

அதேபோல வாழவழியற்று கதியற்று இருக்கும் எங்கள் நாட்டில் வாழும் பெண்பிள்ளைகளுக்கு வாழ்வு கொடுக்கும் மனத்திடம் உங்களுக்கு வருமா?

ஓட்டுமொத்த சமூகத்தின் பாரத்தை ஒருவரால் சீர்செய்துவிடமுடியாது என்றாலும், ஒவ்வொருவரின் பங்களிப்பு இணையும் போது மகாஅதிசயங்கள் நிகழலாம்.

அண்மையில் ஒரு ஆப்பிரிக்கப் பெண்மணியின் பிரசங்கம் ஒன்றினை 'காணொளியில்' பார்க்கும் வாய்ப்பு கிடைத்தது. அவர் சொன்ன கதை எனக்கு புத்துணர்வைத் தந்தது. ஒரு பெரிய காடு பற்றி எரிகின்றது. யானை, சிங்கம் முதலான வலிமையான மிருகங்கள் முதல் எல்லா மிருகங்கள், பறவைகள் யாவும் அந்தக்காட்டை விட்டு வெளியே நின்று பார்த்துக்கொண்டு நின்றன. இந்தநேரத்தில் ஒரு சிறுகுருவி மாத்திரம் தன் சிறிய அலகில் அருகில் உள்ள ஆற்றில் இருந்து தண்ணீர் தாங்கி வந்து, அந்த நெருப்பின் மீது வீசியதாம். "இது பயனற்றது" என்று பெரிய மிருகங்கள் சொல்ல, அந்தக்குருவி சொன்னதாம். "என்னால் இயன்றதை நான் செய்கிறேன்"

முடியுமா?

ks@thaiveedu.com

■ ■ ■


ஆயுட்காப்புறுதி

மருத்துவப்பரிசோதனை இல்லாத காப்புறுதி

Non - Medical Insurance

- நிரந்தர ஆயுட்காப்புறுதி — Life Insurance
- வீட்டு அடைமானக்காப்புறுதி — Mortgage Insurance
- கொடிய நோய்களுக்கான காப்புறுதி — Critical Illness Insurance
- இயலாமையை ஈடு செய்யும் காப்புறுதி — Disability Insurance

சியாமளா ரட்ணசபாபதி காப்புறுதி முகவர்

IA INDUSTRIAL ALLIANCE
INSURANCE AND FINANCIAL SERVICES INC.

INSURANCE • RESP • RRSP

416.414.2374

RBC

Protect Your Family Future Today !



Shiamala Ratnasabapathi
Life Insurance Broker

# இன்றைய பங்குச் சந்தையில் வெற்றிபெற



கல்யாணி நாதன்
நிதி திட்டமிடல் ஆலோசகர்

இன்றைய பங்குச் சந்தை 1930ம் ஆண்டுகளுக்குப் பின் ஏற்பட்ட அதிகப்பட்ட வீழ்ச்சியைக் கண்டுள்ளது. பொதுவாக 10 வருடங்களுக்கு ஒரு முறை பங்குச் சந்தையில் சிறு வீழ்ச்சி ஏற்படுவதுண்டு. இத்தகைய வீழ்ச்சியானது பின்னடைவு அல்லது Recession என்று அழைப்பார்கள். இத்தகைய பின்னடைவுகள் அபர்த்தமான வளர்ச்சியின் பின் சந்தை தன்னை சமநிலைப்படுத்த ஏற்படுத்தும் இயல்பான செயல் (Market adjustment) என்று எல்லாரலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயம்.

ஆனால் சில சமயங்களில் இவ் வீழ்ச்சி சந்தையின் ஆணிவேரையே அசைத்து தடுமாறச் செய்யும். இதனை Recession (றிசசன்) தாழ்ச்சி அல்லது repression என்று குறிப்பிடுவார்கள். இந்நிலையில் தாழ்வான சந்தை நிலைமை காரணமாக பலர் வேலை இழப்பதும், வேலை இழப்பதன் காரணமாக புழக்கத்தில் இருக்கும் செல்வம் குறைவதும், செல்வம் குறைவது காரணமாக நுகர்வோர் குறையும். இதன் விளைவாக ஆக்கத் தொழில்கள் குறையும். தொழில் குறைவதால் வேலை இல்லாமை கூடும் இப்படியே இது மிகவும் தாழ்ந்த நிலைக்கு நாட்டை இட்டுச் செல்லும்.

கம்பன் கண்ட இராம ராஜ்யத்தில் கொடுப்போர் இல்லை கொள்வோர் இல்லையாதலால் என்றார். புஷ் ராஜ்யத்தில் தொழில் இல்லை கொள்வோர் இல்லாததால் என்று கம்பர் பாடுவார் போலும். இந்நிலையில் சந்தையை சரிசெய்ய அரசாங்கங்கள் பல முயற்சி எடுக்க முன்வருகின்றன. அமெரிக்க ஜனாதிபதி, சந்தையில் தேசியரீதியாக பல பில்லியன் டொலர்களை முதலீடு செய்ய முன்வந்துள்ளார். விசர் தெளிந்தால்தான் கல்யாணம், கல்யாணம் நடந்தால்தான் விசர்தெளியும் என்ற நிலையில் ஒபாமா. அவர் முன்னின்று கல்யாணத்தை நடத்தி வைக்கிறார் எங்கே விசர் தெளியுமா என்று பொறுத்திருந்து பார்ப்போம்.

இக்கால கட்டத்தில் பங்குச் சந்தையில் எல்லோருமே குழம்பிப்போய் இருக்கும் இவ் வேளையில் சற்று நிதானமாக நின்று செயல்பட்டால் கட்டாயம் வெற்றியுடன் வெளியே வரலாம். இங்கே நான் ஆறு அடிப்படை யுக்திகளை உங்களுக்கு தரலாம் என்று நினைக்கிறேன்.

### ஒரு திட்டத்தை வரைந்து அதன்படி செயல்படுங்கள்

வெற்றிகரமான முதலீட்டிற்கு ஒரு தெளிவான திட்டம் இருப்பதவசியம். அதுமட்டுமல்லாது மனம் சஞ்சலப்படாது அத்திட்டத்தை தொடர்ந்து கடைப்பிடித்தால் தான் வெற்றிகரமாக வெளிவரமுடியும். நல்ல திட்டம் உங்கள் இலக்கு நோக்கம் என்பவற்றுடன் உங்களால் ஏற்றுக்கொள்ளக் கூடிய துணிச்சல் ஆகியவற்றை பிரதிபலிப்பதாக இருப்பது அவசியம். உங்களால் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆபத்துக்களுக்கு அதிகமாக (Risk) சந்தை மாற்றமடையும் போது முதலீட்டு பணம் வீழ்ச்சியடையா திருக்கவேண்டும்.

> “ கூடிய ஆதாயத்தை தரும் முதலீடுகள் கூடிய ஆபத்துடையதாக, பெரிய இழப்பு தருவதாகவும் இருப்பது இயற்கை. எனவே முதலீடு செய்யும் வேளையில் வித்தியாசமான ஸ்தாபனங்களில், தொழில் துறைகளில், புவியியல்ரீதியாக பரந்துபட்ட பிரதேசங்களில் இடுவதினால் ஒன்று தவறினாலும் மற்றது கைகொடுத்து உயர்த்தி விடும். ”

### பன்முகப்படுத்தலும் சமநிலைப் படுத்தலும்

முதலீட்டு வல்லுனர்கள் பொதுவாக பாவிக்கும் ஒரு வாசகம் எல்லா முட்டைகளையும் ஒரே பாத்திரத்தில் வைக்கக் கூடாது என்று ஒரு நல்ல முதலீட்டுத் திட்டத்தில் பணத்தை பரவலாக பல முதலீடுகளில் இடுவார்கள். கூடிய ஆதாயத்தை தரும் முதலீடுகள் கூடிய ஆபத்துடையதாக, அதாவது பெரிய இழப்பு தருவதாகவும் இருப்பது இயற்கை. எனவே முதலீடு செய்யும் வேளையில் வித்தியாசமான ஸ்தாபனங்களில், தொழில் துறைகளில், புவியியல்ரீதியாக பரந்துபட்ட பிரதேசங்களில் இடுவதினால் ஒன்று தவறினாலும் மற்றது கைகொடுத்து உயர்த்தி விடும். இப்படிச் செய்யும் வேளையில் உங்களால் ஏற்றுக் கொள்ளக்கூடிய துணிச்சல் மற்றும் உங்கள் நோக்கம் ஆகியவற்றை மனதில் கொண்டு முதலீடு செய்வதவசியம்.

### நீண்டகாலத்திட்டம்

சும்மா சொல்வார்கள் வடலிவளர்த்து கள்ளு குடிப்பதென்று அது போலத்தான் இந்த முதலீட்டு திடங்களும். முன்குறிப்பிட்டபடி சந்தை சமன் செய்ய ஆரம்பிக்கும் வேளையில் பணத்தை முதலீடு செய்துவிட்டு நல்லாக விழுந்திருக்கும் வேளையில் முதலீடு செய்த பணத்தை மீள்பெற முற்பட்டால் கட்டாயம் அடி பலமாகவே படும். சந்தை எப்போ கூடும் குறையும் என்பதை சொல்வதற்கு கனடாவில் கிளிச் சாத்திரமும் இல்லை காண்டம் வாசிப்பவரும் இல்லை. எனவே மாறிவரும் இந்த முதலீட்டுச் சந்தையில் உண்மையான பயன் பெறுபவர்கள் நீண்டகால முதலீடு செய்பவர்கள். சராசரியாக எவ்வளவு காலத்திற்கு முதலீடு செய்கிறீர்களோ அவ்வளவுக்குத்தான் உங்கள் முதலீட்டின் வளர்ச்சியும் இருக்கும். எனவே காலம் தாழ்த்தாது முதலீடு செய்ய முன்வருவதுடன் உங்கள் குறிக்கோள், உங்களின் துணிச்சல் ஆகியவற்றை மனதில் கொண்டு முதலீடு செய்யுங்கள்.

### நல்லதை வைத்து அல்லதை தவிர்ப்பது

நாங்கள் பரவலாக முதலீடு செய்கையில் ஒருசில அதீத வளர்ச்சியடைகையில் அந்த வளர்ச்சியடைந்த முதலீடுகளை விற்று பெரும் இலாபமடைய விரும்புவது மனித இயல்பு. ஆனால் இதனிலும் மடமை இல்லை. நல்லவற்றை வைத்துக் கொண்டு நல்லதல்லாத வற்றை விற்று அந்தப் பணத்திலும் நல்லதை வாங்குவதே சிறப்பு. ஆனால் சிலசமயங்களில் நாம் நல்லது என்பது திடீர் என வீழ்ச்சியடைய இடமுண்டு. சாத்திரக்காரர்கள் சொல்வார்கள் `சகடயோகம்' என்று. அது பங்குச் சந்தைக்குக் கூடவே பொருந்தும். இந்நிலையில் எத்தருணத்தில் எதனை வாங்கி எதனை விற்பது என்பதில் ஆழ்ந்த கவனத்தை செலுத்த வேண்டும் என்பதுடன் இவற்றைப் பற்றி தெளிவான விளக்கம் இருக்க வேண்டும். இப்படிச் செய்வதால் நீங்கள் உங்கள் வங்கியில் முடங்கிக் கிடக்கும் பணத்தை பணம் செய்ய முதலீடு செய்யலாம்.

### மீளாய்ந்து, மீள் பெறுமதித்து மீள் சமப்படுத்தல்

உங்கள் முதலீடுகளை கண்காணிப்பது முதலீடு செய்வன போன்று முக்கியமான விடயம். முதலீட்டுச்சந்தை காலத்துக்குக் காலம் மாற்ற மடைந்தவண்ணமிருக்கும். மேலும் உங்கள் குறிக்கோள் உங்கள் ஐவரியம், வயது இருக்குமாதலால் நீங்கள் உங்கள் முதலீட்டையும் காலத்துக்குக் காலம் மீளாய்ந்து தேவையான மீள் சமப் படுத்தி உங்கள் குறிக்கோளை நோக்கி பயனத்தை செய்யவேண்டும். ஒரு மாலுமி காற்று, மழை போன்ற வற்றிற்கு ஏற்றபடி கப்பலை செலுத்துவது போல் முதலீட்டை பரிமாரிப்பவரும் செயற்பட வேண்டும். சரியான மீளாய்வு, மீள்பெறுமதித்து மின்சமப்படுத்துவதால் நீங்கள் நல்ல ஆதாயத்தை பெற முடியும்.

kalyany@thaiveedu.com

■ ■ ■

# மருத்துவத்தில் மிளகாயின்...

14ம் பக்கத் தொடர்ச்சி...

மிளகாயில் மிகவும் அதிகளவில் விற்றமின்களான A (மிகவும் சிறந்த antioxidantஆன beta- carotenoidsஇனைக் கொண்டுள்ளது.) C (தோடம்பழத்தில் உள்ளதிலும் பார்க்க ஏழுமடங்கு அதிகமாக மிளகாயில் உண்டு) என்பவற்றையும் ஓரளவு விற்றமின் Bயினையும் கொழுப்பினைக் குறைக்கக் கூடிய அல்லது கரைக்கக் கூடிதான antioxidant இனைக் கொண்ட விற்றமின் E என்பவற்றினையும் சிறிய அளவுகளிலான தயாமின், மங்கனீசு, பொட்டாசியம், என்பனவும் காணப்படுகின்றது.

மிளகாயினை நாங்கள் உட்கொள்ளும் போது கப்சாசின் எங்கள் மூளையினைத் தூண்டி substance P எனப்படும் ஒரு நரம்பு செயலூட்டியான ஓமோனை வெளிவிடும். இந்த substance P எங்கள் உடம்பபானது நோ அல்லது வலியில் இருப்பது போன்று ஒரு தோற்றத்தினை உருவாக்குவதனால் இதயம் சிறிது வேகமாகத் துடித்து அதன் காரணமாக இயற்கையாகவே வலிகளுக்கு எதிரான எண்டோபின் (endorphin - Pain Killer) எங்கள் உடலில் சுரக்கப்படும்.

குடற்புண் உள்ளவர்கள் மிளகாய் சாப்பிடுதல் கூடாது என நாங்கள் மிளகாயினைத் தவிர்த்து வந்தோம். ஆனால் தற்போதைய ஆராய்வின் படி மிளகாய் சாப்பிடுவது குடற் புண்ணுக்கு நல்லது எனக் கூறப்படுகின்றது. அதற்காக ஒருநாளைக்கு பத்து பச்சை மிளகாய் வீதம் சாப்பிடக் கூடாது. அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சாகும் என்பது எங்களுக்கு தெரிந்த விடயம். நாளாந்தம் ஓரளவு பச்சை மிளகாயினை உணவில் சேர்த்துக் கொள்ளலாம். மிகவும் சுலபமான வழி எங்கள் உணவில் சலட் (Salad) சேர்க்கும் போது அந்த சலட்டில் குடமிளகாய்களை அதன் நடுத் தண்டுடன் சேர்த்துக் கொள்வது நன்று.

மிளகாய்க்கு எங்கள் மெற்றா பொலிசத்தினை மாற்றி அமைக்கக்கூடிய தன்மை உண்டு. பொதுவாக மெற்றா பொலிசம் எனப்படுவது எங்கள் உடல் தனது செயற்பாட்டிற்காக எரிக்கும் சக்தியின் அளவாகும். (Metabolism is the amount of energy (calories) our body burns to maintain itself).

ஈழத்தில் இருக்கும் போது பல்வலிக்கு நாங்கள் கறுவாத்தைலம் பாவிப்பது உண்டு. இப்போ பல்வலிக்கு கயான் மிளகாயில் செய்யப்பட்ட ஒரு எண்ணெய் மருந்தாகப் பாவிக்கப்படுகின்றது. குளிர் காலங்களில் கூடுதலாக மிளகாய் சாப்பிட்டால் குளிரைத் தாங்குவது சுலபமாக இருக்கும் எனவும் அறியப்பட்டுள்ளது. தோல் வியாதியுள்ளவர்களுக்கு மிளகாயினைப் பாவித்து களிம்புகள் தயாரிக்கப்பட்டு வருகின்றது. இக்களிம்புகள் மிகவும் சக்திவாய்ந்தவையாக இருப்பது அறியப்பட்டுள்ளது. தலைவலியால் பாதிக்கப்பட்டிருந்த 52 நோயாளிகளுக்கு அமெரிக்காவில் கப்சாசின் மூக்குவழியாக வழங்கப் பட்டதாயும் அது அவர்களின் தலைவலியினை மாற்றியதாயும் ஆய்வுகள் கூறுகின்றன.

பொதுவாக சுருங்கச் சொன்னால் மிளகாயின் நடு வெள்ளைத்தண்டினை நாங்கள் பச்சையாக நாளாந்தம் உணவில் சேர்த்துக் கொள்வது நன்று. இக் கப்சாசின் பலவிதமான தொழில்களைச் செய்கின்றது. அத்துடன் கூடுதலாக மது அருந்துவோருக்கு மூச்சு எடுப்பதில் இருக்கும் சிரமத்தினைக் குறைக்கும். அத்துடன் அதிகமாக புகை பிடிப்போரும் மிளகாயினைக் கூடுதலாகப் பாவிப்பது நன்று. சிகரெட் புகையிலுள்ள benzopyrene என்பது புகை பிடிப்பவர்களின் உடலில் உள்ள விற்றமின் Aயினை அழித்துவிடும். இதனால் இவர்களது நுரையீரல் வீங்குதல் அல்லது emphysema என்பவற்றினை மிளகாயிலுள்ள விற்றமின் A குறைத்துவிடும். மன அழுத்தம் (Depression) உள்ளவர்கள் கட்டாயமாக உடற்பயிற்சி செய்யவேண்டும் என்று வைத்தியர்கள் சொல்வார்கள். ஏனெனில் உடற்பயிற்சி உடலில் எண்டோபினைச் சுரக்க வைக்கும். மிளகாயின் கப்சாசினுக்கு எண்டோபினைச் சுரக்க வைக்கும் தன்மை உள்ளதால் மன அழுத்தம் உள்ளவர்கள் கூடுதலாக மிளகாய் உட்கொள்தல் மன அழுத்தத்தைக் குறைக்க உதவும். வயது போகும்போது சிறுநீர்கழிப்பதில் பலருக்கு பிரச்சனைகள் உண்டு. அதாவது Overactive Bladder/Incontinence என அழைக்கப்படும். இது சிறுநீர்ப்பைகள் எங்கள் அனுமதியின்றி சிலசமயம் தொழிற்படுதல் அல்லது கசிவு ஏற்படுதல். இதனைக்கட்டுப்படுத்தும் வல்லமை கப்சாசினுக்கு உண்டு. மொத்தத்தில் மிளகாய் மிகவும் நல்ல காரியங்களைச் செய்கின்றது. ஆகவே எங்கள் வழமைப்படி நாங்கள் மீண்டும் மிளகாயுடன் (அளவாக) எங்கள் பயணத்தை தொடர்வோம்.

sivajini@thaiveedu.com

■ ■ ■



# HomeLife/GTA Realty Inc., Brokerage*

1711, McCowan Rd,#206, Scarborough, ON.

## Buy Or Sell Any Properties With Me And Win This Brand New BMW



**Sasi Chelvaratnam**
Sales Representative
**Cell: 416.858.4828**
**Office: 416.321.6969**




- **Power of Sale**
- 4 Bedrooms/3 Washroom
- Close to All Amenities
- Call for More Details..





- Few Years old Home/Markham
- Detached House
- 4 Bedrooms & 3 washrooms
- Call for Details....




- **Power Of Sale**
- 4 Bedrooms/3 Washroom
- Beautyfull detached House
- Call for Details...




- Few Years Old/ Whitby
- 4 Bedroom/3 Washrm
- Close to All Amenitiesl
- Call For Details...




- Well Maintained unit
- 2Bedrooms+Dent
- Very spacious condo
- Close to All Amenities




- Great Location in Brampton
- Beautiful Detached House
- 4 Bedrooms & 3 washrooms
- Call for Details....




- **For Lease**
- 3 Bedrooms/2 Washroom
- Close To all Amenities
- Call For Details




- **For Lease**
- Scarborough Location
- 4 Bedroom
- Walk to TTC, Schools, Shops




- Industrial Unit for Sale
- App 2000 Sq Feet
- Close to All Major HWY
- Call for Details....




- Industrial Unit
- Scarborough Location
- Appr 1000 SqFeet
- Call for Details....

This is not intend to solicit properties currently listed for sale


*Each office independently owned and operated



# INCOME TAX

☑ Corporate ☑ Personal ☑ GST Filing ☑ New Business Registration

## New Location
(Markham / Steeles)








**204-7 Eastvale Drive Markham ON. L3S 4N8**
**Tel: 905-471-4050 / 905-201-9977**

HOMELIFE HIGHER STANDARDS

**Selva Vettyvel**
*Broker of Record*
**416-568-4301**

# Free Real Estate Classes

**HomeLife Future Realty Inc.**



# Buying or Selling Homes

## Selling Commission , As Low As 1%

HomeLife Higher Standards


**HomeLife Landmark Realty Inc. Brokerage**

## Call Nada

**Cell: 416 – 616 – 8751**
**Bus: 416 – 293 – 5093**

**Nada.G.Nadarajah B.V.Sc**
**Sales Representative**

Platinum Award Winner
Ontario Emerald Club Member




**Neilson/Tapsscott**
Condo. Apt
2 Bedrooms - 2 Washrooms
Open Balcony




**Westney/Sullivan**
Detached - 2 Storey
3 Bedrooms - 2 Washrooms
Finished Basement




**McCowan/Finch**
Condo Apartment
2 Bedrooms - 2 Washrooms




**Markham/Highglen**
Linked 2 Storey
3 Bedrooms - 3 Washrooms
Finished Basement




**McCowan/Denison**
Linked 2-Storye
3 Bedrooms - 2 Washrooms
Finished Basement




**Pharmacy/McNicoll**
Linked - 2 Storey
3 Bedrooms - 2 Washrooms
Finished Basement




**Middlefield/Finch**
Condo. Apt.
2+1 Bedrooms - 1 Washrooms
Open Balcony





**9th Line/14th**
Detached 2-Storey
4 Bedroom - 3 Washrooms
2000-2500 sq.ft

# INCOME TAX

| Queen & Jameson | Keele & Finch | Finch & Pharmacy |
|---|---|---|
| 10 MacDonell Ave. | 1315 Finch Ave. West, Unit 407 | 2525 Pharmacy Ave. |
| 647-885-3012 | 647-885-3012 / 416-888-1128 | 416-494-4777 |

## LIFE INSURANCE | CRITICAL ILLNESS INSURANCE
## NON MEDICAL INSURANCE | RESP | RRSP

- **ஆயுட்காப்புறுதி**
  10, 15 அல்லது 20 வருடங்களில் செலுத்தி முடிக்கலாம்
- **வயோதிபர்களுக்கான காப்புறுதி**
  மருத்துவ பரிசோதனை எதுவும் இல்லாமல் பெற்றுக்கொள்ளலாம்.
- **கொடிய நோய்களுக்கான காப்புறுதி**
  காப்புறுதித் தொகையைப் பெற்றுக்கொள்ளலாம் அல்லது கட்டிய பணம் முழுவதும் திரும்பப் பெறலாம்.
- **குழந்தைகளின் உயர்கல்விக்கான சேமிப்புத்திட்டம்**
  20% அரச மானியத்துடன் எமது நிறுவனத்தால் 15% சலுகையும் வழங்கப்படும்.
- **ஈட்டுக்கடன் காப்புறுதி**
  Mortgage Insurance



Apex Creations - 416-297-0707

## வசந்த் விநாயகமூர்த்தி

காப்புறுதி முகவர்

## 647-885-3012

LiLand Insurance Inc.
Industrial Alliance Insurance and Financial Services Inc.

759 Warden Ave. Toronto, ON. M1L 4B5 Tel : 416-759-5453 ext. 362

# அகதியாகிய யேசுவும் இறக்கின்ற தமிழ்க் குழந்தைகளும்



மாமூலன்

வன்னியில் இன்று நடக்கும் இனப்படுகொலை எம் அனைவரையும் பாதித்துள்ளது. இது வரை நாளும் நடந்து வந்த போராட்டத்தின் தாக்கம் இவ்வளவுக்கு எமக்குள் உள்ளே இறங்கியிருக்கவில்லை. இன்று குறிப்பாகப் புலம்பெயர்ந்த மக்களிடம் இலங்கையில் நடக்கும் ஈழத்தமிழரின் போராட்டத்தின் பாதிப்பு பல நூறு மடங்கு அதிகமான தாக்கத்தை தற்போது ஏற்படுத்தியிருக்கிறது.

நாளொன்றுக்கு இறக்கும் எம் தமிழ் உடன் பிறப்புக்களும் எமது தமிழ் மழலைகளும் எண்ணிக்கையைச் சொல்லிச் சிறுமைப்படுத்திவிடமுடியாத மதிப்புடையவர்கள்!

மக்கள் மீது விழுந்து கவிந்திருக்கும் இந்தப் போராட்டத்தின் இன்றைய வடிவம், அதனால் நடக்கும் இனப்படுகொலையின் அனைத்துத் தமிழ் மக்களுக்குமான உளவியல், சமூக, பண்பாட்டு மொழியின் மீதான தாக்கம் என்பன இன்னும் பல நூற்றாண்டுகளுக்கு இருக்கும். நூற்றாண்டுகளை வரலாறு மறந்துவிடும் என்றாலும் இன்னும் ஒரு நூறாண்டுக்காவது இந்தப் பாதிப்பு இருக்கும்.

கொள்ளை நோயால் இறந்துபோகின்ற கால்நடைகளைப்போல வீதிகளில் இறக்கிறார்கள். இறந்தோருக்கு இறுதி மதிப்பைக்கூட ஓர் உயிருக்கு கொடுக்க முடியாத நிலையில் எம்மக்கள் இலங்கையில் இருக்கிறார்கள்.

அப்படியொரு துன்பமற்றுப், பாதுகாப்பாக நாம் - புலம் பெயர்ந்த தமிழர் இருக்கிறோம். எம்மால் செய்யக்கூடிய பல செயல்கள் கண்முன் விரிந்துகிடக்கின்றன. பல சமூக அமைப்புக்களால் முன்வைக்கப்படுகின்றன. அவற்றின் சரிபிழைகளைப்பற்றி அவரவர் முடிவு செய்து நடைமுறைப்படுத்தலாம்.

இன்று இறந்து கொண்டிருக்கும் நம் உறவுகளுக்காக என்னதான் செய்யலாம் என்பதே ஒவ்வொருவரின் யோசனையும்… செய்வதே கடமையுமாக உள்ளன.

எமது அழியும் சந்ததிக்கும் இறந்துபடுகின்ற எமது மழலைகளுக்கும் அஞ்சலியாகச் செய்யக்கூடியவற்றை இங்கு நாம் பரிந்துரைக்கின்றோம்.

வாய்ப்புடைய வளமான நாடுகளில் வாழும் நாம், குழந்தைப் பேற்றினைப் பல காரணங்களுக்காகத் தவிர்க்கின்றோம், தள்ளிவைக்கின்றோம், ஒத்திப்போடுகின்றோம்.

அவை, உண்மையில் அந்தக் காரணங்கள் பாரியவை அல்ல.

சற்றுப் பொருளாதாரத்தை மேம்படுத்தலாம்…

சில நாட்கள் இளமையில் குடும்பவாழ்வை அனுபவிக்கலாம்…

வேலையை உறுதியாக்கலாம்…

படிப்பை முடிக்கலாம்…

இவ்வாறு பல காரணங்கள்…

இவை அனைத்தையும் தள்ளி வைக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது.

தமிழ்ச் சமூகம், எமது இந்த மொழி அனைத்தும் நின்று நிலைபெற வெளிநாடுகளில் இருக்கும் அனைவரும் இரண்டு மூன்று குழந்தைகளைப் பெற்று வளர்க்கவேண்டிய பொறுப்பும் கடமையும் வந்துவிட்டது.

இது தவிர்க்க முடியாதது.

பெரும் கொள்ளைநோய் வந்தது போல, பெருந்தொகையாய், அநியாயமாய், எமக்காய் இறக்கும் எம் மண்ணின் மக்களிற்கு நன்றியாகவாவது நாம் இங்கு புலம்பெயர் நாட்டில் குழந்தைகளைப் பெற்று வளர்க்கவேண்டும்.

பிற வெளி நாடுகளில் இருக்கும் உறவுகளிடம், நட்புவட்டத்திடம், இந்தக் கருத்தை வலியுறுத்துங்கள்.

எமது மக்களின் தொகை கடந்த இரண்டு மாதங்களில் மட்டும் அதிகளவில் குறைந்து விட்டது! இன்னும் அழிப்பு தொடர்கிறது!

நமது பல பணிகளிடையே குழந்தைப் பேற்றையும் எம் துன்பப்படும் மக்களுக்காக நாம் கடைப்பிடிக்கவேண்டும்.

குழந்தைகளைத் தமிழில் பெயரிட்டு தமிழ் மொழி தெரிந்தவர்களாக வளர்க்கவும் வேண்டும்.

பைபிளில் வரும் ஒரு கதையைச் சுட்டி நிறைவு செய்கிறேன்.

கிறித்தவர்களின் மீட்பரான யேசு பிறக்கின்றார்.

சோதிடர்கள் சொல்கிறார்கள்.. குழந்தை தற்போதுதான் பிறந்திருக்கிறது… இருக்கும் அரசனின் ஆட்சிக்கு எதிரானது அந்தக் குழந்தை…என்கிறார்கள்.

அதை அறிந்து மழலையை அழித்துவிடத் துடிக்கிறான் மன்னன்.

மன்னன் கட்டளையிடுகிறான்…எப்படிக் கண்டுபிடிப்பது...? எந்தக் குழந்தையென்று?

“ஒரு வயதுக்குட்பட்ட குழந்தைகள் அனைவரையும் கொன்றுவிடுங்கள்” என்றான் மன்னன்.

கொல்லப்பட்டாயிற்று.

ஆனால் அதற்கு முன்பாக மழலை யேசுவை – விடுதலை தரப் பிறந்தவரை - காப்பாற்றி வெளி நாட்டுக்குக் கொண்டு போய்விடுகின்றார் சூசை.

அவரது தந்தை.

இவ்வாறு இறந்துபட்ட மழலைகளை - பெயர் தெரியாதவர்களைப் புனிதர்களாக இன்றுவரை கிறீத்தவம் கொண்டாடுகிறது.

அந்தப் பாதிக்கப்பட்ட யூத இன மக்கள் புத்திசாலிகளாக நடந்துகொண்டதால்தான் இன்று அவர்கள் ஒரு நாட்டை தங்களுக்கு என அமைத்துக்கொள்ள முடிந்தது. வெளி நாடுகளில் இருந்த யூதமக்கள்தான் தமது நாட்டைக் கட்டியெழுப்பினார்கள். அழிந்த நிலையில் இருந்த ஈப்ரூ மொழிக்கு உயிர் கொடுத்தார்கள்.

இன்று அழிக்கப்படுக்கொண்டிருக்கும் நமது தமிழ் மொழியைக் காப்பாற்ற நாம் குழந்தைகளைப் பெற்று தமிழில் பெயரிட்டு தமிழ் மொழி அறிந்தவர்களாய் வளர்க்கவேண்டும். அவே எமது முன்னுள்ள கட்டாயக் கடமை!

அதுமட்டுமே இன்று அனைத்திற்கும் மேலாக அநியாயமாய் ஏதுமறியாமல் இறந்து போகும் நம் தமிழ் மழலைகளுக்கு செய்யக்கூடிய கடமை.

அநியாயமாய்க் கொல்லப்பட்டுக்கொண்டிருக்கும் அந்தத் தமிழ்ப் பிஞ்சுகளின் சின்ன உயிர்த்துடிப்பு அமைதியடைய அதுவே உதவும்!

maamulan@thaiveedu.com

■ ■ ■


KESAVAN LAW OFFICE

இலவச ஆரம்ப ஆலோசனை
மாலை, வார இறுதி நாட்களிலும்
சந்திக்கலாம்

- Real Estate
- Business Law
- Immigration Law
- Family Law
- Last Wills
- Power of Attorney
- Affidavits



சட்டம் சம்பந்தமான சகல
தேவைகளுக்கும்
கேசவன் சட்ட நிறுவனம்

THANGAVEL M. KESAVAN
(Barrister & Solicitor)

Tel: 416-754-9843
Fax: 416-754-2362

5200 Finch Ave. East, Unit 302,
Scarborough, ON M1S 4Z5
(Middlefield & Finch)
Web: www.lawyers.com/kesavanlaw
E-Mail: kesavanlawoffice@bellnet.ca

COMPUTER TYPE SETTING

தமிழிலும் ஆங்கிலத்திலும் தட்டெழுத்து செய்து
கொடுக்கப்படும். விரும்புவோர் தொடர்புகொள்ளவும்.

T.P: 416 551 3972

ஒரே நாளில் Saree Blouse



உங்கள் சகலவிதமான சாறி புளவுஸ் (Saree Blouse)

தைப்பதற்கும் அழையுங்கள்.



416 264 6400



# Higher Standards Agents... Higher Results!

| For Lease - Markham | For Sale - Mississauga | For Lease - Toronto | For Sale - Brampton | For Sale - Toronto |
|---|---|---|---|---|
|  |  |  |  |  |
| **$750.00** McCowan/Highglen 2 bdrm, 2 full wshrm. | **$184,500** Erin Mills/Burhamthorpe | **$600.00** Keele/ Sheppard 2 bdrm. | **$274,500** Mclaughlin/Sandalwood 3 bdrm., 3 wshrm | **$279,900** Yonge/Finch |

**Land Available for: Banquet hall , Auditorium Theatre, Temple**

| For Sale - Markham | For Sale - Brampton | Sale of Business | For Sale - Toronto |
|---|---|---|---|
|  |  |  |  |
| **$339,900** 9th line /16th Avenue 4 bdrm., 3 wshrm | **$399,900** Sandalwood/Bramalea 4 bdrm., 4 wshrm. | **$69,900.00** plus stock Only 3years old Brampton Sandalwood and Vankirk | **$289,000** Commercial Condo- Keele/Sheppard 2000 sqft |

HOMELIFE HIGHER STANDARDS

## HomeLife/Future

**Realty Inc. Brokerage**

Independently Owned and Operated

205-7 Eastvale Drive,
Markham, ON L3S 4N8

## Ruby Thambiah

Sales Representative

Dir: **416-999-5337**

Tel: 905-201-9977 Fax: 905-201-9229

rubysri@hotmail.com, www.buyandsellwithruby.com



digi

# $100,000

# லைவ்(f) இன்சூரன்ஸ்

புகை பிடிக்காத 50 வயது ஆணுக்கு **$27.45** மட்டுமே

**10 Year Term Life Insurance**

புகை பிடிக்காத 50 வயது பெண்ணுக்கு **$20.70** மட்டுமே.

உங்களுக்கான மாதக்கட்டணத்தையும், ஏனைய இன்சூரன்ஸ் பற்றிய தகவல்களையும் அறிந்து கொள்ள அழையுங்கள்...



**KEN KIRUPA**

Life Insurance Broker

759 Warden Ave., Toronto, ON

www.familyprotection.ca

INDUSTRIAL ALLIANCE INSURANCE AND FINANCIAL SERVICES INC.

Unity Life of Canada

RBC Insurance

கென் கிருபா


காப்புறுதி முகவர்

**416 294 9322**

E&OE

## அழகிய பூஞ்செடிகள்

# ரியூலிப்ஸ் (Tulips)



சந்திரசேகரி

### அறிமுகம்:

ரியூலிப்ஸ் (Tulips) வருடந்தோறும் நிலைத்து வாழும் செடிகள். இவை கிழங்குகள் மூலம் பயிரிடப்படும் தாவரங்கள். குடும்பம் லில்லியேசியைச் (Family Liliaceae) சேர்ந்தவை. இந்த இனத்தில் ஏறக்குறைய 150 வர்க்கங்கள் காணப்படும். இவற்றை முதல்முதலாக வளர்க்க விரும்புபவர்கள், இப்பருவ காலத்தைத் தவற விட்டாலும் அடுத்த வருடம் வளர்ப்பவர்களுக்கு நல்ல விடயங்கள் இங்கு கிடைக்கின்றன.

இச்செடிகள் 15ம் நூற்றாண்டில் வாழ்ந்த கரோலஸ் குளூசியஸ் என்பவர் கொலன்ட் நாட்டில் முதல்முதலாக இவற்றைப் பயிர் செய்தார். இருந்தபோதிலும், துருக்கி நாட்டில் 1000 ADக்கு முன்னதாகவே இச்செடிகள் பயிரிடப்பட்டவை. இவை, இங்கிருந்து கொலன்ட் நாட்டுக்கு எடுத்துச் செல்லப் பட்டன. செடிகள், இளவேனீர்க் காலத்தில் ஏராளமான அழகிய பூக்களைத் தருவதால், இவ்விருத்தியானது கணிசமான அளவு ஏனைய நாடுகளிலும் பின்னர் பரவியிருக்கின்றது.

### ரியூலிப்ஸை ஏன் நாம் தெரிவு செய்யவேண்டும்:

ரியூலிப்ஸ் இளவேனீர்காலத்தில் எல்லோரது கண்களையும் கவரும் ஆரம்பபூக்களாக இருப்பதால், இன்று உலகில் முதன்மையாக அங்கீகாரம் பெற்ற கிழங்குப் பூவாகக் கருதப் படுகின்றன. கடைசிப் பனிக்காலம் மண்ணினுள் மறைந்ததும் சூரியவொளியானது இளவேனீர்காலத்தில் நடனமாடுவது இந்த ரியூலிப்ஸ்இனது வெளிக்காட்டலின் அதிசயம் தான்.. நீங்கள் ரியூலிப்ஸ் வளர்ப்பதை இளவேனீர்காலத்தில் மட்டும் காத்திருக்கத் தேவையில்லை. கிழங்குகள் நிலத்தின் அடியில், மரங்களின் அடியில், பாறைக்கற்களின் இடைவெளிகளில், கொள்பாத்திரங்களில் பாதுகாப்பாக இருந்து இளவேனீர்காலம் வந்ததும் முளைவெளிவருகின்றன இதனால் எங்கள் அனைவருக்கும் இளவேனீர்காலம் வந்துவிட்டது என்ற உணர்வு முற்கூட்டியே வந்துவிடும். அத்தோடுமட்டுமல்லாமல், புதிய பூச்செடிகள் வளர்க்கும் காலம் இது என்பதையும் நாம் உணர்ந்துகொள்ளமுடிகின்றது.

### எப்படி இதனை வளர்க்கலாம்:

ரியூலிப்ஸ் (Tulips), அநேக அழகிய நிறங்களான சிவப்பு, மஞ்சள், கறுப்பு, நீலம், செம் மஞ்சள், றோஸ் ஆகிய பூக்களையுடையதாகக் காணப்படும். விருப்பமான நிறங்களை நீங்களே தேர்வு செய்யுங்கள். ஆனால், மிகவும் பிரபல்லியமானது சிவப்பு நிறமெனவும், அடுத்ததாக மஞ்சள் நிறமெனவும் இரண்டையும் தரப்படுத்தியிருக்கின்றார்கள். பூக்கள் சிறகுகள்போலவும், இதழ்கள் வெட்டுண்டதாகவும், இதழ்கள் பல்லின கோடுகளை உடையதாகவும் காணப்படும். உயரமான, குறுகிய இனங்கள் பல மாறுபட்ட இனங்களிலும் பரவலாகக் காணப்படுகின்றன. வாங்குகின்ற கிழங்குகள் பெரிதாக இருக்குமாயின் செடிகள் பெரிய பூக்களைக் கொடுக்கும். கிழங்குகள் 4-6 கிழமைகள் முதல் உறை பனிக்கு முன்னதாகப் பதித்து விடவேண்டும். இவற்றைப் பின்னதாக நடுவதால் பெரிய



பாதிப்பு ஒன்றும் ஏற்படாது.

கிழங்குகள் பதிக்கும் இடத்தைத் தெரிவு செய்தபின்னர், அவ்விடத்திலுள்ள களைகளை அகற்றவேண்டும். நிலத்தை நன்கு பண்படுத்தியதும், நிலம் களிமண்ணாக இருந்தால் பீற்மொஸ், பசளை சேர்க்கவேணடும். உங்களுக்கு விரும்பிய மாதிரி அமைப்பில் கிழங்குகளைப் பதிப்பதற்கு உரியஇடங்களைக் குறித்து, குழிகளை ஆக்கி கிழங்குகளை பதிக்கவேண்டும். கிழங்குகளை தொகுதிகளாக, இதுவும் ஒரேநிறங்கள் சேர்ந்ததாகவும் பதித்தால் ஒரு பிரமிக்கச் செய்கின்ற தோற்றம் எமக்குக் கிடைக்கமுடியும். கிழங்குகளின் பருமனின் இருமடங்கு ஆழம் பதிப்பதற்குப் போதுமானது. கிழங்குகளின் முனை மேல் நோக்கியவாறு பதிக்கவேண்டும். கிழங்குகள் பசளை கலந்த மண்ணினால் மூடப்படவேண்டும். குளிர் காலமாக இருந்தால் காய்ந்த மரத்தூள் அல்லது மல்ச் போன்றவற்றால் பாதுகாக்கப்படவும் வேண்டும்.

### கிழங்குகளை அடையாளம் காணல்:

நல்ல பூக்களைத் தருவதுதான் ரியூலிப்ஸ் நடுவதின் நோக்கம், ஓவ்வொரு கிழங்கையும் உற்று நோக்கும்பொது நடுவே ஒரு நுண்ணிய முனை காணப்படும். இவ்வரும்பைச் சுற்றியுள்ள வெள்ளை நிறப்பகுதிகள் முளை வளர்வதற்குரிய வேண்டிய போசாக்கினைச் சேமித்து வைக்கும். கிழங்குகள் பதித்ததும், வளர்ச்சி நிலத்திற்கு கீழே நிகழ்கின்றது. வேர்கள் தோன்றுவதற்கு சிறிது நீர் பசளை தேவை. சூரியஒளியின் வெப்பம் கிழங்குகள் முதிர்ச்சியடைவதற்கும் குளிர்காலக் குளிர்ச்சி கிழங்குகள் பாதுகாப்பாக இருந்து இளவேனீர் காலத்தில் முளை கொள்வதற்கும் அனுகூலமாக இருக்கும்

### ரியூலிப்ஸ் பாதுகாப்பு:

முதலாவதாகக் கவனிக்கவேண்டிய சிறந்த முறை இளவேனீர்கால ஆரம்பக் கட்டம். வளர்ப்பில் இரண்டாவதாகக் கவனிக்கவேண்டியது பரபமரிப்பு ஓரளவு நீர் போதுமானது. சிலசமயம் பூக்காது கூடுதலாக இலைகள் பெரிதாகக் காணப்படும். இதனால், செடிகளை நத்தை வகைகள் தாக்கலாம். அப்போது நத்தைகொல்லி கிருமிநாசினி உபயோகித்து பிரச்சனையைத் தீர்த்துக் கொள்ளலாம்.

பூக்கும் காலம் முடிந்ததும், தண்டினை அல்லது பூவின் தலைப் பகுதியினை துண்டித்துவிடவேண்டும். அத்தோடு, இலைகள் இயற்கையாக மடியும்வரை விட்டுவிடவும். இவ்வேளை கிழங்கு, அடுத்த காலத்திற்கு தனக்குத் தேவையான போசாக்கினை சேர்த்துக் கொள்ளமுடியும். இலைகள் பழுத்ததும் இவற்றை நீக்கிவிடவும். இல்லையேல் இவ்விடத்தில் நச்சுத்தன்மை ஏற்படச் சாத்தியம் உண்டு. சிலவேளை கிழங்குகளை அவ்விடத்திலிருந்து நீக்கவேண்டி இருப்பின், அதனைச் செய்யலாம். ஒவ்வொரு செடியிலும் ஒரு பெரிய கிழங்கும் இரு சிறிய பக்க

**வீட்டுத் தோட்டம் - 13**

அரும்புகளும் காணப்படும். சிறிய அரும்புகளை அகற்றி பெரிதினைச் சேமிப்பதற்கு வைக்கலாம்.

### வீட்டினுள்ளேயும் வளர்க்க முடியும்:

ரியூலிப்ஸ் சாடிகளில் வீட்டினுள்ளேயும் வளர்க்க முடியும். சாடிகளில் கிழங்குகளை புரட்டாதி, ஐப்பசி மாதங்களில் பதித்து, தோட்டத்தின் குளிரான இடத்தில் வெளியே வைக்கலாம். கிழங்குகள் முளைகொண்டு அரை அல்லது ஒரு அங் வளரும்போது, இருட்டான இடத்தில் வீட்டின் உட்புறமாக் 60 பாகை வெப்பத்தில். வைக்கவேண்டும். பின்னர் மூன்று கிழமைகளில் வெளிச்சமுள்ள இடத்திற்கு மாற்றி வெப்பம் குறைந்த பாதுகாப்பில் வைக்கவேண்டும். இளவேனீர்க்காலத்தில் வெளிச்சமுள்ள யன்னல் அருகே கொண்டு வரவேண்டும். நீர் ஓரளவும் இலேசான பசளையும் இருக்குமிடத்து செடியானது ஒருவித கஷ்டமுமின்றி வளர்க்கமுடியும்.

segari@thaiveedu.com

■ ■ ■

**Family Rutaceae**

## எலுமிச்சை

**(Botanical Name: Citrus aurantifolia) (Eng.Name: Lime tree)**



ஆசியா எல்லா வெப்ப மண்டலத்திலும், காணப்படும். இலங்கை, இந்தியா மலேசியா ஆபிரிக்கா போன்ற பெரும்பாலான நாடுகளில் பயிரிடப்படுகிறது. பரந்த, ஓரளவு 15-20 அடி உயரமான மரம். மணமுள்ள தடித்த பச்சை நிறமான, சீரான விளிம்புள்ள இலைகள். காணப்படும். பூக்கள் 5 அல்லது சிலவேளைகளில் 4 இதழ்களுடையவை. தண்டில் முட்கள் காணப்படும். கனிகள் நறுமணமுள்ளதாகவும் ஓரளவு புளிப்புள்ளதாகவும் இருக்கும். சமையல் உணவுகளில் சாற்றைப் புளிந்து விடுவார்கள். சாறு பலவித சலட்டுக்களிலும் சமைத்த இறைச்சி. மரக்கறி வகைகளிலும் ருசியூட்டுப் பதார்த்தமாக அன்றுதொட்டு உபயோகித்து வருகின்றார்கள். மெக்சிக்கன் எலுமிச்சை கூடுதலான அமிலத்தைக் கொண்ட திறமான இனமாகும். காய்கள் வட்ட வடிவமானவை. உணவுக்கும் பானத்திற்கும் உகந்தவை. காய்கள், இடைநிலைப் பருவம் மிகவும் சிறந்தவை. காய்களைத் துண்டுகளாக வெட்டி. உப்பு, மிளகாய், உள்ளி சேர்த்து ஊறுகாய் போடுவார்கள் ஊறுகாய் என்றாலே வாய் ஊறும். இவை, நீண்ட காலம் போத்தல்களில் பாதுகாக்கப்பட்டு உணவோடு சேர்த்து உபயோகிக்கலாம்.

எலுமிச்சம் சாறு பலவித வியாதிகளைப் போக்கும். யூஸ் கூடுதலான சிற்றறீக்கமிலத்தை கொண்டிருக்கும். தேள் தேனீ கடிகளைச் சீராக்கும். நிரம்பிய வைட்டமின் சீ உண்டு. வைட்டமின் சீ ஸ்கேவிநோயைத் தடுக்கும். தயாரிக்கப்பட்டபசை போன்ற பதார்த்தம் லெமெனட் எனும் யாம் தயாரிக்க உதவுகின்றது.




Tel: 416-836-1946, 416-423-5057
40 Crockford Blvd., Scarborough, ON, M1R 3C3
24 hrs Service
SAM Mobile Mechanic
K.S.TRUCK & CAR TRAILER REPAIR
All Automotive Repairs
Specializing in Mechanical, Body, Electrical Repairs & Wheel Spring

# உங்கள் குழந்தைகளின் உறுதியான எதிர்காலத்திற்கான முதலீடு




## HERITAGE EDUCATION FUNDS

Save towards your child's post-secondary education and find out how the government can help you pay for it.

- With a Heritage Education Funds RESP How much can you comfortably save?
- Want to start building your child's future today?
- 40 years of RESP expertise helping families from coast to coast.
- Start Early, Invest often, Stay invested.
- Start saving now and plan for your child's future possibilities.

**We are also hiring sales representatives that are self motivated and are capable of building their own business.**

HERITAGE
Educational Foundation

**Thaya Balan**
(Agency Director)
**416.831.4725**





digi

# வீடு வாங்க விற்க...




$514.900
**Keele & Mcnaughton**
3+1 Bedrooms 4 Washroom
Finished Basement W/O


$329.000
**Lawrence & Brimley**
3Bedrooms 2 Washroom
Finished Basement



$339.000
**Markham & Lawrence**
4+1 Bedrooms 2 Washroom
Finished Basement

**Mathan Selvendarakumaran**
Sales Representative
Direct: **416-625-2870**

**Kuga Raveendrarajah**
Broker
Direct: **416-843-8585**


$325.000
**McCowan / Denision**
3 Bedrooms 2 Washroom
Finished Basement w/o

"சேமிப்பின் அடையாளம் அழகானதோர் வீடு"


$340.000
**McCowan / Denision**
4+2 Bedrooms 4 Washroom
Finished Basement w/o

வீடு வாங்க விற்க அல்லது அது சம்பந்தமான விபரங்களுக்கும் குறைந்த வட்டி விகிதத்தில் மோட்கேஜ் செய்யவும் நட்புடன் அழையுங்கள்

HOMELIFE
HIGHER STANDARDS

**HomeLife Today Realty Ltd.,** Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto, ON, M1P 4S6
**Bus: 416-298-3200**

*Independently Owned and Operated, Realtor

# சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் (Child sexual abuse)

ஜீவா திசைராஜா



தனிமனித உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என அனைவரும் கருதும் அதே வேளை சிறுவர்கள் தொடர்பான நலன்கள் கவனிக்கப்பட வேண்டும் எனக் குரல் கொடுப்பவர்கள் மிகச் சிலராகவே இருக்கின்றனர்.

தனது ஒரு மாதக் குழந்தையின் பிறப்புறுப்பை முத்தமிட்ட தாயிற்கு அருகிலிருந்த மருத்துவத் தாதி அதனை சிறுவர் துஷ்பிரயோகமாகக் கருதி அறிவித்த சம்பவங்கள் பற்றி அறிந்தவர்கள் தகவல் கூறினர். உண்மையில் எமது கலாச்சாரத்தில் விளையாட்டாக சிறு குழந்தைகளின் பிறப்புறுப்புக்களைத் தொடுதல், முத்தமிடல் என்பன சாதாரணமாகத் தென்பட்டாலும் மற்றையோரின் பார்வையில் இது தவறானதாகத் தென்படலாம். ஆனால் இவ்வாறான சந்தர்ப்பங்கள் உண்மையிலேயே பாலியல் துஷ்பிரயோகங்களாகவே இருக்கக் கூடிய சந்தர்ப்பங்களும் உண்டு.

தனது நான்கு வயது சிறு குழந்தையுடன் பாலியல் வல்லுறவு கொண்ட தந்தை விசாரணைகளின் போது 'எனது குஞ்சை நான் என்ன செய்தால் என்ன?' என்ற வினா எழுப்பிய சந்தர்ப்பங்களும் இருக்கத்தான் செய்கின்றன. இந்நிலையில் வலிமை குறைந்த பிள்ளைகளுக்காக வாதாடுபவர்கள் யார்? இதற்காகவென்றே நாம் புகுந்த நாட்டில் பல நிறுவனங்கள் உள்ளன. உண்மையாகவே குற்றம் புரிந்தாலென்ன, தவறுதலாகக் குற்றம் சாட்டப்பட்டாலென்ன குடும்பத்தினுள் இது நடந்திருந்தால், இது பொலிஸ் விசாரணையெனப் போகுமிடத்து பிள்ளையை சிறுவருக்கு உதவும் சங்கத்திடமே (Children's Aid Society) ஒப்படைப்பர். அவர்கள் வளர்ப்பு இல்லங்களில் (Foster Homes) பிள்ளைகளை தற்காலிகமாக ஒப்படைக்கும் அதே சந்தர்ப்பத்தில் விசாரணைக்கென்று நீதிமன்ற திகதியையும் நிர்ணயிப்பர்.

குற்றம் புரிந்தவர்கள் தம்மீது குற்றம் இல்லை எனக் கூறுவது பெரும்பாலான சந்தர்ப்பங்களில் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. ஓரளவு வயது வந்த குழந்தையாயின் பிள்ளையை நன்கு விசாரிப்பர். பிள்ளை உண்மை கூறுகின்றதா அல்லது பொய் கூறுகின்றதா என்பதை அறிவதில் இவர்கள் அனுபவம் பெற்ற நிபுணர்களாக இருப்பர். பிள்ளையை அவர்கள் நம்புமிடத்து பெற்றோரை அல்லது குற்றம் புரிந்த நபரை விசாரணை செய்வார்கள். குற்றத்தின் தன்மைக்கேற்ப தீர்ப்பு வழங்கப்படும். குற்றம் புரிந்தவர் எனக் கருதப்படுபவர் தாம் குற்றத்தை ஏற்க மறுத்தால் ஒரு சட்டத்தரணியின் உதவியுடன் நீதிமன்றில் வாதாடலாம். இதற்கு அதிக நேரம், பணம் என்பன செலவாவதுடன் குற்றவாளிக்கு சார்பாக தீர்ப்பு அமையுமா என்பதும் கேள்விக்குறியே. இக்குற்றங்களுக்கான தண்டனை பற்றிய விபரங்கள் கட்டுரையின் இறுதிப் பகுதியில் கொடுக்கப்பட்டுள்ளது. அதற்கு முன்பாக சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் என்றால் என்ன என்பதை பார்ப்போம்.

## சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் என்றால் என்ன?

ஓர் வளர்ந்தோருக்கும் ஓர் சிறுவன்/ சிறுமிக்கு இடையில் நடைபெறும் எந்தவொரு பாலியல் நடவடிக்கையும் உடலியல் மற்றும் உணர்வு ரீதியான துஷ்பிரயோகங்களை உள்ளடக்கியுள்ளது. பாலியல் துஷ்பிரயோகம் எனப்படும் போது இத் தகாத முறையில் கட்டியணைத்தல் (Inappropriate fondling), தொடுதல் (touching), பாலியல் உறுப்புக்களை உட்செலுத்துதல் (Penetration) போன்ற உடலியல் ரீதியானதாக (Physical) இருக்கும். அதே வேளை ஓர் பிள்ளை உடுப்புக்களைக் களையும்படி கட்டாயப்படுத்தப்பட்டாலோ அல்லது வளர்ந்தோரின் பாலியல் நடவடிக்கைகளை அவதானிக்கும்படியோ கட்டாயப்படுத்தப் படுத்தலோ இது உணர்வுகளைப் பாதிக்கும் துஷ்பிரயோகமாக (Emotional abuse) இருக்கும். பாலியல் துஷ்பிரயோகத்தால் உடலியல் ரீதியான அபாயம் ஏற்படுவதுடன், இதனால் ஏற்படும் பாதிப்பானது வலிமை வாய்ந்ததாகவும் அதிக காலத்திற்கு நீடித்திருக்கக் கூடியதாகவும் அமையும். பாலியல் துஷ்பிரயோகத்துடன் தொடர்பான அவமானமானது பிள்ளையின் நடத்தையை இரண்டு மடங்கு துன்பமாக்கக் கூடியது.

பாலியல் பசிபிடித்தவர்கள் பற்றிய கதைகள் பயங்கரமானதாக இருக்கும் அதேவேளை ஓர் பிள்ளையை அல்லது இளம் வயதினரை பாலியல் ரீதியாக துஷ்பிரயோகம் செய்பவர், பிள்ளை நன்கு அறிந்து நம்பும் ஒருவராக, உதாரணமாக ஒரு உறவினர், பிள்ளை பராமரிப்பை வழங்குபவர் (Childcare provider), அயலவர், ஆசிரியர், பயிற்றுனர் (Coach) அல்லது சமயத் தலைவர்களாக இருப்பவர்கள் தான். தாம் இதனை வெளியில் சொன்னாலும் ஏனையோர் இதை நம்ப மாட்டார்கள் என்றும் தம்மேல் கோபமடைவார்கள் என்றும் பிள்ளைகள் கவலைப்படுவார்கள். இவ்வாறான துஷ்பிரயோகம் தமது தவறால் தான் ஏற்பட்டதொன்று என அவர்கள் நம்புவதுடன் இந்த அவமானம் அவர்கள் மனதை பாதிப்பதுடன் வாழ்நாள் முழுவதுமான பாதகமான விளைவுகளை ஏற்படுத்தக் கூடியது.

பிள்ளை பாலியல் ரீதியல் துஷ்பிர யோகம் செய்யப்படுகின்றது என்பதற்கான அறிகுறிகள் சிலவற்றைப் பார்ப்போம்.

## நடத்தை சார்ந்த அறிகுறிகள் (Behavioural signs)

பிள்ளை தனது வயதுக்கு பொருத்தமற்ற பாலியல் நடவடிக்கைகளில் தனது அறிவை வெளிக்காட்டுகின்றதா அல்லது ஆர்வத்தைக் கொண்டிருக்கின்றதா?

பிள்ளை சிலசமயம் குறிப்பிட்ட நபரை தவிர்க்க விரும்பலாம் அல்லது அளவுக்கதிகமான ஆத்திரம், வன்முறைகளில் ஈடுபடல் அல்லது அளவுக்கு அதிகமாக பணிந்து போதல் அல்லது அமைதியாயிருத்தல் போன்ற அசாதாரண நடத்தையை வெளிக்காட்டலாம். அதாவது வேறு சில பிள்ளைகள் தம்மைத் தாமே அழித்துக் கொள்ளும் நடவடிக்கைகளிலும் ஈடுபடுவர். தமது துன்பத்தைக் குறைக்க மதுபானம் அல்லது போதை வஸ்து பாவிக்கலாம்.

## உடலியல் அறிகுறிகள் (Physical signs)

பிள்ளை இருப்பதிலோ அல்லது எழுந்து நிற்பதிலோ கஷ்டத்தைக் கொண்டிருக்கலாம். அல்லது உள்ளாடைகளில் இரத்தக் கறை படிந்து அல்லது கிழிந்து காணப்படலாம். பிறப்புறுப்புகளில் வீக்கம், காயங்கள் அல்லது இரத்தப் போக்கு காணப்படல் என்பன அபாய சமிக்ஞைகள் ஆகும். 14 வயதுக்கு உட்பட்ட பிள்ளை பாலியல் தொற்றுநோய்களுக்கு ஆளாதல், கர்ப்பமடைதல் என்பன கவலைக்குரிய விடயங்களாகும்.



## பராமரிப்பாளரின் அறிகுறிகள் (Caregiver signs)

பிள்ளையைப் பராமரிப்பவர் அசாதாரண முறையில் பிள்ளையை கட்டுப்படுத்துவதுடன் ஏனைய பிள்ளைகள், வளர்ந்தவர்கள் ஆகியவர்களுடன் தொடர்புறாது பிள்ளையைப் பாதுகாப்பதற்கு முயல்வார்கள். பராமரிப்பாளரின் வெளித்தோற்றத்தை அவதானிக்கும் போது "இந்தப் பூனையும் பால் குடிக்குமா?" என்பதைப் போல் மரியாதைக்குரியவர்களாகத் தோற்றமளித்தபோதும் பிள்ளை பொய் சொல்கின்றது என்றோ அல்லது விடயத்தை பெரிதுபடுத்திக் கூறுகின்றது என்றோ கருதாகாது.

## இணையத்தினூடான அபாயம் (Internet Risks)

இணையத்தை பிள்ளைகள் பயன்படுத்தும்போது, இணையத்தினூடாக பாலியல் இரை தேடுபவர்களின் அபாயம் காத்திருக்கின்றது. பிள்ளைகள் இணையத்தினூடாக பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படக் கூடிய அபாயம் உண்டென்பதற்கான எச்சரிக்கை அறிகுறிகள் பின்வருமாறு.

- உங்கள் பிள்ளை அதிக நேரத்தை இரவில் இணையத்தளத்தில் செலவிடும் அதேநேரம் நீங்கள் பிள்ளையின் அறையினுள் வரும் போது பிள்ளை கணனியின் மின் தொடர்பைத் துண்டித்து விடுதல் அல்லது கணனித் திரையை (Screen) மாற்றி விடுதல்.
- பிள்ளையின் கணனியில் சிறுவர் பாலியல் தொடர்பான படங்களை (Pornography) நீங்கள் காண நேர்தல்.
- நீங்கள் அறியாதவர்களிடமிருந்து பிள்ளைக்கு தொலைபேசி அழைப்புக்களோ அல்லது கடிதங்களோ கிடைத்தல் அல்லது உங்களுக்குத் தெரியாத தொலைபேசி இலக்கத்திற்கு பிள்ளை அழைப்புக்களை மேற்கொள்ளல்.
- குடும்பத்திலிருந்து உங்கள் பிள்ளை உணர்வுரீதியாக மெதுவாக விலகுதல்

பிள்ளைகளுக்கு பாலியல்ரீதியில் ஏற்படும் துஷ்பிரயோகங்கள் பிள்ளையின் வாழ்க்கை முழுவதையும் பாதிப்பதுடன் எதிர்காலத்தில் நல்லுறவுகளை பிள்ளை கொண்டிருக்க முடியாத நிலைமையும் ஏற்படும். பிள்ளையின் சுயகௌரவத்தையும் இந் நினைவுகள் பாதிக்கும். எனவே இத்தகைய துன்பத்திலிருந்து பிள்ளைகளை விடுவிப்பதற்கு பிள்ளைகள் இவ்வாறான பாதிப்புகட்கு உட்படும போது இதனை அதிகாரிகளிடம் அறிவிப்பதே தகுதியான செயலாகும். பெற்றோர்களால் பாதிப்பு ஏற்படுத்தப்பட்டால் எல்லா சந்தர்ப்பங்களிலும் பிள்ளைகளை வீட்டில் இருந்து அகற்ற மாட்டார்கள். பிள்ளைகளை சில காலத்திற்கு வளர்ப்பு இல்லங்களில் விட்டுப் பராமரிக்கும் அதே வேளை பெற்றோருக்கு ஆலோசனைகள் (Counselling), சிறந்த பெற்றோராக இருப்பதற்கான வகுப்புகள் (Parenting) போன்றவற்றை வழங்குவார்கள்.

## எவ்வளவு தூரம் இந்தப் பிரச்சனை பரவியுள்ளது?

சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் என்பது பொதுவில் வெளித்தெரியாது மறைந்துள்ள ஓர் குற்றமாகும். எனவே பிள்ளைப் பராயத்தில் எத்தனைபேர் பாலியல் ரீதியல் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளனர் என்பதை மதிப்பிடுவது மிகக் கடினமாகும். அநேக காரணங்கட்காக வளர்ந்தோரும் சிறுவர்களும் பாலியல் துஷ்பிரயோகம் பற்றி அறிவிக்க தயக்கம் காட்டுகிறார்கள். அவமானத்தின் காரணமாக நடந்த சம்பவங்களை இரகசியமானதாக வைத்திருக்கும் வரலாற்று ரீதியான பண்புடன் (Norm) இது தொடர்புபட்டதாக இருக்கலாம். துஷ்பிரயோகம் செய்பவர், நெருங்கிய உறவினராக இருந்தால், அவருக்கு குற்றங்கள் சுமத்தப்பட்டு தண்டனைகள் விதிக்கப்படலாம் என்பதால் பிள்ளை துஷ்பிரயோகத்தை வெளியே சொல்லாதிருக்கலாம். இறுதியாக, பாதிக்கப்பட்டவர் மிக இளம் வயதினராகவும் துஷ்பிரயோகம் செய்தவரில் தங்கியிருப்பவராகவும் இருந்தால் வெளியே சொல்வது தடைப்படலாம்.

இக்காரணங்கட்காக அநேக பாதிக்கப்பட்ட பிள்ளைகள் தாம் துஷ்பிரயோகம் செய்யப்பட்டதை வெளியே கூறுவதில்லை. இவர்கள் இவ்வாறு கூறினாலும் மேலும் பிரச்சனைகளை எதிர்நோக்கலாம். அத்துடன் அவர்களது குடும்பங்களும் இவற்றை வெளியில் கூறி உதவிகோர முன்வருவதில்லை. சில குடும்பங்கள் உதவி பெற நினைத்தாலும் பொருத்தமான சேவைகளைப் பெறுவதில் கஷ்டங்களை எதிர்நோக்குகின்றனர்.

கனடாவில் துஷ்பிரயோகம் தொடர்பாக ஓர் சில புள்ளி விபரங்களே உள்ளன. 1994இல் கனடாவில் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான வழக்குகளில் மாகாண மற்றும் பிரதேச அதிகார சபைகளின் பங்கு எனும் அறிக்கையானது (Child Welfare in Canada: The Role of Provincial and Territorial Authorities in Cases of Child Abuse) சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பான மாகாண சட்டங்கள், வரைவிலக்கணங்கள், சிறுவர்

28ம் பக்கம் பார்க்க...

# சிறுவர் பாலியல்...

27ம் பக்கத் தொடர்ச்சி...

நலன் போன்றவற்றை விபரிக்கின்றது.

சிறுவர் மற்றும் குடும்ப சேவைகள் வருடாந்த அறிக்கையானது (Child and Family Services Annual Report 1992-93, 1994-95) ஆனது கனடாவில் சிறுவர் நலன்புரி சேவைகள் பற்றிய புள்ளி விபரங்களைத் தருகின்றது. இத்தரவுகள் வெவ்வேறு வரைவிலக்கணங்களுக்கு ஏற்ப சேகரிக்கப்படுவதால் மாகாணங்களிடையே ஒப்பிட்டுப் பார்க்க முடியாதுள்ளது. உதாரணமாக: சில மாகாணங்களில் சந்தேகிக்கப்படும் சந்தர்ப்பங்கள், நிரூபிக்கப்பட்ட சந்தர்ப்பங்களுடன் சேர்க்கப்பட்டுள்ளன. சில மாகாணங்களில் பாலியல் துஷ்பிரயோகமும் உடலியல் துஷ்பிரயோகமும் வேறுபடுத்தப்படவில்லை. எனினும் பின்வரும் தகவல்கள் துஷ்பிரயோகம் பற்றிய புள்ளிவிபரங்களை ஓரளவு தருகின்றது.

1993 இல் ஒன்ராறியோவில் மட்டும் சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பாக 12,000 விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த வழக்குகளில் 29% பாலியல் துஷ்பிரயோகம் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளதுடன் 27% மானவை சந்தேகிக்கப்பட்டதாகவும் உள்ளன.

பிரிட்டிஷ் கொலம்பியாவில் மார்ச் 1992 இல் 500இற்கு மேற்பட்ட சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பான முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

கனடாவில் சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பான பரந்தளவிலான ஆய்வு பிள்ளைகட்கும் இளைஞர்கட்கும் எதிரான பாலியல் குற்றங்கள் மீதான கமிட்டியினால் ஆய்வு செய்யப்படுகின்றது. இந்த ஆய்வின்படி, வளர்ந்த கனடியர்களில் 53%மான பெண்களும் 31%மான ஆண்களும் அவர்கள் சிறுவர்களாக இருந்த போது பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என எடுத்துக் காட்டுகின்றது.

பாலியல் துஷ்பிரயோகத்தால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் எல்லா இன கலாச்சார சமூகங்களிலும் இருக்கின்றார்கள். உடல் மற்றும் மனரீதியில் இயலாத்தன்மை உடைய சிறுவர்கள் பாலியல் துஷ்பிரயோகத்தால் இலகுவில் பாதிக்கப்படக் கூடியவர்களாக இருக்கின்றனர்.

சிறுவர்களுக்கும் வளர்ந்தோருக்குமிடையிலான பாலியல் தொடர்பை சிறுவர்கள் முற்றிலும் விளங்கிக் கொள்ள முடியாதவர்களாகவும் விளைவுகளை முன்னரே கூற முடியாதவர்களாகவும் இருப்பதுடன், வளர்ந்தோர் தமது அதிகார நிலையால் பிள்ளைகளை துஷ்பிரயோகம் செய்தாலும் பாலியல் செயல் பற்றி நன்கு அறிந்து அதற்கு அனுமதியைக் கொடுக்க முடியாத அறிவு நிலை அற்றவர்களாக இருக்கின்றனர்.

ஏனையவர்களிடமிருந்து தனியாக்கப்படும் சிறுவர்கள், பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படும் பாரிய அபாய நிலையில் இருக்கின்றனர். இந்த சிறுவர்கள், இவர்கள் நம்பக் கூடிய நண்பர்கள், சகோதரர்கள் அல்லது வளர்ந்தோருடன் சிறியளவிலேயே தொடர்புகளைக் கொண்டிருக்கின்றனர். ஏற்கனவே தனியாக்கப்பட்ட பிள்ளையில் துஷ்பிரயோகம் செய்பவர்கள் தமது ஆதிக்கத்தை செலுத்த முடிகின்றது. அத்துடன் ஏனைய துஷ்பிரயோகம் செய்பவர்கள், சந்தர்ப்பங்களைக் கணக்குப் போட்டு பிள்ளையைத் தனியாக்குகின்றனர். பாலியல் துஷ்பிரயோகம் காரணமாக, சில பிள்ளைகள் தம்மை வேறுபட்டவர்களாக உணர்வதாலும் ஏனையோரும் அவ்வாறே எண்ணுவார்கள் என அஞ்சுவதாலும் மனப்பாதிப்புகட்கு உட்படுகின்றனர். துஷ்பிரயோகம் செய்தவர் குடும்ப நண்பராக இருந்தால், இது பிள்ளைக்கு அதிக துக்கத்தைக் கொடுக்கக் கூடிய சாத்தியக்கூறுகளைக் கொண்டுள்ளது. அல்லது பிள்ளை தனது துஷ்பிரயோகம் செய்யாத பெற்றோரிடமிருந்து ஆதரவைப் பெறாவிட்டால் அதிக துயரம் ஏற்படும் சாத்தியக் கூறு உண்டு. வற்புறுத்தல் அல்லது பயமுறுத்தல் துஷ்பிரயோகம் செய்யும்போது காணப்பட்டால் அல்லது நீண்டகாலமாக துஷ்பிரயோகம் தொடர்ந்தால் அதனால் ஏற்படக் கூடிய நீண்ட கால விளைவுகள் மோசமானதாக இருக்கும்.

முன்னரே கூறியதன்படி, பிள்ளைகளின் மௌனத்தை உடைப்பது கடினமானது. பிள்ளையின் உலகத்தை வளர்ந்தோர் அதிகளவில் கட்டுப்படுத்துகின்றனர். பிள்ளையை அல்லது பிள்ளை நேசிக்கும் ஒருவருக்கு ஆபத்தை ஏற்படுத்துவதாக துஷ்பிரயோகம் செய்பவர் பயமுறுத்தினால், அவருக்கு அவ்வாறு செய்வதற்கான பலம் அல்லது வல்லமை இருக்கின்றதா என்பதை பிள்ளை யோசிக்காது.



பிள்ளைகள் தமக்கு நடைபெறும் துஷ்பிரயோகத்தை நிறுத்துவதற்காக இதனை வெளியில் சொல்ல விரும்பியபோதிலும், இதனை நம்ப மாட்டார்கள் அல்லது பாதுகாக்கப்பட மாட்டார்கள் அல்லது சொன்னால் என்ன நடக்கும் என அச்சப்படுவதால் இதனை வெளியில் கூறுவதற்கு தாமதிப்பார்கள். குற்றம் புரிந்த அதே நபரால் பாதிக்கப்பட்ட இன்னொரு நபர் இதனை வெளிப்படுத்தினால் அதே சமயம் பிள்ளை தானும் இத் துஷ்பிரயோகம் பற்றிச் சொல்ல துணியும். அல்லது நேரடியாக கேள்விகள் கேட்கும் போதும் இதனை வெளிப்படுத்தும்.

தம்முடன் பாலியல் உறவு கொண்டவர்கள் மிக நெருங்கிய குடும்ப உறவினராக இருந்தால், பிள்ளைகள் தாம் பெரியவர்களாக வருமட்டும் இவ்வாறு பாலியல் ரீதியில் பலிக்கடாக்களாக்கப்பட்டதை வெளியில் கூற மாட்டார்கள். அநேக பிள்ளைகள் வளர்ந்த பின்னரும் வெளியில் சொல்வதில்லை. துஷ்பிரயோகம் செய்பவர்கள் இதனை வெளியில் சொன்னால் அவமானமாகும் என்ற கருத்தை பிள்ளையின் உள்ளத்தில் விதைத்து விடுகின்றனர்.

வளர்ந்தோருக்கும் பிள்ளைகளுக்கும் இடையே உள்ள சாதாரணமான தொடர்பை பாலியல் துஷ்பிரயோகம் என்று பிள்ளைகள் வேண்டுமென்றே பொய்யாகக் குற்றம் சாட்டும் சந்தர்ப்பங்கள் மிக அரிதாகவே காணப்படுகின்றது. இவ்வாறு அரிதாக உள்ள பொய்யான குற்றச் சாட்டுக்களும் வளர்ந்தோர்களால் தமது நன்மைகளுக்காக அல்லது மற்றவர்களைப் பழிவாங்குமுகமாக தூண்டப்பட்டு கூறப்பட்டவையாகவே உள்ளன.

பொய்யான குற்றச் சாட்டுகளை விட, பாலியல் துஷ்பிரயோகத்தால் பாதிக்கப்பட்ட பிள்ளை அவ்வாறு தனக்கு நடக்கவில்லை என பொய்யாக மறுத்தல் அல்லது தான் துஷ்பிரயோகம் செய்யப்பட்டதாக இன்னொருவருக்கு கூறிய பின் மறுத்தல் மிக பொதுவானதாகக் காணப்படுகின்றது.

துஷ்பிரயோகம் செய்யப்பட்ட பின் அவ்வாறு நடக்கவில்லை என மறுத்தல் இயல்பானது. இதற்கு தன்னை நம்ப மாட்டார்கள் அல்லது இவ்வாறு வெளியில் சொல்லுதல் குடும்பத்தில் பாதகமான விளைவை ஏற்படுத்தும் என அஞ்சுவது காரணமாகும். அத்துடன் துஷ்பிரயோகம் செய்தவருக்கு அதிக அதிகாரம் இருக்கின்றது என பிள்ளை எண்ணுவதும் காரணமாகும்.

நீதிமன்றில் சாட்சி கொடுப்பதற்கு முன் பிள்ளை நிபுணத்துவ ஆதரவைப் பெறும் போது, அவர்களது வாக்குமூலங்கள், மிகவும் தெளிவாக இருப்பதுடன், நடந்த சம்பவங்கள் குறித்து நேரம், விபரத்தை தெளிவாக கூறக் கூடியதாகவும் இருக்கும். இத்தகைய ஆதரவைப் (Support) பெற்ற பிள்ளைக்கு இந்த அனுபவம் அதிக திகைப்பை (Stress) கொடுக்காது.

பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பான பிரதிபலிப்பு பிள்ளைக்கு பிள்ளை வேறுபடும். பிள்ளையை நம்புவதும், குடும்ப ஆதரவு இருத்தலும் பாலியல் துஷ்பிரயோகத்தின் சில துன்பகரமான விளைவுகளை எதிர் நோக்கவும் குறைக்கவும் உதவும்.

சிறுவயதில் பாலியல் ரீதியில் துன்புறுத்தப்பட்ட வயது வந்த பெண்கள், அவ்வாறு பாதிக்கப்படாத பெண்களை விட உடலியல், உளவியல் பிரச்சனைகளால் துன்பப்படுபவர்களாக இருக்கின்றனர். இவர்கள் இலகுவாக உடைந்து போகக் கூடியவர்களாக இருப்பதால், இத்தகைய பெண்களை தப்புக் கணக்கு போடக் கூடிய ஆண்கள் குறிவைக்கலாம். சிறுவர்களாக இருக்கும்போது உடலியல் ரீதியிலும், உணர்வு ரீதியிலும் பாதிக்கப்பட்ட பிள்ளைகள் வளர்ந்தோராகும் போது. அதிக ஆரோக்கிய பிரச்சனைகளை கொண்டிருப்பதோடு மேலும் துஷ்பிரயோகங்களுக்கு உட்படக் கூடியவர்களாக இருக்கின்றனர்.

ஆண்கள், சிறுவர்களாக இருக்கும் போது ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்பட்டிருந்தால், மன அழுத்தம் (Depression), ஆர்வக் கோளாறு (Anxiety), தற்கொலை எண்ணங்கள், தற்கொலை நடத்தைகள் போன்றவற்றால் துன்பப்படலாம். சிறுவயதில் பல தடவை பாலியல் ரீதியாக பாதிக்கப்பட்டவர்கள் வளர்ந்தோராகும்போது மனநலப் பாதிப்பைக் கொண்டிருப்பதுடன் சிறுவர்கள் மேல் பாலியல் ரீதியான ஆர்வத்தைக் கொண்டிருக்கவும் அவர்களுடன் பாலியல் தொடர்புகளைக் கொண்டிருக்கவும் அதிக வாய்ப்புகள் உள்ளன.

## துஷ்பிரயோகம் செய்பவர்கள்

குற்றம் புரிபவர்களில் அதிகமானோர் பாதிக்கப்பட்டவர்களுக்கு அந்நியரல்ல. அதிகமான சந்தர்ப்பங்களில் அவர்கள் தாம் பாதித்தவர்களுக்கு நன்கு தெரிந்தவர்களே. கிட்டத்தட்ட 25% மான குற்றவாளிகள் வளரிளம் (டீன் ஏஜ்) பருவத்தினரே (Adolescents).

குற்றம் புரிந்ததாக அறிவிக்கப்படுபவர்கள் அதிகமாக ஆண்களே.

பாலியல் நடவடிக்கையை ஆரம்பித்தவர் குற்றம் புரிந்தவரே. பிள்ளை என்ன செய்தாலும், குற்றம் புரிபவரே துஷ்பிரயோகத்திற்கு பொறுப்பாளியாவார்.

அண்மைய கனடிய ஆய்வின்படி 40%இற்கு மேற்பட்ட குற்றவாளிகள் சிறுவர்களாக இருந்த போது பாலியல் ரீதியல் பாதிக்கப்பட்டவர்களே. தாம் முதலில் பாதிக்கப்பட்ட போது தமக்கிருந்த வயதை ஒத்தவர்களாக இருப்பவர்களை இவர்கள் தாம் குற்றம் புரிவதற்காக தெரிந்தெடுக்கிறார்கள்.

குற்றம் புரிபவர் பிள்ளையை அணுகுவதற்கு எண்ணற்ற உபாயங்களைப் பயன்படுத்துவதுடன் அவர்களது மௌனத்தையும் சாதகமாக்கிக் கொள்கிறார்கள். இந்த தந்திரங்களுள் பயமுறுத்தல், உடல் பலம், இலஞ்சம், உளவியல் பலவந்தம் என்பன அடங்கும்.

சில குற்றவாளிகள் 70க்கு மேற்பட்ட குற்றங்களைப் புரியும் வரை கண்டு பிடிக்கப்படுவதில்லை. இவ்வாறு பாதிக்கப்படுபவர்கள் கூடுதலாக ஆண்பிள்ளைகளாகவே இருக்கின்றனர்.

இத்தகைய குற்றவாளிகள் சாதாரண மக்களைப் போலவே கல்வி, மதம், தொழில், அறிவு, மனநல நிலைமை ஆகியவற்றைக் கொண்டிருப்பர். அத்துடன் எல்லா வயது, இன கலாச்சார சமூகங்கள், சமூக வகுப்புகளிலும் இத்தகைய குற்றவாளிகள் காணப்படுவர்.

அநேகமான பாலியல் துஷ்பிரயோகங்களானவை பிள்ளைக்கும் துஷ்பிரயோகம் செய்பவருக்குமிடையேயான நீண்ட கால தொடர்பின் அடிப்படையில் ஏற்படுகின்றது. இதனால் பிள்ளையின் விருப்பங்கள், பயம் ஆகியவற்றை நன்கு அவர் அறிந்திருப்பதனால் பிள்ளையை வசப்படுத்துவதற்கு அவற்றைப் பயன்படுத்துவதற்கு குற்றவாளிக்கு சந்தர்ப்பம் கிடைக்கின்றது. உதாரணமாக, ஓர் குற்றம் புரியும் தகப்பன் தனது பிள்ளையின் ஒத்துழைப்பையும் பிள்ளையை மௌனமாக இருக்க வைப்பதற்கும் அதிக பரிசுப் பொருட்களையும் சலுகைகளையும் கொடுக்கலாம்.

## சிறுவர் பற்றிய துஷ்பிரயோகத்தை அறிவித்தல்

பாலியல் துஷ்பிரயோகம் நடைபெறுகின்றது என நியாயமான முறையில் அறிந்தால் உடனடியாக அது தொடர்பான நிறுவனங்கட்கு அறிவிக்க வேண்டும். பிள்ளைகள் துஷ்பிரயோகம் செய்யப்பட்டிருந்தால், இதனை நீங்கள் அறிந்தால் உங்கள் பெயரைக் கூறாது உரிய அதிகாரிகளிடம் அறிவிக்கலாம்.

நீங்கள் கூறுவது பிள்ளையின் வாழ்க்கையில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தாது என அலட்சியமாக இருக்க வேண்டாம்.

சிறுவர் நலன்புரி நிலையங்கள், பொலிஸ், சமூக சேவை நிறுவனங்கள், வைத்தியசாலை, மனநல மையம் அல்லது சிறுவர்களுக்கும் குடும்பங்களுக்கும் ஆலோசனை வழங்கும் ஏனைய சமூக நிறுவனங்கட்கு அறிவிக்கலாம். எல்லா சந்தர்ப்பங்களிலும், இவ்வாறு அறிவிப்பவர் பழிவாங்கும் எண்ணத்துடன் அல்லது பொய்யான தகவலைக் கொடாவிடின் எந்த விதமான சட்ட நடவடிக்கையில் இருந்தும் பாதுகாக்கப்படுவார்.

இவ் எல்லா சமூக நிறுவனங்கட்கும் அவசர தொலைபேசி இலக்கங்கள் உண்டு. இது உங்கள் உள்ளூர் தொலைபேசி புத்தகத்தின்

32ம் பக்கம் பார்க்க...


Thinking of Buying or Selling Real Estate
வீடு, வியாபாரம் வாங்க, விற்க....
RED CARPET Royal Realty Ltd., Brokerage
INDEPENDENTLY OWNED AND OPERATED
Real Estate Service
Join the Winning Team for your Success !
Bus: 416-284-5555 (24Hrs.)
880 Ellesmere Road, Suite 204, Toronto, ON, M1P 2W6
33 Years in Real Estate
New & Experienced Agents are Welcome To...
• Regular Sales Training from Experts • Referral leads
21 Years in Real Estate
Joan Miller
Broker of Record
Selva Selvadurai**
Chandrakumar sornalingam**
Ranjan Francis Xavier*
Sajan Shanmuganathan*
Richard Napase Sison**
Killivalavan Chelliah*
Ragu Paramsothy*
Nathan Gurunathan**
Karu Kandiah
Broker/ President
Middlefield/Finch
$174,900
2 Bedrooms, 1 Washroom Bright Corner Unit With Many Upgrades, Split Bedrooms, Facing The Garden
Morningside/Sewells
$229,000
3+1 Bedrooms, 4 Washrooms Fabulous And Spacious 3 Bedroom Townhouse With Walkout Basement
Eglinton/Victoria Park
$297,000
2 Bedrooms, 2 Washrooms Bring On The Buyers. Move In To This Gorgeous Unit With 2 Bedrooms
Birchmount/Danforth
$309,900
3+2 Bedrooms, 3 Washrooms Beautiful And Well-Maintained Home. Move-In Condition
Bathurst/Steeles
$179,900
2 Bedroom, 1 Washroom Nice Two Level Unit In An Excellent Location. Don't Let This Pass You By. Ttc At Door Steps
Eglinton / Kennedy
$339,900
3 Bedrooms,3 Washrooms A Beautiful Open Concept Home In A Sought After Area. Close To Sq.One And Hwy 403
9th/16th
$349,900
3+1 Bedrooms, 3 Washrooms Well Loved Family Home On A Corner Lot**Lots Of Lights**Many Upgrades Over The Last 4 Years
Stains/Morningside
$399,000
4 Bedrooms, 3 Washrooms Freshly Painted Spacious Good Size Family Home.Close To Schools Park & Shopping Centre
Kennedy/S Of Eglinton
$299,900
3+2 Bedrooms, 2 Washrooms Motivated Seller. Totally Renovated Main Floor! Ready To Move In! Great Investment
Whitby
$269,000
3+1 Bedrooms, 3 Washrooms Excellent Location, Sought After Location Of Whitby, Backing On To Park
Sewells/Sheppard
$249,000
3+1 Bedrooms, 2 Washrooms Very Gorgeous,Clean & Well-Kept Detached 2-Storey Home With Finished Basement
Markham / Major Mac
Call For Price!
Commercial/Retail An Excellent Location To Run Your Own Business Or Invest In.
Pharmacy/Finch
$235,000
3+1 Bedrooms, 3 Washrooms Lovely & Bright Home, In High Demand Area, Walking Distance To Sir John A. Macdonald C.I.
Morningside/Warnsworth
$313,000
4 Bedrooms, 3 Washrooms High Demand West Hills Area. Freshly Painted, New Furnace(2007), New Ac(2007)
Kingston/Guildwood
$163,000
3 Bedrooms, 2 Washrooms Spacious Layout. Just Steps To Guildwood Go, Ttc, Schools,Parks, Shopping Center
RED CARPET Royal Realty Ltd., Brokerage
Real Estate Service
HOUSE SWEEPSTAKES
Enter for a Chance to Win a FREE House
No Purchase Necessary
CALL OUR OFFICE FOR DETAILS & YOUR NO OBLIGATION BALLOT...
Bus: 416-284-5555
880 Ellesmere Road, Suite 204, Toronto, ON, M1P 2W6
** Broker * Sales Representative
Prapagharan Jeganathan*
Charles Deva*
Neelan Thambiah*
Joy Emmanuel*
Meera Ram*
Sabapathy Ganeshalingam*
Allan Dayta Abellanosa*
Kannan Kankesu**
Ananthi Selvasivam*
Balamohan Rajaratnam*
Vithiyatharan Thillainayagam*
Ken Seyon*
Ashok Ragupathy*
Jeya Artputharajah*
Shiva Shivaram*
Umananthini Rajendram*
Amar Qadeer*
Yen Ly-Chan*
Saeed Ahmed Qureshi*
Ken Muruganandhan*
Mathy Mahendrarajah*
Babar Muhmmad Arifkhan*
Ponniah Balayogeswaran*
Gabriel (Roshan) Thavaratnam*
Saravanan Thangarasu*

# வாழ்க்கை சுவர்க்கமாகுது இனிய இல்லமொன்றில்...

## Elaguppllai (Mike) Srinathan B.Sc


**Sales Representative**

**Dir: 416-276-1225 Off: 905-470-9800**

**Email: esrinathan@trebnet.com**




**Mccowan And Eglinton**




**$169,900**
Condo Apt, Bed rooms 2, Washrooms 2
Very Well Maintained Upgraded Building Easy Access To Go, Ttc And Subway

**Markham/Lawrence**



**$279,900**
Detached Bungalow Bed rooms 3+2 , Washrooms 2
Large Bungalow House With Basement Apartment And Separate Entrance.

**Brimley/Denison**



**$284,000**
Link 2 Story Bed rooms 3 , Washrooms 2
Three Bedroom Home In High Demand Area, Close To Schools Childsafe Area,

**Neilson/Finch**



**$286,000**
Semi DFetached 2 story, Bed rooms 4+1, Washrooms 4
Great Family Neighbourhood Steps To Park, Ttc, Schools All Close By. Entrance To Home

**Steeles/Markham**



**$299,900**
Link 2 Story, Bedrooms 3, Washrooms 3 ,
Walk-Out To Yard;Walk To Public Transit,Schools And Shopping.

**Markham Rd/Elson**




**$334,000**
Semi Detached 2 Story, Bedrooms 3 Wasroom 3,
Well Kept Home With Lots Of Upgrades rooms, Close To School, Shopping, Main

**Morningside/FinchAve**



**$319, 900**
Town House 2 Story, Bed rooms 3+1 Washrooms 3,
Close To The Front Entrance Of The House. Large Finished Basement

**Markham/Steeles**




**$334,900**
Link 2 Story, Bed rooms 3 Washrooms 3,
Very Much Upgraded,Double Door Entry,Close To No Frills,Wal-Mart

**Markham Rd / Bur Oak**



**$344,900**
Detached 2 Story, Bed rooms 3 Washrooms 3
Beautifully Maintained. Freshly PaintedSchools! 24 Hrs Sobey,Schools & Public

**Brimley/Denison**



**$345,000**
Detached 2 story , Bed rooms 4+1 Washrooms 4,
Finished Basement Close To Schools, Ttc, Plazas And All Amenities.

**9th Line/South Of Highway 7**



**$365,900**
Detached 2 Story, Bedrooms 3 Washrooms 3, Hardwood Floor In Hallway,Close To Highway 7 & 407, Double Car Garage

**Middlefield/Denison-**



**$379,900**
Link 2 Storys, Bed rooms 4, Washrooms 3, Approximately 2050 Sq Feet!* *Direct Access From Garage To Home* *Close To School,

**Markham Rd/Denison**



**$385,900**
Link 2 Story, Bedrooms 3+1, Washrooms 4,
TDouble Car Garage And Large Driveway! Close To All Amenities, Schools, Hwy!

**Markham/Steeles**



**$414,900**
Detached 2 Story, Bedrooms 4 Washrooms 3
All Bathrooms Tiled Up To Ceiling. Huge Basement Windows. Great Location.

**9th Line/14th Ave**



**$449,900**
Detached 2 Story, Bedrooms 4, Washroom 3
Brand New Never Lived In Beautiful 4 Bedromm All Brick Home On Corner Lot!!

**9th Line/14th Ave**



**$469,000**
Detached 2 Story, Bedrooms 5, Washrooms 5, Better Than New!! 5 Bedrooms Stone/Brick Detached Home- Mins To Hwy 407/Public Tran-

**E.9th Line/N.14th Ave**



**$499,900**
Detached 2 Story, Bedrooms 4 Washrooms 3, Approx 2750 Sf, Close To Public Transit/Schools/Shops/Restaurant/Church/Comm. Ctr/Park

**9th Line/14 Avenue**



**$1,290,000**
Detached 2 Story, Bedrooms 5+1 Washrooms 7Beautiful 6 Yrs Old Custom Built Home, Ravine Lot And Abutting To Conservation Area

**Queen Mary/Sandalwood**




**$299,000**
Detached 2 Story Bed rooms3,Was rooms 3
Friendly NeighbourhoodClose To School, Transit, Shopping

**9th Line/16th Ave**



**$299,700**
Town House Bed rooms 3, Washrooms 3, New Mattamy Home In Cornell Community, Close To Shops, Schools & Transit And Parks

**Sale Of Business**



**$1,400,000 for sale**
Sale Of Business With Property Gas Stations Self Serve Now Look Petro Canada Gas Station With Convenience

**Commercial/Retail**



**$799,900**
Heart Of Richmond Hill. Well Known Sherton Parkway Mall Restaurant Unit.Own Almost 3000 Square Feet

**Sales of Business**



**$625,000**
Sale Of Business WithProperty Gas Stations High Traffic Highway Location.Sale Includes Land,5 Bay Auto Mec

**RE/MAX**
**Realtron Realty Inc. Brokerage**
Independently Owned and Operated
7800 Woodbine Ave. Penthouse, Markham,ON. L3R 2N7

**'I can also assist you with: Mortgage Financing Home Inspection, Real Estate Lawyer'**

# பேச்சுப் போட்டி



அ.முத்துலிங்கம்

சிறுவயதில் அம்மாவுடன் வெளியே போவதற்கு எனக்கு பிடிக்கும். ஒருநாள் அம்மா என்னைக் கூட்டிக்கொண்டு பெரியகடைக்கு வெண்கலப்பானை ஒன்று வாங்கவென்று போனார். நாலு கடைகள் ஏறி இறங்கி அவரின் மனதில் இருந்த ஏதோ ஒரு பானையை தேடி அலைந்து கடைசியில் ஒரு கடையில் அதைக் கண்டுபிடித்தார். அந்தப் பானை முப்பது நாற்பது பேருக்கு சமைக்க ஏற்றதாக இருக்கும் என்று கடைக்காரன் அபிப்பிராயப்பட்டான். அம்மா அதை ஏற்றுக்கொள்ளாமல் அதேபோல இன்னும் வேறு பானைகளையும் எடை பார்ப்பதுபோல தூக்கித்தூக்கி ஆராய்ந்தார். பானையின் உள்ளேயும், வெளியேயும், விளிம்புகளையும் தொட்டுத் தடவி உறுதி செய்தார், டங் டங் என்று தட்டிப் பார்த்தார். அப்படியும் திருப்தி வராமல் பானையை தூக்கி சூரியனுக்கு எதிராகப் பிடித்து முகத்தை உள்ளுக்கு விட்டு ஓட்டை ஏதாவது தெரிகிறதா என்று சோதித்தார்.

அதன் பிறகுதான் பேரம் ஆரம்பமானது. கடைக்காரன் ஒரு விலை சொல்ல, அம்மா இன்னொரு விலை கேட்க பேரம் படியவில்லை. இறுதியில் அம்மா கோபித்துக்கொண்டு வெளியே புறப்பட, கடைக்காரன் மறுபடியும் கூப்பிட்டான். இப்படி மாறி மாறி நாலு தரம் வெளிநடப்பு செய்தபிறகு அம்மாவும் அவனும் ஒரு விலையில் சந்தித்துக் கொண்டார்கள். அம்மா முந்தானையில் இருந்த காசை பிரித்து கொடுத்துவிட்டு, பானையை கையிலே வாங்கியபோது அவருடைய முகத்து மகிழ்ச்சி கண்கொள்ளாததாக இருந்தது.

ஒரு வெண்கலப்பானை வாங்குவதற்குகூட எவ்வளவு வாக்கு சாதுர்யம் தேவைப்படுகிறது என்று நான் அம்மாவை வியப்புடன் பார்த்தேன். அம்மா இப்படி சந்தோசமாக இருப்பதும் அபூர்வம். நான் சொல்லிவிட முடிவு செய்தேன். ‘அம்மா, பள்ளிக்கூடத்தில் என்னை பேச்சுப் போட்டிக்கு தெரிவு செய்திருக்கிறார்கள்’ என்றேன். ‘அப்படியா, அப்படியா’ என்று அம்மா நம்பமுடியாமல் கேட்டார். அவர் முகத்தில் இருந்த மகிழ்ச்சி இரண்டு மடங்கானது. பானையை இறக்கி நடுவீதியில் வைத்துவிட்டு நாரியில் இரண்டு கைகளையும் ஊன்றி நின்று நிமிர்ந்து பார்த்தார். யாழ்ப்பாணத்திலேயே மிகப் பிரகாசமான சூரியன் அப்போது காய்ந்துகொண்டிருந்தான். சிறிது நேரம் மௌனமாக இளைப்பாறிவிட்டு என் கன்னத்தை தொட்டு ‘சரி, ஆவியுலகத்துடன் பேசுவதை இன்றுடன் நிறுத்து. நீ பேச்சுப்போட்டியில் முதலாவதாய் வரவேண்டும். நேரத்தை வீணாக்கக்கூடாது’ என்றார். நான் சந்தோசப்படுவதற்காக திறந்த வாயை இப்பொழுது துக்கப்படுவதற்காக மாற்றினேன். ஒரே வசனத்தில் அதி மகிழ்ச்சியான ஒரு செய்தியையும் ஆகத் துக்கம் தரும் ஒரு செய்தியையும் கொடுப்பதற்கு அம்மா ஒருவராலேயே முடியும்.

அம்மா சொன்ன ஆவியுலக விருத்தாந்தம் இதுதான். பக்கத்து வீட்டில் ஆவியுடன் பேசுவார்கள். எங்கள் கிராமத்திலும், இன்னும் அயல் கிராமங்களில் இருந்தும் சனங்கள் இறந்தவர்களுடன் பேச அங்கே வருவார்கள். நாலு பக்கமும் சட்டம்போட்ட ஒரு சதுரக் கண்ணாடியில் சுற்றிவர A, B, C, D என்று எல்லா ஆங்கில எழுத்துக்களும் எழுதியிருக்கும். கண்ணாடி நடுவிலே ஒரு மைப்புட்டியின் மூடியை கவிழ்த்து வைத்து, ஒரு சிறுவனும் சிறுமியும் எதிரெதிராக உட்கார்ந்து மூடியின் மேல் இரண்டு விரல்களால் தொட்டுக்கொண்டிருப்பார்கள். அந்த மூடி தானாகவே அசைந்து ஒவ்வொரு எழுத்தாக தொட்டுச் செல்லும். அந்த எழுத்துக்களை குறித்து வைத்து ஆவிகள் என்ன பேசுகின்றன என்பதைச் சொல்வார்கள்.

> “சைக்கிள் மெதுவாக சென்றபடியால் டைனமோவும் மெதுவாகவே சுழன்று மங்கலான வெளிச்சத்தை கொடுத்தது. கறுப்பு வானமும், நீண்ட வீதியும், மழையில் நனைந்து கூனிப்போன மாஸ்ரரின் முதுகும், வெட்டவெளியில் தனியாக நின்ற பனைமரம் ஒன்று இடி விழுந்து எரிந்துகொண்டிருந்ததும் என்னுடைய அன்றைய மன நிலையில் அப்படியே பதிந்து போனது.”

வீட்டுக்காரருடைய மகள் தனலட்சுமிதான் மீடியம். நான்தான் எதிர் மீடியம். ஆணும் பெண்ணும் எதிரெதிராக அமர்ந்தால்தான் மீடியம் முழு விசையுடன் செயல்படுமாம். யாராவது ஆவியுடன் பேசவந்தால் பக்கத்து வீட்டுக்காரர் எனக்கு ஆளனுப்புவார். நானும் சந்தோசமாய் சென்று மீடியம் வேலையை செய்துவிட்டு திரும்புவேன். ஒரு நாளாவது அம்மா எந்த விதமான எதிர்ப்பும் சொல்லவில்லை. ஆனால் அவருடைய மனது சந்தோசமாக இல்லை என்பது எனக்கு அன்றைக்குத்தான் தெரியவந்தது.

ஆவியுடன் பேசி முடிந்ததும் எனக்கும் தனலட்சுமிக்கும் ஏதாவது தின்பதற்கு தருவார்கள். ஆவிகள் எங்கள் உடம்பு வழியாக இறங்குவதால் எங்களுக்கு களைப்பாக இருக்கும் என்று சொல்லி இந்த உபசாரம் நடக்கும். அதை நானோ தனலட்சுமியோ எந்தக் காலத்திலும் மறுத்தது கிடையாது.

அம்மா தடையுத்தரவு போட்ட பிறகு அடுத்த வீட்டிலிருந்து யாராவது என்னை மீடியம் வேலைக்கு தேடிவந்தால் அம்மாவே பதில் சொல்லி அனுப்பிவிடுவார். ‘அங்கே போய்ச் சொல்லுங்கோ அவன் பேச்சுப்போட்டிக்கு பேர் கொடுத்திருக்கிறான் என்று. இரவிரவாக அவன் கண்விழிச்சு பேச்சை பாடமாக்க வேணும். இன்றைக்கு வர ஏலாது. இந்தப் போட்டி முடியும் வரை அவனை கரைச்சல் பண்ண வேண்டாம்.’ இப்படி இரண்டு மூன்று தடவை நடந்தபிறகு அவர்கள் வேறு ஏற்பாடு செய்து கொண்டார்கள். ஆவியுலகத்துடன் எனக்கிருந்த தொடர்பு இப்படித்தான் திடீரென்று துண்டிக்கப்பட்டது.

பத்துப் பேர் கலந்துகொண்ட எங்கள் பள்ளிக்கூட பேச்சுப் போட்டியில் நான் முதலாவதாக வந்திருந்தேன். அடுத்த சுற்றுக்கு என்னை தயார் செய்யும்படி சரித்திரப் பாடம் கற்பிக்கும் வாத்தியாரை தலைமையாசிரியர் ஏற்பாடு செய்திருந்தார். வடமாகாணத்தில் நடக்கப்போகும் போட்டியில் 20 பள்ளிக்கூடங்களுக்கு மேலாக கலந்துகொள்ளுமாம். எனக்கு பயம் பிடிக்கத் தொடங்கியது. ஆவிகள் தினமும் என் உடம்பில் இறங்கி வந்தபோது ஏற்படாத நடுக்கம் இப்போது ஏற்பட்டது.

நான் தலைமையாசிரியர் சொன்ன அறைக்கு முன் நின்றேன். சரியாக ஒரு நிமிடம் எனக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. கதவைத் தட்டுவதா அல்லது கூப்பிடுவதா அல்லது தள்ளித் திறந்துகொண்டு உள்ளே போவதா? என்னுடைய 12 வயது வரைக்கும் நான் ஒரு கைப்பிடி வைத்த கதவையோ, குமிழ் வைத்த கதவையோ கண்டதில்லை. எல்லாக் கதவுகளும் எங்கள் ஊர் தச்சு வேலைக்காரர்கள் செய்தவைதான். தள்ளித்தான் திறக்கவேண்டும். திறப்பை துளையினுள் நுழைத்து இழுத்துத்தான் கதவைப் பூட்டவேண்டும்.

கடைசியில் ஒருவாறு தைரியத்தை வரவழைத்துக்கொண்டு கதவை தள்ளித் திறந்து உள்ளே நுழைந்தேன். எல்லாம் என் பேச்சு விசயமாகத்தான். மாஸ்ரர் ‘வாவா, உன்னைத்தான் பார்த்துக்கொண்டு இருந்தனான்’ என்றார். கறுப்பாக சிநேகமாக வெள்ளைப் பற்களால் சிரித்தார். அவர் என்னிலும் பார்க்க பெரிய ஆயத்தத்துடனும், என்னிலும் பார்க்க அதிக உற்சாகத்துடனும் இருந்தது என்னை கொஞ்சம் திடுக்கிட வைத்தது. ‘சேர், இதுதான் என்ரை பேச்சு’ என்று நான் கொண்டுபோன தாள்களைக் கொடுத்தேன். அவர் அதைக் கையில் எடுக்கவில்லை. ‘நான் உன்னுடைய பேச்சில் ஒரு வசனத்தையும் மாற்றமாட்டேன். அது அப்படியே இருக்கட்டும். நல்ல பேச்சு. புதிசாக எழுதி பாடமாக்க நேரமும் போதாது’ என்றார்.

‘ஓம் சேர்.’


‘சரி. நான் உன்னுடைய சாதகத்தைப் பார்த்தனான். உனக்கு புதன் ஏழாம் இடத்திலே இருக்கு. நல்லாய்ப் படிப்பு வரும், பிரசங்கமும் செய்வாய். கிரேக்க புராணத்தில் புதன்தான் பேச்சுக்கு அதிபதி. திருடர்களின் கடவுளும் அவன்தான். திருடுவது என்றால் என்ன, தந்திரம் செய்வது. நான் உனக்கு அதைத் தான் சொல்லித் தரப்போறன். எப்படி நிற்பது, எப்படி உச்சரிப்பது, எங்கே குரலை உயர்த்துவது, எங்கே தாழ்த்துவது, எப்பொழுது இடைவெளி விடுவது இப்படி என்றார். எனக்கு மகிழ்ச்சியாக இருந்தது, ஏனென்றால் இன்னொரு முறை பேச்சை எழுதி மனப்பாடம் செய்யச் சொல்லப்போகிறார் என்று நான் அடிவயிற்றில் கலங்கிக் கொண்டிருந்தேன்.

பயிற்சி தொடங்கியது. ஒரு வாரகாலமாக அவர் சொன்ன நேரத்துக்கு போய் அவரிடம் பல நுட்பங்களைக் கற்றுக்கொண்டேன். ‘மகாத்மா காந்தி 1869ம் ஆண்டு போர்பந்தர் என்னும் ஊரில் பிறந்தார்.’ இதுதான் முதல் வசனம். ‘மகாத்மா’ அல்ல ‘மஹாத்மா’ என்று திருத்தினார். ‘தென்னாப்பிரிக்காவில்’ என்று தொடங்கும்போது குரலை நெகிழ்த்தி இரக்கத்தை கொண்டுவரவேண்டும் என்றார். ‘வெள்ளையனே வெளியேறு’ என்ற வாசகம் வரும்போது ஆவேசமாக கைகளை தலைக்கு மேலே தூக்கி காட்டவேண்டும். ‘அன்பே தகழியாகவும், அஹிம்சையே நெய்யாகவும், என்புருக்கும் தியாகமே இடுதிரியாகவும்’ என்று நான் ஏதோ புத்தகத்திலிருந்து திருடிச் சேர்த்த வசனத்தின்போது கையை நெஞ்சிலே வைத்து சபையோரை காருண்யம் ததும்பும் கண்களால் கரைக்கவேண்டும் என்றெல்லாம் சொல்லித் தந்தார். நான் ஒரு முதல்தர மாணவனாக இருந்து மாஸ்ரர் சொன்ன ஒவ்வொன்றையும் வரிக்கு வரி, சொல்லுக்கு சொல் கடைப்பிடித்தேன்.

பேச்சுப்போட்டி நடுவர்கள் மேடையில் வீற்றிருந்தார்கள். பல மைல் தூரத்திலிருந்து நானும் மாஸ்ரரும் அப்போதுதான் இளைக்க களைக்க வந்து சேர்ந்தோம். வயதுக்கு தக்கமாதிரி பேச்சுப் போட்டியாளர்களை வகைப்படுத்திய முதல் சுற்றுப் பேச்சில் நான் தேறிவிட்டேன். இரண்டாவது சுற்றில் என்னுடன் போட்டியிடுபவர்களுடைய பேச்சை கேட்க விருப்பப்பட்டேன். மாஸ்ரரும் சரி என்றார்.

நான் முன்பு பார்த்திராத ஒரு கறுப்பு மாணவன், என்னிலும் உயரத்தில் சின்னதாகத்

38ம் பக்கம் பார்க்க...

VEEDU REALTY INC.
BROKERAGE

1345 Morningside Ave., Unit #8
Toronto, ON, M1B 5K3
Tel: 416.759.6000
Fax: 416.759.6005

• Building permit
• Zoning info.
• Site plan approval
• Rezoning approval

Gop Kalaieswaraan
Master in Architecture
Sales Representative
(Residential, Commercial, Institutional)
Dir: 416.723.7467



# சிறுவர் பாலியல்...

28ம் பக்கத் தொடர்ச்சி...

முதற்பக்கங்களில் குறிப்பிடப்பட்டிருக்கும்.

உதவி தேவைப்படும் பிள்ளைகள் அணுக வேண்டிய இலக்கமும் இதில் குறிப்பிடப்பட்டிருக்கும். இவ் இலக்கம் **1-800-668-6868** ஆகும்.

## சிறுவர் பாலியல் துஷ்பிரயோகத்தைத் தடுக்க என்ன செய்யலாம்?

சிறுவர் பாலியல் துஷ்பிரயோகத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவு வழங்கும் சட்டத்தரணிகள், நீதிபதிகள், உளவியலாளர்கள், வைத்தியர்கள், சமூக சேவையாளர்கள், பொலிஸ் மற்றும் ஏனைய நிபுணர்கள் சிறப்பான பயிற்சியைப் பெறவேண்டும்.

பிள்ளைக்கு பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பான அறிவு (Knowledge), தகவல்கள் (Information) கொடுபட வேண்டும். தகாத முறையில் அவர்களைத் தொடுதல் (Inappropriate touching) போன்றவற்றை அறிவிக்கும்போது அவர்கள் இரகசியங்களை தமக்குள் வைத்திராது வெளியில் கூறுவதற்கு முனைவார்கள். பிள்ளைகள் தாம் தவறாக நடத்தப்பட்டால் அல்லது துஷ்பிரயோகம் செய்யப்பட்டால் அதனை அறிவிக்கும்போது பாதுகாப்பிற்கு எந்தவித அச்சுறுத்தலும் ஏற்படாத சூழலை எமது குடும்பங்களிலும் சமூகங்களிலும் உருவாக்க வேண்டும்.

தவறான முறையில் தொடப்படுதல் பற்றி அறிவுறுத்தப்படுவதால் பிள்ளைகள் தமது சூழலையும் தம்மைச் சுற்றியுள்ள நபர்களைப் பற்றியும் நன்கு அறிவதால், தாம் தவறாக நடத்தப்படுகிறார்கள் என உணரக்கூடியவர்களாக இருப்பதுடன், தேவைப்படுமிடத்து எங்கு உதவி பெறவேண்டும் என அறிவுறுத்தப்படுவதால் எவ்விதமான துன்புறுத்தலாலும் இத்தகைய பிள்ளைகள் பாதிக்கப்படுவது மிக அரிதாகும்.

பாலியல் ரீதியில் துன்புறுத்தப்படும் பிள்ளைகள் மீண்டும் மீண்டும் பாதிக்கப்படக் கூடிய சந்தர்ப்பங்கள் அதிகமாக இருப்பதால் அதனை எவ்வாறு தவிர்ப்பது என்பதைப் பற்றிய கல்வியூட்டுதல் முக்கியமாகும்.

குடும்பத்தினுள் ஏற்படக் கூடிய இத்தகைய பாலியல் வன்முறைகளைத் தவிர்ப்பதற்கு, அல்லது தடுப்பதற்கு தேவையான தகவல்களைப் பெற அல்லது இந்நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளுவதற்கான முகவரி, தொலைபேசி இலக்கங்கள் இங்கு தரப்பட்டுள்ளது.

**National Clearinghouse on Family Violence**
**Address Locator: 1909D1**
**Family Violence Prevention Unit**
**Public Health Agency of Canada**
**Health Canada**
**Ottawa, Ontario K1A 1B4**

**தொலைபேசி: (613) 957-2938**
**அல்லது toll-free number: 1-800-267-1291**
**தொலைநகல்: (613) 941-8930**
**தொலைநகல் இணைப்பு: (613) 941-7285**
**அல்லது toll-free: 1-888-267-1233**

## சிறுவர் பாலியல் துஷ்பிரயோகமும் சட்டங்களும்

- குற்றவியல் கோவையின் பிரிவு 151 இன்படி ஓர் பாலியல் நடவடிக்கையை அனுமதிப்பதற்கான சட்டரீதியான வயது 14 வருடங்களாகும்.
- ஓர் பாலியல் நோக்கத்திற்காக நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ உடலின் ஓர் பாகத்தாலோ அல்லது ஓர் பொருளாலோ, 14 வயதிற்கு உட்பட்ட நபரின் எந்த ஒரு பாகத்தையும் நேரடியாகவோ மறைமுகமாகவோ தொட்டால் அது சட்டத்தை மீறும் குற்றம் என்பதுடன் 10 வருடங்கள் அல்லது குறைந்த சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டிய குற்றமாக கருதப்படும்.
- ஒரு பராயமடையாதவரை பாலியல் ரீதியில் பயன்படுத்துவது, துஷ்பிரயோகம் செய்வது பிரிவு 153 இனால் கடுமையாக தடைசெய்யப்பட்டதாகும்.

ஒரு இளம் நபரை பராமரிக்கும் பொறுப்புடைய எந்த நபரும்

**a)** இளம் நபரின் உடலின் எந்த ஒரு பகுதியையும் நேரடியாகவோ மறைமுகமாகவோ தமது உடலின் எந்த ஒரு பகுதியாலோ அல்லது பொருளாலோ தொட்டால் அல்லது,

**b)** ஓர் பாலியல் நோக்கத்திற்காக, உடலின் எந்த ஒரு பாகத்தாலோ அல்லது பொருளாலோ நேரடியாகவோ, மறைமுகமாகவோ, தனது உடலையோ அல்லது வேறொருவரின் உடலையோ பாலியல் நோக்கத்திற்காக தொடும்படி அழைத்தல், ஆலோசனை கூறல் அல்லது அவ்வாறு தொடும்படி தூண்டுதல் ஓர் தண்டனைக்குரிய குற்றமாகும். இதனால் 5 வருடத்திற்கு மேற்படாத தண்டனையை



அனுபவிக்க வேண்டும் என்பதுடன், அதற்கு குறைந்த தண்டனைக்குட்படக்கூடிய குற்றத்தைப் புரிந்தவராகக் கருதப்படுவார்.

- இளம் நபர் எனக் கருதும்போது 14 வயது அல்லது அதற்கு மேற்பட்ட ஆனால் 18 வயதிற்கு உட்பட்ட நபரைக் கருதும். பராயமடையாதவரின் பெற்றோரோ அல்லது பாதுகாவலரோ அந்த நபரை எந்த ஒரு பாலியல் நடவடிக்கையிலும் ஈடுபடுத்தும் நோக்கத்துடன் பயன்படுத்துதல் பிரிவு 170இன் கீழ் குற்றமாகக் கருதப்படும். 14 வயதிற்குட்பட்ட வயதுடைய எந்த நபரினதும் பெற்றோரோ அல்லது பராமரிப்பாளரோ அந்த நபரை எந்தவொரு பாலியல் நடவடிக்கைகளிலும் ஈடுபடுத்தும் நோக்கத்துடன் செயற்பட்டால் 5 வருடத்திற்கு மேற்படாத தண்டனைக் காலத்திற்கு உட்படுவர். 14 வயதுக்குட்பட்ட நபரை இந்த நோக்கத்திற்காக அல்லது 14 வயது அல்லது அதற்கு மேற்பட்ட ஆனால் 18 வயதிற்கு உட்பட்ட நபரை இந்நோக்கத்திற்காக பயன்படுத்தல் 2 வருடத்திற்கு மேற்படாத சிறைத்தண்டனைக்கு உட்படுவார்.
- குற்றவியல் சட்டத்தின் 152 ஆவது பிரிவின்படி, பாலியல் ரீதியான தொடுகைக்கு ஓர் பராயமடையாதவரை அழைத்தால் அது தண்டனைக்குரிய குற்றமாகும்.
- பிரிவு 171 இன்படி வீட்டுரிமையாளர் ஒருவர் 18 வயதிற்கு குறைந்த நபரை பாலியல் நடவடிக்கைக்கு இட்டுச் சென்றால் குற்றமாகக் கருதப்படும் எந்த ஒரு கட்டட உரிமையாளர் அல்லது முகாமையாளர் அல்லது கட்டடங்களைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பவர் அல்லது முகாமைத்துவத்தில் உதவுபவர், 14 வயதிற்குக் குறைந்த நபரை பாலியல் நோக்கத்திற்காக அக்கட்டடத்திற்குள் வைத்திருந்தால் ஓர் தண்டனைக்குரிய குற்றத்தை செய்ததாகக் கருதப்படுவதுடன் 5 வருடத்திற்கு மேற்படாத தண்டனைக் காலத்திற்கு உட்படுவார்.
- பாதிக்கப்பட்டவர் 14 வயதிற்கு மேற்பட்ட ஆனால் 18 வயதிற்கு உட்பட்டவராகவும் இருந்தால், குற்றமிழைத்தவர் 2 வருடத்திற்கு மேற்படாத தண்டனைக் காலத்தை அனுபவிக்க வேண்டியவராவர்.

14 வயதுக்கு குறைந்த நபருக்கு எதிரான கீழ்த்தரமான நடத்தைகள் (Indecent acts) தொடர்பாக
உப பிரிவு 173 (2) இன்படி,

- எந்த ஒரு இடத்திலும் எந்த ஒரு நபரும் பாலியல் நோக்கத்திற்காக தனது பிறப்பு உறுப்புக்களை 14 வயதிற்கு உட்பட்ட நபருக்கு வெளிப்படுத்திக் காட்டுதல் தண்டனைக்குரிய குற்றமாகும்.

பிரிவு 271

- பாலியல் துன்புறுத்தலை மேற்கொள்ளும் எந்த ஒரு நபரும், தண்டனைக்குரிய குற்றவாளியாக குற்றம் சாட்டப்பட்டவர் 10 வருடத்திற்கு மேற்படாத சிறைத்தண்டனையை அனுபவிக்க வேண்டியவராவார்.
- 18 மாதத்திற்கு மேற்படாத சிறைத்தண்டனைக்கு உட்படக் கூடிய குறைந்த காலத் தண்டனைக்கு உட்படுவார்கள்.

பிரிவு 273 இன்படி

- அதிதீவிரமான பாலியல் துன்புறுத்தல் எனும்போது, பிறப்புறுக்களில் காயங்கள், ஊனமாக்குதல், தோற்றத்தை உருக்குலைத்தல், பாதிக்கப்பட்டவரின் உயிருக்கு ஆபத்தை விளைவித்தல் போன்றன அடங்கும்.

அதிதீவிரமான பாலியல் துன்புறுத்தலை மேற்கொள்ளும் ஒவ்வொரு நபரும் தண்டனைக்குரிய குற்றவாளியாகக் கருதப்படுவதுடன்

இக் குற்றத்தை செய்யும்போது துப்பாக்கி போன்ற சுடும் ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டால், ஆயுள் தண்டனையை அனுபவிப்பதற்கும், ஆகக் குறைந்தது 4 வருட தண்டனையை அனுபவிக்கவும் வேண்டியவராவர். அத்துடன், வேறு எந்தக் குற்றமிழைத்தாலும் பொதுவாக ஆயுள் தண்டனைக்கு உட்படுவார்.

குற்றவியல் கோவை 268 ஆவது பிரிவின்படி, உபபிரிவு (2) இற்குப் பின்னாக பின்வருவன சேர்த்துத் திருத்தப்பட்டுள்ளது.

அதிக தீவிரமான எனும்போது 'காயங்கள்' அல்லது 'உடலூனம்' என்பதை உள்ளடக்கியுள்ளது. இதனுள் ஆண்குறி, பெண்குறி ஆகியவற்றை வெட்டி அகற்றல், சிதைத்தல் என்பதை உள்ளடக்கும். இதில் பின்வருவன அடங்காது:

குறிப்பிட்ட நபரின் உடலாரோக்கியத்திற்காக மாகாண சட்டத்தின்படி மருத்துவம் செய்ய தகுதி பெற்ற ஒருவரால் செய்யப்படும் சத்திர சிகிச்சை அல்லது சாதாரண இனப்பெருக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள அல்லது சாதரண பாலியல் தோற்றத்தை அல்லது செயற்பாட்டை மேற்கொள்ளும் நோக்கத்துடன் செய்யப்படும் சத்திர சிகிச்சைகள் இதனுள் அடங்காது.

நபர் குறைந்தது 18 வயதாக இருப்பதுடன் எந்தவொரு உடலியல் ரீதியான காயங்களும் ஏற்படாதிருத்தல்

## சிறுவர் விபச்சாரம்

சட்ட மசோதா C-27இல் குற்றவியல் சட்டத்தில் ஏற்படுத்தப்பட்ட திருத்தத்தின்படி, கனடிய பிரஜைகள் அல்லது கனடாவில் நிரந்தர வதிவிடவாளர் வெளிநாட்டிற்கு சென்று பிள்ளைகளை பணத்திற்காகவோ அல்லது வேறு எந்த காரணத்திற்காகவோ பாலியல் ரீதியில் பாதிப்புக்கு உட்படுத்துதலானது அவர்கள் மேல் குற்றவியல் வழக்குத் தொடர வழிவகுக்கும்.

இன்னொரு நாட்டில் சிறுவர் பாலியல் தொடர்பான படங்கள் (Pornography) தொடர்பாக குற்றமிழைக்கப்பட்ட சான்றுகள் இருந்தால் இத்தகவல்கள் உள்ளூர் பொலிஸ்இற்கு கொடுக்கப்படும்.

சட்டமசோதா 27இன்படி, குற்றவியல் சட்டத்திலும் ஓர் திருத்தம் (சிறுவர் விபச்சாரம், சிறுவர் பாலியல் உல்லாசத் தொழில், குற்றத்திற்குட்படக்கூடிய தொந்தரவு, பெண்ணுறுப்பைச் சிதைத்தல்) மே மாதம் 26, 1997இல் அமுலுக்கு வந்தது. இந்த குற்றவியல் சட்ட சீர்திருத்தங்களின்படி, கனடா எல்லை கடந்த சட்டத்தை அமுல்படுத்தும் 20இற்கு மேற்பட்ட அரசுகளுடன் இணைந்துள்ளது. இதன்படி வெளிநாடுகளில் இருக்கும் போது பிள்ளைகளை பாலியல் தொழிலில் துன்புறுத்துவதற்கு எதிராக வழக்குத் தொடர்வதற்கு கனடிய அரசு அனுமதிக்கின்றது.

## பிள்ளைகளுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் பாலியல் குற்றங்கள்

1997 குற்றவியல் சட்ட திருத்தங்களின்படி, கனடிய பிரஜைகள் அல்லது நிரந்தர வதிவிடவாளர்கள் கனடாவிற்கு வெளியே சிறுவர்களுடன் விபச்சாரத்தில் ஈடுபடல், பாலியல் ரீதியிலான துஷ்பிரயோகம் செய்தல் போன்றவற்றில் ஈடுபடும்போது கனடிய அரசு வழக்குத் தொடரலாம். இந்தத் திருத்தங்களில் பிள்ளைகளின் பாலியல் உல்லாசத் தொழில், சிறுவர் விபச்சாரம் என்பவை மட்டுமல்லாது வேறு பலவற்றையும் அடக்கும். இதனுள் பாலியல் துஷ்பிரயோகம், கீழ்த்தரமான நடவடிக்கைகள், சிறுவர் பாலியல் படங்களுடன் சம்பந்தப்பட்டவை, சட்டத்தின்படி திருமணம் செய்ய முடியாத நெருங்கிய உறவினர்களிடையேயான பாலியல் உறவுகள் போன்றன அடங்கும்.

வேறு நாட்டில் உல்லாசத் தொழில் தொடர்பான பாலியல் குற்றவியல் விசாரணைகள், ஓர் அந்நிய நாட்டின் வேண்டுகோளின் பேரில் நடைபெறும். இந்த வேண்டுகோள் மாநில நீதி அமைச்சரினால் மேற்கொள்ளப்படும். இந்த வேண்டுகோள் இரண்டில் ஒரு வழிகளில் ஏற்படலாம். கனடாவில் வெளிநாட்டு தூதுவர் அலுவலகம் அல்லது கனடாவிற்கான தூதுவர் இந்த வேண்டுகோளை ஏற்படுத்தலாம். வெளிநாட்டில் ஓர் வெளிநாட்டு அமைச்சர் கனடாவின் தூதுவர் ஊடாக நீதியமைச்சருக்கு வேண்டுகோள் விடுக்கலாம்.

இத்தகைய சட்டங்கள், தண்டனைகள், விளைவுகள் என்பன நம் அனைவருக்கும் தெரிந்திருக்க வேண்டியது அவசியமாகும். இது தவறுகள் ஏற்படாமல் அனைவரையும் பாதுகாக்கும்.

உசாத்துணை:
http://www.thefuturegroup.org/youwillbe-caught/law_Canada.html
http://www.interpol.int/public/Children/SexualAbuse/NationalLaws/csaCanada.asp
http://www.helpguide.org/mental/child_abuse_physical_emotional_sexual_neglect.htm
http://www.phac-aspc.gc.ca/ncfv-cnivf/familyviolence/html/nfntsxagrsex_e.html


jeeva@thaiveedu.com

■ ■ ■

FULL TIME
REAL ESTATE AGENT

# வீடு வாங்க விற்க

**Middlefield/Finch**




**$174,900**
2 Bedrooms, 1 Washroom
Bright Corner Unit With Many Upgrades, Split Bedrooms, Facing The Garden

**Morningside/Sewells**



**$229,000**
3+1 Bedrooms, 4 Washrooms
Fabulous And Spacious 3 Bedroom Townhouse With Walkout Basement

**Eglinton/Victoria Park**



**$297,000**
2 Bedrooms, 2 Washrooms
Bring On The Buyers. Move In To This Gorgeous Unit With 2 Bedrooms

**Birchmount/Danforth**



**$309,900**
3+2 Bedrooms, 3 Washrooms
Beautiful And Well-Maintained Home.
Move-In Condition

**Eglinton / Kennedy**




**$339,900**
3 Bedrooms,3 Washrooms
A Beautiful Open Concept Home In A Sought After Area. Close To Sq.One And Hwy 403

**9th/16th**




**$349,900**
3+1 Bedrooms, 3 Washrooms
Well Loved Family Home On A Corner Lot**Lots Of Lights**Many Upgrades Over The Last 4 Years

**Stains/Morningside**




**$399,000**
4 Bedrooms, 3 Washrooms
Freshly Painted Spacious Good Size Family Home.Close To Schools Park & Shopping Centre

**Kennedy/S Of Eglinton**



**$299,900**
3+2 Bedrooms, 2 Washrooms
Motivated Seller. Totally Renovated Main Floor! Ready To Move In! Great Investment

**Sewells/Sheppard**



**$249,000**
3+1 Bedrooms, 2 Washrooms
Very Gorgeous,Clean & Well-Kept Detached 2-Storey Home With Finished Basement

**Markham / Major Mac**




**Call For Price!**
Commercial/Retail
An Excellent Location To Run Your Own Business Or Invest In.

**Pharmacy/Finch**



**$235,000**
3+1 Bedrooms, 3 Washrooms
Lovely & Bright Home, In High Demand Area, Walking Distance To Sir John A. Macdonald C.I.

**Morningside/Warnsworth**



**$313,000**
4 Bedrooms, 3 Washrooms
High Demand West Hills Area. Freshly Painted, New Furnace(2007), New Ac(2007)



## Ashok Ragupathy, B.Com
Sales Representative

**Cell: 647-401-9203**
Office: 416.284.5555
E-Mail: Ashokragupathy@yahoo.ca

**RED CARPET.**
Royal Realty Ltd., Brokerage
INDEPENDENTLY OWNED AND OPERATED

880 Ellesmere Road, Suite 204, Toronto, M1P 2W6


Shan Thayaparan
Sales Representative
Dir: 416-567-7675 shan123@rogers.com
www.shan123.com
Morningside/Coronation
$284,900
Bigger Three Bedroom Bunglow With Newer Deck, Inground Pool, Loads Of Hardwood. Newer 4 Piece Bath W/Skylight, Large Eat-In Kitchen, Separate Entrance
Markham /Mclevin
$320,000
This Property Rented, Tenant Is Living In Main Floor, The Owner Living In The Bsmt,Walk To Schools, Ttc, Shopping.
Mclevin/Neilson
$329,900
Beautiful, Bright And Spacious 4 Bedroom Home With Enclosed Front Porch. Finished Basement With A 2 Bedroom Apartment. Central Vac, Central Air, All Light Fixtures And Window Coverings.
Morningside/Lawrence
$339,000
Shows Like A Model Home,Steps To Public Transit,Newly Developed Parks And Shopping Complex.Lovely Private Ravine Backyard.
Meadowvale / Sheppard
$359,900
Spectacular Home With Many Detailed Improvements. New Windows (2008); Upgraded Washrooms; Gleaming Hardwood Flooring And Many Other Features. No Disappointment Here - Shows 10+++
Markham Rd & Steeles
$379,900
Great Yorkwood 4 Yrs Old Home Rouge River Valley On Golf Course,Award Winning Design, Stunning Open Concept Layout,W/Out Balcony,Open To Above W/2 Storey Window,Upgraded Through House.
Morningside/Neilson
$394,900
Immaculate Sprucewood Model Approx 1931 Sq. Ft. 3Br, 3Bath, Functional Layout. Eat In Kitchen, W/O To A Spacious Deck. Mbr With 4 Pc Ensuite. 2nd Floor Family Room With Gas Fireplace. Close To Ttc & All Amenities.
Meadowvale/Sheppard
$399,900
Lovely 4 Bedroom Mattamy Built 3 Yrs. New Family Home On A Premium 'Look-Out' Lot ($10K). The 'Trinity Bay' Model, Approx. 2000 Sq.Ft. Gleaming Hardwood Flrs.
A RIGHT HOUSE IS A SWEET HOME
Home life GTA
Realty Inc.Brokerage
Bus: 416-312-6969
Fax: 416-312-6963
(Not Intend to solicit properties currently listed or Buyers under agreement)
HOMELIFE
HIGHER STANDARDS


VIKI VELAUTHAN
Salesperson
Dir: 416-321-6969 vvelauthan@yahoo.com
www.shan123.com
Brimley/Huntingwood
$399,900
Large Up-Dated Sidesplit. Move-In Condition. Great Neighbourhood. Quiet Street. Steps To Iroquois Park, Nature Trail, And Catholic And Public Schools With Easy Access To Ttc, Shopping, And Hwy 401.
Bovaird/410
$329,900
Remarks For Clients: Extremely Well Cared For Home Located In The Southlake Area Close To The 410.
Bovaird/Brisdale
$363,900
Beautiful & Spacious Corner Lot 4 Bedroom Detached Home In Fabulous Neighbourhood. Excellent Open-Concept Layout With Hardwood Floors, Large Kitchen.
Bovaird/Hwy 410
$373,000
Chance To Own Spacious Home In Prestigious Lake Land Village. Detached, 2-Story, 3 Bedroom With 2nd Floor Laundry, Upgraded Oak Stairs, Spacious Living/Dining With Fireplace.
Sandalwood Chinguacousy
$379,900
Motivated Seller. Mattamy Executive 4Bdr On The Ravine!! Premium Lot Located In Desirable Neighborhood That Features Thousands In Upgrades. Home Shows As Model, Beautifully Landscaped
Mavis & Steele (Sw)
$399,900
Absolutely Stunning!!! Paradise Homes Apprx 2200 Sq.Ft**Close To Miss.Border**4 Bdrm Converted To 3 Bdrm + Den(Easily Convertible Back To 4th Bdrm)
Markham/Castlemore
$360,000
*Gorgeous&Immaculate*Better Than New*Bright&Spacious Upgraded Home With Hardwood&Ceramic Fl On M/F,Solid Oak Stair&Railings,Kit.
16th Ave/ Markham Rd
$389,000
The Beauty & The Price! A Home You'll Be Proud To Own! This Magnificent 4 Yrs New Home Provides You With ~2000 Sqft Of Living Space.
A RIGHT HOUSE IS A SWEET HOME
HOMELIFE
HIGHER STANDARDS
Home life GTA Realty Inc.Brokerage
Bus: 416-312-6969 Fax: 416-312-6963 (Not Intend to solicit properties currently listed or Buyers under agreement)

# கனடாவில் யார் வல்லவர்?

செந்தூரன் புனிதவேல்
- காப்புறுதி முகவர் -

நீங்கள் எப்போதாவது கனடாவில் மற்றைய வாகனசாரதிகள் எப்படி வண்டியை செலுத்து கிறார்கள் என்று சிந்தித்ததுண்டா? உதாரணத்திற்கு ஒன்டாரியா சாரதி அல்லது அல்பேட்டா சாரதியா இல்லாவிடில் நோவா ஸ்கோஸ்யா சாரதியா மிக மோசமாக வாகனம் செலுத்து கிறார்கள். எந்த மாகாணத்தில் அதிகம் தவறுதலாக வாகனம் செலுத்துவதற்கு குற்றப் பத்திரிகை பெறுகிறார்கள் என்று அறிவதற்கு ஆவலாய் இருக்கிறீர்களா. அப்படியாயின் தொடர்ந்து படியுங்கள்.

கனடிக்ஸ் சிஏ (Kanetix ca) என்பது கணனி மூலம் வாகன காப்புறுதி வழங்கும் ஒரு அமைப்பு. அவர்கள் உங்களை போல் இத்தகைய தகவல்களை பெற்று அதன் பலாபலன்களை ஆராய முற்பட்டார்கள். அப்படி அவர்கள் செய்த முடிவு ஒருவருமே தவறுதலாய் செலுத்துவதிலிருந்து விலக்கல்ல என்பதுதான். எல்லாமாகாணங்களிலும் இடம் பெறும் இத்தவறுகளை ஆராய்வதால் அறியும் உண்மைகளை கவனிப்போம்.

பிரிட்டிஷ் கொலம்பியாவில் காப்புறுதி மாகாண அரசாங்கமே வழங்குவதால் Kanetix Ca யுடைய ஆய்வில் இடம்பெறவில்லை. இந்த அமைப்பு காப்புறுதி வழங்கும் அல்பேட்டா, ஒன்டாரியோ, குயூபெக், நியூபிரவுன்ஸ்விக், பிரின்ஸ் எட்வேட் ஐலன்ட், நோவாஙகாசியா ஆகிய மாகாணங்கள் மட்டுமே இடம்பெற்றுள்ளது. கணனி மூலம் 2006ம் ஆண்டு செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை கொண்டு இந்த ஆராய்ச்சி நடத்தப்பட்டுள்ளது. எஞ்சிய மாகாணங்களாகிய பிரிட்ஷ் கொலம்பியா, சஸ்சுகவான், மனிடோபா, நியூபவுன்ட்லன்ட் ஆகிய மாகாணங்கள் மட்டுமே இடம்பெற்றுள்ளது. கணனி மூலம் 2006ம் ஆண்டு செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை கொண்டு இந்த ஆராய்ச்சி நடத்தப்பட்டுள்ளது. பிரிட்டிஷ் கொலம்பியா, சஸ்சுகவான், மனிடோபா, நியூபவுன்ட்லன்ட் ஆகிய மாகாணங்களில் Kanetex Ca செயல்படுவதில்லையாகையால் அவை இங்கு பயன்படுத்தப்படவில்லை. எனவே குறிப்பிட்ட ஆறு மாகாணங்களையும் பற்றி கவனிப்போம்.

## டிக்கட்டுகள்

2006ம் ஆண்டு நிரப்பப்பட்ட படிவங்களின்படி 16 விகிதமான சாரதிகள் குறைந்தது ஒரு டிக்கட் ஆவது கடந்த மூன்று வருடங்களுக்குள் பெற்றுள்ளார்கள். என்ன ஆச்சரியமாக இருக்கிறதா? தேசிய அமைப்பில் 16 விகிதம் என அறிந்துள்ள நீங்கள் மாகாண அமைப்பில் எப்படி அமைந்துள்ளது என்று பார்ப்போம்.

**அல்பேட்டா:** 17% அல்பேட்டா குடிமக்கள் செய்த காப்புறுதி மனுவில் தவறு செய்து டிக்கட் பெற்றவர்களாயுள்ளார்கள். இவர்கள் தான் முன்னணியில் உள்ளவர்கள்.
**ஒன்டாரியோ:** கடும் போட்டியுடன் அடுத்ததாக இவர்களில் 16%மானவர்கள் டிக்கட் பெற்ற மனுப்பத்திரம் தாக்கல் செய்துள்ளார்கள்.
**குபெபெக்:** 15% மானவர்கள் டிக்கட்பெற்றுள்ளார்கள்.
**நியூபிரன்ஸ்விக்:** 12% மானவர்கள் டிக்கட் பெற்றுள்ளார்கள்.
**பிரின்ஸ் எட்வேட் ஐலன்ட்:** 9% மானவர்கள் டிக்கட் பெற்றுள்ளார்கள்.
**நோவா ஸ்கேசியா:** கடைசியில் ஆகக் குறைந்த டிக்கட்டுகளுடன் இவர்களில் 8% மானவர்கள் மட்டுமே டிக்கட் பெற்றுள்ளார்கள்.

நீங்கள் முனுமுனுப்பது கேட்கின்றது. இவை யாவும் மனுப்படிவத்தில் தரப்பட்ட தரவுகளானபடியால் தனிப்பட சாரதிகள் நிலை எப்படியோ என்று. படிவங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட சாரதிகள் இருப்பதனால் இது தவறானதகவல் அல்லவா என கூறலாம். எனவே Kanetix Caவுடைய தரவுப்படி தனிப்பட்ட சாரதிகளில் எத்தனை விகிதமானவர்கள் மூன்று வருடத்திற்குள் டிக்கட் பெற்றுள்ளார்கள் என கவனிப்போம். தேசிய அமைப்பில் கருதும் வேளையில் 14% விகிதம் சாரதிகள் 2006ம் ஆண்டில் மனுச் செய்தவர்களில் மூன்று வருடத்துள் டிக்கட் பெற்றவர்களாக உள்ளார்கள். ஒவ்வொரு மாகாணத்தையும் தனித்தனியாக கவனிப்போம்.

அல்பேட்டா: 16% குறைந்தபட்சம் ஒரு டிக்கட் உடையவர்கள்
ஒன்டாரியோ: 14% குறைந்தபட்சம் ஒரு டிக்கட் உடையவர்கள்
குயூபெக்: 14% குறைந்தபட்சம் ஒரு டிக்கட் உடையவர்கள்
நியூபிரன்ஸ்விக்: 10% குறைந்தபட்சம் ஒரு டிக்கட் உடையவர்கள்
பிரின்ஸ் எட்வேட் ஐலன்ட்: 8% குறைந்தபட்சம் ஒரு டிக்கட் உடையவர்கள்
நோவாஸ்கோசியா: 7% குறைந்தபட்சம் ஒரு டிக்கட் உடையவர்கள்

மேலோட்டமாக பார்க்கையில் அல்பேட்டா, ஒன்டாரியோ, குயூபெக் ஆகிய மாகாணங்களில் தான் அதிகம் டிக்கட் பெற்றவர்கள் இருக்கிறார்கள். எனவே நியூபிரன்ஸ்விக், பிரின்ஸ் எட்வேட் ஐலன்ட், நோவாஸ் கோசியா ஆகிய மாகாணங்களில் வசிப்பவர்கள் முன்னைய மூன்று மாகாணத்திலும் வசிப்பவர்களை கவணமில்லாத சாரதிகள் என்று நகைக்கலாம்.

எது எப்படி இருப்பினும் இந்த டிக்கட்டுகள் உங்கள் காப்புறுதி கட்டணத்தை பாரதூரமாக பாதிக்கும். விபத்துகளில் சிக்காவிடின் கட்டணம் கூடாது என்று எண்ணுவது மடமை. பாடுபட்டு தேடும் பணத்தை காப்புறுதிக் கட்டணம் எனும் படுகுழியில் போடுவது போல் மடமை வேறு எதுவும் கிடையாது.

## டயரைத்தேய்த்து டிக்கட்டை பெற்றவர்கள்

மேலே தரப்பட்ட புள்ளிவிபரங்களில் தேசிய ரீதியாக அதிகம் டிக்கட்டுகள் பெறப்பட்டது வேகமாக வாகனத்தை செலுத்துவதால் என்பதை குறிப்பிட வேண்டும். அது மட்டுமல்லாமல் பெருமளவு வாகன விபத்துக்கள் வேகமாக செலுத்துவதால் ஏற்பட்டவை என புள்ளிவிபரங்கள் குறிப்பிடுகின்றன. இதன் மறுபக்க உண்மை உங்கள் காப்புறுதி கட்டணமும் கூடும். மேலும் பனிக்காலத்திலும் கோடை காலத்தில் தான் பெரும் விபத்துக்கள் ஏற்படுகின்றது. பனிக்காலத்தில் அதிகம் விபத்துக்கள் ஏற்படினும் அவற்றால் வரும் பொருள் நட்டம் மிக குறைவானதே. காரணம் வேகம் அதிகமாக இருப்பதில்லை. எனவே யாவரும் வேகத்தை வெண்டு மெதுவாக சென்று டிக்கட்டுகளை குறைப்பது அறிவுள்ள செயலாகும்.

வேறு எப்படியான டிக்கட்டுகள் பெறுகிறார்கள் என்று பார்ப்போம். எல்லா மாகாணங்களிலும் எடுத்த கணிப்புப்படி 45km/h குறைவாக தரப்பட்ட வேகத்திற்கு அதிகமாக வாகன டிக்கட்டுகள் பெறப்பட்டுள்ளது.

அடுத்து தேசிய ரீதியாக எல்லோருமே பாதையோர சமிக்ஞைகளை கவனிப்பதில்லை என கணிக்கப்பட்டுள்ளது. எல்லா மாகாணங்களிலும் (இங்கு குறிப்பிட்ட ஆறு மாகாணங்கள்) கனேடியர்கள் பாதையோர



சமிக்ஞைகளை உதாசீனம் செய்து டிக்கட் பெறுவதால் ஆகக்கூடிய தவறுகள் ஐந்தில் இவையும் வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இப்போ தாங்கள் குறிப்பிட்ட ஆறு மாகாணங்களில் எந்தக் கிரம வரிசையில் டிக்கட்டுகள் பெறப்பட்டுள்ளது என கவனிப்போம்.

கியூபெக் மாகாணத்தில் உள்ளவர்களுக்கு சீட்பெல்ட் அணிவது பிடிக்காமல் இருக்க வேண்டும். காரணம் குயூபெக் மாகாணம் ஒன்றில் மட்டும் சீட்பெல்ட் அணியாமல் பெறப்பட்ட டிக்கட் முதல் ஐந்தில் காணப்படுகிறது.

குயூபெக் மாகாணத்தவர்கள் சீட்பெல்ட் போடுவது விருப்பமில்லை என்பதுடன் சாலை சமிக்ஞைகள் காட்டுவதிலும் விருப்பமில்லைபோல் உள்ளது. அவர்கள் திரும்பும் வேளைகளிலும் சாலையில் தடம் மாறும் வேளைகளிலும் சமிக்ஞை செய்ய தவறுவதால் சமிக்ஞை குற்றங்கள் 'Signalling offence' அதிகமாக பெறப்படும் டிக்கட்டுகள் ஐந்தில் ஒன்றாக கொண்டுள்ளார்கள். ஆறு மாகாணங்களில் நான்கு மாகாணங்கள் 45-50km/h அதிகமாக வேகம் செலுத்தியதற்கு டிக்கட் பெற்றுள்ளார்கள்.

மிக மிக சுவையான விடயம் என்னவென்றால், பிரின்ஸ் எட்வட் ஐலன்டில் வசிப்பவர்கள் காப்புறுதி பத்திரம் இல்லாமல் சென்றதற்காக டிக்கட் வாங்கியுள்ளார்கள். இதன் அர்த்தம் அவர்கள் காப்புறுதி இல்லாமல் வாகனம் செலுத்தினார்கள் என்பதல்ல. அவர்களுக்குக் கையுறை வைப்பதற்காக உள்ள இடம் (Gluse compartment) ஏன் இருக்கிறது என்பது தெரியாதிருக்க வேண்டும். காரணம் காப்புறுதி பத்திரத்தை வீட்டில் லாச்சியில் வைத்துவிட்டு வாகனத்தை செலுத்தியுள்ளார்கள்.

கனடாவில் தேசிய ரீதியாக வாகனம் செலுத்துபவர்கள் அனைவருக்கும் பொதுவான ஒன்று உண்டு எனில் அவர்கள் அனைவரும் காப்புறுதி வைத்திருக்க வேண்டும்.

இன்னும் ஒரு விடயம் சாரதிகள் அனைவருக்கும் பொதுவாக உண்டு. அதாவது அவர்கள் எந்த அமைப்புக்கு சென்றாலும் இதே கட்டணம்தான் கொடுக்க வேண்டும் என எண்ணுவதுடன் வேறு ஸ்தாபனங்களை தேடிச் செல்வது விபத்துக்களில் சிக்கியவர்களும், டிக்கட்டுகள் வைத்திருப்பவர்களுமே என்று எண்ணுவது இது தவறாகும்.

ஒவ்வொரு முறை உங்களுக்கு புது காப்புறுதி பத்திரம் வரும் வேளையிலும் நீங்கள் நாலு காப்புறுதி ஸ்தாபனங்களுடன் தொடர்பு கொண்டு எங்கு மலிவான காப்புறுதி கட்டணம் உண்டு என்பதை அறிந்து அங்கு உங்கள் காப்புறுதியை மாற்றுவது அவசியம். கொடுக்க வேண்டிய கட்டணத்திற்கும் அதிகமாக கொடுக்க வேண்டாம்.

senthuran@thaiveedu.com

■ ■ ■

**Office Space for Lease**
(அலுவலகம் வாடகைக்கு)

Kennedy/ Ellesmere சந்திப்பில் ஓர் அலுவலகம் வாடகைக்கு உள்ளது.
சிறு அலுவலகத் தேவைக்கு ஏற்ற இடம்.
150 SQ feet.

தொடர்புகளுக்கு:
**416-321-8716, 416-302-7283**

**சகல சட்டத் தேவைகளுக்கும் - கனேடிய தமிழ் வழக்கறிஞர்**

Tel : 416-847-7077
416-847-7093 (Injury Claims)
Fax : 416-847-7088
GTA Square
5215 Finch Ave. East, Unit 219
Scarborough, ON. M1S 0C2
www.maharajalaw.com

- Real Estate
- Immigration Matters
- Translation Services
- Business Matters
- Personal Injury Claims
- All other Legal Services



The Law Office of
**Raphael Maharaja**
Barrister, Solicitor & Notary Public

# பேசும் தாவரம்

## மருத்துவக் கேள்வி - பதில்

இராஜசேகர் ஆத்தியப்பன்

**டாக்டர், எனது மனைவிக்கு கர்ப்பந் தரித்து 3 அல்லது 4 மாதங்களில் கரு கலைந்து விடுகின்றது. நிலைத்து நிற்கும் வழி தெரியாமல் தவிக்கின்றோம். மூலிகை மருத்துவத்தின் உதவியை நாடி நிற்கின்றேன்.**

- தம்பிராஜா, மார்க்கம்.

நீங்கள் சொல்லும் அதே போன்று பிரச்னை யுடன் ஒருவர் என்னிடம் வந்தார். நான் அவருக்குச் சொன்ன ஆலோசனையின்படி செய்து வெற்றியும் கண்டார். சுமார் 9 ஆண்டுகளுக்கு முன்பாக நடைபெற்ற அந்த சம்பவம் நிச்சயம் உங்களுக்குப் பயனளிப்பதாக இருக்கும்.

பாகற்காய் இலைச் சாறு அரை டம்ளர், அத்துடன் அரை டம்ளர் தேங்காய்ப்பால் கலந்து மாதவிலக்காகும் முதல் 3 தினங்கள் காலையில் வெறும் வயிற்றில் குடிக்கச் சொன்னேன். அதன் பின்னர் வழக்கம் போல் எடுக்கும் மருந்துகளைக் கொடுத்தேன். 14, 15, 16ம் நாட்களில் தம்பதிகளை உறவில் ஈடுபட்ட பின் ஒரு மணி நேரம் அப்படியே இருக்குமாறும் ஆலோசனை சொன்னேன். நினைத்தது நிறைவேறியது.

அழகான ஆண்பிள்ளையைப் பெற்று அந்தப் பிள்ளைக்குப் பெயர் சூட்டவும் என்னை அழைத்திருந்தார்கள். சாதாரணமாக, பாகற்காய் இலை அல்லது மலைவேம்பு போன்றவற்றை கர்ப்பப்பை கோளாறுகளுக்குப் பயன்படுத்துவது வழக்கம். நீங்களும் பின்பற்றி வெற்றி காணுங்கள்.

**தீராதோல் நோய்க்கான காரணம் என்ன?**

-இ. லதா

அழுக்கு (Toxin). மனதிலும், உடம்பிலும் ஏற்படும் அழுக்குதான் காரணம். யார் மீதாவது கோபம் இருந்தால். அதனை மறந்து முதலாவது அவர்களை மன்னிக்க வேண்டும். மனதிற்குள் இருக்கும் கசப்பு நீங்கி, குடலை சுத்தம் செய்து கல்லீரல் புதுப்பிக்கப் பட்டால் எப்படிப்பட்ட தோல் நோயும் சுகமாகும். என்னுடைய 15 ஆண்டு அனுபத்தில், இதனை சொல்லிக் கொடுத்து எனது நோயாளிகள் அனைவரும் சுகம்பெற கண்டிருக்கிறேன்.

**உடல் மெலிவதற்கு ஆண், பெண் இருவரும் வெவ்வேறு மருந்துகளைப் பாவிக்க வேண்டுமா?**

- டான்.

ஆயுர் வேத மருத்துவத்தில், ஆண்களுக்கு கோக்சுறா (Gokshura) என்று ஒரு மூலிகையைக் கொடுப்போம். இது எடுக்கும் ஆண்கள் உடலைக் குறைப்பதோடு இளமை ததும்ப செயல் வேகம் பெறுவார்கள்.

பெண்கள் குக்குல் (Guggul) என்ற ஒரு மூலிகை மருந்தை எடுப்பார்கள். இதன் மூலம் தேவையற்ற ஊளைச் சதை குறையும்.

**மனம் அமைதி பெற என்ன மூலிகை உதவும்?**

- ஜெயராஹினி.

`அஸ்வகந்தா'. மனம் அமைதி பெறும்; சலனமில்லாத நித்திரையும் உத்திரவாதம்.

**பெண்களின் பிரச்சனைக்கு பொதுவான மூலிகை எதுவென்று சொல்வீர்களா?**

- வதனரூபினி.

சதாவரி. இதனை தண்ணீர்விட்டான் கிழங்கு என்று தமிழில் அழைப்போம்.

**எனது தோள்கள், இடுப்பு, மூட்டு ஆகிய பகுதிகளில் வலி காணப்படுகின்றது. சமீப காலமாக நான் சிறுநீர் கழிக்கும் போது எரிச்சலாக கடுப்பதை உணர்கின்றேன். வலி நிவாரணிகள் (Pain Killers) சரியான உதவிகள் செய்வதில்லை. உங்களுடைய ஆலோசனை என்ன?**

- சௌதாமினி

நீங்கள் சொல்லும் அறிகுறிகளை வைத்துப் பார்க்கும் போது, உங்களுக்கு சிறுநீரகக் கல் இருக்க வாய்ப்பிருக்கின்றது. நெருஞ்சி முள் சமூலம் ஒரு தேக்கரண்டி எடுத்து நன்கு கொதிக்க வைத்து அந்த நீரைப் பருக வேண்டும். அல்லது நீர் முள்ளிச் செடியின் சமூலத்தையும் இப்படிச் செய்யலாம். அதுவும் இல்லாவிடில் சிறுபீழைச் செடியிலும் கஷாயம் செய்து குடித்து வரலாம். உடனடியாக சிறுநீர்க் கற்கள் உடைந்து விடும். வலியும் மறைந்து விடும்.

**எல்லா நாட்களிலும் ஒரே மாதிரியான உணவு வகையைச் சாப்பிடலாமா?**

வெங்கடேஷ் பிரபு

சாப்பிடலாம், ஆனால், இயலாத ஒன்று. நமது ஊரில் ஆடிமாதத்தில் சிலவகை விதைகள் ஊன்றுவார்கள். கொடியில் காய்ப்பவை. சிலவகைச் செடிகள், பந்தலில் தொங்கும் புடலை, பாகை, அவரை போன்ற இவற்றுள் அடங்கும். அவை காய்ந்து வரும் காலத்தில் அந்த வகைச் சமையல்தான் மிகுந்து காணப்படும். இன்னுமொரு பருவத்தில் முருங்கை பூ பூத்து காய்காய்த்தால் தொடர்ந்து முருங்கை சமையல்தான். அதனால் கோடைகாலத்தில் கர்ப்பம் தரிக்கும் வாய்ப்பு அதிகம். இயற்கை ஒவ்வொரு பருவத்திலும் ஒன்றைத் தயார் செய்யும் போது, நாம் மட்டும் ஒரே மாதிரியாக எப்படி சமைக்க இயலும்? சாப்பிட இயலும்? மாற்றம் மனித தத்துவம் - அது மனதிற்கு மகிழ்ச்சி தரக்கூடியது. மனிதனை இயங்க வைக்கும் ஆற்றல் கொண்டது.

**டாக்டர், நான் வயது ஆனவன் போல வாழ ஆசைப்படவில்லை. வாலிபப்பருவத்தில் இருந்தது போல உற்சாகமான தாம்பத்தியத்தை தொடர விரும்புகின்றேன். இயற்கை மருத்துவம் மட்டும் தான் எனது விருப்பம். உங்களின் பரிந்துரை என்ன?**


மாயக்கண்ணன், வான்கூவர்

கொரியாவின் ஜின்செங் (Gin Seng) சீனர்களின் கோட்வீட் (Goat Weed), தென்னமெரிக்காவின் மாக்கா (Maea) வட இந்தியாவிலும், தென்னிந்தியாவிலும் 'சிலாஜித்' என்று பல வகையான மருந்துகள் பிரசித்தமானவை.

உங்களுடைய விருப்பம் நியாயமானது. அதற்கு வாழ்க்கை முறையும் மிகவும் அவசியம். மனதைப் பாதிக்கக்கூடிய இணையத் தளங்கள் (Porno sites) நீலப்படங்கள், அதுபோன்ற மூன்றாம்தர புத்தகங்கள், கதைகள் இவைகளை முதலாவது தவிர்க்க வேண்டும். வாழ்க்கை முறை (Life Style) மன அழுத்தம் இல்லாமல் இருக்க வேண்டும். மனைவியும் கணவனும் ஒருவர் தேவையை மற்றவர் புரிந்து நடந்து கொள்ள வேண்டும்.

தமிழர்களின் மூலிகைகளான ஓரிதழ் தாமரை, பூனைக்காலி விதை, முருங்கை, அமுக்ரா போன்றவை மிகச் சிறந்தது.

நான், எனது வாடிக்கையாளர்களுக்கு பரிந்துரை செய்வது அத்திப்பழம், பேரீச்சை, ஒட்டகப்பால் மற்றும் வெள்ளை வெங்காயம். அத்தோடு தொப்பையை கண்டிப்பாகக் குறைக்க வேண்டும். விரத நாட்களைப் பயன்படுத்த பட்டினி (உபவாசம்) இருந்தால் இன்னும் உற்சாகம் கூடும்.



எனது சொந்த உபயோகத்திற்கும் தெரிந்த நண்பர்களுக்கும் நான் தயாரித்துக் கொடுக்கும் சிறப்பான மூலிகை ரகசியத்தை தெரிந்துகொள்ளுங்கள்.

சோற்றுக்கற்றாழை, வெள்ளை வெங்காயச் சாறு, ஓரிதழ் தாமரை, பூனைக்காலி, நன்னாரி போன்றவற்றைச் சேர்த்து தயாரிக்கும் மருந்து கொஞ்சம் விலை அதிகம்.

சீனர்கள் பாம்பு சூப் குடிப்பது இதற்காகத்தானாம். யுனானி மருத்துவத்தில் 'லவூப் - இ-கபீர்' என்று உண்டு. இது அணுக்களின் எண்ணிக்கையை அதிகரித்து இன்பத்தைக் கூட்டும். இப்போதைக்கு அனுபவி இராஜா அனுபவி – அப்புறம் இதற்காகத்தானா ஆசைப்பட்டாய் மாயக்கண்ணா என்று கேள்வியும் கேட்கலாம்.

**டாக்டர், நான் நீரிழிவு நோய்காகன Met fornin மாத்திரைகள் 1500 மி.கி. ஒவ்வொரு நாளும் எடுத்தேன். அதனோடு Glycyphage என்ற மாத்திரையும் கொடுத்தார்கள். ஆனாலும், சர்க்கரை அளவு குறையவே இல்லை. ஜான்ஸன் என்ற டாக்டர் Divovit என்ற மூலிகை மாத்தரையுடன் Diaf-tea என்ற மூலிகை பானத்தையும் கொடுத்தார். இங்குள்ள மருத்துவர்கள் ஆச்சரியப்படும் அளவிற்கு இரத்தத்தின் சர்க்கரை அளவு குறைந்தது. இப்பொழுது எனது குடும்ப வைத்தியர் தொடர்ந்து இவற்றை பாவிக்கச் சொல்கின்றார். ஆனால் டாக்டர் ஜான்ஸன் அவர்கள் இங்கு இல்லை. இந்த மருந்துகள் எங்கு கிடைக்கும் என்று தங்களுக்குத் தெரியுமா?**

தேவகி பத்மா, Hamilton

Divovit என்ற மூலிகை மருந்து மும்பையில் தான் தயாரிக்கப்படுகின்றது. நீங்கள் குறிப்பிட்ட Diab – tea இங்கே சில கடைகளில் கிடைக்கின்றது. பெற்றுப் பயன் பெறுங்கள்.

வளம் பெறுக, நலம் பெறுக!


rajasekar@thaiveedu.com

■ ■ ■

கனடாவில் நடைபெறும் நிகழ்வுகளைப் பார்ப்பதற்கும், உங்கள் நிகழ்வுகளைப் பதிவதற்கும்.

www.inayam.net

416 400 6406



# வ லி ?

* தலை வலி
* கழுத்து வலி
* தோள் பட்டை வலி
* இடுப்பு வலி
* முழங்கால் வலி

## HEAD ACHE - BACK PAIN - ARTHRITIS

* திருகு வலி
* தீராத நெஞ்சு வலி
* வயிற்று வலி

எல்லா வலிகளுக்கும் சிறந்த சிகிச்சை

## கேரளா ஆயுர்வேத சிகிச்சை

இப்பொழுது கனடாவில்
உங்கள் அருகிலேயே கிடைக்கின்றது

## J.J. NEWLIFE PAIN THERAPY CENTRE

ஜெ.ஜெ. புதுவாழ்வு
வலி சிகிச்சை மையம்

முன்பதிவு செய்வதற்கு

**Dr. இராஜசேகர் ஆத்தியப்பன்**

ayurvetha@gmail.com

☎ 416 995 0416

நல்வருனேந்திரன், ஓட்டுனர் (சாரதி)



நான் இடுப்பு வலியினால் மிகவும் அவஸ்தைப்பட்ட வேளையில், டாக்டர் அவர்களின் சிகிச்சையால் புதுவாழ்வு பெற்றேன். இப்பொழுது உற்சாகத்துடன் செயலாற்ற முடிகின்றது. நன்றி.

இராகவன், தொழில்அதிபர்



திடீரென்று ஏற்பட்ட L-4 பிரச்னைக்கு, டாக்டர் அவர்களின் கேரள ஆயுர்வேத சிகிச்சை அதிசயத் தீர்வைத்தந்தது. இது எனக்கு மறுவாழ்வு என்று தான் சொல்வேன்.

யமுனா, (Sales Co-ordinater)



எனக்கு நீண்ட நாட்களாக முடி உதிர்தல் மற்றும் ஒற்றைத் தலைவலி இருந்து கொண்டே இருந்தது. ஜெ.ஜெ. புதுவாழ்வு மையத்தில் கடந்த நான்கு மாதங்களாக சிகிச்சை பெற்றேன். இப்போழுது 95 % குணம் பெற்றுவிட்டேன்.

அருள், சார்ன்யா



எனது உடம்பு முழுவதும் ஏற்பட்ட சொரியாஸிஸ் என்ற தோல் நோய் 15 வருடங்களாக என்னை வாட்டி வதைத்தது. இப்போழுது சுகம் பெற்று மகிழ்ச்சியாக இருக்கின்றேன்.

## J.J. NEWLIFE CENTRE

15 வருடங்களுக்கும் மேலாகக் கேரள ஆயுர்வேதம் மற்றும் யுனானி மருத்துவத்தில் தேர்ச்சி பெற்ற

**Dr. Rajasekar Athiappan**

ayurvetha@gmail.com

☎ 416 995 0416

Computek College
BUSINESS • HEALTH CARE • TECHNOLOGY

இலவச பயிற்சி நெறிகள்

பயில நீங்களும் தகுதியுடையவராகலாம் !

வேலையிழந்து தற்போது Unemployment (EI) பெற்றுக்கொண்டிருப்பவராக அல்லது,
Unemployment (EI) முடிந்து 3 ஆண்டுகளுக்கு மேற்படாதவராக அல்லது,
Maternity Leave முடிந்து 5 ஆண்டுகளுக்கு மேற்படாதவராக இருந்தால்,

இலவச பயிற்சி நெறிகள் பயிலுவதற்கு வேண்டிய விபரங்களைப் பெறத் தொடர்பு கொள்ளுங்கள்.

நீங்கள் அண்மையில் குடியேறியவராக (New immigrant) இருந்தால் அல்லது

Welfare பெற்றுக் கொண்டிருப்பவராக இருந்தால் அல்லது

Underpaid / Part-time / நிலையான உத்தியோகத்தில் இல்லாதிருந்தால்,

நிதியுதவி பெற்று பயிற்சி நெறிகளைத் தொடரக்கூடிய வாய்ப்புக்களுண்டு. மேலதிக விபரங்கட்குத் தொடர்புகொள்ளவும்.



Early Childcare Assistant(ECA)
Graduates of this program may find employment as
- Child Care Assistant
- Child Care Worker
- Early Childhood Educator Asst.
- Day Care Worker
- Day Care Teacher
- Preschool Worker

Computerized Accounting
Graduates of this program may find employment as
- Accounting Assistant
- Accounts Administrator
- Accounts Manager
- Accounts Payable Clerk
- Accounts Receivable Clerk
- Payroll Clerk





Personal Support Worker (PSW)
Graduates of this program may find employment as
- Personal Support Worker
- Home Support Worker
- Personal Care Attendant
- Resident Care Aid
- Nursing Assistant

Network Engineering
Graduates of this program may find employment as
- Network Administrator
- Network Specialist
- Systems Administrator
- Tech Support
- Help Desk Technician



Business Administration
Graduates of this program may find employment as
- Administrative Assistant
- Office Assistant
- Office Administrator
- Management Trainee
- Executive Assistant



Medical Office Admin (MOA)
Graduates of this program may find employment as
- Medical Office Assistant
- Medical Admin. Asst.
- Medical Receptionist
- Medical Secretary
- Medical Records Clerk

Rush ! Get ready for JOBS in Banks & Insurance Companies
CSC ( Canadian Securities Course)
Sunday, March 8 ( 9.30 AM ) - Call for registarion

www.computek.edu

Kennedy / Sheppard
(North-East Corner)
Tel: 416-321-9911
2347, Kennedy Road, Suite 301
Scarborough, ON., M1T 3T8

Kennedy / Eglinton
(N/W Corner, Above Library)
Tel : 416-285-9941
2390 Eglinton Ave East, Suite 248
Scarborough ON M1K 2P5

# பேச்சுப் போட்டி...

31ம் பக்கத் தொடர்ச்சி...

தோற்றமளித்தவன், பேசினான். அவனுடைய உயரத்துக்கும் குரலுக்கும் சம்பந்தமே இல்லை. குரல் கணீரென்று அரங்கத்தின் எல்லைவரைக்கும் கேட்டது. கப்பலோட்டிய தமிழனைப் பற்றிய பேச்சு. ஒரு பந்து துள்ளுவதுபோல அவன் மேடை முழுக்க துள்ளியபடியே பேசினான். அவன் வாயிலிருந்து சொற்கள் நில்லாமல் உருண்டு வந்து விழுந்தன. அவன் முடித்ததும் அவனுக்கு விழுந்த கைத்தட்டு அவன் பேசிய நேரத்திலும் பார்க்க கூடியதாக இருந்தது.

அடுத்தது, என்னிலும் உயரமாக தோன்றிய ஒரு பெண். கறுப்பு பூச்சிகள் மொய்ப்பது போல அடர்த்தியான இமைகள். அவளுடைய குடும்பம் முழுக்க ஏதோ திருவிழா பார்க்க புறப்பட்டதுபோல வந்திருந்தது. அப்பா, அம்மா, அக்கா, தங்கச்சி, பாட்டி என்று அவர்களே அரங்கத்தில் அரைவாசி இடத்தை பிடித்துவிட்டார்கள். அவள் ஆறுமுக நாவலரைப் பற்றி பேசினாள். அவள் குரலில் ஏற்றமோ இறக்கமோ கிடையாது ஆனால் குரல் சங்கீதம் கேட்பதுபோல இருந்தது. அவளுடைய இரட்டைப் பின்னலில் ஒன்று முன்னுக்கு இருந்தது பேச்சின் முடிவில் எப்படியோ பின்னுக்கு போய்விட்டது.

இந்தப் பெண் பேசும்போது வாயைக் குவித்துவைத்து பேசினாள். எல்லா உணர்ச்சிகளையும் அவளால் வாயைக் குவித்தபடி காட்ட முடிந்தது. கோபமாக இருக்கும்போதும் வாயைக் குவித்தாள். மகிழ்ச்சியை காட்டும போதும் வாயை குவித்தாள். இரக்க குணத்தை வெளிப்படுத்தும் போதும் வாயை குவித்தாள். அவள் பேச்சு காதுக்கு கேட்பதற்கும், கண்ணுக்கு பார்ப்பதற்கும் குளிர்ச்சியாக இருந்தது. நான் நடுவராக இருந்தால் அவளுக்குத்தான் வாக்கு போடுவேன்.

என்னுடைய முறை வந்தபோது நான் நாலு படிகளில் ஒவ்வொன்றாக ஏறி மேடையின் நடுவில் போய் நின்றேன். முதலில் மாஸ்ரர் எங்கேயிருக்கிறார் என்று தேடினேன். அவர் முதலைபோல சிரித்தபடி தூரத்தில் தெரிந்தார். நான் பேசும்போது என்னுடன் சேர்ந்து அவருடைய சொண்டுகளும் அசைந்தபடி இருக்கும். புதன் அனுக்கிரகம் இருப்பதால் மாஸ்ரர் என்னை ‘புத்திநாதன்’ என்று விளித்ததை நினைத்துக் கொண்டேன். முழங்கால்கள் ஒன்றோடொன்று இடிக்காமல் தடுப்பதற்கு நான் பெருமுயற்சி எடுக்க வேண்டியிருந்தது. குரலை உயர்த்தவேண்டிய இடத்தில் உயர்த்தி, இறக்கவேண்டிய இடத்தில் இறக்கி, கைகளை எங்கேயெங்கே எந்த திசையில் எவ்வளவு உயரத்துக்கு காட்டவேண்டுமோ அவ்வளவையும் காட்டி கச்சிதமாக பேச்சை முடிவுக்கு கொண்டுவந்தேன். பேச்சின் ஆரம்பத்தில் முதல் வாக்கியத்தின் போது முதல் வார்த்தையை ‘மகாத்மா காந்தி’ ‘மகாத்மா காந்தி’ என்று எதற்காக இரண்டுதரம் சொன்னேன் என்பது எனக்கோ மாஸ்ரருக்கோ புரியாத ஒன்று.

பேச்சுப்போட்டி முடிந்தபோது பெரும் மழை பிடித்துக்கொண்டது. ஒருவரும் எதிர்பாராமல் திடீரென்று பெய்த மழை, அது வந்தமாதிரியே உடனேயே போய்விடும் என்றார்கள். ஆனால் மழை விடாமல் இரண்டு மணி நேரமாக கொட்டியது. திரும்பும்போது மாஸ்ரர் சைக்கிளை உழக்க நான் பின் சீட்டில் உட்கார்ந்து வந்தேன். சைக்கிள் மெதுவாக சென்றபடியால் டைனமோவும் மெதுவாகவே சுழன்று மங்கலான வெளிச்சத்தை கொடுத்தது. கறுப்பு வானமும், நீண்ட வீதியும், மழையில் நனைந்து கூனிப்போன மாஸ்ரரின் முதுகும், வெட்டவெளியில் தனியாக நின்ற பனைமரம் ஒன்று இடி விழுந்து எரிந்துகொண்டிருந்ததும் என்னுடைய அன்றைய மன நிலையில் அப்படியே பதிந்து போனது. ஒழுங்கைகளில் வெள்ளம் வடிந்து கொண்டிருந்தது. வாத்தியார் எங்கள் வீட்டுப் படலையில் என்னைக் கொண்டுவந்து இறக்கி விடும்போது மணி பத்துக்கு மேலாகிவிட்டது. ‘பார்த்துப்போ’ என்று சொல்லிவிட்டு மாஸ்ரர் சைக்கிளை திருப்பிக்கொண்டு போனார்.

வீடு இருட்டில் மூழ்கிக் கிடந்தது. எல்லோரும் தூங்கப் போய்விட்டார்கள் என்றே நினைத்தேன். ஒரேயொரு கைவிளக்கு எரிய அம்மா எனக்காக தூங்காமல் காத்திருந்தார். நான் ஒரு பெரிய ஆள், ஏதோ முக்கியமான காரியமாக வெளியே போய்விட்டு வருகிறேன் என்பதுபோல அம்மா எனக்காகக் கண் விழித்திருந்ததை இன்றுவரைக்கும் என்னால் மறக்க முடியாது.

என்னைக் கண்டதும் அம்மா கட்டி அணைத்து, தலையைத் தடவி ஈரம் இல்லையென்று உறுதி செய்த பிறகு ‘பிள்ளை உனக்கு நல்ல பசி. வா, நான் சாப்பாடு போடுறேன்’ என்றார். அன்றைய பேச்சுப் போட்டியில் என்ன நடந்தது என்றோ, நான் எப்படிப் பேசினேன் என்றோ, யாருக்கு பரிசு கிடைத்தது என்றோ ஒரு வார்த்தை அவர் என்னிடம் கேட்கவில்லை. கையிலே வெற்றிக் கிண்ணம் இல்லாததைப் பார்த்துவிட்டு என்னைக் கேள்வி கேட்டு வேதனைப் படுத்தக் கூடாது என்று நினைத்திருக்கலாம்.

அன்று அம்மா விசேஷமாக சமைத்திருந்தது தெரிந்தது. நான் வெற்றிக்கிண்ணம் கொண்டுவருவதை கொண்டாடுவதற்காக இருக்கலாம். கோப்பை நிறைய சோறு பரிமாறி, அதற்கு மேலே பலவிதமான கறிவகைகளை பரப்பி வைத்து, பிசைந்து ஓர் அபூர்வமான மணம் கொடுக்கும் குழையலை கைப்பிடியில் உண்டாக்கி ஒவ்வொரு வாயாக வைத்து வயிறாரச் சாப்பிட்டேன். படுப்பதற்கு பாயும் தலையணையும் பக்கத்தில் தயாராக இருந்தாலும் அம்மாவுக்கு அன்று நடந்த பேச்சுப் போட்டி விவரங்களை முழுவதுமாகக் கூற வேண்டும் என்று நினைத்துக்கொண்டேன். ஒரு கொட்டைப்பாக்கு அளவில் இருக்கும் மூன்றாவது பரிசுக் கிண்ணம், அதுகூட கிடைக்காததன் காரணத்தை நான் அம்மாவிடம் சொல்லவேண்டும். நான் நாலாவதாகக்கூட வரவில்லை. ஏழோ, எட்டோ அதற்கு மேலோ இருந்தேன்.

‘அம்மா, கெதியாய் வாங்கோ’ என்றேன். ‘வாறன், வாறன். எல்லாம் முடிஞ்சு போச்சு.’

உண்ட களைப்பில் தாழ்வாரத்து சுவரில் தலையை சாய்த்து அம்மாவுக்காகக் காத்திருந்தேன். இரட்டைப்பின்னல்காரி, அவள் தலையளவு கோப்பையை தூக்கிக்கொண்டு போனது ஞாபகத்துக்கு வந்தது. துள்ளித் துள்ளிப் பேசின கறுப்பு பையன் வென்ற கோப்பையும் பெரிசாக பளபளவென்று இருந்தது. ஏழாம் வீட்டுக்கு அதிபதியான புதன் அன்று என்னை மறந்து இன்னும் பெரிய தந்திரக்காரனுக்கு உதவப் போயிருக்கலாம். மெல்ல மெல்ல கண் அயர்ந்துகொண்டு வந்தது. அம்மா சமையலறையில் தனியாக உட்கார்ந்து கைவிளக்கு வெளிச்சத்தில் சாப்பிட்டுவிட்டு, சோற்றுப் பானையை மூடி, கறிச் சட்டிகளை கழுவி, பாத்திரங்களையும் தண்ணீர் குவளைகளையும் அலம்பி, துடைத்து அடுக்கி வைத்து, சமையலறையை கூட்டித் துப்புரவாக்கி அடுத்தநாள் காலைச் சமையலுக்கு வேண்டிய ஆயத்தங்களை செய்யும் சத்தம் வெகுநேரமாக எனக்கு கேட்டுக் கொண்டிருந்தது.

muththu@thaiveedu.com

■ ■ ■

**தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம். விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.**

***E-mail:thaiveedu@gmail.com***
***Fax: 416-849-0594***
***Tel: 416-646-3422***

**Homelife/GTA Realty Inc Brokerage**
1711 Mccowan Rd , #208
Toronto,Ont,M1S 3Y3
TEL:416-321-6969 Fax 416-321-6963



**Baskaran Sinnadurai**
Cell:416-880-8585
eMail: trabask@yahoo.ca

# COMMERCIAL PROPERTIES



Well Established Business For 25 Years.Very Low Rent Canada Post, Purolator, Greyhound Bus Depot, Lotto 639, Nevada Tickets. Lease 5Yr + 5Yr ONLY 129,000


Land with house in developing are ONLY 599,000


Indestrial space of 3,000 sq feet ONLY 338,000


தமிழர் உணவுச்சாலை $49,990


Space for banquet hall easy acces to high way


Mote with property in highway ONLY 325,000



# MORTGAGE

- 1st & 2nd Mortgages
- New Immigrants / Self Employed
- Refinance
- Equity Line of Credit
- Renewal
- All other Financial Arrangement

**Kethes Sivasubramaniyam**
Mortgage Agent - (Lic # M08006105)

**Cell : 416.873.5780**



Via Financial Services Inc.
(Lic # 10669)

My Office :
5200 Finch Ave. E,
Suite 304,
Scarborough, ON.
M1S 4Z5
Tel : 416-548-8005

Head Office :
120 Traders Blvd.
Suite 206,
Mississauga, ON.
L4Z 2H7



**வருமானவரிச்சேவையில் பலவருடம் அனுபவம் வாய்ந்தவர்களினால் நம்பிக்கையான சேவை**

EFILE

- Personal Tax
- Small Business Tax
- E-File Services
- Arrange RRSP
- Maximum Refund
- Tax Saving Advice




**KETVAR**
**TAX & ACCOUNTING**
304-5200 Finch Ave.E, (Middlefield & Finch)
Toronto. ON M1S 4Z5
Tel : 416-873-5780 / 416-548-8005
Email : ketvar@gmail.com

# Rumble in the jungle - காட்டிலை கலகம்



ராகுலன்
- Accountant -

1974 Octoberஇல் குத்துச்சண்டை வீரர்களுள் எல்லாம் பெரும் வீரன் முகமது, அலியும் இரும்பு மனிதன் எனப்பட்ட ஜோர்ஜ் போமனும் (Gorge Foreman) மோதினார்கள். Rumble in the jungle எனப்பட்ட அந்த சண்டை பொருளாதார பின்னடைவு நேரத்தில் வரக் கூடிய சந்தர்ப்பங்களை தனதாக்கிக் கொள்ளும் பாடங்களை தந்திருக்கிறது. சுறுசுறுப்புடன் அபரிமிதமான ஆற்றலையும் கலந்து பொருளாதார தாக்கங்களுக்கு ஆரோக்கியமாக முகம் கொடுக்க அங்கு அறிவுரை இருக்கிறது.

வலிமையுடன் உறுதியும் கொண்ட Gorge Foreman எதிராளியின் குத்துக்களைத் தாங்கிய வண்ணம் எதிராளி களைத்தவுடன் தனது தாக்குதல்களை ஆரம்பிக்க கூடியவர். ஆனால் முகமது அலியோ வண்ணத்துப் பூச்சியைப் போல மிதந்து ஒரு குளவியைப் போல் குத்தக் கூடியவர். ஆகவே இந்தச் சண்டையை தாங்குதிறனுக்கும் சுறுசுறுப்புக்கும் வரக்கூடிய சண்டை எனவே எல்லோரும் எதிர்பார்த்தார்கள். ஆனால் முகம்து அலியோ தனது பயிற்சிகளை வித்தியாசமாக மேற் கொண்டு Gorge Foreman அவர்களை களைக்கச் செய்து வெற்றியீட்டினார். முகமது அலியினது இந்த சுறுசுறுப்பும் தாங்கு தன்மையும் நிறுவனங்களுக்குத் தேவையாகும்.

சுறுசுறுப்பான இயக்கம், கொள்ளவு, குவியப்படுத்தப்பட்ட வியாபார வடிவமைப்பு என்பன இருந்தால் சந்தர்ப்பங்களை அடையாளம் கண்டு இயக்கத்தை விரைவுபடுத்தலாம். இதில் முக்கியமாக வேகமும் வினைத்திறனுடன் கூடிய நிறைவேற்றுதலும் தேவையாகும். நிறுவனங்களுக்கு வேகமாக வளங்களை இடமாற்றும் திறன் தேவையாகும். பணம், திறமை, நிர்வாகத்தின் கவனம் என்பன லாபம் குறைந்த அலகில் இருந்து லாபம் கூட வரும் அலகிற்கு வேகமாக மாற்றப்பட வேண்டும்.

அண்மையில் நடத்தப்பட்ட படிப்பு ஒன்றும் இந்த வளங்களை மாற்றும் திறன் முதன்மையான வருமானத்தை அதிகரிக்கும் காரணிகளாக கூறப்பட்டுள்ளது.

அத்துடன் நிர்வாகிகள் வேகமாக புதிதாக வரும் சந்தர்ப்பங்களை பாவித்துக் கொள்ளவும் விழிப்புடன் நடந்து கொள்ளவேண்டும். இது புதிய வாடிக்கையாளர்களை எடுத்தல், புதிய சந்தைக் கூறுகளை அடையாளம் காணுதல், புதிய தொழில்நுட்பங்களை அமல் படுத்துதல் என்பனவாகும்.

இன்னும் மாற்றமில்லாத செலவுகளைக் (Fixed cost) குறைத்தல். இதனால் பணத்தை சேமிக்க முடியும். அந்த பணம் புதிய சந்தர்ப்பங்களை அடையவும், பாதகமான காலத்தை தாண்டவும் உதவும்.



பண வருவாய் (Cash Flow) பல அலகுகளில் இருந்து கிடைக்க வேண்டும். (Cash flow from multiple sources) இது பல வளமான அலகுகளைப் பாதுகாக்க உதவும். ஊழியர் களின் எண்ணிக்கை அளவுக்கு அதிகமானால் அதைக் குறைத்தல். வாடிக்கையாளர்களின் விசுவாசத்தை வைத்திருக்க முடியுமானால். அவர்களிடம் இருந்து வரும் வியாபாரம் பாதகமான சூழ்நிலையைக் கடக்க உதவும்.

இந்த நேரத்தில் அரசாங்கத்திடமிருந்தோ அல்லது ஒரு அரசாங்கத் திணைக்களத்திடமிருந்தோ அல்லது ஒரு முதலீட்டாளர், வாடிக்கையாளரிடமிருந்தோ முதலைப் பெறுவது சரியான செயலாகும். (Bail out)

இவை எல்லாவற்றுடனும் தொடர்புகளை ஏற்படுத்தி வலிமைப் படுத்துதல் முக்கியமானதாகும்.பலரும் தொடர்புகளை (Networking) ஏற்படுத்துதல் என்பது வர்த்தக சோலையில் உங்கள் விலாச அட்டைகளைக் கொடுத்தல் என நினைக்கிறார்கள். ஆனால் அதை விட தொடர்புகளை ஏற்படுத்துதல் உங்களைச் சார்ந்தே ஆரம்பமாகிறது. உங்கள் நண்பர்கள் உறவினர்கள் ஏற்படுத்தும் உறவுகள் இறுக்கமாக இருக்க வேண்டும். நீங்கள் வேலை செய்யும் இடத்திலேயே பல சந்தர்ப்பங்கள் இருக்கலாம். வாரத்துக்கு ஒருமுறை ஒரு நண்பருடன் என உங்கள் மதிய உணவை முதலிட்டால் நாங்கள் பல விடயங்களை அறிவுடன் உங்கள் உறவைப் பலப்படுத்தவும் முடியும். உங்களுக்கு அறிவுரை ஆலோசனை வழங்கக்கூடியவர்களை தேடுங்கள். அவர்கள் தரக்கூடிய ஆலோசனைகள் சில நேரங்களில் மிகவும் பெறுமதியானதாக இருக்கும்.

வர்த்தக சூழலில் சிலநேரங்களில் உடலில் பலமும், வீரமும் இருக்கிறது என்பதை காட்ட வேண்டிய சந்தர்ப்பங்கள் இருக்கலாம். ஆனால் நல்ல நோக்கத்துடன் கூடிய மனோ பலமும் வீரமும் (Moral courage) ஒவ்வொரு நாளும் தேவையாகும்.

உங்களுடைய எண்ணத்தில் கருவாக இருக்கும் ஒரு ஆலோசனையை செயல் வடிவில் கொண்டு வருவதற்கும், அதனை இறுதி வடிவில் கொண்டு வருவதற்கும், நிறைய சிந்திக்க வேண்டும்.

சபையிலே, சமூகத்திலே ஈடுபாடுகளைக் காட்டினால் அங்கிருந்து உங்களுக்கு, தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ள முடியும்.

உங்களின் குறைகளை நண்பர்களிடமும் நெருங்கியவர்களிடமும் விசாரித்து அறிவதன் மூலம் அவற்றை நிவர்த்தி செய்து கொள்ளலாம். அத்துடன் அவர்களின் ஆலோசனைகள் உங்களை சரியான பாதையில் இட்டுச் செல்லும்.

ஒரு சாதாரண குத்துச் சண்டையில் நல்ல விசயம் இருக்கிறதா என நீங்கள் சிந்திக் கலாம். ஆனால் வடஅமெரிகாவில் சமயம் (religion) பணம்தான். அது இங்கு எங்கும் எதிலும் இருக்கிறது என உணர்ந்திருப்பீர்கள். இதை உணர்ந்தால் நீங்களும் அதைப் பார்க்கலாம்.

ragulan@thaiveedu.com

■ ■ ■

# குளிர்காலமும் உடல் வெப்பநிலையும்

குளிர்நாடுகளில் சில நாட்கள் மிக குளிர்ச்சியான தட்ப வெப்ப நிலை நிலவும். அந்த நேரங்களில் நாம் எப்படியான முறையில் அவசரகால குளிர் நிலைக்கான எச்சரிக்கை அறிவிப்பை பின்பற்றலாம்.

நம்மில் பலரும் பஸ் அல்லது காருக்காக காத்திருக்கும் போது மிகவும் ஆபத்தான விளைவு ஏற்படாலம். ஏனென்றால் கடுங் குளிரில் நம் தோல் விரைவில் உறைந்து போய்விடும்.

நம் உடல் பல்வேறு வழிகளில் வெப்பத்தை இழக்கிறது. ஒரு சிறிய தொப்பி அணிந்திருந்தாலும் கூட வெப்பம் வெளியேறுவதை நாங்கள் தடுக்க முடியும். “எங்கள் உடலிலுள்ள ரத்தத்தின் பெரும் பகுதி மூளைக்கு செல்கிறது. அப்போதுதான் மூளை சரியாக சிந்திக்க முடியும். எங்கள் உடல் சூடாக இருப்பதற்கும் ரத்தம் தான் காரணம். எனவே எங்கள் உடலின் வெப்பத்தில் அதிக அளவு மூளை மூலம்தான் வெளியேறுகிறது” ஆகவே குளிரை தடுப்பதற்கு தலைக்கு தெப்பி ஒன்றை அணிவது மிக மிக அவசியம்,

### சொகுசுக் கண்ணாடி

பனி பொழிந்திருக்கும் காலங்களில் பனியில் பட்டுத் தெறிக்கும் சூரியஒளி கண்களுக்கு தீங்கு செய்யக் கூடியது. ஆகையால் கருப்பு நிற அல்லது ஊதா நிற வண்ணக் கண்ணாடிகளை அணியவேண்டும். “மேலும் குளிர்காலத்தில் உடல் வரண்டு போய்விடும். எனவே ஈரப்படுத்தும் ஏதாவது தைலத்தை, உதடு மற்றும் உடலில் தடவுங்கள். இது உங்களுக்கு சிறந்த பயனைத் தரும். தோல் மேலும் உலர்வதை தடுக்கும். அத்துடன்



அது ஒரு மெல்லிய படலமாக இருந்து வெப்ப இழப்பை தடுக்கும். உங்களுக்கும் குளிலுக்கும் இடையே ஒரு மெல்லிய படலத்தை உருவாக்கும்”

“உங்கள் உடல் பாதுகாப்பின்றி, நல்ல உடையின்றி இருந்தால், கடுங்குளிரினால் உடலில் புண் அல்லது வெடிப்பு ஏற்படும். முடியுமானவரை உடலில் முழு பாகத்தையும் மூடிவிட வேண்டும்”.

### பாதுகாப்பு

உங்களிடம் ஒரு செல்போன் இருந்தால் அதை எப்பொழுதும் முழு Chargeசுடன் இருக்குமாறு வைத்துக் கொள்ளுங்கள். ஏனென்றால் கடுங்குளிரில் பட்டரி (Battery) மிக விரைவில் சக்தியினை இழந்து பலவீன மாகிவிடும். உங்களிடம் செல்போன் இல்லையென்றால் நீங்கள் எங்கு செல்கிறீர்கள் என்பதை மற்றவர்களிடம் கூறிவிட்டு செல்லுங்கள். நீங்கள் செல்லும் வழியில் கடும் குளிரினால் ஏதாவது பாதிப்பு நிகழ்ந்தால் விரைந்து உங்களைக் காப்பாற்றுவதற்கு உதவியாக இருக்கும்.

### கால்கள்

பருத்தி துணி குளிரை தடுக்கும் ஒரு பெரிய தடுப்பாக இருக்காது. அது நீரை உறிஞ்சும் தன்மை உடையதென்பதால் எளிதில் ஈரமாகிவிடும். மேலும் ஈரம் காய்வதற்கும் நேரமாகும். குளிரை தடுப்பதற்கு நவீன இழைகளால் நெய்யப்பட்ட ‘பேப்ரிக்’ ஆடைகளை பயன்படுத்துங்கள் ஈரம் உடனே காய்ந்து விடும்.

### பாதங்கள்

நீங்கள் உங்கள் காலடியை பனிச் சகதியில் எடுத்து வைத்தால் உங்கள் பாதங்கள் ஈரமாகிவிடும். வெப்பக் கடத்தல் மற்றும் வெப்பம் ஆவியாகுதல் மூலம் நீங்கள் வெப்பத்தை இழப்பீர்கள். உங்கள் பாதங்கள் தொடர்ந்து உலர்ந்து இருப்பதற்கு காலணிகள் அவ்வளவு தூரம் உதவாது. ஆகவே குளிரின் தாக்கத்திலிருந்து தப்புவதற்கு தேவை இல்லாத நேரங்களில் வெளியில் செல்லாதீர்கள்.

நன்றி: Jannuary 16. 24 Hours.

■ ■ ■

# முகவரி காட்டும் முகவர்களாய் நாங்கள், வீடு வாங்க விற்க அழையுங்கள்



**HomeLife/Future Realty Inc., Brokerage***
7 Eastvale Dr, Suit 205, Markham On. L3S 4N8
**Bus.: 905-201-9977 Fax : 905-201-9229**
www.realhouse.ca
*Independently Owned and Operated, REALTOR



**தமிழ் சுப்பிரமணியம் (செல்வன்)** | **முகுந்தன் நடராஜா**

## Thamil Suberamaniam (Selvan)
Sales Representative
**Direct : 416.358.6200**
Email : thamilrealtor@gmail.com

## Mugunthan Nadarajah
Sales Representative
**Direct : 416.276.8025**
Email : homelifemugunthan@gmail.com

**9th Line & 16th Ave.**

**$369,900**
4 Bedrooms, 3 Washroom

**Morningside & Finch**

**$479,900**
4+2 Bedrooms, 5 Washroom

**Tounton/Harmony**

**$459,900**
4 Bedrooms, 4 Washroom

**Markham & Passmore**

**$329,900**
3+1 Bedrooms, 4 Washroom

**Markham & Steeles**

**$459,900**
3 Bedrooms, 3 Washroom

**Markham & Passmore**

**$359,900**
3 Bedrooms, 3 Washroom

**Morningside & Sheppard**

**$319,900**
3+1 Bedrooms, 3 Washroom

**Neilson & Finch**

**$249,900**
3+1 Bedrooms, 4 Washroom

**Neilson & Mclevin**

**$219,900**
3+1 Bedrooms, 3 Washroom

**Markham & Finch**

**$224,900**
4+1 Bedrooms, 3 Washroom

**Neilson & Sheppard**

**$249,900**
3+1 Bedrooms, 2 Washroom

**Markham & Sheppard**

**$259,900**
3 Bedrooms, 3 Washroom

**Hwy 7 / 9th Lane**

**$499,500**
5 Bedrooms, 4 Washroom

**Markham & Steeles**

**$334,900**
3 Bedrooms, 3 Washroom

**Rutherford/Weston Rd**

**$389,900**
3 Bedrooms, 3 Washroom

**Hwy7 & 9th Line**

**$139,900**
2+1 Bedrooms, 2 Washroom

**Markham & Sheppard**

**$279,000**
3+1 Bedrooms, 2 Washroom

**Markham & Denison**

**$269,900**
3 Bedrooms, 2 Washroom

**Staines & Steeles**

**$469,000**
4 Bedrooms, 3 Washroom

**Taunton/Audley**

**$319,900**
4 Bedrooms, 3 Washroom

**Make the Right Move, at the Right Time, with the Right Professional**

# கீரை உணவு வகைகள்

# முருங்கைக் கீரை

## கீரை உணவு - 4




ஒரு தவறான கருத்து நம்மிடையே நிலவுகிறது. நமது நாடுகளில் சில கீரைகள் வயல்களி-லும் வரப்புகளிலும் தாமாகவே வளர்வதாலும், கடைகளில் மலிவான விலைக்குக் கிடைப்ப தாலும் அவை சத்துக் குறைந்த உணவு என்று சிலர் நினைக்கிறார்கள். சந்தையில் ஒரு மலிவான பொருளைக் கண்டால் அதனை மெத்தனமாகப் பார்ப்பது பழகிப் போய்விட்டது. மலிவான விலையில் கிடைக்கும் கீரை வகைகளிலும் பார்க்க அதிக விலை கொடுத்து வாங்கும் கீரை வகைகளில் கூடிய சத்துக்கள் இருக்கின்றன என்றும் சிலர் கருதுகிறார்கள். இந்தக் கூற்றை மருத்துவர் கள் மறுக்கிறார்கள். கீரைகளில் வைட்டமின் ஏ, பீ, சீ சத்துக்களும் சுண்ணாம்புச் சத்தும் இரும்புச் சத்து ஆகியவையும் அதிகமாகக் கிடைக்கின்றன. ஒரு கிலோ முளைக் கீரை-யில் உள்ள வைட்டமின் ஏ சத்தையும், ஒரு கிலோ அகத்திக் கீரையில் உள்ள சுண்ணாம்-புச் சத்தையும் ஒரு கிலோ அரைக் கீரையில் உள்ள இரும்புச் சத்தையும் பெறுவதற்கு பல கிலோக்கள் வாழைப்பழமும் ஆப்பிள் பழமும் அன்னாசிப் பழமும் சாப்பிட வேண்டும் என்று சொல்லுகிறார்கள்.

கீரையுணவு எல்லோருக்கும் ஏற்றது. கீரை உணவை எந்த அளவுக்குச் சாப்பிடுகிறோ-மோ அந்த அளவுக்கு உடல் ஆரோக்கியமும் நலமும் அமையும். ஆதனால் நாளாந்தம் கீரையை ஏதாவது வகையில் உணவில் சேர்த்துக் கொள்ள முயல வேண்டும். எத்த னையோ வகையான கீரைகள் இருக்கின் றன. அவற்றில் எங்களுக்குப் பிடித்தமான ஏதாவது ஒரு கீரையை ஒவ்வொரு நாளும் சேர்த்துக் கொள்ளலாம். சில கீரைகளைச் சுத்தமாக்கிப் பச்சையாகவே சாப்பிடலாம். மேலும் சில கீரை வகைகள் வருமாறு: புளிச்-சங்கீரை, பூக்கோசு, பொன்னாங் காணிக் கீரை, கரிசலான் கண்ணிக் கீரை, மணத்தக் காளிக் கீரை, அரமுசுட்டைக் கீரை, முசு-முசுக்கைக் கீரை, முருங்கைக் கீரை ஆகியன. இந்தக் கட்டுரையில் முருங்கைக் கீரையைப் பார்ப்போம்.

இலங்கை இந்திய மக்களின் 'வயாகரா' முருங்கையா வெங்காயமா என்று ஒரு பட்டி-மன்றம் நடந்தது. முருங்கைக் கட்சிக்காரர் முறுக்கிக்கொண்டு நின்றார்கள். வெங்காயக் கட்சியினர் வரிந்துகட்டிக்கொண்டு வந்தார்கள். விவாதம் உச்சத்துக்குப் போய்ச் சூடு பிடித்த நேரத்தில், முருங்கைக் கட்சி, தாளி, தூது-ளை, பசளி, அறுகீரைக் கட்சியினருடன் கூட்டணி அமைத்துக் கொண்டது. வேறு வழி இல்லாமல் வெங்காயம் வெளியில் இருந்து ஆதரவு தருவதாகக் கூறிற்று. இப்படியும் ஒரு கதை இதற்கும் ஒரு பாடடல்!

வாதாளி முருங்கைத் தழைதூ
துணம்பசலை
வாளிவறு கீரையுநெய் வார்த்துண்ணில்
ஆளியென
விஞ்சுவார் போகத்தில் வீம்புரைத்த
பெண்களெல்லாங்
கெஞ்சுவார் பின்வாங்கிக் கொள்.

இந்தப் பாடலுக்குப் பொருள் எழுதச் சங்கட மாக இருக்கிறது. நீங்களே பதம் பிரித்துப் பொருள் அறிந்து பயன்படுத்திச் சந்தோஷமாய் இருங்கள்!

உலகத்திலேயே அதிக சத்துக்களும் அதிக பயன்களும் உள்ள தாவரங்களில் முருங்கை-யும் ஒன்று. தென்னாசிய நாடுகளில் இது பொதுவாக வீட்டுத் தோட்டங்களில் வளரும். வெப்பவலய நாடுகளில் வேகமாக வளரக் கூடிய முருங்கை மரம் மனித உணவுக்காக, கால்நடைகளின் உணவுக்காக மற்றும் மருத்துவம், சாயம், நீர் சுத்திகரிப்பு ஆகிவற்-றிற்குப் பயன்படுகின்றது.

தமிழில் ஒரு சொலவடை இருக்கிறது. அத ன் முதலடி “முருங்கையை முறித்து வளர்” என்பது. (அடுத்த அடியை அடித்தாலும் சொல்லாமாட்டேன் சொன்னால் பொலிஸ்





வரும்!) முருங்கை இலையைக் காய்களைப் பறிக்கும் போது அல்லது பலமாகக் காற்று அடிக்கும்போது முருங்கையின் கிளைகள் முறிந்து விழுந்து விடுவதுண்டு. அப்படியான தடிகளை அல்லது நாமாக ஒரு முருங்கைத் தடியை வெட்டி இன்னொரு இடத்தில் நாட்-டினால் அது எளிதாக முளைத்து வளரும். வீட்டுத் தோட்டங்களில் முருங்கைக்கு யாரும் உரம் போடுவதோ கிரமமாக நீர் ஊற்றுவதோ கிடையாது. அது இயற்கை-யோடு ஒட்டி இயல்பாக வளரக்கூடிய ஒரு மரம். ஆனால் முருங்கையின் பல்வேறு பயன்களை ஆராய்ந்த ஆய்வாளர்கள் முருங்-கையைப் பெரிய தோட்டங்களில் பெரும் அளவில் உண்டாக்கி அதன் பயனையும் அதிக அளவில் பெறுவதற்குச் சில வழி-முறைகளைக் கூறியிருக்கிறார்கள். அதன்படி, குறைந்த பட்சம் ஓராண்டு வயதான மரத்தி-லிருந்து 45 – 150 செ.மீ. நீளமும் 4 – 16செ.மீ. குறுக்களவும் கொண்ட கழிகளை வெட்டி, மூன்று நாட்களுக்கு நிழலில் வாடவிட்டு நாட்டலாம். விதைகளை மண்சாடிகளில் விதைத்து வளர்த்தெடுத்து நிலத்தில் நாட்-டலாம். விதைகளை நேரடியாக நிலத்திலும் நாட்டலாம். மேலும், இத்தகைய முருங்கைக்-கான தட்ப வெப்ப நிலை, உரவகை, பூச்சி மருந்துவகை பற்றியெல்லாம் ஆய்வறிக்கை கள் வந்துள்ளன.

சமீபத்தில் இந்தியாவில் PKM 1 PKஎன்ற ஓர் இனத்தைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். இந்த மரங்களில் அதிக சதைப்பற்றுள்ள பெரிய காய்கள் நிறையக் கிடைக்கின்றன. அத்துடன் மிகுந்த சுவையும் அதிக சாறு-முள்ள இலைகளும் அதிகமாகக் கிடைக் கின்றன. முருங்கை இலை லேசான துவர்ப்புச் சுவை உள்ளது. முருங்கை இலைகளில் ஆரஞ்சுப் பழத்திலும் பார்க்க 7 மடங்கு வைட்டமின் “சீ” இருக்கிறது. பாலிலும் பார்க்க 4 மடங்கு கல்சியமும் 2 மடங்கு ஊட்டப் பொருளும், காரட்டிலும் பார்க்க 4 மடங்கு வைட்டமின் “ஏ”யும், வாழைப்பழத்-திலும் பார்க்க 3 மடங்கு பொட்டாசியமும் கிடைக்கின்றன. ஒரு கோப்பை முருங்கைச் சாற்றில் 9 முட்டை அல்லது அரைக் கிலோ வெண்ணெய் அல்லது 8 கோப்பை பாலில் இருக்கக் கூடிய வைட்டமின் “ஏ” சத்து இருக்கிறதாம்.

முருங்கைக் கீரையை உணவில் சேர்ப்பத-னால் வரும் பயன்களைப் பார்ப்போம். முருங்கைக் கீரையை குழம்பாகவோ பொரியலாகவோ செய்து சாப்பிட்டால் சுவையாகவும் உடலுக்கு ஆரோக்கியமாக-வும் இருக்கும்.

முருங்கைக் கீரையில் இரத்தத்தை சுத்தப்-படுத்தும் இரும்புச் சத்து இருப்பதால் விந்தி-னைப் பெருக்கி வீரியத்தை விருத்தியாக்கி ஆண்மை நரம்புகளை முறுக்கேற்றும். இதனால் மூலிகை மருத்துவம் இதை “விந்து கட்டி” என்று கூறுகின்றது. உடலில் உள்ள கொழுப்புச் சத்துக் குறையும். நீரிழிவு நோயாளிகளுக்கு மிகவும் நல்லது. இந்தக் கீரையினால் இரத்த அழுத்தம் கட்டுப்படும். கண் பார்வை சீராக இருக்கும். கண் நோய், அக்கினி மந்தம், உட்சூடு, தலைவலி போகும். முருங்கை இலைகளை நெய்யில் வதக்கிச் சாப்பிட்டால் இரத்த சோகை உள்ளவர்களின் உடம்பில் நல்ல இரத்தம் ஊறும். பற்கள் உறுதியாகும். தோல் வியாதிகள் தீரும்.

முருங்கைக் கீரை மலச்சிக்கலைப் போக்-கும். முருங்கைக் கீரைச் சாற்றில் உப்புப் போட்டு அருந்தினால் மாதவிடாய் காலத்தில் ஏற்படக்கூடிய வலி போகும். வயிற்றுப் புண் ஏற்படாது. பிற மருந்துகளின் பக்க விளைவு களைத் தடுக்கும். சிறுநீரைப் பெருக்கும். இருதய நோயைத் தவிர்க்கலாம். கர்ப்பிணிப் பெண்கள் வாரம் ஒரு முறை சாப்பிட்டு வந்தால் நீர் இறங்கும் கை, பாதங்களில் ஏற்படக்கூடிய வீக்கத்தைத் தடுக்கும் சோகை போகும். முருங்கைக் கீரைச் சாற்றை அருந்-தினால் மூக்கில் நீர் வழிதல், உள் நாக்கு இருமல், இளைப்பு ஆகியன குணமாகும். முருங்கை இலைச் சாற்றுடன் எலுமிச்சைச் சாறு கலந்து தடவ முகப் பருக்கள் மறை யும். முருங்கைக் கீரையை வேர்க் கடலை யுடன் சேர்த்துச் சாப்பிட கர்ப்பப்பை பலமாகும்.

ஒரு மரமோ அல்லது செடியோ வேர் முதல் இலை ஈறாகப் பயன் தருவதை சமூலம்

48ம் பக்கம் பார்க்க...

FOR ALL MORTGAGE NEEDS

Canada Trust Scotiabank™

2929 Lawrence Ave. East, Suite 203,
Scarborough, ON M1P 2S8
Head Office: 701 Evans Ave., Suite 600, Toronto, ON M9C 1A3
rajmoganselliah@invis.ca

Rajmogan Selliah
Mortgage Consultant

Dir: 416.569.3200
Bus: 416.430.0111, Fax: 416.430.0222



எண்ணித்துணிக கருமம் துணிந்த பின்
எண்ணுவம் என்பது இழுக்கு.

உங்கள் கடன் பிரச்சினைகளை
தீர்க்கும் போது
அதனால் உருவாகும் நன்மை தீமைகளை
சரியாக அறிந்துள்ளீர்களா?

நீங்கள் எடுக்கும் நடவடிக்கையால்

- எதிர்காலத்தில் உங்கள் பிள்ளைகளின் கல்விக்கோ, அவர்களின் தொழில்துறைக்கோ பாதிப்புக்கள் வருமென எண்ணுகிறீர்களா?
- நீங்கள் ஒரு புதிய வேலைக்கு செல்லும்போதோ அல்லது வேறு வேலைக்கு மாறும்போதோ பிரச்சினைகள் வருமென்று எண்ணுகிறீர்களா?
- எதிர்காலத்தில் ஸ்பொன்சர் செய்யும் போது ஏதாவது பிரச்சினைகள் வருமென எண்ணுகிறீர்களா?
- உங்கள் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்படுமென எண்ணுகிறீர்களா?

இவைபோன்ற பல கேள்விகளுக்கு சரியான பதில்களை அறிந்துகொள்ள
இத்துறையில் பலவருட கால அனுபவமுள்ள
பல்லாயிரக்கணக்கான தமிழ்மக்களின் கடன் பிரச்சினைகளைத் தீர்த்துவைத்த

CRCanada
அழையுங்கள்
சங்கர் அல்லது கிறிஸ்

Having Difficulty
Repaying
Your Student Loan?
New Rule Changes
Can Help

உங்களுக்குத் தெரியுமா?

நீங்கள் கட்டவேண்டிய கடன் தொகையிலிருந்து 15%-20%த்தை மட்டும்
தவணை முறையில் கட்டிமுடிக்கலாம்.



T.SHANKAR
Director

CRCanada
Credit Reform Canada
*Judgement in your favour!*
885 Progress Ave, Unit - 202, Scarborough.
CRCanada 416-264-1010

# Your life.
# Your career.
# *Your call.*

If you're looking for a career that offers the potential for financial success and have the drive, discipline, energy, and self-confidence to run your own business, then consider becoming a Sun Life Financial advisor. Contact us to learn more about this rewarding career opportunity.



**Chandran Rasalingam**
Sales Manager
Bus 416-412-0401 ext 305
Cell 416-909-0400
Fax 416-412-1438
gnanachandran.rasalingam@sunlife.com

2075 Kennedy Road, Suite 1300
Scarborough ON M1T 3V3

Sun Life Financial

Sun Life Financial advisors are contracted with Sun Life Financial Distributors (Canada) Inc., registered in Quebec as a financial services firm.
© Sun Life Assurance Company of Canada, 2008.

# பாதுகாப்பான மற்றும் சௌகரியமான உறக்கம்



## பாதுகாப்பு

Solutions of Home Security Inc.

Authorized Dealer ADT Security Services

### How do Burglars Get into your home?

Statistics show that burglars enter homes using the following entrances,

- 2% from the 2nd floor
- 4% from the basement
- 6% using unlocked entrances
- 9% from the garage
- 22% from the back door
- 23% from the 1st floor windows
- 34% from the front door

உங்கள் இல்லங்களைப் பாதுகாத்துக்கொள்ள இன்றே அழையுங்கள்

E-mail: info@quickhomesecurity.com
Web: www.quickhomesecurity.com

## சுத்தம்

### For all kind of Vacuums

- Central Vacuum Systems
- Commercial Vacuums
- Comfortable & easy to use Vacuums
- Clean hard-to-reach areas
- Great for pets and allergens
- Environmentally friendly products
- Less Energy and Resources
- Whole house cleaning convenience
- Central Vacuum Power Units
- Central Vacuum Yellow Jacket

**Contact Raman Appliances for all your Cleaning needs and enjoy the comfort of your home.**

EUREKA® Invented for the way you clean
Authorized Dealers



## இதமான காலநிலை



### For all your Heating Needs

**Gas Furnaces:**
Every model in our Freedom® Furnaces family is designed to provide maximum heat for minimum fuel usage. The ultimate models even reduce temperature swings and short cycling.

**Oil Furnaces:**
Our oil furnaces are durably constructed with only the finest materials and components. So you can rest easily and warmly. Freedom® 80 oil furnaces heat your home quickly and efficiently, even during the toughest winters.



### For all your Cooling Needs

Stay cool and save a comfortable amount of money with American Standard Air Conditioning's line of Allegiance® air conditioners. Our air conditioners range in efficiency from 13 to 18+ SEER - among the highest efficiency ratings in the industry.

Our Allegiance® family offers a wide range of comfort choices, plus exclusive state-of-the-art technology the quietly, meticulously and efficiently conditions your air. Get ready for a level of comfort you and your family may never have experienced before.

American Standard Heating & Air Conditioning
Authorized Dealers

Heating & Air-conditioning Contractors.
Raman Appliances Inc.
www.raheatingcooling.com

## Raman Appliances

# Raman Chelliah



3021 Markham Rd. Unit 51, Scarborough ON. M1X 1L8

**Tel: 416.332.1989**

**Cel: 647.893.4414**

Fax: 416.332.4967
E-mail: info@raheatingcooling.com

# எல்லாமும் எல்லோரும் பெற வேண்டும்



## Non Medical Insurance up to Age 85

- Life Insurance
- Critical Illness Insurance
- Disability Insurance
- Mortgage Insurance
- Home Equity Line of Credit
- RESP / RRSP

INDUSTRIAL ALLIANCE INSURANCE AND FINANCIAL SERVICES INC. · RBC Insurance · Canada Life · Unity Life of Canada · Manulife Financial

**5 Yrs Variable : 3.45%**
1 Yr Fixed : 3.50%
3 Yrs Fixed : 3.99%
**5 Yrs Fixed : 3.99%**

No Broker Fees !!! Professional Advise !!!

இலவசமாக உங்கள் தற்போதைய மோட்கேச் நிலையை ஆராய்ந்து அதனை மாற்றுவது இலாபகரமானதா என்று அறிவதற்கு அழையுங்கள்

உதயன் நடராஜா
416-727-9945

**CENTUM**
Rapid Mortgages Inc.
211- 80 Nashdene Rd. Toronto, ON. M1V 5E4
www.centum.ca/rapidmortgages
Tel : 416-727-9945 / 416-644-3555

Serve you with Commitment! Competence!! Confidence!!!



4 Bedroom + 3 Washroom
$ 409,900



3+2 Bedroom + 2 Washroom
$ 234,900



3 Bedroom + 3 Washroom
$ 283,900



2 Bedroom + 1 Washroom
$ 87,500



3 Bedroom + 3 Washroom
$ 291,900




2 Bedroom + 2 Washroom
$ 82,900

**RE/MAX®**
Rouge River Realty Ltd. Brokerage
Independently Owned and Operated
37-31 Tapscott Rd. Toronto, ON. M1B 4Y7
Tel : 416-321-1999 Fax : 416-321-2290



**Uthayan Nadarajah**
Broker
Direct : 416-727-9945

## தேவதைக் கதைபோல

# இந்தியக் களத்தில் ஒரு சினிமா

## 'ஸ்லம்டோக் மில்லியனெர்' (Slumdog Millionaire) குறித்து...

கடந்த ஓரிரு மாதங்களாகவே 'ஸ்லம்டோக் மில்லியனர்' சினிமாபற்றி பத்திரிகை, சஞ்சிகை, இணைய தளங்கள் மூலமாக சிற்சில கருத்துக்கள் வெளியாகிக்கொண்டிருந்தும், சினிமாவைப் பார்க்கும்வரை எந்தவோர் அபிப்பிராயத்தையும் கொள்வதில்லையென்று பிடிவாதத்தோடிருந்தேன். எல்லா நல்ல சினிமாக்கள் குறித்தும் இதுவே என் வழி முறையாக இருப்பினும், இந்தச் சினிமாவைப் பார்ப்பதற்கான ஆவல் ஓர் அவதியாக என் மனத்தில் அலைந்துகொண்டிருந்தது. ஆனாலும் ஒஸ்கார் விருதுகள் அறிவிக்கப்பட்ட பின்னர்தான் நல்ல பிரதியொன்று கிடைத்து, இதைப் பார்க்க முடிந்திருந்தது.

இது என்னுள் எழுப்பிய கேள்விகள், உணர்வுகளையே "தாய்வீடு" வாசகர்களோடு இங்கு பகிர்ந்துகொள்ளப் போகின்றேன்.

ஒரு சிறந்த சினிமாவைப் பார்த்த முழு அனுபவமாய் அது இருந்தது. ஆனாலும் சினிமா முடிந்த பின்னர் மனத்தில் அடங்க மறுத்து அலையலையாய் எழுந்த உணர்வுகள், இன்னும் உள்ளத்தில் கிளர்ந்து மனத்தை பரவசநிலையடைய வைத்துக்கொண்டே இருக்கின்றன.

எப்போதும் நல்ல சினிமா குறித்து உரையாடுவதற்கு அரிதாகவேனும் சில நல்ல படைப்பார்த்தமான சினிமாக்கள் வெளிவந்துகொண்டிருக்கத்தான் செய்கின்றன. அந்த வரிசையில் இப்போது வந்திருப்பது 'ஸ்லம்டோக் மில்லியனெர்'.

இச் சினிமா உன்னதம் பெறுகிற இடம், இது சினிமாவாகவும், அதே நேரத்தில் ஒரு விவரணப் படமாகவும் உருவாகியிருப்பதுதான். சுமார் இரண்டு கோடி மக்களைக் கொண்ட மும்பை நகர ஜனத்தொகையில், ஏறக்குறைய ஒரு கோடியளவான பேர் மும்பையின் இவ்வாறான ஒதுக்கப்பட்ட இடங்களில்தான் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். பொலிவுட்டினதும், பெரும்பெரும் உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தக மய்யங்களினதும் அழகுகளின் பின்னால் இந்த அழகின்மையும், அருவருப்பும், நோயும், அங்கவீனங்களும், அநாதரவானவர்களும் கொண்ட ஒரு புறம் இருப்பது பரவலாக அறியவந்திருப்பதுதான். ஆனாலும் அதை இச் சினிமாவில் காண்கிறபோது மனச்சாட்சியை உலுக்குமளவுக்கு யதார்த்தம் விஸ்வரூபமெடுத்து நிற்கிறது.

மதக் கலவரம், வறுமையினதும் அறியாமையினதும் விளைவுகளான விபச்சாரம், சிறுவர்களை முடமாக்கியும் குருடாக்கியும் பிச்சையெடுக்க வைத்தல், திருட்டு, மோசடி, அடிபிடி, கொலையெல்லாம் இந்த மாதிரியான இடங்களில் சாதாரணமாகவே காணக்கிடப்பன. கடந்த காலங்களில் ஏற்பட்ட மதக் கலவரங்களை கவனித்தால், மிகவும் அதிகமாகப் பாதிக்கப்பட்டவர்கள் ஒளிபொருந்திய மும்பையின் இதுபோன்ற இருட்டுப்பகுதிகளில் வாழும் குடிசைவாசிகளே என்பது இலகுவாகப் புரிய வரும். இந்த ஒழுக்காசாரங்களை அந்த மக்களின் வாழ்முறையாக இல்லாமல், அவர்கள் மீது சமுதாயம் சுமத்திய பாரங்களாக, கொடுமைகளாகக் காண வெகுசிலராலேயே முடிவதாயிருந்திருக்கிறது காலகாலமாகவும். ஆனால் மும்பையின் இருட்டுப்புறத்தை இச் சினிமா சர்வதேசமளவில் தோலுரித்துக் காட்டியிருக்கிறது. காட்டுவதான எண்ணம், நோக்கம் எதுவுமின்றி இது இயல்பாய் கதைப்போக்கில் நிகழ்கிறது என்பதுதான் இதிலுள்ள விசேடம்.

இது இந்தியாவின் அழுக்குத்தான். இந்தியாவின் நாற்றமேதான். அதைக் காண மனச்சாட்சியுள்ள மனங்கள் தேவை. அவற்றினால்தான் அவை ஒரு தீர்வுக்கான வழியை நோக்கி நகர்த்தப்படமுடியும். ஆனால் எப்போதும் இந்துத்துவவாதிகள், மேலாண்மைவாதிகளுக்கு இந்த அழுக்குகள் பகிரங்கமாக்கப்படுவது பொறுக்கமுடியாததாகவே இருந்துவந்திருக்கிறது.

'வாட்டர்' (Water) சினிமாவின் படப்பிடிப்பை இந்தியாவிலேதான் தொடங்கினார் அதன் தயாரிப்பாளரும் இயக்குநருமான தீபா மேத்தா. ஆனால் இந்துத்துவ வாதிகளின் தீவிர எதிர்ப்புக் காரணமாக, தொடக்கப்பட்ட படப்பிடிப்பு முற்றுமாய் நிறுத்தப்பட்டு, கதைக்குத் தோதான சூழல் இலங்கையில் காணப்பெற்று வேறொரு சமயத்தில படம் எடுத்து முடிக்கப்பட்டிருந்தது. அவரது 'பயர்' (Fire) சினிமாவுக்கும் ஏறக்குறைய இதேயளவு ஆக்ரோஷமான எதிர்ப்புகள் கிளர்ந்தன. அதிர்ஷ்டவசமாக 'ஸ்லம்டோக் மில்லியனெ'ருக்கு அதுபோன்ற தடையேதும் நேராவிட்டாலும், இந்தியின் பழைய சுப்பர் ஸ்டார் அமிதாப்பச்சனாலும், இன்னும் பல தீவிர இந்துத்துவ வாதிகளாலும் இச் சினிமா





தீவிரமான கண்டனத்துக்காளானது.

மலக்குழியில் மூழ்கியெழுந்தேனும் அன்றைய சுப்பர் ஸ்டார் அமிதாப்பச்சனைக் காண, அன்றைக்குச் சிறுவனாக இருந்த ஒரு ரசிகன் ஓடுவதாக சினிமா காட்டுகிறது. சினிமா இந்தியாவின் வறுமை சூழ்ந்த குடிசைகளிலிருப்போரையும் எவ்வாறு பாதித்திருந்தது என்பதை சொல்லாமல் சொல்லிச்செல்கிறது சினிமா. ஆனால் இந்த அழகிழந்த பகுதிகளின் அவலத்தைக் காட்டுவதே இயக்குநரின் நோக்கமாக இருக்கவில்லை. அவர் மிக உயர்ந்த ஒரு கனவோடு தன் பணியை ஆற்றிக்கொண்டிருக்கிறார். ஆனாலும் குரல்கள் எழுகின்றன, இந்தியாவின் வறுமையையும், அழுக்கையும் நியாயமற்ற முறையில் இயக்குநர் டானி பொய்ல் (Danny Boyle) சினிமாவாக்கியிருப்பதாக. இதில் மிகப் பெரிய குரல் அமிதாப் பச்சனது.

மும்பையில் மதக்கலவரங்களுக்கு, வெளிமாநிலத்தார் மீதான தாக்குதல்களுக்கு என்றேனும் குறைவிருந்ததுண்டா? அதை கதையோடு ஒட்டி, தேவைக்கு அதிகமாக ஒரு காட்சிகூட சேர்க்காமல் சினிமா முடிவடைந்துவிடுகிறபோதே ஓலங்கள் எழுகின்றன, இந்தியாவின் அழுக்கையும் வறுமையையும் பகிரங்கப்படுத்துவதாக.

கதையோடு ஒட்டிய காட்சிகளேயெனினும், பத்து பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் பம்பாயாக அது இருந்தபோது எப்படியிருந்தது என்பதை மிக்க துல்லியத்தோடு 'ஸ்லம்டோக் மில்லியனெர்' காட்டியிருந்தது. இது பம்பாயின் விவரணக் காட்சிகள்தான். இவையே ஒரு விவரணப்படமளவாக விரிந்திருந்தன.

இந்தப் பின்னணிக்கு உள்ளேதான் சினிமா வளர்கிறது. சொல்லப்போனால் இது ஜமால் மாலிக் என்ற பதினெட்டு வயதான ஒரு குடிசைவாழ் வாலிபன் ஒரே இரவில் எவ்வாறு கோடீஸ்வரன் ஆகிறான் என்பதைக் கூறுகிற கதை. இந்த அதியற்புதத்துக்குச் சிறிதும் குறைவற்ற முக்கியத்துவத்துடன், காதல் டூயட், கடிதம், அலைக்கழிவுகள் இன்றி வறுமையின் வசதியீனங்கள் காரணமாய் ஒரு சிறுவனுக்கும் ஒரு சிறுமிக்கும் இடையே வளரும் அன்பு எவ்வாறு காதலாய் மலர்கிறது என்பதும் கூறப்படுகிறது.

சாதாரண சினிமா ரசிகனுக்கு இந்தக் காதல் கண்டுகொள்ளப்பட முடியாததாகவே இருக்கும். பணம், ஜாதி, மதம் போன்ற எல்லைகளுக்குள் வாழும் தீவிர ரசிகர்களால் இக்காதல் கண்டுகொள்ளப்பட்டாலும், ஒத்துக் கொள்ளப்படக் கூடியதாய் நிச்சயமாய் இருக்காது. ஏனெனில் ஒரு காதலுறவில், அல்லது மணவுறவில் எவையெவை அவசியமாகவும் புனிதமானவையாகவும் அவர்களால் கொண்டிருக்கப்படுகிறதோ அத்தனை அம்சங்களையும் அந்தப் பெண் இழந்தவளாகவே கதாபாத்திரம் ஆக்கப்பட்டிருப்பாள். அவனும் அவற்றை அறிந்தவனாகவே இருப்பதும், அந்நிலையிலேயே காதலை மலர வைப்பதும் அபூர்வமான விடயங்கள். இவற்றை 'ஸ்லம்டோக் மில்லியனெர்' கூச்சமில்லாமல் காட்டுகிறது. அதன் வல்லாண்மையின் உச்சம் இதுதான்.

ஆனாலும் இது ஒரு நவீன தேவதைக் கதையாகவும் அதே சமயத்தில் விளங்குகிறது. தேநீர்க் கடையில் வேலைசெய்யும் ஜமால் மாலிக், கோடிக்கணக்கில் பரிசு கிடைக்கும் 'நீங்களும் ஏன் கோடீஸ்வர் ஆகக்கூடாது?' என்ற ஒரு தொலைக்காட்சி நிகழ்வில் கலந்துகொள்கிறான். நிகழ்ச்சி நடத்துநரின் பொறாமையைத் தூண்டும்விதமாக நிகழ்ச்சி மாறிப்போவதும், அவர் கொள்ளும் பொறாமை சூழ்ச்சியாக மாறுவதும், அதையும் ஜமால் வென்று ஒற்றை இரவில், சரியாக இரண்டு இரவுகளில், கோடீஸ்வரன் ஆவதும் உண்மையில் தேவதைக்கதைக்கு நிகரானதுதான். தேவதைக் கதை, காதல் கதை, பம்பாய் விவரணம் என இச் சினிமாவில் பலபடைகள். அண்மைக்காலத்தில் ஒரு நிகரற்ற சினிமாவாக இதை ஆக்கியிருப்பது இத்தனையும்தான். அதனால்தான் எண்பத்தோராவது ஒஸ்கார் விழாவில் சிறந்த சினிமாவுக்கான விருது உட்பட எட்டு விருதுகளை இது சுவீகரித்துக்கொண்டு போயிருக்கிறது. இசையமைப்புக்கும், பாடலுக்குமாக இரண்டு விருதுகளை



**தேவகாந்தன்**

ஏ.ஆர்.ரகுமானுக்குப் பெற்றுத்தந்து இருப்பதும் இந்தச் சினிமாதான்.

இப்படியான ஒரு சிறந்த சினிமா டானி பொய்லினால் எப்படி முடிந்திருக்கும்? கொஞ்சம் யோசித்துப் பார்ப்போமா? சைமன் வோபோயின் (Simon Beaufoy) மிகச் சிறந்த ஒரு சினிமாப் பிரதியோடு இவர் சினிமா எடுக்கப் புறப்பட்டதே இதன் முதன்மைக் காரணமாக இருக்கமுடியுமா? அப்படித்தான் எனக்குத் தெரிகிறது. ஏனெனில் எந்தச் சிறந்த சினிமாவுமே தன் பாதி வெற்றிக்கு தன் பிரதியையே காரணமாகக் கொண்டிருக்கிறது. 'ஸ்லம்டோக் மில்லியனெர்' சினிமாவின் பிரதியாக்ககாரர் சைமன்போய், ஏற்கனவே கோல்டன் குளோப் போன்ற பல சினிமா விருதுகள் பெற்றவர். அதுபோலவே இதன் இயக்குநர் டானி பொய்லும் பல சிறந்த சினிமா விருதுகள் பெற்றவர். குறைந்த பட்ஜெட்டில் மிகச் சிறந்த சினிமாக்களைத் தந்தவர் இவர். Shallow Grave (1994), Trainspotting (1996), A Life Less Ordinary (1997), The Beech (2000), 28 Days Later (2002) போன்ற புகழ்பெற்ற சினிமாக்களை ஆக்கியவர் இவர். அதிகமான இப்படங்கள் சிறந்த நாவல்களை மையமாக வைத்து எழுதப்பட்டவை. அதுபோல் 'ஸ்லம்டோக் மில்லியனெ'ரும் விகாஸ் ஸ்வாரப்பின் 'Q & A' என்ற நாவலை முன்வைத்து எழுதப்பெற்ற சினிமாவே.

ஏ.ஆர். ரகுமானுக்கு இரட்டைப் பரிசு கிடைத்தது சந்தோஷம். இந்தியாவுக்கு முதன்முதலில் ஒஸ்கார் பரிசு கிடைத்தது... ம்...அதுவும் சந்தோஷம்தான். ஆனால் ஒரு கேள்வி.

இயக்குநர் டானி பொய்ல், ஒரு பிரிட்டிஷ்காரர். ஐரிஸிலிருந்து புலம்பெயர்ந்து வந்து லண்டனில் வாழ்ந்துகொண்டிருந்த ஒரு தாய்க்கும் தந்தைக்கும் பிறந்தவர். அதுபோல் இச்சினிமாப் பிரதியை ஆக்கியவர் சைமன் வோபோய். அவரும் பிரிட்டிஷ்காரர். அப்படியானால் இந்தியப் படத்துக்கு ஒஸ்கார் பரிசென்று பெரிய தடல்புடலாய் இருக்கிறதே அங்கே, அதன் அர்த்தம் என்ன?

devakanthan@thaiveedu.com

■ ■ ■




# வங்கிக் கடன் தொல்லைகளிலிருந்து விடுதலை

## NEW LIFE FRESH START

- கடன் 80% குறைய நடவடிக்கை
  **Reduce your debts upto 80%**
- கடனுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
  **Stop all interest on your debts**
- கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புக்கள், சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்
  **Stop collection calls, legal action & garnishments**
- உங்கள் சொத்துக்கள் பாதுகாக்கப்படும்
  **Protect all your assets**
- மாதாந்த ரீதியில் எலஙலாக்கடனையும் தீர்க்க வசதி செய்தல்
  **Make one monthly payment to all of your creditors**
- வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்
  **Give you solutions with out bankruptcy**

digi Media

வங்குரோத்துக்கு சட்டங்களில் மாற்றங்கள் வரவிருக்கின்றன. மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்
**New Changes are coming from Bankruptcy Act. Call me for Details.**

**Suren Sornalingam**
Certified Insolvency Counsellor

Tel: **416.264.1272**
Fax: 416.332.0914
web: www.creditrecoverycanada.com



crc

**CREDIT RECOVERY CANADA**

55 Town Centre Court, Suite 700,
Scarborough, ON
M1P 4X4

## காதல் வாழ்க்கை - 3

# பண்புடைமை



வி. கந்தவனம்

பண்பாவது உயர்ந்த குடிப்பிறந்த குண இயல்பு. குடிக்கு உயர்வு குணத்தின் உயர்வாகும். தமிழர் கண்ட உயர்ந்த குணங்கள் பல. அவற்றைப் பொதுக் குணங்கள், சிறப்புக் குணங்கள் என இருவகைப் படுத்தலாம். செப்பம், நாணம், ஒழுக்கம், வாய்மை, நகை, இன்சொல், பொறுமை, இகழாமை முதலியன பொதுக் குணங்கள். ஈகை, மானம், வீரம், கடமை, ஒற்றுமை போன்றவை சிறப்புக் குணங்கள்.

எல்லாக் குணங்களுக்கும் அடிப்படையாவது அன்பு. பிறர்மேல் அன்பு பாராட்டுதலும் நற் குணங்களையுடைய குடியிற் பிறத்தலுமாகிய இவ்விரண்டும் ஒருவருக்குரிய பண்புடைமையாகும் என்று உலகத்தார் சொல்வர் என்கிறார் திருவள்ளுவர்:

அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல்
இவ்விரண்டும்
பண்புடைமை என்னும் வழக்கு.

இத்தகைய உயர்ந்த குணங்களால் மற்றவர்கள் நன்மை அடைகின்றபொழுது பண்பு முழுமை பெறுகின்றது. 'பண்பெனப் படுவது பாடறிந் தொழுகல்' என்கின்றது கலித்தொகைப் பாடல் ஒன்று.

### பாடறிந்து ஒழுகல் என்றால் என்ன?

பாடு என்னும் சொல்லுக்குப் பல பொருள்கள் உள்ளன. கடமை என்பது அவற்றுள் ஒன்று. 'அதனைச் செய்து முடிப்பது அவன் பாடு' என்னும் வாக்கியத்தில் பாடு கடமை என்ற பொருளைத் தருகின்றது. கடமைகளை அறிந்து அவற்றைத் தவறாது செய்து முடித்தல் தலையாய பண்புடைமை.

பாடு என்பதற்கு தன்மை அல்லது இயல்பு என்ற பொருளும் உண்டு. இயல்பு பழக்க வழக்கங்களையும் உள்ளடக்கும். மற்றவர்களியல்புகளைத் தெரிந்துகொண்டு அவற்றுக்கு ஏற்ப நடத்தலும் பண்புடைமையாகும். அதாவது, நற்குண நல்லியல்புகளில் வழுவாது நிற்கின்ற அதேவேளையில், பிறர் பண்புகளையும் அறிந்து, அவற்றையும் மதித்து நடத்தல் வேண்டும்.

பாடு என்றால் முயல்தல் அல்லது கடினமாக உழைத்தல் என்று பொருள். 'இந்தச் செல்வத்தை நான் பாடுபட்டுத் தேடினேன்' என்பதில் இத்தகைய அர்த்தங்கள் இருப்பதைக் காணலாம்.

'பாடறிந்து ஒழுகல்' என்பது ஓர் உலகளாவிய ஒழுக்க தத்துவம். பண்புகள் இடத்துக்கிடம் வேறுபடலாம்' இனத்துக்கினம் மாறுபடலாம். 'திரைகடல் ஓடித் திரவியம் தேடு' தமிழன் பல நாடுகளைக் கண்டிருக்கின்றான் பல்லின மக்களுடன் பழகியிருக்கின்றான். அத்தகைய அனுபவத்தின் விளைவே 'பாடறிந்து ஒழுகு', 'இணங்கி இரு', 'உலகத்தோடு ஒட்ட ஒழுகு' என்பன போன்ற அறிவுரைகள்.

உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பல கற்றும்
கல்லார் அறிவிலாதார்.

என்பார் வள்ளுவர். பாடு என்பதற்கு உலக வழக்கு என்று பொருள். எனவே 'பாடறிந்து ஒழுகல்' என்பதற்கு உலக வழக்கை அறிந்து அதற்கேற்ப நடத்தல் வேண்டும் என்று பொருள் கொள்வதும் பொருந்தும். உலக வழக்கு என்பது உயர்ந்தோர் மரபு.

உயர்ந்தோர் என்போர் உத்தம குணத்துப் பெரியோர். நீதி நியாயங்களை நன்கு அறிந்த அறிவுசான்றோர். நீதி வழுவா நெறி முறையில் தாமும் நடந்து நல்வாழ்க்கை நெறிகளை வாழ்வாங்கு வாழ்ந்து காட்டுபவர். மக்களுக்கு முன்மாதிரியானவர்.

உயர்ந்தோர் வகுத்தழி பண்பு பாராட்டுவது தமிழர் பண்பு. செல்வமும் கல்வியும் பெரும் பதவிகளும் தரும் வளர்ச்சி வளர்ச்சியன்று.

> “ உயர்ந்தோர் என்போர்
> உத்தம குணத்துப் பெரியோர்.
> நீதி நியாயங்களை நன்கு அறிந்த அறிவுசான்றோர்.
> நீதி வழுவா நெறி முறையில் தாமும் நடந்து
> நல்வாழ்க்கை நெறிகளை வாழ்வாங்கு
> வாழ்ந்து காட்டுபவர்.
> மக்களுக்கு முன்மாதிரியானவர். ”

உண்மையான உயர்ச்சி என்பது உயர்ந்த பண்போடு கூடியது. 'பண்புடையார்ப் பட்டுண்டு உலகு.'' உயர்ந்த மக்கட் பண்பு இல்லாதவரை 'மரம் போல்வர்' என்று பழித்துரைக்கின்றார் வள்ளுவர்:

அரம்போலும் கூர்மைய ரேனும்
மரம்போல்வர்
மக்கட் பண்பு இல்லாதவர்.

பண்போடு கூடிய உறவு ஒற்றுமையை வளர்க்கும்: அமைதியை நிலைநாட்டும்: வாழ்வையும் வளத்தையும் அளிக்கும்.

தமிழர் பண்பு முறைகள் மிக உன்னதமானவை. சமூக ஒழுங்குக்கும் கட்டுப்பாட்டுக்கும் மிக அவசியமானவை. உதாரணமாக, ஒழுக்கப் பண்பு தமிழர் சமூகத்தின் உயிர்நாடியாக விளங்குவதைக் காணலாம். தமிழர் அதனை உயிரினும் மேலாக மதித்து வருகிறார்கள்.

'ஒழுக்கம் விழுப்பம் தரலால் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்'

என்பது திருக்குறள். சில ஒழுக்க் கூறுகள் பின்வருமாறு:

ஆணும் பெண்ணும் திருமணம் ஆகும்வரை எவருடனும் பாலுறவு வைத்துக்கொள்ளாத பண்பு, திருமணம் செய்த பின்னரும் ஆண் தனது ஒழுக்க நெறியையும் பெண் தனது கற்பையும் பேணிக் காத்து, கட்டுப்பாட்டோடு இல்லற வாழ்க்கையை இணைந்து நடத்தல், விருந்தோம்பல், அன்னையையும் பிதாவையும் முன்னறி தெய்வங்களாகப் போற்றுதல், மூத்தோரையும் குருமார்களையும் மதித்தல், பெற்ற பிள்ளைகளை உற்ற முறைகளில் வளர்த்தல், பிள்ளைகள் 'இவர்களைப் பெற்றவர் என்ன தவஞ் செய்தனரோ' என்று பிறர் பாராட்டும்படியாக நடத்தல் முதலியன.

இவற்றை இழிவு படுத்தும் வகையில் இக்காலத்தில் சில தமிழ் அன்பர்கள் நடந்து கொள்வது கவலைக்குரியது. அதுவும் புலம் பெயர்ந்த நாடுகளில், எமது பாரம்பரியப் பண்புகளுக்கு ஒவ்வாத முறையில் நடந்துகொள்வதைப் போன்ற புத்தியீனம் வேறொன்றும் இருக்கமுடியாது. அன்பின் அடிப்படையில் வளர்ந்தது எமது பண்பு. அதன்படி வாழ்ந்து காட்டி, தமிழர் பெருமை யைப் பல்லோர் மத்தியிலும் நிலைநாட்ட வேண்டும் என்னும் இலட்சியத்தோடு வாழ்வது ஒவ்வொரு தமிழரும் கடனாகும்.

kanthavanam@thaiveedu.com

■ ■ ■

# முருங்கைக் கீரை...

42ம் பக்கத் தொடர்ச்சி...

என்பார்கள். அத்தகைய மரங்களில் முருங்கையும் ஒன்று. எனவே முருங்கையின் ஏனைய பயன்கள் பற்றியும் சுருக்கமாகப் பார்க்கலாம்.

முருங்கைப் பூவுக்குத் தாது விருத்தியை உண்டாக்கும் குணம் உண்டு. முருங்கைப் பூவில் சூப் செய்து சாப்பிட்டால் செக்ஸ் பல வீனம் சொல்லாமல் கொள்ளாமல் ஓடிப்போகும். இரு பாலாரின் மலட்டுத் தன்மையைப் போக்கும். முருங்கைப் பூவுக்கு உடலில் உஷ்ணத்தை உண்டாக்கும் தன்மையும் உண்டு. அதனால் அதிக கெடுதிகள் இல்லை என்றும் கூறுவார்கள். எனினும் அப்படியானவர்கள் அளவாகச் சாப்பிடலாம். முருங்கைப் பூவை நீர்விட்டுச் சுத்தமாகக் கழுவி, அதனைப் பசும்பாலில் காய்ச்சிச் சர்க்கரை கலந்து இரவில் பருகிவர தாது பலப்படும். முருங்கைப் பூ இருதயத்துக்கும் கல்லீரலுக்கும் நல்லது. ஆனால் அதில் மலத்தைக் கட்டும் தன்மை இருப்பதால் மலத்தை இளக்கக்கூடிய வேறொன்றைச் சேர்த்துச் சமைக்க வேண்டும். முருங்கைப் பூவிலும் அதிக சத்துக்கள் இருப்பினும் பூவில் கறி சமைத்து உண்பது மிகவும் அரிது. பூக்களைப் பறித்தால் காய்கள் கிடைக்காது என்பதே காரணமாக இருக்கலாம். நாட்டு வைத்தியர்கள் அரிய மருந்துகள் செய்வதற்கு இரவில் முருங்கை மரங்களின் கீழே பாய்களை விரித்துவைத்து உதிரும் பூக்களைச் சேகரித்த வழக்கமும் இருந்தது.

முருங்கைப் பிஞ்சு பத்தியத்துக்கு உகந்தது. குழந்தை பிறந்த பின் தாய்க்கு முருங்கைப் பிஞ்சில் பத்தியம் வைத்துக் கொடுப்பார்கள். இந்தப் பத்தியக் கறியால் தாய்க்கு முலைப் பால் அதிகம் சுரக்க வாய்ப்பு உண்டு.



முருங்கைக் காய்ச் சாம்பார் சுவையானது மட்டுமல்ல, மலச்சிக்கல், வலுயிற்றுப் புண், கண் நோய் ஆகியவற்றிற்கு மருந்தாகவும் அமையும். இரத்தமும் சிறுநீரும் சுத்திபெறும். வாய்ப் புண் மாறும். முங்கைக்காய்ச் சூப் காய்ச்சலையும் மூட்டு வலியையும் போக்க உதவும். முருங்கைக் கீரைக்குக் கூறபட்ட பயன்கள் எல்லாம் அனேகமாக முருங்கைக் காய்க்கும் உண்டு.

முற்றிய முருங்கைக் காயின் சதையை கரண்டியால் சுரண்டி எடுத்து வறை செய்து சாப்பிட்டால் மூளைக்குப் பலம் ஏற்படும். ஆனால் இந்த வறை சிலருக்கு மலச்சிக்கலை ஏற்படுத்தக் கூடும். முருங்கை விதையைக் கூட்டுச் சாப்பிட்டால் மூளைக்குப் பலமும் தாது விருத்தியும் கிடைக்கும். ஆனால் மலச்சிக்கலை ஏற்படுத்துவதில் முருங்கை விதைக்கு முதல் இடம் உண்டு.

முருங்கைப் பிசினில் அரை லீட்டர் தண்ணீர் விட்டுப் புதுப் பாண்டத்தில் வைத்திருந்து காலையில் இரண்டு அவுண்ஸ் நீருடன் கற்கண்டு சேர்த்து அருந்தினால் தாதுவிருத்தி ஏற்படும். முருங்கை மரப் பிசினிலிருந்து நல்ல சத்து மருந்துகள் செய்யப்படுகின்றன. பச்சை பிசினில் ஒரு சொட்டைக் காதில் விட்டால் காதுவலி காணாமல் போய்விடும்.

நன்றாகக் காய்ந்து முற்றின முருங்கை விதைகளை நன்கு இடித்து அரித்தெடுத்து ஒரு மேசைக் கரண்டி இடித்த பொடியை மூன்று குடம் குடிநீரில் போட்டுக் கலக்கி வைத்தால், கழிவுகள் எல்லாம் அடியில் படிந்து சுத்தமான நீர் தெளிந்து மேலே வரும். முருங்கை விதைகளிலிருந்து சமையல் எண்ணெய் தயாரிக்கலாம். எண்ணெய் எடுத்தபின் வரும் சக்கை உரமாகப் பயன்படும்.

முருங்கைப் பட்டை உலோகச் சத்துக்கள் நிறைந்தது. உணவில் கலந்த விஷத்துக்கும் நரம்புக் கோளாறுக்கும் இது நல்ல மருந்து. முருங்கைப் பட்டையை அரைத்துத் தேய்த்தால் வாத நோயால் ஏற்படும் வலி தீரும். முருங்கைப் பட்டையை இடித்துச் சாறு எடுத்துப் பல்வலி ஏற்படும் இடத்தில் தடவினால் பல்வலி தீரும். முருங்கைப் பட்டையிலிருந்து 'அண்டிபயட்டிக்' மற்றும் பிரசவம், ஈரல், வயிற்றுக் குழப்பம், வயிற்றுப் போக்கு ஆகியன தொடர்பான மருந்துகளும் கூந்தலுக்கான வாசனை எண்ணெய் ஆகியனவும் தயாரிக்கலாம். பட்டையிலிருந்து கயிறு, பாய்களும் செய்கிறார்கள். முருங்கைப் பட்டையிலிருந்து நீல நிறச் சாயம் செய்யப்படுவதாகவும் சொல்லப்படுகிறது.

தொடரும் ...!

uthayanan@thaiveedu.com

■ ■ ■

IT'S A GOOD TIME TO SELL YOUR HOME
OR
THE INVESTMENT PROPERTY YOU ARE HOLDING ON FOR YEARS

CALL SUBA AYNKHARAN TO PROTECT YOUR HARD EARNED ASSETS IN THIS DECLINING REAL ESTATE MARKET!!!





SUBA AYNKHARAN
Sales Representative

REALTOR® MLS®

VEEDU
REALTY INC.
BROKERAGE

Direct: 416-560-1686
saynkharan@trebnet.com

8-1345 Morningside Ave, Toronto, ON M1B 5K3
Tel: 416-759-6000 | Fax: 416-759-6005

Involved in an Automobile Accident??? If YES

LOOK NO FURTHER AND CALL

Aynkharan Kulasekaram
@
416-479-0056

Don't compromise yourself for any upfront referral fees that attract you and then lose your claim to those inexperienced …

Please call me so that I can have your claim looked after by leading personal injury Lawyer's/ Doctor's who has years of experience.

Your Mortgage-Done Right






Finding the Right Home Is Hard Enough.

your mortgage, consider it's done!

invis Canada's Mortgage Experts™

But Choosing the Right Agent Doesn't Have to be Contact the Mortgage Expert

Aynkharan Kulasekaram. AMP
Mortgage Agent
Tel: 416-479-0056
aynkharan@invis.ca

Licensed by Financial Service Commission of Ontario
License # M08009414

HO: 100-480 University Ave, Toronto, ON M5G 1V2

# நாலடியார் சொல்லியது பிழையான தகவலா?



பொ.கனகசபாபதி

கல்வி கரையில! கற்பவை நாள் சில;
மெல்ல நினைக்கின் பிணிபல - தெள்ளிதின்
ஆராய்ந் தமைவுடைய கற்பவே நீரொழியப்
பாலுண் குருகின் தெரிந்து

நாலடியார் - 135

கல்வியோ கரையில்லாதது. நமது ஆயுட் காலமோ மிகக் குறைவு. சற்று அமைதியாக நாம் நினைத்துப் பார்ப்போமாயின் அந்தச் சிறிய வாழ்நாட்களில் நோய் அது இது என்று போக்குகின்ற காலமோ அதிகம். ஆகவே பாலுடன் கலந்த நீரினை நீக்கிப் பாலை மட்டும் உண்ணும் பறவை (அன்னப் பறவை) போன்று தகுதியான நூல்களை மாத்திரமே தெரிந்து எடுத்து அறிஞர்கள் கற்பார்கள் என்கிறது நாலடியார்.

நன்னூலிலே ஒரு சூத்திரம்:

அன்னம் ஆவே மண்ணொடு கிளியே
இல்லக் குடமாடு எருமை நெய்யரி
அன்னல் தலை இடை கடை மாணாக்கர்.

மூன்று வகையான மாணவர்கள் உள்ளனராம். அதில் தலையான மாணாக்கர் அன்னம் மற்றும் பசுமாடு போன்றவர்களாம். அன்னம் எப்படி பாலில் கலந்த நீரினை நீக்கிப் பாலை மாத்திரம் உட்கொள்வது போன்று முதல் மாணவர்களும் அறிவை வளர்ப்பதற்குத் தேவையானவற்றினை மாத்திரமே தேர்ந்தெடுத்துக் கற்பார்களாம் அதோடு பசுமாடு புல்லினை மேய்ந்த பின்னர் ஓரிடத்தில் நின்று இரை மீட்பது போன்று கற்றதனை மீண்டும் ஆராய்ந்து அறிந்து பொள்ள முற்படுவர் முதல் மாணாக்கர் என்கிறது நன்னூல்.

ஆகவே காலம் காலமாக பேச்சு எழுத்து எல்லாவற்றிலுமே இந்தக் கதை அதுதான், நீரோடு பால் கலந்து வைத்தால் அன்னம் அதில் இருந்து பாலை மாத்திரம் பருகி விட்டு நீரை விட்டு விடுகிறது என்று சொல்லப்படுவது வெறும் உவமைக்காகக் கையாளப்பட்டதா அல்லது அதில் ஏதாவது உண்மை உள்ளதா.

முதலில் பாலைப் பற்றிப் பார்ப்போம்.

பாலினை வெள்ளை நிறமான ஒரு கூழ் பொருள்(Colloid) கரைசல் எனக்கருதலாம். இந்தக் கூழ்பொருள் கரைசலின் தளமாக அல்லது பாயமாக நீர் அமைகிறது. ஏனைய கூழ் பொருட்கள் அந்த நீரினிலே தொங்கல்களாக (Suspension) காணப் படுகின்றன. சாதாரணமாக ஒரு பசுவினது பாலிலே 87% வரை நீர் காணப்படும். இந்த கூழ்பொருள் கரைசலிலே தொங்கலாக 3 முதல் 4% வரை புரதம், 4 முதல் 4.5% வரை கொழுப்பு, 4.5% வரை வெல்லம் காணப்படுமாம். இந்த வெல்லம் பற்றி ஒரு வார்த்தை. பாலில் உள்ள வெல்லம் இருசக்கரைட் ( disaccharide) என அழைக்கப் படும் இலக்ரோஸ் (Lactose). இந்த இலக்ரோஸ் எளிமையான ஒரு சக்கரைட்டுக்களான (Monosaccharide) குளுக்கோஸ் (glucose) மற்றும் கலக்ரோஸ் (Galactose) ஆகியவற்றினால் உருவானது. இந்த இலக்ரோசினை சமிபாடடையச் செய்வது இலக்ரேஸ் ( Lactase) எனும் நொதியம். இந்த நொதியம் குழந்தைகளிலே அதிகம் சுரக்கப் பட்டாலும் பால்குடி மாறியபின் படிப்படியாகச் சுரத்தல் குறைந்து இறுதியாக வயது வந்தவர்களுக்கு அது சுரக்கப் படுவதே நின்று விடுகிறது. இதனால் தான் வயது வந்தவர்கள் பால் அருந்தினால் சிலருக்கு வாயுப் பிரச்சினைகள் ஏற்படுவதுண்டு.

பால் ஒரு முழுமையான கரைசலாக அமையாது. மையநீக்கி(Centrifuging) முறையாலே கூழ் பொருளினை வேறாகவும் நீரினை வேறாகவும் பிரித்து எடுக்க முடியும். மையநீக்கி என்றால் வேறொன்றுமில்லை நம்மவர்கள் மத்தினாலே பால்கடைவார்களே அது தான், மின்னியல் சாதனங்களால் வேகமாகச் செயல்படுகிறது.

சாதாரணமாக ஒரு 24 மணித்தியாலம் வரை பசுப் பாலினை ஓரிடத்தில் வைத்தால் அது இரண்டு பகுதிகளாகத் தானோகவே பகுத்து கொள்வதைக் காண முடியும். மேற்புறத்தே அதிக கொழுப்புள்ள பாலாடைப் படையும் (Creamy layer) அதன் கீழே குறைவான கொழுப்புடைய பெரும் பகுதியும் காணப்படும். கடையிலே பால் வாங்கி குளிர் சாதனப் பெட்டியிலே வைத்து நாளாந்தம் உபயோகிப்பவர்களுக்கு மேற்படி அனுபவம் புதிதல்ல. பால் பிழித்து விட்டது என சாதரணமாகச் சொல்வோம். அப்பொழுது கூழ்பொருள் நீரினில் இருந்து பிரிந்து காணப் படும். நாலடியாரில் சொல்லப் பட்ட நீர் பாலின் உள்கட்டமைப்பில் உள்ள 87% நீரினைப் பற்றியதல்ல. அதனோடு மேலதிகமாச் சேர்க்கப் பட்ட நீரினையே அது குறிக்கிறது என எண்ணுகிறேன். 87 %மான நீர் பாலினது இன்றி அமையாத பகுதி. ஆனால் அதனுடன் எவ்வளவு நீர் சேர்க்கப் பட்டாலும் அது பாலில் தனியே காணப்பட மாட்டாது அந்த இன்றியமையாத பகுதியுடன் சேர்ந்து விடுகிறது. இதனால் பாலில் நீரின் வீதம் அதிகரித்துக் கொண்டு போகிறது.

அப்போ அன்னம் பாலில் இருந்து நீரினைப் பிரிக்குமா? பால் கடையப் படுகின்ற போது மாத்திரம் அதன் கூழ்பொருள் தனியே நீரில் இருந்து பிரித்து எடுக்கப் படுகிறது. ஆனாலும் முற்றாகவே அவையாவற்றினையும் அகற்றுதல் சாத்தியமில்லை. சில பதார்த்தங்கள் நீரினில் பளிங்குருக் கரைசலாகவே (Crystalloid) (இரண்டறக் கரைதல்) அமைந்து விடுவதும் உண்டு. எனவே அன்னத்தினால் நீரினையும் பாலையும் ஒன்றிலிருந்து ஒன்றினைப் பிரிப்பது என்பது நடைபெறக் கூடிய காரியமல்ல.

அப்படி என்றால் இலக்கியங்களிலே கூறப்பட்ட தகவல் பிழையானதா? வெறும் ஒப்புக்காகச் சொல்லப் பட்டதா? முற்றாகவே பிழையான கூற்று என்று சொல்வதற்கு இல்லை. நடைபெறுகின்ற ஒரு செயல்முறையினை வைத்து பிழையான ஒரு முடிவுக்கு வந்துவிட்டார்கள் என்றே கூற முடியும்.

அன்னம் நீரினிலே வாழ்கின்ற ஒரு பறவை. தூய வெள்ளை நிறத்திலும் உள்ளது கறுப்பு நிறத்திலும் உள்ளது என்றாலும் நம்மவர்கள் வெள்ளை நிறத்திற்கே அன்னத்தினை உதாரணமாகச் சொல்லும் அளவினுக்கு அன்னத்தினை வெள்ளை நிறப் பட்சியாகவே கண்டு வந்தார்கள்.

சாதாரணமாக நீர்வாழ் பட்சிகள் நீரிலே காணப்படும் தாவரங்களையும், நீரில் உள்ள சிறிய உயிரினங்களையுமே உண்டு வாழ்கின்றன. நீரிலே வாழ்கின்ற தாரா, வாத்து போன்ற பட்சிகளிலும் பார்க்க ஆழமான இடத்தில் இருந்தும் உணவினைப் பெறக்கூடிய முறையிலே அன்னத்தின் கழுத்து



மற்றையவற்றினதிலும் பார்க்க நீளமாக உள்ளது. அதன் மூலமாக நீர் நிலைகளின் ஆழமான பகுதிகளிலிருந்து தாவரங்களை வெட்டி எடுக்கவோ அல்லது அங்கே உள்ள சிறு விலங்குகளைப் பிடிக்கவோ அன்னத்திற்கு இயலும். ஒவ்வொரு முறையும் உணவினை வாயினுள் எடுக்கின்ற பொழுது கணிசமான அளவு நீரும் வாய்க்குழியினை அடைகிறது. ஆகவே இந்த நீரினை வெளியேற்றி உணவினை மாத்திரம் விழுங்குவதற்கு உதவக் கூடிய முறையில் அதன் அலகுகளின் அமைப்பு சிறத்தல் அடைந்திருப்பதைக் காண முடியும். இருதாடைகளின் விளிப்புகளும் திருவலைப் பல்லினது விளிம்பில் உள்ளது போன்று வரிசையாக சிறுசிறு பற்களைக் (Serrated edges) (வாள் போன்று) கொண்டவையாகக் காணப்படும். இவை பற்களைப் போன்று காணப்பட்டாலும் பற்கள் அல்ல வெறும் கொம்புப் பொருளால் (horny) ஆன அமைப்புக்கள் மாத்திரமே. வாய்க் குழியுள்ளே எடுக்கப்பட்ட உணவு சாதரணமாக விழுங்கப்படும் பொழுது நாக்கு மேலே உயர்த்தப் பட்டு தொண்டை சுருங்குகிறது. இதனால் வாய்க்குழியின் பரிமாணம் குறைய உணவானது தொண்டையின் அடுத்தபகுதியாகிய களத்தினை அடைகிறது. இது எல்லா விலங்குகளிலும் நடைபெறுவதே.

அன்னத்தினைப் பொறுத்த மட்டிலே அது உணவினை விழுங்க முயற்சிக்கையில் வாயுள்ளே உள்ள நீரானது அலகுகளளில் உள்ள பற்களுக்கூடாக வெளியேறுகிறது. இந்த முறையாலேயே அன்னம் தனது வாயுள் வரும் நீரினை வெளியேற்றி உணவினை மாத்திரம் விழுங்குகிறது.

ஆகவே பாலினை அன்னம் உட்கொள்கின்ற பொழுதும் அதனை விழுங்குகையில் ஒரு பகுதி அலகுகளின் மூலமாக வெளியேறுவதுண்டு. இதனையே நம் முன்னோர்கள் பாலில் இருந்து அன்னம் நீரினைப் பிரித்துப் பாலை உட்கொண்டு நீரை வெளியேற்றியது என எண்ணினார்களோ தெரியாது. அப்படி என்றால்?

**அவதானம் சரி**
**அனுமானம் தான் பிழை.**

('நாலடியார்' என்றேன். 'இதோ கேட்டுக் கொள்' என்றார். அங்கே நன்னூலிலும் உள்ளது தெரிந்துக்கோ. விளக்கம் அதுதான்' என்றார் கவிஞர் கந்தவனம். அவருக்கு நன்றி)

kanex@thaiveedu.com

■ ■ ■

TRAFFIC TICKETS!
● SPEEDING
● RED LIGHT
● CARELESS
● STOP SIGN
● ACCIDENT
● TICKETS
TRAFFIC TICKETS $100 மட்டுமே

CALL
PETER JOSEPH
பீற்றர் ஜோசப்
416.757.7707
416.757.7797
2425 Eglinton Ave, E., Unit 1A
(Kennedy & Eglinton)

# பதின்ம முன் பருவத்தினரின் (9-12) வளர்ச்சிப் படிநிலைகள்



சிவவதனி
பிரபாகரன்

பெற்றதோடு முடிவதில்லை பெற்றவர்கள் கடன். ஒரு குழந்தையை பெற்றெடுப்பதை விட அதனை நன்கு வளர்த்து அறிவூட்டி சான்றோனாகவும் நற்பண்பினனாகவும் வளர்ப்பது சவாலானதாயினும், தவறாது ஆற்றவேண்டிய பெற்றோரின் தலையாய கடனாகும்.

“பிள்ளை வளர்ப்பு என்பது அப்படி என்ன பெரிய விடயமா?” எனக் கேட்பவர் எம்மில் பலர் உள்ளனர். பிள்ளைகளை சரியாக வளர்க்காவிடில் வெறும் பதராவரேயன்றி பயிராகி வளம்சேர்க்க மாட்டார்கள். பிள்ளை வளர்ப்பு என்பது வெறுமனே ஒரு கலையல்ல. பொறுப்பாக ஆற்றவேண்டிய பாரிய கடனாகும்.

குழந்தை வளர்ப்பில் பருவ வேறுபாடுகளா-வன அதிமுக்கியமாக கவனத்திற்கொள்ள வேண்டிய அடிப்படை விடயங்களாகும்.


ஐந்து வயது குழந்தைப்பருவத்துடன் பதி-னைந்து வயதினரை ஒருபொழுதும் ஒப்பிட முடியாது. குழந்தைகளின் பருவமாற்றத்திற் கமைய பெற்றோர் தம் மனப்பாங்கினையும் மனப்பக்குவத்தினையும் மாற்றியமைப்பது அவசியமாகும். இதர வயதினரை விட 9-12 வயதினருடனான அணுகுமுறைகள் வளர்ப்பு முறைகள் முற்றிலும் மாறுபட்டதாக இருப் பதனால் இவ்வயதினரை சேய்களாக கொண்ட பெற்றோர் தம்மை தக்கமுறையில் நன்கு அறிவுறுத்தி பக்குவப்படுத்தி வைத்தி ருப்பது மிக மிக அவசியமாகும்.

13 வயதிற்கு பின்வரும் பதின்ம வயதுக்கு முன்னைய பருவமான 9 முதல் 12 வரை-யான வயதினைக் கொண்ட பதின்ம முன் பருவத்தில் ஒவ்வொரு குழந்தையின் வளர்ச்-சியும் தனித்துவமானதாகவும் ஒருவருக் கொருவர் அதிகளவில் மாறுபட்டதாகவும் இருப்பதைக் காணலாம்.

பூப்பெய்தும் பருவத்தினையொட்டிய வயதி-னரான இவ்வயதினர் ஒருவருக்கொருவர் உடல் வளர்ச்சியில் வேறுபட்டிருப்பதனைக் காணலாம். இவ்வேறுபாடுகள் உளவியல் வேறுபாடுகளுக்கான காரணிகளாகவும் திகழ்-வதுண்டு குழந்தைப் பருவத்திற்கு விடை கொடுத்து பருவ வயதிற்குள் காலடி எடுத்து வைக்க ஆயுத்தமாகும் இவ்வயதினருள் உளவியல் மாற்றங்களும் நிறையவே நிகழ் வதனை பெற்றோர்கள் நன்கு புரிந்து கொள்ள வேண்டும்.

பெற்றோர் பிள்ளைகளுக்கிடையேயுள்ள தலைமுறை இடைவெளியானது அடிப்படைப் புரிந்துணர்வினால் அகற்றப்பட்டு இறுக்கமான பாசப்பிணைப்பால் இல்லாமல் செய்யப்படு-கின்றது. எனவே பிள்ளைகளின் பருவப் படி-முறைப் பயணங்கள் பற்றி பெற்றோர் அறிந்து வைத்திருப்பதானது பிள்ளைகளில் ஏற்படும் சடுதியான மாற்றங்களை அடையாளம் கண்டு புரிந்துகொள்ள உதவுகின்றது. அத்-துடன் அதற்கேற்ப எம்மை மாற்றிக்கொண்டு சரியான நெறிவழியில் சரியானபடி பிள்ளை வளர்ப்புப் பணியை தொடர உதவுகின்றது.

சில விடயங்களில் பெற்றோரில் தங்கியும் சில விடயங்களில் தன்னாளுமையுடன் சுதந்திர மாகவும் வாழும் இப்பருவத்தினர் தம் பருவமாற்றம் குறித்த தெளிவற்ற பருவக் குழந்தைகள் என்றே கூறவேண்டும். அவர் களே அவர்களுக்கு அந்நியமான வேளை-யில் பெற்றோர் தம்மை இன்னமும் குழந்தை-களாக நடாத்துவதனால் சலிப்புற்று சின-மடைவதனை பரவலாக காணமுடியும். பல சமயங்களில் அவர்களின் பிடிவாதம் வாக்கு வாதம் முன்கோபம் பெற்றோர்களையும் அதிர்ச்சியூட்டி, சினமூட்டி, வேதனையும் ஆத்திரமும் கொள்ளவைத்து வன்முறையா-ளராக்க முயல்வதுமுண்டு. ஆயினும் சரியான அணுகுமுறைகள் பற்றிய தெளிவினை பெற்-றோர் கொண்டிராவிடில் விளைவுகளின்



விபரீதங்கள் அதிர்ச்சிகளையும் வேதனை-களையும் நிரந்தரமாக உருவாக்க நேரிடும் என்பதனைப் பெற்றோர் புரிந்திருக்க வேண்டும்.

பிள்ளைகள் குறித்த சவாலான பொறுப்புக்-களைச் சாதுரியமாக கையாளக் கற்றுக் கொள்வீர்களேயானால் உங்கள் பிள்ளைக-ளை நீங்கள் சாதனை படைக்கும் சாதுரியர் களாக நிச்சயம் வளர்க்க முடியும் என்பது உறுதி. முதலில் அந்த நம்பிக்கை பெற்-றோருக்குள் காத்திரமாக ஆணித்தரமாக இருக்க வேண்டும்.

### உங்கள் குடும்பத்தின் ‘வீட்டு விதிமுறைகள்’- House rules:

வீடு என்றால் கோவில் போன்றிருக்க வேண்டும். கோவிலுக்குள் சென்றால் ஆறு-தலும் மன அமைதியும் கிடைப்பது போல் வீடு குடும்பத்திலுள்ள ஒவ்வொருவருக்கும் ஆறுதலை அளிக்கும் இல்லமாகத் திகழ வேண்டும். பெரியோருள் மட்டுமன்றி சிறி-யோருள்ளும் இத்தகைய எதிர்பார்ப்பு இயல் பாகவே இருப்பதுண்டு.

பெரியவர்களுக்கு வாழ்க்கைப் போராட்டம் ஒருவகை அழுத்தத்தை உளப்பழுவைத் தருவதுபோல் சிறுவர்களுக்கும் அவர்களின் பாடசாலை கல்விப்பழுவினால் இத்தகைய மனப்பாரங்கள் உருவாவதுண்டு என்பது பல பெற்றோருக்கு தெரிவதில்லை.

பாடசாலையில் ஒழுக்கவிதிமுறைகள் பலவற்-றிற்கு கட்டுப்பட்டு செயற்பட்டு விட்டு வீட்-டிற்கு வந்தால் வீட்டிலும் விதிமுறைகள் வகுத்து கட்டுப்படுத்தும் பெற்றோரை சலிப் போடு வெறுத்துச் சினத்துக் கொள்கின்றனர் சிறார்கள்.

விதிமுறைகள் நெறிப்படுத்தலுக்கு அவசிய-மானவை. ஆனாலும் அவற்றை வாழைப்-பழத்தில் ஊசி ஏற்றுவது போல் மென்மையாக ஏற்புடைய வகையில் அறிமுகப்படுத்துவது அவசியம்.

விதிமுறைகள் எவையுமே ஆரம்பத்தில் கடி-னமாகத்தான் இருக்கும். ஆனால், சரியான விதிமுறைகளை சரியான வழிகளில் வகுத் துக் கடைப்பிடிக்க கற்றுக் கொண்டோமே யானால் நேரம் சேமிக்கப்படுவதோடு நிர்-வாகமும் நேர்த்தியாக சிறப்பாக இருக்கும். இது காரியாலயங்களுக்கும் நாட்டுக்கும் மட்டுமன்றி வீட்டிற்கும் பொருந்தும்.

சில வீடுகளில் “எப்படி வேண்டுமானாலும் பிள்ளைகள் குப்பைபோட்டுவிட்டு போகட்டும். நாம் சுத்தப்படுத்தி விடலாம்’’ என எண்ணி வீட்டுச் சுத்தம் குறித்த விதிமுறைகளை தம் பிள்ளைகளைக் கடைப்பிடிக்க ஊக்குவிக் காத பெற்றோர் எம்மில் பலர் உள்ளனர்.

வேறு சில வீடுகளில் “வரவேற்பறையில் சாப்பாடு கொண்டுவந்து சாப்பிடக் கூடாது. சாப்பாட்டு மேசையில் இருந்து கொட்டாமல் சாப்பிட வேண்டும்’’ என கண்டிப்போடு பிள்ளைகளுக்கு விதிமுறை வகுத்து அதில் கண்டிப்பாக இருக்கும் பல பெற்றோர் தாங்கள் மட்டும் தொலைக்காட்சி பார்த்த வண்ணம் வரவேற்பறையிலிருந்து சாப்பிடும் போது “நீங்கள் மட்டும் அப்படி சாப்பிடுகிறீர் களே, ஏன் நான் அங்கு இருந்து சாப்பிடக் கூடாது?’ என பிள்ளைகள் வாதிடுவதனைக் காணலாம். இவ்வாறான நியாயங்களைச் சிறுவர்கள் கேட்கையில் பதில் சொல்ல முடியாமல் சில பெற்றோர் தமது அதிகார பலத்தை அத்தகைய பொழுதுகளில் பிள்ளைகள் மீது பிரயோகிப்பதனையும் சில வீடுகளில் காண்கின்றோம்.

குழந்தை வளர்ப்பில் அதிகார போக்கு இருப்பதைவிட புரிந்துணர்வுடனான நட்புமுறை வழிநடத்தலே வெற்றியைத்தரும். சிறுவர்-களேயானாலும் நீதி நியாயம் குறித்த எதிர் பார்ப்பு அவர்களுக்குள்ளும் உள்ளதனைப் பலசமயங்களில் பெரியவர்கள் உணர மறந்து விடுகின்றனர்.

வீட்டு விதிமுறைகள் வீட்டிலுள்ள எல்லோ-ருக்கும் அறிமுகப்படுத்தப்பட்டதாக பொதுவாக பெரியோர் முதல் சிறியோர் வரை அனை-வராலும் கடைப்பிடிப்பதாக இருப்பது மிக மிக அவசியமாகும்.

வீட்டு விதிமுறைகள் வீட்டை மட்டுமன்றி குடும்பத்தினரையும் நேர்த்தியாகச் செயல்ப் பட உதவுவையாதலால் நிச்சயம் எல்லா வீடுகளிலும் இத்தகைய விதிமுறைகள் இருப்பது அவசியமாகும்.

வீட்டு விதிமுறைகளாவன காலத்திற்கு காலம் மாற்றப்பட வேண்டும். ஒரு குழந்தை 5 வயதாக இருக்கும் போதிருந்த விதி-முறைகள் 9 வயதாக இருக்கும் போது வயதுக்கேற்ப மாற்றப்பட வேண்டும். வளர்ந் துவரும் சிறுவர்களின் பக்குவத்திற்கேற்ப பகிரப்படும் பொறுப்புக்கள் பரிசீலிக்கப்பட்டு மாற்றியமைக்கப்பட வேண்டும்.

“வீட்டு நிர்வாகம் அப்பட்யென்ன பெரிய விடயமா?’’ என நீங்கள் கேட்கலாம். சிலர் எப்பொழுது கேட்டாலும் “நேரமில்லை’’ என்பதைப் பார்த்திருப்பீர்கள். சிலர் ஏனை-யோரைவிட பன்மடங்கு வேலைகளைச் செவ்வனே திட்டமிட்டுச் செய்வதைப் பார்த்திருப்பீர்கள். இவ்விரு பகுதியினருக்-கும் 24 மணி நேரமே ஒரு நாளில் கிடைக் கின்றது. எனினும் நேரத்தை சரிவர நிர்வகிக்க தெரிந்தவரால் நேரத்தை சிக்கனப்படுத்தி


54ம் பக்கம் பார்க்க...




வீடு வாங்க விற்க

உங்கள் வருமானத்திற்கேற்ப எவ்வகையான வீடு வாங்குவதென அறிந்து
கொள்ள முதல் முறை வீடு வாங்குபவர்களின் சலுகைகள் பற்றி
அறிந்துகொள்ள இன்றே எங்களுடன் தொடர்புகொள்ளுங்கள்

Prudential Properties Plus Brokerage
Bus: 416.962.8113
Fax: 416.962.4615, Res: 416 964 5955
552 Parliament Street, Toronto, ON, M4x 1P6



Alfred Soosaipillai
Broker

# விரும்பியோ அல்லால் விதிவசமோ.... புலம்பெயர்ந்தோம்

முடிந்தவரை மேல்நாட்டவர் போல் வாழவும் பழகிக்கொண்டோம். இருந்தும் சில பின்னடைவுகள் எம்மிடம் எஞ்சி நிற்கின்றன. அதில் ஒன்றுதான் நீண்டகால பாதுகாப்பான ஆயுட்காப்புறுதி செய்யாதிருத்தல் என்பது. நெருங்கிய உறவுகளிலோ அல்லது நமது குடும்பத்திலோ ஒரு இழப்பு ஏற்பட்டபின் வரும் ஞானோதயம் யாருக்கும் உதவாது. ஆகையால் யாராவது ஒரு முகவரை அணுகி ஏதாவது நல்ல நிறுவனத்தில் கட்டாயம் ஆயுட் காப்புறுதி செய்து வையுங்கள். நீங்கள் தெரிவு செய்யும்

**அந்த முகவர் நானாக இருந்தால் எனக்கும் மகிழ்ச்சிதான்.**



**Life RESP RRSP Non Medical Critical Illness**



**Insurance Broker**

# Guna Selliah

**416.371.7776**

digi Media

INDUSTRIAL ALLIANCE
INSURANCE AND FINANCIAL SERVICES INC.

RBC

759 Warden Ave., Toronto, Ontario, M1L 4B5, Tel: 416.759.5453 ext: 401
Fax: 416.759.6220, E-mail: guna@lilandinsurance.com

# பதின்ம முன் பருவத்...

52ம் பக்கத் தொடர்ச்சி...

நிறைய விடயங்களைச் சாதிக்க முடிகின்றது. நேரத்தை நிர்வகிக்கத் தெரியாதவருக்கோ 24 மணிநேரம் மட்டுமல்ல எவ்வளவு நேரத்தைக் கொடுத்தாலும் நேரம் ஒருபோதுமே இருக்கப் போவதில்லை.

ஒழுங்குவிதிகள் மற்றும் பொறுப்பு பகிர்வுகள் சரிவர இருந்தால் அத்தகைய குடும்பங்களின் செயலாற்றல் (Productivity) அதிகமாக வெளிப்படும். அத்தகைய குடும்பங்களில் வாழும் சிறார்கள் நாளை ஒரு முழுமையான சமூக மனிதனாக வளர்ந்து வரும்போது சமூகத்திற்கு பயன்தரும் வகையில் தன்னாற்றலை பெருக்கி பயன்தருகின்றார்கள்.

வீட்டு விதிமுறைகளிலும் பழையன கழிதலும் புதியன புகுதலும் பேணப்படுதல் அவசியமாகும்.

(Preteens) பதின்ம முன் பருவத்தினர்கள் ஒழுங்கு விதிகளிளைக் கடைப்பிடித்தலில் அதன் விளைவுகள் காரண காரியங்கள் எனப் பலநோக்குகளில் ஆராய முற்படுகின்றனர். எதற்கெடுத்தாலும் 'ஏன்?' என்று கேட்கும் இவர்களை "அது அப்பிடித்தான். செய் என்றால் செய்!" என அதட்டி அடக்கும் பல பெற்றோர்களை எம்மிடையே காண்கின்றோம். இது தவறு! இன்னும் அவதானித்தால் அத்தோடு அந்த வாதம் அவர்கள் மத்தியில் நின்று விடுவதில்லை. "ஏன் என்று சொல்லுங்கோவன்" என்றும் "ஏன் என்று சொல்லாட்டில் நான் செய்ய மாட்டன்" என்றும் "என்னால் முடியாது" என்றும் மல்லுக்கட்டி நிற்கும் இவர்களை அடிக்க ஈற்றில் வழி தெரியாமல் பல பெற்றோர் சிலசமயங்களில் இரண்டு அடியும் போட்டு விடுவார்கள். இதுவும் மா பெரும் தவறு என்பதை எம் பெற்றோர் உணர்வதில்லை.
"ஏன்?" என்ற கேள்வியில் மனிதன் அறிஞன் ஆகின்றான் என்பதனை விஞ்ஞானமும் மெய்ஞானமும் வாழ்வியல் ஆதாரங்களோடு எடுத்து இயம்புகின்றன. கேள்விகள் சிறுவருள் உள்ள ஆராய்வு மனப்பான்மையை, அறிய விரும்பும் ஆர்வத்தை, அறிவின் வளர்ச்சியினை வெளிப்படுத்துகின்றன. அறிவுத்தேடலின் அறிகுறிகள் அவை. அவற்றை அடக்கி நசுக்குவது சரியல்ல. சில கேள்விகள் பெரியோர்களாகிய எமக்கு முட்டாளத்தனமாகப் படலாம். ஆனால் வளர்ந்து வரும் சிறுவர்களுக்கு புதிய உலகத்தினைக் கற்றுக் கொள்ளும் அறிவியல் தேடலே அவையாகும். முட்டாள்த்தனமான கேள்வி என உலகில் எதுவுமே கிடையாது. அறியும் வரை அறியாமைகள் இருக்கவே செய்யும். அவர்களின் அறியாமைகளை அவர்கள் வெளிப்படுத்துகின்றபோது அவற்றை அகற்றி அறிவூட்டவேண்டியது பெற்றோரின் கடனாகும்.

சில சமயங்களில் இந்த வயதினர் தம் வயதுக்கு ஒவ்வாத காரணம் சொல்ல முடியாத விடயங்களைத் துருவித் துருவி ஆராய்வர். ஞாபகமிருக்கட்டும் அவர்கள் பதின்ம வயதை வெகுவிரைவில் தொடப் போகின்றவர்கள். அடுத்து தம் வாழ்வில் என்ன நடக்கும் என அவர்கள் அறிய முயல்வது இயல்பானவொன்றே. இது பாலியல் சம்பந்தப்பட்ட விடயங்களுக்கும் பொருந்தும். அதனை அவர்கள் வயதுக்குரிய முறையில் மட்டுப்படுத்தப்பட்ட தகவல்களுடன் விளக்குவது பெற்றோரின் கடன். சிலவேளைகளில் அவர்களின் வயதுக்கு சற்றும் பொருந்தாதவையாயின் அது அவர்களுக்கு அந்த வயதில் தேவையற்றவை என்பதை பண்பாக சொல்லி புரிய வைக்கலாம். ஓரளவுக்கு எளிமைப்படுத்தி அவர்களின் வினாக்களுக்கு அவர்கள் வயதுக்கு அறிந்திருக்கவேண்டிய விடயங்களுடன் பதிலளிப்பதே நல்லது.

பெற்றோரிடம் கேட்டுக் கிடைக்காத பதில்களை வெளி உலகிடம் கேட்டறியும் ஆவலோடு குழந்தை எடுத்துச் செல்கையில் விபரீதமான விளைவுகள் உருவாக நேரிடும்என்பதை பெற்றோர் அறிந்திருக்க வேண்டும். சொல்லக்கூடிய விடயங்களாயின் போதிய நேரம் ஒதுக்கிச் சொல்லிப்புரிய வைப்பதே நல்லது.

இந்த வயதினரிடமிருந்து அயராமல் தொடர்ச்சியாக கேள்விகள் வந்தவண்ணமே இருக்கும். இது பெற்றோருக்கு அயர்ச்சியையும் சலிப்பையும் தரக்கூடும். அதனால் நாம் அவற்றை உதாசீனம் செய்ய எண்ணலாம். இதனால் சிறுவர்கள் மேலும் சினமூட்டப்படுவரேயொழிய அவற்றை விட்டுவிடுவதில்லை.

இந்த வயதினர் பொதுவாகவே விதிமுறைகளை விரும்புவதில்லை. மாறாக சுதந்திரத்தின் பால் நாட்டமுற்று இருப்பர். எனினும் பயிற்சியுடனான நெறிமுறைப் புகட்டல்கள் அவர்களை நெறிப்படுத்தி வளர்க்க உதவும். இது சவாலான பணியாயினும் பயன்தரும் பணியாகும். எனவே சிரத்தையுடன் பயிற்றுவிக்க வேண்டும்.

உதாரணமாக "உடைகளை கழற்றி மூலைக்கு மூலை வட்ட வட்டமாக போட்டுவிட்டு போகின்றான்" என சலிக்கின்ற தாய்மாரைக் காண்கின்றோம். இப்படியாக சலிப்போடு பேசிப் பேசியே தாமே வீட்டைத் தனியாக ஒழுங்குபடுத்தும் தாய்மாரே எம்மில் அதிகம். அவரவர் போட்ட குப்பையை அவரவரே துப்பரவாக்க வேண்டும் என்ற விதிமுறை வீட்டில் இயன்றவரை கடைப்பிடிக்கப்பட வேண்டும். தாம் குடித்த குவளையை சாப்பிட்ட சாப்பாட்டுக் கோப்பையை தாமே கழுவுவது, உடைகளை கழற்றித் தோய்க்கப் போடுவது போன்ற சின்னச் சின்ன விடயங்களை பொறுப்போடு செய்யப் பழக்குவதற்கு இது சிறந்த பருவமாகும்.

விதிமுறைகளை வகுத்த பின் அதை கடைப்பிடிப்பதை உறுதிப்படுத்துவதில் கண்டிப்பாக இருந்தேயாகவேண்டும். விதிமுறைகளைக் கடைப்பிடிப்பதன் முக்கியத்துவமானது எந்தச் சிறாருள்ளும் நன்கு வலியுறுத்தப்பட வேண்டும்.

ஆரோக்கியம், சுத்தம், பாதுகாப்பு, சமூகநலன், சமுதாயநலன், அடுத்தவர்நலன் என்னும் அனைத்து விடயம் சார்ந்த விதிமுறைகளும் இவ்வயது சிறாருள் தெளிவாக இவ்வயதிலேயே பதிய வைக்கப்பட வேண்டும்.

படுக்கைக்கு வாரநாட்களில் 10 மணிக்குள் போக வேண்டும் எனும் விதிமுறையை பிள்ளைகளிடம் நாம் கூறும்போது "நீங்கள் மட்டும் முழிச்சிருந்து படம் பார்க்கிறீர்கள். ஏன் நான் பார்க்கக்கூடாது?" எனச் சிணுங்கும் பிள்ளையிடம் 'ஏன்?' என்பதற்கான விளக்கத்தை சரியாக சொல்லி புரியவைத்து ஏற்க வைக்க வேண்டும். பெரியவர்களும் சிறியவர்களும் கடைப்பிடிக்க வேண்டிய விதி முறைகள் சில சில விடயங்களில் வேறு படுகின்றன என்பதை சிறுவர்கள் புரியும் வகையில் புரிய வைக்க வேண்டும். பெரியோருக்குள்ள கடமைகள் என்பன சிறுவர்களுக்கில்லை. பெரியவர்கள் வேறு சிறியவர்கள் வேறு. இத்தகைய வேறுபாடுகளை குழந்தைகளும் புரிந்து வளர வேண்டும். எனின் 'நீங்கள் சொல்வது நீதியல்ல (It's not fair)' என்ற வாதம் அவர்களுள் எழமாட்டாது. வார இறுதி நாட்களில் வேண்டுமானால் அவர்கள் சற்று தாமதமாக படுக்கலாம் என சில விட்டுக்கொடுப்புக்களையும் செய்ய வேண்டும்.

குடும்ப விதிமுறைகள் ஒவ்வொரு குடும்பத்தினதும் வாழ்வு முறைகட்கேற்பவும் சிறாரின் மனப்பக்குவம் கோபம் கொள்ளும் குணம், என்பவற்றுக்கேற்பவும் மாறுபடுகின்றன. சில சிறார்களுக்கு விதிமுறைகளைக் கடைப்பிடிக்க பயிற்றுவிக்க நீண்ட காலம் எடுக்கின்றது. சிலர் அதன் நற்பயனை புரிந்து கொண்டு அவற்றை அநுபவிக்கும் நோக்கில் விருப்போடு ஏற்றுக் கடைப்பிடிக்கின்றனர். குடும்ப சூழ்நிலைகளும் இவற்றிற்கு ஒரு முக்கிய காரணியாகத் திகழ்கின்றது என்பதனையும் மறுக்க முடியாது.

அடுத்தமாத தாய்வீட்டில் இவ விடையம் பற்றி சற்று விலிவாகப் பார்ப்போம்.

vathani@thaiveedu.com

■ ■ ■

www. 905areaHomes.ca
One website for all your real estate needs in 905 area.

BRAMPTON
0% DOWN PAYMENT*



Sandlewood and Edenbrook
Absolutely Gorgeous, 4 B/R, 3 W/R Open Concept Living & Family Room, Formal Dining Room & Separate Great Room With 13' High Ceiling & W/O To Balcony. Close to Transit, Schools, Shopping, New Recreation Centre,GO Train, Etc. New Gleaming Hardwood on Main Floor.Cac, Air Cleaner. High End Stainless Steel Appliances (negotiable) 4 Parking on Driveway. Lots of Sunlight., Lucky Number 42
Asking $389,900 or Best offer

*SOME CONDITIONS APPLY

BRAMPTON




Bovaird and Bramalea
3 bedrooms Freehold Townhouse with 3 washrooms and finished basement, End Unit like Semi. Bright and Spacious, Hardwood in Living and Dining. Close To School, Hospital, Shopping, Public Transit & Hwy's. 3 large bedrooms, includes Fridge, Stove, Washer/ Dryer, B/I Dishwasher, All Elf's & Window Coverings.
Asking only $275,000

AJAX- COMMERCIAL
ATTN: INVESTORS



Kingston and Brock
Golden Opportunity to Own This Investment Property With lots of return on investment. Located in the Courtyard of Historic Pickering Village, set in a traditional European style. Restaurant plus residential Property For Sale Located At Mature Residential Area, About 5500 Sf Plus Bsm't, 5 yrs plus 5 yrs renewable option - Existing lease with great restaurant tenant. Rental Income per Annum $72,000 +Gst Tenants Pay Condo Fee and Insurance. Owner pays Taxes. Easily rentable, beautiful 2 large, two storey residential units, Income up to $18,000. Fantastic Location Great Exposure, Business is not for sale.
Asking only $748,000



கென் கிருபா
Ken Kirupa
Sales Representative
Re/Max Crossroads Realty Inc, Brokerage
1055 McNicoll Avenue, Toronto, Ontario

Decorate, Renovate or Landscape.
Call me for Free National Home Show Tickets
Be a Re/Max VIP at the show..

RE/MAX
Outstanding Agents
Outstanding Results.

Office: 416-491-4002
Direct: 416-294-9322


Consult Ranjan
Project Management & Construction Services
Consulting | Engineering | Management
KNOWLEDGE THAT GETS RESULTS
Zoning Changes • Building Permits • Plan Review • Public Relations • Team Leadership • Expert Testimony • Municipal Planning • Project Management • Development Planning • Specifications Review • Contract Administration • Construction Technology • Industrial Reuse Strategies
Tel.: 416.627.5664
E-mail: ranjan@consultranjan.com
www.consultranjan.com

# நட்பு நிரந்தரமா?

- பொன் குலேந்திரன் -

"உடுக்கை யிழந்தவன் கைபோல வாங்கே யிடுக்கண் களைவதாம் நட்பு"

உடுத்திருக்கும் ஆடை குலைந்தவனது கை, அவன் மனக் குறிப்பின்றித் தானே விரைந்து சென்று மானத்தைக் காப்பது போல நண்பனுக்கு ஒரு இடுக்கண் - துன்பம் - ஏற்படும் போது உடனே சென்று உதவுவதே நட்பா கும் என்கிறது குறள்.

நண்பனுக்கு வரும் ஆபத்தை முன்கூட்டியே அறிந்து அவனுக்கு எச்சரிக்கை செய்வது உண்மையான நட்பாகும். உதாரணத்துக்கு நண்பனை எதிரிகள் தாக்க திட்டம் போடுவதை உணர்ந்தால் அவ்விடத்தில் இருந்து அவனை விலகிச் செல்லச் செய்வது உண்மையான நட்பாகும். இந்த நடவடிக்கை விரைவாக இருக்க வேண்டும் என்பதை குறள் ஒரு சம்பவம் மூலம் சுட்டிக்காட்டுகிறது. நண்பனின் மானத்தைக் காக்கும் செயலாக அது இருக்கவேண்டும்.

நட்பைப்பற்றி பல குறள்களுண்டு. நட்புகள் பலவிதம். நட்புகொள்ளும் போது அதற்குரியவரை நன்கு ஆராய்ந்து நட்புகொள்ளுதல் வேண்டும். சுயநலத்துடன் நண்பனாக பழகும் ஒருவனின் மனதை அறிந்து கொள்வது ஒருவனின் திறமைக்கு எடுத்துக்காட்டு. இத்தகைய குணமுள்ள ஒருவன் நண்பனாகப் பழகி காட்டிக்கொடுக்கும் துரோகத் தனத்தைவிட நேரடியாக விரோதியாக பழகுபவன் எவ்வளவோ மேல். பாம்புக்கு பால் ஊற்றி வளர்த்தாலும் அது ஒரு நாள் கொத்தத்தான் வரும். ஒருவனோடு பல காலம் நட்பு கொண்ட பின்னர் சில அற்ப காரணத்துக்காக நட்பை முறிப்பது நாகரீகமாகாது. அவனது குணம், செய்கைகள், ஆகியவற்றை நன்கு ஆராயாமல் தவறாக நட்பு கொண்டால் அதைப் போல கேடு தருவது வேறு ஒன்றுமில்லை. நட்பிற்கு இனம், சாதி, மதம், மொழி என்ற எல்லைக் கோடு கிடையாது. வெவ்வேறு தேசத்தில் வாழ்பவர்கள் பேனா நண்பர்களாக இருந்து பல காலம் நட்பை பெருக்கியவர்கள் உண்டு. சுயநலத்திற்காக ஒருவனுடன் ஏற்படுத்தும் நட்பானது வெகுகாலம் நீடிக்காது. தனது காரியம் முடிந்தவுடன் அந்த நட்பை படிப்படியாக மறந்து விடுவார்கள்.

தன்விரோதிக்கு விரோதி தான் நண்பன் என்பார்கள். உதாரணத்துக்கு இதனை நாம் உலக அரசியலில் காணக்கூடியதாகவிருக்கிறது. பாக்கிஸ்தான் இந்தியாவுடன் விரோதித்தபோது அதன் நண்பனாக சீனா செயற்பட்டது, காரணம் சீனா, தீபெத் விடயத்தில் இந்தியாவுடன் பகைத்துக் கொண்டதே. இவ்வாறே ராஜீவ் காந்தியின் மரணத்தின் பின்னர் ஈழத்தமிழர்களின் போராட்டத்தை ஆதரிக்காத இந்தியா தமிழர்களுக்கு எதிராகப் போர் தொடுத்த சிறீலங்கா அரசுடன் நல்லுறவை வளர்த்துக் கொண்டது. இதுவே இன்றும் ஈழத்தமிழர்களின் பிரச்சினைக்கு ஆதரவு கொடுக்காது செயல்படுகிறது. வீட்டுக்கு விருந்தாளியாக கூப்பிட்டபின்னர், பிடரியில் அடிகொடுத்து திருப்பி அனுப்பியதை விரைவில் மறந்தது வெகு ஆச்சரியமே. இந்தியாவுக்கும் இலங்கைக்கும் பகைவர்கள் ஈழத்து விடுதலைப் போராளிகள். இத்தகைய நட்பானது நிரந்தரமானதல்ல. நாளை பாக்கிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் போர் ஏற்படும் சந்தர்ப்பத்தில் சந்தர்ப்பவாதியாக பாக்கிஸ்தானுக்கு இலங்கை ஆதரவு நல்கினால் இந்திய சிறீலங்கா நட்பில் விரிவு ஏற்படலாம்.

நட்பானது பல காலம் நிரந்தரமாக இருக்கும் உறவாகும். கர்ணனுக்கும் துரியோதனனுக்கும் இடையேயான நட்பை ஒரு சிறு சம்பவம் அழகாக எடுத்துக்காட்டுகிறதை நாம் மகா பாரதத்தில் கண்டுள்ளோம். துரியோதனன் மனைவி பானுமதியுடன் சதுரங்கம் விளையாடிக் கொண்டிருந்தான் கர்ணன். அப்போது அங்கு வந்த கணவனைக் கண்ட பானுமதி விளையாட்டினை பாதியில் நிறுத்தி விட்டு எழும்போது அவளது மடியில் கட்டியிருந்த முத்து மாலையை பிடித்து இழுத்து கர்ணன் நிறுத்தப் பார்த்தபோது முத்துக்கள் நிலத்தில் சிதறி உருண்டோடின. அதனைக் கண்ட துரியோதனன் தன் நண்பன்மேல் எவ்விதச் சந்தேகமும் இன்றி "எடுக்கவோ கோர்க்கவோ" என்றான் என்கிறது மகாபாரதம்.

கர்ணனுக்கு தன் மேல் எவ்வித சந்தேகமும் வரக் கூடாது எனபதற்காக சிந்தனைகளை வேறு திசை திருப்பினான். "உன்னை யார் என் மனைவியுடன் நான் இல்லாத நேரம் சதுரங்கம் விளையாடச் சொன்னது? உனக்கும் அவளுக்கும் என்ன உறவு என்று அவன் தன் நண்பன்மேல் கேள்விகளைக் கேட்க வில்லை. அவன் கண்ட காட்சியை திசை திருப்புமுகமாக துரியோதனன் சொன்ன வார்த்தைகள் அவனது உயர்ந்த நட்புக்கு எடுத்துக்காட்டாகும். கர்ணன் தான் பாண்டவர்களின் சகோதரன் என்று தெரிந்திருந்தும் அவனோடு நண்பனாக இருந்து பல உதவிகளைச் செய்தான். சிலசமயம் அந்த நட்புக்கு துரியோதனின் சுயநலமும் காரணமாகலாம். அருச்சுனனுக்கு எதிரி கர்ணன் என்பது துரியோதனனுக்குத் தெரியும். வில்வித்தையில் கர்ணனின் திறமையும் அவனுக்குத் தெரியும். ஆகவே தனது எதிரியின் எதிரி தனக்கு நண்பன் என்பதற்கிணங்க அவனுடன் நட்பை வளர்த்திருக்கலாம்.

மகாபாரதத்தில் இன்னொரு சம்பவம் துரியோதனுக்கும் கர்ணனுக்கும் இடையேயான நட்பை எடுத்துக்காட்டுகிறது. துரோணச்சாரியார் முன் போர்க்கலைகளில் தம் திறமைகளைக் காட்ட பாண்டவர்களும் குருகுலத்தவரும் கூடி நின்றனர். அச்சமயம் அருச்சுனனுக்கும் கர்ணனுக்கும் வில்வித்தையில் யார் சிறந்தவர் என்ற நேரடி போட்டி உருவாகியது. அந்த சமயம் தகப்பன் தாய் பெயர் தெரியாத கர்ணனுக்கு பாண்டவர் குலத்தைச் சேர்ந்த அருச்சுனனோடு போரிட எந்த விதத்தில் சம அந்தஸ்து உண்டு என்ற கேள்வி உருவானபோது துரியோதனன் தன் நண்பனுக்கு உதவ முன்வந்தான். நான் கர்ணனை அங்க தேசத்திற்கு மன்னனாக நியமிக்கிறேன் என்றான். அதனால் நண்பனின் மரியாதை காப்பாற்றப்பட்டது. இது "தோள் கொடுப்பான் தோழன்" என்ற வாக்கியத்துக்கு பொருந்தும்.

சில வேளைகளில் சுயநலத்திற்காக நட்பு உருவாகலாம். உதவி பெறுவதற்காகவே உருவாகும் நட்பு உண்மையான நட்பல்ல. இராமன் சீதையைத் தேடி அலையும் போது ஹனுமான் மூலம் சுக்கிரீவனின் நட்பைப் பெற்றான். இருவரும் மனைவியை இழந்தவர்கள். இருவருக்கும் மற்றவரின் உதவி தேவையாக இருந்தது. தன் மனைவியைத் திருடிய தன் சகோதரன் வாலி மேல் வஞ்சம் தீர்க்க இராமனின் உதவி சுக்கிரீவனுக்கு தேவைப் பட்டது. வாலியை கொல்ல இராமனின் உதவியை நாடினான் சுக்கிரீவன். சீதையைத் தேடி கண்டுபிடிக்க சுக்கிரீவனின் உதவியை நாடினான் இராமன். இதனால் வளர்ந்தது அவர்கள் நட்பு.

இதுபோன்றே விடுதலைப் புலிகளுக்கும் காலம் சென்ற சிறீலங்கா ஜனாதிபதி பிரேம தாசாவுக்கும் இடையே இருந்த தற்காலிக நட்பு. இந்திய அமைதிப்படை இலங்கையில் இருப்பதை புலிகளும் பிரேமதசாவும் விரும்பவில்லை. அதனால் புலிகளைப் பாவித்து அமைதிப்படையை வெளியேற்றினார் பிரேம தாசா. அமைதிப் படை நாட்டை விட்டு சென்ற பின்னர் திரும்பவும் அரசுக்கும் புலிகளுக்குமிடையே போர் திரும்பியது.

அரசியலில் நேற்றைய எதிரி இன்றைய நண்பன். தமிழ்நாட்டில் அதிமுக கட்சிக்கும் மதிமுக கட்சிக்கும் இடையேலான உறவு அப்படிப்பட்டது. இன்னொரு வாக்கியமும் உண்டு. பக்கத்து வீட்டுக்காரன் எதிரியானால் பக்கத்து வீட்டுக்கு பக்கத்து வீட்டுக்காரன் நண்பனாவான். இராக்-இரான் போரில் இராக்கிற்கு ஆயுதம் கொடுத்து உதவியது அமெரிக்கா. காரணம் அமெரிக்கர்களை சிறைபிடித்து வைத்திருந்தது இரான். அதற்கு பழிவாங்கவே அந்த நட்பு உருவாகிறது. காலப்போக்கில் இராக் அமெரிக்காவின் எதிரியாயிற்று.

கல்லூரியில் படிக்கும் இரு நண்பர்கள் இருந்தார்கள். ஒருவன் வசதியான பணக்கார குடும்பத்தில் பிறந்தவன். மற்றவன் சாதாரண, வருமானம் குறைந்த குடும்பத்தில் பிறந்தவன். அவர்களது நட்பைக் கண்டு மற்றைய மாணவர்கள் வியந்தனர். பொறாமைப்பட்டனர். சாதாராணக் குடும்பத்தில் பிறந்த மாணவன் அழகான தோற்றமும் கல்வியில் கெட்டித்தனமும் உள்ளவன். நல்ல குணம் படைத்தவன். எவருக்கும் எந்த சமயத்திலும் உதவி செய்ய தயங்கமாட்டான். பணம் படைத்த மாணவனுக்கு படிப்பில் உதவி செய்து பரீட்சையில் சித்தியடைய உதவிகள் செய்தவன். அவனுக்கு தெரியாத கணக்குகளைச் சொல்லிக் கொடுத்தவன். அதனால் வளர்ந்தது அவர்களது நட்பு. அதே கல்லூரியில் படித்தாள் வசதி படைத்தவனின் மாமன் மகள். அவள் தன் மாமன் மகனின் நண்பன் மேல் காதல் கொண்டாள். இது வசதி குறைந்த மாணவனுக்குத் தெரியாது. இதனை அறிந்த வசதி படைத்த மாணவன் மனதில் ஒரு வித சலனம் ஏறபட்டு, தனக்குரியவள் மேல் தன் நண்பனுக்கு எப்படி காதல் ஏற்பட முடியம் என நண்பன் மேல் சந்தேகப்பட்டான். ஆனால் தனது சந்தேகத்தையும் கோபத்தையும் அவன் வெளிக்காட்டிக் கொள்ளவில்லை. ஒரு சமயம் கடலில் நீராடச் சென்ற போது சுழியில் அகப்பட்டு உயிருக்காக போராடி பணம் படைத்த மாணவன் தத்தளித்தபோது அவனுக்கு கைகொடுத்து காப்பாற்றினான் அவனது நண்பன். அந்த சம்பவம் அவனை மாற்றிவிட்டது. பின்னர் தன் நண்பனிடம் தன் சந்தேகத்தை மனம்விட்டு சொன்னான். தனக்கு எவ்விதத்திலும் தன் நண்பனின் மாமன்மகள்மேல் காதல் இல்லை என்பதையும் சகோதரி போல அவளுடன் பழகியதாகவும் அவன் சொன்ன போது அவர்கள் நட்பு மேலும் பலம் பெற்றது.



சந்தேகம் நட்புக்கு எதிரி. போட்டி பொறாமைகளும் நட்புக்கு பங்கம் ஏற்படலாம். உண்மையான நிரந்தரமான நட்பில் இவைகளின் பாதிப்புக்கு இடமில்லை. ஒரு அலுவலகத்தில் வெகுகாலம் நணபர்களாக பழகியவர்கள் பதவி உயர்வுக்கு போட்டி வரும் போது நட்பு ஓரளவுக்கு பாதிப்படைகிறது. "கொண்டுவந்தாலும் கொண்டு வராவிட்டாலும் தாய், கொண்டுவந்தால் சகோதரி, உயிர் காப்பான் தோழன், கொலையும் செய்வாள் பத்தினி.." என்ற வசனம் தூக்குத் தூக்கி படத்தில் வருகிறது. நட்பை உயர் இடத்தில் வைத்து கௌரவிக்கிறது இவ் வசனம். நண்பனுக்கு நடக்கப் போகும் பாதிப்புகளை உணர்ந்து அவருக்கு முற்கூட்டியே ஆலோசனை வழங்கும் ஆலோசகராக இயங்குவது உண்மையான நட்புக்கு அறிகுறி. இருமனங்களும் ஒத்தவர்கள் சிந்திப்பிலும் செயல்பாட்டிலிலும் ஒற்றுமையைக் காணலாம்.

அவர் எனது நீண்ட கால நண்பர், அவர் எனது ஆருயிர் நண்பர், அவர் எனக்கு தெரிந்தவர், அவர் எனக்கு நெருக்கமானவர், அவரை அடிக்கடி சந்தித்து பழகியிருக்கிறேன், அவர் எனது நண்பரின் நண்பர். இப்படி பல கோணங்களில் நட்பை வகைப்படுத்தி பேசுவதுண்டு. அதில் இருந்து எவ்வளவுக்கு நட்பு இவர்களிடையே தீவிரமானது என்பதைக் கணிக்க முடியும். அரசியலில் இன்றைய நண்பன் நாளைய எதிரி என்பது சந்தர்ப்பவாதம் நிறைந்த தற்காலிக நட்பு.

pon@thaiveedu

■ ■ ■

# CELL TEL MOBILITY

Cell tel Mobility

For all your cellphone and accessory needs...

We sell new & used cellphones, Pagers and accessories for:

**ROGERS WIRELESS, FIDO, TELUS MOBILITY, BELL MOBILITY**







BlackBerry Storm GSM

**GPS NAVIGATION**



For cell phones


- -Car charger
- -Leather case
- -Head sets
- -Home charger
- -Clear case
- -Bluetooth headset
- -Bluetooth dongle
- -Data cables
- -Batteries
- -Belt clip/Holder
- -Antenna booster
- -Flashing antenna
- -Flashing light






**Call Toll free:- 1.877.312.5123** SHOP ONLINE @ www.celltelmobility.com

CELL TEL MOBILITY WIRELESS REPAIR CENTER



NOKIA, MOTOROLA, SONY ERICSSON, SAMSUNG, LG HTC,BLACKBERRY,iPHONE,

***Display,Antenna Replacement and all other Repairs (Software & Hardware).***

| | | | |
|---|---|---|---|
| 2637 Eglinton Ave. East, Eglinton Ave/Midland Rd | 5C - 2950 Birchmount Rd Birchmount / Finch Ave | 5A - 1162 Morningside Ave Morningside Ave/ Sheppard Ave | 220 - 5990 16th Avenue 16th Avenue/ Markham Rd |
| 416.266.6818 | 416.495.7776 | 416.281.2355 | 905.201.4859 |

# வசந்த காலமும் தோட்டத்துப்பரவும்




குளிர்காலம் தணிந்து வசந்தகாலம் வரும் நேரத்தில் நாம் வீட்டினுள் அடைந்து இருப்பது, வசந்த காலத்தை அனுபவிக்க முடியாத நிலை ஏற்படும். ஆகவே இந்த நல்ல கால நிலை மாறும் நேரத்தில் நாம் வெளியில் சென்று தோட்டத்தை வசந்த காலத்திற்குத் தயார் செய்யலாம்.

நீங்கள் தோட்டத்தில் வேலை தொடங்கு முன்பு, தோட்டத்திற்குத் தேவையான கருவிகளை எடுத்து, துப்பரவு செய்து, தோட்ட வேலை தொடங்குவதற்கு உங்களைத் தயார்ப்படுத்திக் கொள்ளலாம். அத்துடன் தோட்டத்திற்குத் தேவையான பொருட்களையும் வாங்கி வைப்பது நல்லது. நாம் தோட்டத்தில் வெளியில் நடந்து பார்க்கும் போது தேவையற்ற பொருட்களைக் கண்டால் எடுத்து அவற்றைத் தோட்டத்தை விட்டு அகற்றிவிடவும். பின்பு தோட்டத்தில் குளிர் காலத்தில் பழுதடைந்த மரங்கள், மண்வகைகள், தாவரங்கள் என்பவற்றை அகற்றித் துப்பரவு செய்தல் வேண்டும். அத்துடன் மரம் செடிகளில் செத்த இலைகளை அகற்றி, பழுதடைந்த மரக்கிளைகளை வெட்டி எறிவதன் மூலம் நேரத்துடனேயே செடிகள் பூப்பதற்கும், காய்ப்பதற்கும் உதவியாக இருக்கும். பின்பு குப்பைகளைக் கூட்டி மண்ணை மிருதுவாக்குதல் வேண்டும்.

நாம் மன்னை மிருதுவாக்குவதன் மூலம் அது நீரையும் போஷாக்குள்ள பொருட்களையும் வேருக்குச் சென்றடைய உதவியாக இருக்கும்.

கூட்டித் துப்பரவு செய்த பின்பு, புல்லு வெட்டும் இயந்திரத்தை ஆகக் கூடிய உயரத்திற்கு மாற்றி, புல்லை வெட்டுவதன் மூலம், புல்லைப் பழுதாக்காமல் வெட்டிவிட முடியும். புற்கள் ஏதாவது இடத்தில் அழிந்து போய் இருந்தால் அவ்விடத்தில் உள்ள மண்ணைப் பதப்படுத்திய பின்பு புல் விதைகளைப் போட்டு மீண்டும் மண்ணை பதப்படுத்தலாம்.

அடுத்ததாக Rose செடிகள், மற்றைய மரக் கிளைகளில் ஏதாவது பழுதடைந்து இருந்தால்



அவற்றை வெட்டியோ, துப்பரவு செய்வதால் செடிகள் ஆரோக்கியமாக மீண்டும் வளர்வதற்கு உதவும். சிலவேளைகளில் நாம் மரங்களைப் பிடுங்கி வேறு இடங்களில் நடுவதற்கு விரும்பலாம். அப்படியாயின் வசந்த காலமே அதற்குச் சிறந்த நேரமாகும். மரத்தைப் பிடுங்கி நடும் போது வேர்கள் பழுதாகாமலும், ஈரப்பதனுடன் வைத்திருத்தல் வேண்டும். பின்பு மரத்தை வேறு இடத்தில் புதைக்கும் போது Top Soil பாவிப்பதுடன் Mulchஐயும் போட்டு விடுவதால் களைகள் (Weeds) முளைப்பதையும் தண்ணீர் விடும் நேரத்தையும் குறைக்க முடியும். ஆனால் Mulch, மரத்தின் அடிப்பகுதியைத் தொடாமல் இருப்பது நல்லது. இல்லாவிடில், மரத்திற்கு Fungal infection வருவதற்குக் காரணமாக இருக்கலாம். அத்தோடு மரங்கள் செடிகள் இருக்கும் பகுதியைச் சுற்றி வரம்பு வெட்டி வைப்பதால் அது பார்ப்பதற்கு அழகாக இருப்பதுடன் களைகள் போன்ற தேவையற்ற செடிகள் வளர்வதையும் குறைக்க முடியும்.

வசந்த காலத் தொடக்கத்தில் Fungicides, insecticides, dormant oils அத்துடன் horticultural oils போன்றவற்றைத் தெளிப்பதற்கு உகந்த காலமாக இருக்கும். அத்துடன் ஏதாவது குட்டைகள் அல்லது Fountains இருந்தால் அவற்றைத் துப்பரவு செய்வதால், நுளம்புகள் போன்ற பூச்சி வகைகள் உருவாகாமல் தடுக்க உதவும்.

இதைவிடக் கூடுதலான மரங்கள், தாவரங்கள் நடுவதானால் gardening cataloguesஐப் பார்த்துத் திட்டம் தீட்டிய பின்பு உங்கள் வசந்தகாலத் தோட்டத்தை இன்னும் அழகு படுத்தலாம்.

பின்பு கோடைகாலத்தை நெருங்கும் போது தண்ணீர் செடிகளுக்குக் கூடுதலாக விட வேண்டி இருக்கும். பொதுவாகப் புற்களுக்கு தண்ணீர் விட்ட பின்பு, shovelஐ எடுத்துக் கிண்டிப்பார்க்கும் போது மூன்று அல்லது நான்கு அங்குலத்திற்கு நிலம் ஈரப்பதனாக இருத்தல் வேண்டும். அப்போது தான் தண்ணீர் மரங்கள், செடிகளுக்குத் தேவையான அளவு சென்றுள்ளதாகக் கணக்கிடலாம். அத்தோடு Container plants இருந்தால் கோடைகாலத்தில் ஒவ்வொரு நாளும் தண்ணீர் விட வேண்டும். ஆகவே வசந்த காலம், கோடைக்காலத்தில் நாம் வீட்டைச் சுற்றி அழகாக வைத்திருக்க வேண்டுமானால் அதற்குத் தேவையானவற்றைச் செய்துகொண்டுதான் இருக்க வேண்டும்.

alen@thaiveedu.com

■ ■ ■


# Law Office

## T. JEGATHEESAN

(Barrister, Solicitor and Notary Public (on)



உங்கள் சட்டப் பிரச்சினை எதுவாகிலும் தமிழிலும் ஆங்கிலத்திலும் ஆலோசனைகளுக்கும் சட்ட நடவடிக்கைகளுக்கும் தொடர்பு கொள்ளுங்கள்.

## தி. ஜெகதீசன்

(Barrister, Solicitor and Notary Public (on)

Off: **416 • 266 • 6154**
Res: 416 • 449 • 0358
Fax: 416 • 266 • 4677

2620 Eglinton Ave., East # 201
Scarborough. ON
M1K 2S3

INPROBUS REALTY CORPORATION
Specialty Investment, Property and Business Brokers

**Convenience store in Mississauga for sale-**
8 years in business. $140,000 plus inventory. Sales on lottery plus ATM-$10-11k/month.

**Carole's Café Kitchen. Franchises now available for sale in Toronto, North York and Oakville.**
Offering the famous Carole's cheesecake and unique fresh and healthy homemade foods in an urban

**Art & framing business for sale in Oakville-**
Net Operating Income over $80,000/yr. 20 yrs. in business. Sale price $180,000 (includes inventory of Approx. $50,000).

**Pharmacy, Variety store and Doctor's office space with Property for sale in London, ON.**
Both Buisnesses, vacant furnished Doctor's office and property. Price $800,000 plus inventory. café atmosphere.

**Please call**
**Alan Sivasambu**
**647-504- 2536**

## இயற்கை மூலிகையின் உதவியுடன் உங்கள் கேசத்தை பராமரியுங்கள்!



The ERVAMATIN™ HAIR LOTION

உங்கள் முடியுதிர்வை தடுக்கவும் மீண்டும் தலைமயிர் வளரவும் மிக உன்னதமாக தொழில் புரிகிறது எவமாட்டின் மூலிகை ஔடதம்! உலகெங்கும் பல்லாயிரக்கணக்கானவரின் பாராட்டுதலைப் பெற்ற மூலிகைத் தயாரிப்பு. இப்போது எவமாட்டின் சாம்பூவும் கிடைக்கிறது.



Dreamron HENNA

Treated Natural Henna



**இயற்கை மூலிகையிலான தலை முடி மை**

இயற்கை மூலிகையான மருதாண்டி கொண்டு செய்யப்படும் இவ் மை உங்கள் தலை முடியையும் நன்கு பராமரிக்கிறது.

**The Ervamatin Hair Lotion**

Provides effective and fast therapy for hair loss
And its treatment ensures excellent therapeutic results.
Recommended as a treatment for
Hair loss, hair regeneration, dandruff, alopecia,
Thin hair, baldness, fragile and dry hair.

Amazon Health Care

SABONA & Gift

Tel: 416 264 8787
www.amazonhealthcare.ca
2602, Eglinton Ave East. (Midland/Eglinton)



# குறைந்த செலவில் சிறந்த காப்புறுதி



புகைப்பிடிக்காத 30 வயதுடைய ஆணுக்கு $200 000 காப்புறுதி $17.28 மட்டுமே! (T10. R.C.)

RBC Insurance

INDUSTRIAL ALLIANCE
INSURANCE AND FINANCIAL SERVICES INC.

**தனா மாணிக்கவாசகர்**
*Broker*

# Life Insurance
## Critical Illness Insurance

# Disability Insurance
# Mortgage Insurance

**RRSP - Start from $25**
Loan approval within 24hrs - Bad credit no problem
**RESP - Start from $25**
(20%-40% Government Grant + 15% Company Bonus)



INSURANCE SERVICE INC.
**Cell: 416-728-5772**
Business: 416-290-1200



We Give You the World | Explore It!
Canada
Vancouver $476.00*
Calgary $424.00*
Winnipeg $340.00*
Halifax $300.00*
Middle East
Dubai $954.00*
Abu Dhabi $954.00*
Bahrain $954.00*
Asia
Bangkok $746.00*
Hong Kong $672.00*
Tokyo $1060.00*
Manila $1100.00*
Europe
London $364.00*
Frankfurt $522.00*
Paris $544.00*
Rome $613.00*
Zurich $710.00*
Moscow $710.00*
America
Los Angeles $437.00*
Dallas $334.00*
New York $301.00*
Houston $385.00*
Orlando $298.00*
Honolulu $695.00*
South Pacific
Kuala Lumpur $1070.00*
Singapore $1070.00*
Sydney $1540.00*
Melbourne $1540.00*
Indian Sub Continent
Colombo $1160.00*
Chennai $960.00*
New Delhi $885.00*
Mumbai $885.00*
Karachi $979.00*
Dhaka $960.00*
Kathmandu $1190.00*
Africa
Nairobi $999.00*
Accra $945.00*
Dar Es Salam $999.00*
Johannesburg $999.00*
South America
Sao Paulo $675.00*
Rio De Janeiro $675.00*
Santiago $685.00*
Lima $581.00*
* Shown fares are Seat Sale Fares. Conditions and restrictions apply. Prices are subject to availability of seats. Taxes additional: ranging from $110 - $487.
We Do
Sun-Fun Destinations • Sight Seeing Tours • Via Rail / Euro Rail • Hotels
Vacation Packages • Pilgrimage Packages • Travel Insurance • Cruises
Magnificent India
EXPERIENCE INDIA LIKE NEVER BEFORE WITH OUR AWESOME NEW TOURS.
Kailash Manasarover Yatra
KATHMANDU -KODARI -ZANGMU -NYALAM -SAGA -HORPA -MANASOROVER -DHARCHEN -MT. KAILASH -DEHRAPHUK -ZUTHULPHUK -DOLMALA
16 Days / 17 Nights
North Indian Experience
DELHI -MANDAWA -BIKANER -KHIMSAR -JAISALMER -JODHPUR -DEOGARH -RANAKPUR -UDAIPUR -PUSHKAR -RANTHAMBORE -BHARATPUR -AGRA -JHANSI -KHAJURAHO -KHAJURAHO -VARANASI - DELHI
21 Days / 20 Nights
Romantic Kerala
MUNNAR (HOUSEBOAT) - ALLEPPEY - KOVALAM
6 Days / 5 Nights
Southern Heritage
COCHIN (HOUSEBOAT) - THEKKADY - MADURAI - TANJORE - RAMESHWARAM - KANNAYAKUMARI - KOVALAM
12 Days / 11 Nights
Best of Kerala
COCHIN – MUNNAR – THEKKADY – KUMARAKOM (HOUSEBOAT) – KOVALAM – KANYAKUMARI
10 Days / 9 Nights
Exotic Kerala
COCHIN – MUNNAR -THEKKADY -KUMARAKOM (HOUSEBOAT) – COCHIN
21 Days / 20 Nights
Temples of South India
CHENNAI -CHIDAMBARAM -KANCHIPURAM -KERALA -MADURAI -PALANI -RAMESHWARAM -THANJAVUR -TIRUCHI -TIRUCHENDUR -TIRUPATHI
21 Days / 20 Nights
The Sacred Ganges
DELHI –MATHURA –AGRA –ALLAHABAD –VARANASI –DELHI
12 Days / 11 Nights
YOUR DREAM VACATION AWAITS YOU . . .
All Inclusive Hotel Packages Starting Form $575.00
ACAPULCO
AVALON EXCALIBUR
7 NIGHTS
ALL INCLUSIVE
VARADERO
CLUB TROPICAL
7 NIGHTS
ALL INCLUSIVE
PUERTO VALLARTA
HOTEL TROPICANA
7 NIGHTS
ALL INCLUSIVE
CAYO COCO
CLUB COJIMAR
7 NIGHTS
ALL INCLUSIVE
SANTO DOMINGO
DON JUAN RESORT
7 NIGHTS
ALL INCLUSIVE
CANCUN
SENS CANCUN
7 NIGHTS
ALL INCLUSIVE
HOLGUIN
CLUB COVARRUBIAS
7 NIGHTS
ALL INCLUSIVE
PUNTA CANA
BAHIA PRINCIPE BAVARO
7 NIGHTS
ALL INCLUSIVE
PURETO PLATA
GRAN VENTANA RESORT
7 NIGHTS
ALL INCLUSIVE
Your Satisfaction is Our Success.
Serandib travel.com
Toll Free: 1.888.207.0902
Toronto: 416.750.0009
2075 Lawrence Ave East Suite 202
Mississauga: 905.564.7564 Montreal: 514.448.1389
Calgary: 403.770.9647 Vancouver: 604.625.0495
ACTA
QATAR
Emirates
AIR CANADA

# மனவளக் கலை
## - குண்டலினி யோகக் கலை -

எதற்கெல்லாம் நிதானமிழப்பது என்பதற்கு வரையறை என்பதே இல்லாமல் போய்விட்டது. நிலையில்லாத மனித மனதிற்கு கடிவாளம் போடுவது யார்? எடுத்ததற்கெல்லாம் 'Tension' என்பதே எல்லோருடைய வாயிலிருந்து வந்து விழும் வார்த்தையாக இருக்கின்றது. நிதானம் என்பது நியாயவிலைத் தராசில் இல்லாத சொல்லாகிவிட்டது. வேதனைச் செய்திகள் தாயகத்திலிருந்து வந்து நெஞ்சை அடைகின்றது. யாருக்காக அழுவது? எங்கே திரும்பினாலும் ஆதரவுக் குரல் கேட்பதாக எந்த அச்சாரமும் இல்லை. எவரைக் கண்டாலும் என்ன பேசுவதென்று தெரியாமல் விக்கித்து நிற்கின்றோம்.

படபடப்பான வாழ்க்கையே எமக்கு வாய்த்துவிட்டதே என்று மண்டையிலடித்துக் கொண்டிருந்தால் மரணபயம் வரத்தொடங்கிவிடும். தொண்டை வளை கத்திக்கூத்தாடி என்ன பயன். நிதானமிழந்துவிட்டதாக ஒரு கடுமை. வாய்க்கு வந்தபடி யாரையும் வசைபாடி யாருக்கு லாபம். வாழ்வில் ஏற்றமோ இறக்கமோ இருக்கலாம். ஆனால், வாயிலிருந்து வரும் வார்த்தைகளால் சிலம்பமாடி சித்திரவதைப்படுத்துவதால் யாருக்கு வரப்போகிறது இன்பம்.

எத்தனையோ கஷ்டங்களுக்கும் துன்பங்களுக்கும் மத்தியிலும் சிலர் தமது பகிடிகளால் மற்றவர்களை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்துவதைக் கண்டிருக்கின்றோம். சிலர் இருக்கும் இடத்தில் கூட்டமாக மக்கள் இருப்பார்கள். சிலரைக் கண்டால் துண்டைக் காணோம் துணியைக் காணோம் கதைதான். மனிதனுக்கு மனிதன் ஏன் இந்த வேறுபாடு? ஏன் வெறுப்புணர்வு? யாருக்கும் புரியவில்லை? நினைக்கவே வேதனையாக இருக்கின்றது.

நமது வாழ்வில் வரும் இன்பம், துன்பம், அமைதி, பேரின்பம் அனைத்திற்கும் மனித மனமே விளைநிலமாகும். மனத்தின் உயர்வே மனிதனின் உயர்வு. அத்தகைய மனத்தை அறிய மனம் ஒன்றுதான் கருவி. மனத்திற்குள் உருவாவதெல்லாம் கெட்ட எண்ணமாக இருக்குமானால் அறுவடை என்பது நாசகார மானதாகவும், நஞ்சாகவும் இருக்கும்.

அழிவையே சிந்தித்து அழிவையே மூலதனமாக்கினால் விளைவு எப்படி இருக்கும் என்பதை எம் வாழ்வில் கண்டு கொண்டிருப்பவர்கள் நாங்கள். "உப்பைத் தின்றவன் தண்ணீர் குடிப்பான் தப்பை செய்தவன் தண்டனை கொள்வான்" என்று சும்மாவா சொன்னார்கள்.

எண்ணங்களை ஆராய்வதன் மூலம் அறிவுக்கு (அறிவிருந்தால்) விழிப்பு நிலை உண்டாக்கும். நல்லது என்ன தீயது என்ன என்ற உணர்வாற்றல் உண்டாகும். வினைப் பதிவுகளை மாற்ற இயலும். ஆசைகளை ஒழுங்கு படுத்தி சீரமைப்பதின் மூலம் உடல்நலம், மனவளம், பொருள்வளம், உயர்புகழ், மன நிறைவு உண்டாகும். சினத்தைத் தவிர்ப்பதால் வாழ்வில் மங்களமும், மகிழ்ச்சியும் ஓங்கும். அனைவரிடமும் தாழ்வு உயர்வு பார்க்காது பழகும் மனப்பக்குவம் வரும். முகம் பொலிவுபெற்று பளபளக்கும்.

கவலையை இல்லாதொழிப்பதால் பயமின்மை, மன அமைதி, உடல் ஆரோக்கியம் நிறைவாகவே வரும். நான் யார் என்று தெளிவு பெறுவதால் இளநிலை, உயிர், மனம் குறித்து தெளிவான அறிவு வரும்.

"வாழ்க வளமுடன்" என நம்மையும், பிறரையும் வாழ்த்துவதால் நாமும் நலமாக வாழ்ந்து பிறரையும் வளமாகவும் மகிழ்ச்சிகரமாகவும் வாழவைக்கலாம்.

மனம் தூய்மைபெறுவதால் ஒழுக்கம், கடமை ஈகை இவை நமது வாழ்வில் இயல்பாக அமையும். வாழ்வின் நோக்கம் என்ன? என்ற கேள்விக்கு விடைகாண மனவளக் கலையே ஒரே வழி.

விஞ்ஞான வாழ்க்கை வானுயர வளர்ந்து கொண்டிருக்கிறது. சனத்தொகைப் பெருக்கம் அச்சம் கொடுக்கிறது. விலைவாசி உயர்வு விண்ணை முட்டுகிறது. அரசியல், பொருளாதார துறைகளைப் பார்த்தால் கூச்சலும் குழப்பமுமாக இருக்கிறது. தனிமனித வாழ்வு அச்சமாக இருக்கிறது. எந்த நாட்டை எடுத்தாலும் உள்நாட்டுப் பிரச்சினை, உரிமைப் பிரச்சினை பயங்கரவாதம், மனித உரிமை மீறல்கள் என்று அகோரத் தாண்டவமாக இருக்கிறது. இந்த நல்ல சிந்தனை ஆற்றல் உடையவர்கள், சமுதாய நலநோக்கம் உள்ள (குடும்ப நலநோக்கமற்ற) தலைவர்கள், ஆன்மீக வழிநின்று (போலிச் சாமியார்கலல்ல) வாழ்ந்து வரும் நல்லோர்கள் மனித குலத்தின் வாழ்க்கை நிலையை நகர்த்தும் எதிர்கால உறுதி இன்மையை நினைத்தும் வருந்திக்கொண்டிருக்கிறார்கள்.


பொருளாதார வளம் பெருகினால் அமைதி வரும் என்று பெரும்பாலானோர்கள் நினைக்கிறார்கள். இராணுவ ஆயுதங்கள் மூலம் அடக்கி ஒடுக்கி அநியாயம் அழிச்சாட்டியம் பண்ணி அமைதி காக்க முடியும் என்று சில அரசியல் தலைவர்கள் முயற்சி செய்கின்றார்கள்.

இந்த குழப்பமான உலக நிலையில் ஆன்மீக விளக்கமும் அதையொட்டிய வாழ்க்கை நெறியும் தான் தனி மனிதனையும், மனித குலத்தையும் காக்கவல்லவை. மனித உயிரின் மதிப்புணர்ந்து மனத்தின் மேன்மையுணர்ந்து மற்றோருக்கு மதிப்பளித்து தன் செயலை அளவு முறைக்கு உட்படுத்தி வாழத்தக்க தெளிவும் பழக்கமும் ஆன்மீக அறிவு விளக்கத்தால் தான் எட்ட முடியும்.

ஆறறிவு இருந்தும் அறிவைப் பயன்படுத்தி வாழாததால் தனக்கும், பிறருக்கும் துன்பத்தை தேடி கொள்கிறான் மனிதன். உயிரின் மதிப்பையும், அறிவின் பெருமையையும் உணர்ந்து கொள்கின்ற ஆன்மீக வாழ்வு ஒன்றே மனிதனை நல்ல மனிதனாக ஒழுக்கமும், ஈகையும், கடமையும் உணர்ந்து வாழ்பவனாக வாழச் செய்யும். ஆறாவது அறிவின் பயன், மனம், உயிர், மெய் என்றும் மூன்றையும் உணர்வதாகும். அத்தகைய பெறுமதிப்புள்ள ஆறாவது அறிவு வளர்ச்சி பெற வழியில்லாமல் அது புலனுணர்விலேயே செலுத்தப்படுகின்ற பொழுது அன்பு மீறியும், முறை மாறியும் செயல்படுகின்ற வேகம் மனிதனுக்கு ஏற்படுகின்றது. இந்த நிலையிலிருந்து மனிதனை மீட்க வேண்டுமானால் மனம், உயிர், மெய் என்னும் மூன்று மறைபொருட்களின் எடுத்துக்காட்டாக உள்ள மனிதன் தனது மதிப்பை உணர வேண்டும். இந்த அறிவுதான் பிறருக்கு மதிப்பளித்து அன்போடும், பண்போடும் வாழ வழிவகுக்கும். இதற்கான ஒரே வழி மனவளக்கலை யோகாவும், மனக்கட்டுப்பாடும் மனத்தை வளப்படுத்தும் என்கிறார் அருள்தந்தை தத்துவஞானி வேதாந்திரி மகரிஷி. யார் இந்த வேதாந்திரி மகரிஷி.

வேதாந்திரி மகரிஷி அவர்கள் சென்னைக்கு அருகிலுள்ள கூடுவாஞ்சேரி கிராமத்தில் 1911ம் ஆண்டு பிறந்தார். மிகவும் சாதாரண நெசவாளிக் குடும்பத்தில் பிறந்த அவருக்கு 'கடவுள் யார்', 'உயிர் என்றால் என்ன?', 'வறுமை ஏன் ஏற்படுகிறது?' என்ற கேள்விகளுக்கு விடைகாண வேண்டும் என்ற உள்ள எழுச்சி சிறு வயதிலேயே இருந்தது. சுய முயற்சியின் மூலமே வாழ்க்கையையில் முன்னேறிய அவர் தியான முறையில் சிறந்ததான எளியமுறைக் குண்டலினி யோகத்தினை உருவாக்கிப் பிறருக்கும் கற்பித்து வரலானார். உயிர்ச்சக்தியை பாதுகாப்பதன் மூலம் முதிர்ச்சி அடைந்து வயோதிபம் அடைவதை தள்ளிப் போடுவது என்பதைக் கண்ட சித்தர்களின் நெறியான காயகல்ப யோகத்தினையும் தெளிவுபடுத்தி போதித்தார். அத்துடன் சிறிய வயதுக் குழந்தைகள் முதல் வயதில் முதிர்ந்தோர் வரை அனைவரும் பயின்று பயன் பெறக்கூடிய சாதாரண முறையிலான உடல் ஆரோக்கியப் பயிற்சியையும் கற்பித்தார்.

1958ம் ஆண்டு இவர் நிறுவிய உலக சமுதாய சேவா சங்கம் இன்று இந்தியா, அமெரிக்கா, யப்பான், மலேசியா, கொரியா, சிங்கப்பூர், கனடா ஆகிய நாடுகளில் பல கிளைகளைக் கொண்டு இயங்குகின்றது. இல்லற வாழ்விலும் ஈடுபட்டு துறவற நெறிமுறையையும் கடைப்பிடித்த மகரிஷி அவர்கள் இறுதிவரை



உலக சமாதானத்திற்காக உழைத்தார். 'Yoga For Modern Age' என்ற நூலை எழுதியுள்ளார். யோகா கற்றுக்கொள்பவர்களுக்கு இது ஒரு சிறந்த வழிகாட்டி நூலாகும்.

கொரிய, யப்பானிய மொழிகளிலும் இந் நூல் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

### யோகம் என்றால் என்ன?

நமது வாழ்க்கையை யோக வாழ்க்கையாக எவ்வாறு உயர்த்திக்கொள்வது என்பதை மகரிஷி மிக திறம்பட விளக்கியுள்ளார். ஆரோக்கியமான உடல், அமைதியான மனம் இவை இண்டின் துணைகொண்டு சாதகன் உயிரின் தன்மையை அறிய முற்படும் போது எல்லாம்வல்ல, எல்லாவற்றையும் தன்னகத்தே கொண்டுள்ள இயற்கையின் இரகசியங்கள் அனைத்தையும் ஒவ்வொன்றாக விளக்கத் தொடங்குகிறது. பறந்து வந்ததன் நோக்கம் தெளிவாகி வாழ்க்கையின் குறிக்கோள் விளங்கிவிட்டாலே விழிப்புநிலை அடையும் சாதகன் பிறவின் பெருநோக்கம் மறவாது தன் செயல்கள் அனைத்தையும் ஒழுங்கு செய்து கொள்ளப் பயிற்சி பெற்று விடுகின்றான். 'நான் யார்?' என்ற மேன்மை மிகு கேள்விக்கு விடைகண்டு அந்த விடைகள் வெளிச்சத்திலே மனத்தூய்மை, வினைத்தூய்மை பெற்று பிறருக்கு வழிகாட்டும் அளவுக்கு தன்னை உயர்த்திக் கொள்கிறான். இந்தப் பயிற்சியை ஏற்பதற்கான தகுதி உலகத்தில் பிறந்து வந்துள்ள அனைத்து மக்களுக்கும் உள்ளது என்பதை அறிவிப்பதே மனவளக் கலை.



திரு மகேசன்
mahesan@thaiveedu.com

வாழும் முறையானது வாழ்வின் நோக்கத்திற்கு முரண்பாடாக அமையும் போது துன்பம் நிச்சயம் ஏற்படும். இயற்கை நம்மை நாடி ஓடி வரவேண்டிய இன்பம் மறித்துக் கட்டப்படுகிறது. வாழ்க்கையையும் வாழ்வின் நோக்கத்தையும் அந்நோக்கத்திற்காக வாழும் முறையையும் அறிவதே ஞானம்.

அந்த நோக்கத்தை நோக்கியே நமது வாழ்வு நகர வேண்டும். அப்போதுதான் பொறுப்புணர்ச்சி தானாக மலரும்.

நாம் தவறுகள் செய்கின்றோம். செய்த தவறுகளே துன்பமாக முளைக்கின்றன. இதை கட்டாயமாக தெரிந்துகொள்வது மட்டுமல்ல உணர்ந்து கொள்ளவும் வேண்டும். இந்த அறிவு வந்தபின் இனித்துன்பம் வராமல் இருக்க வேண்டுமானால் இனியாவது தவறு செய்யாமல் இருக்க வேண்டும். இது ஒரு விழிப்புணர்ச்சியாக வரவேண்டும். பொதுவாக நாம் செய்யும் தவறுகள் நமக்குத் தெரிவதில்லை. பெரும்பாலும் பழக்கத்தின் காரணமாக தவறுகள் செய்யப்படுகின்றன. சூழ்நிலை நிர்ப்பந்தத்தால் செய்யப்படும் தவறுகள் அதிகமே.

சூழ்நிலை நிர்ப்பந்தத்தால் செய்யப்படும் தவறுகளும், சூழ்நிலைக் கவர்ச்சியிலே நிற்கும்போதும், பழக்கத்தின் அழுத்தத்தால் உந்தப்பட்டுச் செயலாற்றும் போதும் தவறுகள் தெரிவதில்லை. அதனால் மேலும் மேலும் புலன் கவர்ச்சியில் சிக்குகின்றோம். அதனால் மேலும் மேலும் தவறிழைத்து துன்பத்தையே சந்தித்துக் கொண்டிருக்கின்றோம். இதனால் வந்த வேலை பிறவியின் நோக்கம் மறந்து போகின்றது. பேராசை, சினம் போன்ற ஆறு குணங்கள் வளர்ந்து கொண்டே போகின்றன. விளைவு பஞ்சமா பாதகங்கள் என்று நாம் சொல்லுகின்ற பழிச் செயல்கள் நாளுக்கு நாள் பெருகி வருகின்றன. ஆண்டவன் மீதான பற்று நாளுக்கு நாள் மருவி வருகிறது. இது மாற வேண்டுமானால் தகுந்த மனப்பயிற்சியின்றி முடியாது. ஏனென்றால் தவறு இழைப்பதும், நாம் இனி தவறு செய்யக்கூடாது என்று நினைப்பதும் மனம்தான்.

தவறு செய்யாத வழியைத் தேர்ந்தெடுத்து செல்ல வேண்டியது மனமே. மனத்தைக் சாக்கடைபோல் வைத்துக் கொண்டு எப்படி புதிய வழியில் போவது? முடியவே முடியாது. மனம் சுத்தம் ஆனால் வழி சுத்தமாகும். வழி சுத்தமானால் வாழ்வு சுத்தமாகும். வாழ்வு சுத்தமானால் சுற்றம் சூழல் சுத்தமாகும். நாம் சுகமான வாழ்வை வாழலாம்.

thiru@thaiveedu.com

■ ■ ■

**மனவளக் கலைப் பயிற்சி**

Classes are conducted every Saturday of the week at 4 - 6 pm.

**The SKY Yoga Canada**

80 Nashdene Road, Unit 130
Scarborough, Ontario M1V 5E4
(Located at Markham & Nashdene intersection)

# வீட்டுச் சந்தையின் உச்சக்கட்டத்தைத் தாண்டிய 2009க்கான பார்வை

S.K. பாலேஸ்
- வீடு விற்பனை முகவர் -



2000ல் இருந்து 2007 வரை தொடர்ச்சியாக ஏழு வருடங்கள் வீட்டுச்சந்தையின் விலை ஆக உயர்ந்த நிலையை 2007ல் அடைந்து சாதனைபடைத்தது. இக்காலகட்டத்தில் வீடுகளின் மீழ்விற்பனை 55 மில்லியனில் இருந்து 160 மில்லியன் வரை, அதாவது 16.5 வீதம் வருடம் வருடம் ஒன்றுக்கு உயர்ந்தது. வீட்டு எண்ணிக்கையைப் பொருத்தளவில் 1999 மற்றும் 2000 ஆண்டுகளில் 335,000ஆக இருந்தது 2007ல் 520,000மாக உயர்ந்தது.

2008ல் செயற்பாடு குறைவடைந்துள்ளது. இதை நான் எழுதும்போது 2007ல் இருந்ததைவிட விற்பனைத்தொகை 13வீதம் குறைந்து $140,000 பில்லியனாக இருந்தது.

எனினும் 2008ம் ஆண்டு எப்போதும் இருந்ததைவிட விற்பனைத் தொகையைப் பொறுத்தளவில் இரண்டாவது இடத்திலும் விற்பனையான வீடுகளின் எண்ணிக்கையைப் பொறுத்தளவில் 5வது இடத்தையும் பெற்றன.

அண்மைக்காலங்களில் ஊடகத்துறையைக் கவர்ந்தவிடயம் வீட்டு விலைகள் மிக வேகமாகக் குறைந்திருப்பதே. 2002 - 2007 வரை சராசரி மீள் விற்பனை 63 வீதம் உயர்ந்து அதாவது வருடம் ஒன்றிற்கு சராசரி 10.2 வீதத்தால் குறைந்தது. 2008ல் சராசரி விற்பனை விலை மேலும் 1 வீதத்தால் குறைந்தது. கடந்த 10ஆண்டுகளில் கனடாவில் தொழில் வனம் பெருகியுள்ளது. சென்ற ஆண்டு 2.1 வீதத்தால் அதிகரித்துள்ளது. கனடாவின் சனத்தொகையின் வளர்ச்சி வீதமான 1.3 வீதத்தை விட இது அதிகமானது. கனடாவில் தொழில் செய்யும் நபர்களின் எண்ணிக்கை மிக அதிகரித்துள்ளது. தொழில் வளம் தான் வீட்டு விற்பனைக்கு முக்கிய காரணம். தற்போதுள்ள நிலைமை மட்டுமல்ல கடந்த மூன்று நான்கு ஆண்டுகளில் எத்தனை புதிய வேலை வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டன என்பதும் முக்கியமாகும். அப்படிப் பார்க்கும் போது இன்னும் சில காலத்திற்கு வீடுகளிற்கான கிராக்கி உயர்வாகவே இருக்கும். மக்களுக்கு வீடு வாங்க கூடிய சக்தி இருந்தால் தான் வீடு வாங்கலாம் என்பதல்ல என்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர். 2007லிருந்து 2008வரை அல்பேட்டா, பிரிட்டிஸ் கொலம்பியா, சஸ்கெச்வான் போன்ற மாகாணங்களில் தொழில் அபிவிருத்தியே வீட்டு விற்பனைக்குச் சாதகமாக அமைந்தது.

மேற்கு மாகாணங்களில் வீடு வாங்கக்கூடிய சக்தி 2008ல் குறைந்ததே வீடு விற்பனைக்கு காரணமாகும். 2009ல் இது இன்னும் குறையலாம். 2009ல் ஒன்ராறியோவிலும் பிற மாகாணங்களிலும் புதிய தொழில் வளங்கள் அதிகரிக்காவிடின் வீட்டுச் சந்தைக்கும் பாதகமாகவே முடியும்.

### பொருளாதாரப் பார்வை

பொருட்களை உற்பத்தி செய்யும் ஒன்ராறியோ மாகாணத்தில் பின்வரும் வீட்டு விற்பனைக்குப் பாதகமான பின்வரும் காரணங்களை காண்கிறோம்.

- கனடாப் பணத்தின் பெறுமதி அதிகரிப்பால், அமெரிக்காக்கான ஏற்றுமதி பொருட்களின் அளவு குறைந்துள்ளது.
- கடன் வசதி குறைந்ததால் வியாபார வளர்ச்சி கடினமாக உள்ளது.
- விலைகளின் உயர்வு கிழக்கு மாகாணங்களைப் பொறுத்த அளவில் பொருளாதார வளர்ச்சியைப் பாதிக்கின்றது.

2008 கோடை காலம் வரை இதன் தாக்கத்தை சொத்துக்களின் பெறுமதி அதிகரிப்பும், வீடுகளின் பெறுமதி அதிகரிப்பும் உள்வாங்கி கொண்டன.

சென்ற ஆண்டு செப்டெம்பரிலிருந்து பங்குச் சந்தையும் பெறுமதி அதிகரிப்பு, கனடியப் பொரளாதாரத்திற்கு பாதகமாகவே அமைந்துள்ளது.

### வீட்டுச்சந்தை தோற்றம்

பத்து வருடங்களாக பொருளாதார வளர்ச்சியையும் வீட்டுசந்தையின் சாதனைகளையும் கேட்டும், பார்த்துமுள்ள எங்களுக்கு பொருளாதார வீழ்ச்சியின்போது எப்படிச்சந்தை நிலவரம் இருக்குமெனத் தெரியாது. இதன் பிரதிபலிப்பு மிகவும் மெதுவாகவே தென்படும். வீடுவாங்கத் தயாராக இருப்பவர்களும் சற்று எச்சரிக்கையாகவே இருப்பார்கள்.

துர்அதிஷ்டவசமாக நுகர்வோரின் மனநிலை எப்படி இருக்குமென ஊகிப்பது கடினம். என்னுடைய ஊகம் என்னவெனில் 2009ல் மீள்விற்பனை $445,000 ஆக, அதாவது சாதனை ஆண்டான 2007ஐ விட 15% குறைவாகவும் 2005, 2006ம் ஆண்டுகளைவிட 8-10 வீதம் குறைவாகவும் இருக்கலாம்.

விற்பவர் கைகளிலிருந்து வாங்குவோர் கைகளுக்கு வீட்டுச்சந்தை சென்று விட்டது. 2009ல் நுகர்வோர் சந்தை பலப்படும். ஒட்டாவாவிலும் அல்பேட்டாவிலும் சராசரி விலையில் வீழ்ச்சி காணப்படும். (ஆகையால் மோசமான பாதிப்பை ஏற்படுத்தாது) பிற மாகானங்களில் விலை நிலைத்து நிற்கலாம். சில இடங்களில் விலை சற்று அதிகரிக்கவும் செய்யலாம்.

2009ல் சராசரிவீட்டுவிலை 2 வீதத்தால் குறையலாம். விலை குறையலாம் என்ற கூற்றையும் குறையும் சராசரி விலையையும் சேர்த்துப் பார்தால் 2009ல் $133 மில்லியனுக்கு வீடுகள் விற்பனையாகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. இது 2007ம் ஆண்டின் விலையைவிட 17 வீதம் குறைவு.

### குடியிருப்பு வீடுகளுக்கான ஈட்டுத்தொகை, கனடாவில் வேகமாக அதிகரித்துள்ளது.

2008ல் $880 மில்லியன் ஈட்டுத்தொகை, கனடாவில் நிலுவையில் இருந்தது. வீடு விற்பனை குறைந்த படியால் ஈட்டுச் சந்தையின் வளர்ச்சி வீதமும் குறையும். எனினும் 2009ம் ஆண்டிற்குத் திட்டமிடப்பட்ட 8 வீதம் சற்று அதிகமாயிருக்கலாம். 2009ல் மாதாந்த ஈட்டுத்தொகை $975 மில்லியன் அளவில் இருக்கலாம். 2010ல் ஒரு ட்றிலியன் வரையரைக் கோட்டைத் தாண்டும்.

ஈட்டுச் சந்தையின் இன்னொரு நடவடிக்கை, வீட்டு புதிய கடன்கள், புதிய முதலீடுகள், மாற்றங்கள்,

| | | |
|---|---|---|
| 2007ல் | approvals | $218 Billion. |
| இத்தொகை | | |
| 2008ல்... | | $193 Billion |
| 2009ல்... | | $174 Billion |

ஈட்டுச் சந்தை குறுகிவருவதைப் பார்த்தால் ஈட்டுச் சந்தை அடுத்த இரண்டு வருடங்களில் மிகவும் வளர்ச்சியடையுமென எதிர்பார்க்கலாம்.

(TRANSLATED FROM ENGLISH. ORIGINAL ARTICAL SUBMITED BY WILL DUNNING.)

skbales@thaiveedu.com

■ ■ ■

# மனபிரமையும் கோப்பியும்

அதிகமாக கோப்பி குடிப்பவர்கள் மனபிரமையில் சிக்கி தவிக்கிறார்கள் என்று British நாட்டு ஆய்வு ஒன்று கூறுகிறது

## இது என்ன அதிசயம்!

லண்டனில் (APF), அணமையில் வெளியிடப்பட்ட ஒரு ஆய்வு அறிக்கையின்படி, ஒரு நாள் ஏழு கப் கோப்பிக்கும் அதிகமாக குடிக்கும் மனிதர்கள், குறைவாக கோப்பி குடிக்கும் தங்களுடைய சக ஊழியர்களை விட அதிகமான மனபிரமைக்கு ஆளாகிறார்கள் என்று தெரியவருகிறது.

## விளம்பரம்

ஒரு நாள் ஒரு கப் வீதம் கோப்பி குடிப்பவர்களைவிட கோப்பி பானத்தில் உள்ள Caffeine எனும் ரசாயனப் பொருளின் கொள்ளளவு மூன்று மடங்குகள் அதிகமாகும் போது, உயிர்வாழாத ஒரு மனிதரின் குரல் அவருக்கு கேட்டுக் கொண்டே இருக்கும் என்று Durham பல்கலை கழகத்தில் உளவியல் நிபுணர்களால் நடத்தப்பட்ட ஒரு ஆராய்ச்சி கூறுகிறது. ஆனால் இவ்வாறு குரல்களை கேட்கும் மனோபாவமும் அல்லது மற்ற மனபிரம்மைகளில் உட்படுவதும் Caffeineனால் ஏற்படுவது இல்லை என்று ஆய்வு குறிப்பிடுகிறது. ஆனால் அதிகமான அளவு கோப்பி குடிப்பவர்கள் இந்த மாதிரியான அவஸ்தைக்குள்ளாவர்கள் என்று அது தெளிவாக கூறுகிறது.

மனபிரம்மைகளுக்கு தொடர்பான காரண காரியங்களை விரிவாக அலசி ஆராய்வது தான் இந்த ஆய்வின் முதல்படிஎன்று ஆய்வை நடத்திய PhD மாணவர் Simon Jones கூறினார். குழந்தை பருவத்திலுள்ள மன அதிர்ச்சி போன்ற பல முக்கியமான காரணங்களை முந்தைய ஆராய்ச்சி மிக அழகாக எடுத்துக் கூறியது. இதுபோன்ற பல காரணங்கள் கொண்டு, Caffeine கொள்ளளவு அதிகரிப்பதற்கும் மற்றும் மனப்பிரம்மைகளும் ஏற்படுவதற்கும் எந்த வித சம்பந்தமும் இல்லை, எல்லாம் தற்செயலானதுதான் என்று உறுதியாக கூறுகிறார் இணை ஆசிரியர் Charles Fernyhough. அந்த மாணவர்கள் மனபிரம்மைகளுக்கு உள்ளாகும் சுபாவத்தை



மனபிரம்மைகளுடன் தொடர்புள்ளது என்று எண்ணப்பட்டுள்ளது. ஏனென்றால் உடலில் இவைகளின் தாக்கத்தால் மன இறுக்கம் ஏற்படுகிறது.

மூன்று சதவிகித மக்கள் வழக்கமாக தங்கள் காதுகளில் குரல் கேட்கிறது என்று கூறுவதை கொண்டிருப்பர்கள், மேலும் Caffeine அதிகமாக உட்கொண்டிருப்பார்கள், அதனால் தற்செயலான மனபிரம்மைகளை இப்படி கூறுகிறார்கள் என்று ஒரு விளக்கம் அளிக்க முடியும் என்று அவர் கூறினார்.

Caffeine உட்கொள்வதும் மற்றும் சத்துள்ள உணவு உண்பதும், துன்பம் தரும். அந்த வகைகளான மனபிரமைகளை ஏற்படுத்துகின்றனவா என்பதை நிருபிப்பதற்கு அதிக ஆய்வு இன்னும் தேவைப்படும். மற்ற வகை உணவு மற்றும் பானங்களின் கடுமையான விளைவால் மனபிரமைகள் உண்டாகின்றனவா என்பதை ஆய்வு செய்வதற்கு இப்பொழுது ஆராய்ச்சியாளர்கள் திட்டமிட்டுள்ளார்கள்.

சத்துள்ள உணவு மற்றும் மனபிரம்மைகள் ஆகியவைகளில் மிக சிறிதளவே ஆய்வு நடத்தப்பட்டுள்ளது என்பது ஆச்சரியத்திற்குரிய விஷயம். அதிக அளவு சர்க்கரையும் மற்றும் கொழுப்பு சாப்பிடும் மக்கள் உள்ள சில நாடுகளில் நிறையபேர் மனநலம் பாதிக்கப்பட்டவர்களாக இருக்கிறார்கள் என்று ஜோன்ஸ் கூறினார்.

உணவிற்கும் மற்றும் மனோநிலைக்கும், அதிலும் முக்கியமாக Caffeineக்கும் மற்றும் உடலின் உதிர் விளைவால் ஏற்படும் மன இறுக்கத்திற்கும் இடையே உள்ள தொடர்பை வைத்து, எந்த சத்துள்ள உணவை சாப்பிட்டால் நல்ல காட்சி மனதில் கிடைக்கும் என்பதை பரிசோதனை செய்வது அறிவுள்ள விஷயம்.

தனிப்பட்ட குணம் மற்றும் தனிநபர் வித்தியாசங்கள் என்ற பத்திரிகை இதழில் இந்த ஆய்வு கட்டுரை பிரசுரிக்கப்பட்டது.

■ ■ ■

# CREDIT SOLUTION CENTRE

## Trustee in Bankruptcy

**இணைந்து ஒரே கூரையின் கீழ் இயங்கும்
ஒரு தமிழர் நிறுவனம்**

கடன் பிரச்சனைகளால் நிம்மதியற்ற
வாழ்க்கையா?

நாளாந்த வாழ்க்கை கைநழுவிப்
போகிறதா?

வீடு கார் பறிமுதல் ஆகிவிடும்
என்ற ஏக்கமா?

**Collection Agency**யின் தொலைபேசி
மிரட்டலா?

உங்கள் சம்பளம் **(Salary)** கடன்
தந்தோரினால் பறிமுதல் ஆகிவிடும்
என்ற ஏக்கமா?

உங்கள் அனைத்து
பிரச்சனைகளுக்கும்
இலவச
ஆலோசனைபெற
அழையுங்கள்!

**For Free Consultation
Please Call:**

**Sri**





## CREDIT SOLUTION CENTRE

**80 Corporate Drive # 309
Scarborough, ON M1H 3G5
Tel: 416 439 0224 Fax: 416 439 0226
creditsolutioncentre@gmail.com**

# A1 TOP QUALITY FLORIST





**உங்களின் மங்களகரமான வைபவங்களுக்கு**


**தேவையான பொருட்களுக்கும் நாடுங்கள்**

**பிள்ளை 416-269-5522**

**2871 Lawrence Ave. East, Scarborough. Ontario M1P 2S8**

# A1 TOP QUALITY FLORIST

## Funeral Services




**Floral Arrangement for Funeral Needs**

**பிள்ளை 416-269-5522**

**2871 Lawrence Ave. East, Scarborough. Ontario M1P 2S8**

# கழிவறையில் காளை ஒருத்தன்



குரு அரவிந்தன்

நியூயோர்க் மாகாணத்தில் உள்ள பபிலோ (Buffalo, NY) நகரத்தில் இருக்கும் தொழிற்சாலை நேரடி விற்பனை நிலையங்கள் உள்ள கட்டிடத் தொகுதி ஒன்றுக்கு விடுமுறையின் போது நாங்கள் சென்றிருந்தோம். இயந்திர வாழ்க்கை வாழும் எங்களுக்கு இப்படியான விடுமுறைகளில் வெளியே செல்வது என்பது சொர்க்கத்திற்குச் செல்வது போல இருக்கும். குயின் எலிசபெத் சாலையில் (QEW) அமெரிக்கா நோக்கித் தெற்கே சென்று 405E இடதுபக்க நெடுஞ்சாலையை எடுத்தால் குயின்ஸ்ரன் (Queenston) அமெரிக்க எல்லையை அடையலாம். அங்கிருந்து I -190 நெடுஞ்சாலை எடுத்து சிறிது தூரம் சென்றதும் வெளியே செல்லும் 22 பாதையை எடுத்து இடது பக்கம் திரும்பி நயாகரா-போல்ஸ் பிலவட் (Niagara Falls blvd) எடுத்து இடதுபக்கம் திரும்பி மிலிட்டரி றோட்டிலே (Military Road) சென்றால் பாஷன் அவுட்லெட் ஒவ் நயாகரா போல்ஸ் (Fashion Outlets – NY 14304) என்ற தொழிற்சாலை நேரடி விற்பனை நிலையம் வரும். இந்த விற்பனை நிலையம் குறிப்பாகத் தரமான மலிவான துணிமணிகள் வாங்குபவர்களுக்குப் பிடித்தமான இடமாகையால், வாகனத் தரிப்பிடத்தில் அனேகமான வண்டிகள் ஒன்றாறியோ இலக்கத் தகட்டோடு நிற்பதை அவதானிக்கலாம். இதைவிட மேலும் கொஞ்சத் தூரம் சென்றால் வால்டன் கலறியாமோல் (Walden Galleria – NY 14225) என்று இன்னுமொரு கடைகளின் தொகுதி இருக்கிறது. I - 290E எடுத்து, I - 90W எடுத்து அதிலே 52E வால்டன் கிழக்கு எடுத்தால் இந்தக் கடைத் தொகுதியை அடையலாம். பிரபலமான ஜே.சி.பெனி, மேசீஸ் போன்ற பெரிய கடைத் தொகுதிகள் இங்கே இருக்கின்றன. அமெரிக்காவில் நீண்ட தூரங்கள் நெடுஞ்சாலையில் செல்லும்போது இப்படியான தொழிற்சாலை நேரடி விற்பனை நிலையங்கள் பலவற்றைக் காணமுடியும். கனடிய எல்லை சட்ட திட்டங்களுக்கு ஏற்ப நீங்கள் விரும்பினால் பொருட்களை வாங்க முடியும். நீங்கள் வெளியே தங்கும் நாட்களுக்கு ஏற்ப, அதற்குரிய பெறுமதியான பொருட்களை வரிப்பணம் செலுத்தாமல் கொண்டுவர எல்லையில் அனுமதிப்பார்கள். ஆனால் அளவில்லாத துணிமணிகளை வாங்கினால் அவற்றைத் திருப்பிக் கொடுப்பது கடினமானது.

ஓவ்வொரு கடையாக ஏறியிறங்கிக் களைத்துப் போன நானும் மனைவியும் சற்று நேரம் ஓய்வெடுக்க நினைத்தோம். பூட்கோட்டில் உட்கார்ந்து பிட்சா சாப்பிட்டு, கோக் அருந்தினோம். ஒரு நிமிடம் என்று சொல்லி விட்டு, மனைவி சற்றுத் தள்ளியிருந்த, கழிவறை நோக்கிச் சென்றார்.

திரும்பிப் பார்த்தேன், சுவரில் பெண்ணின் படம் போட்டு, அதன் வாசலை நோக்கி அம்புக்குறி வரைந்திருந்தார்கள். நானும் எனது நேரத்தை வீணடிக்காமல், அதற்கு எதிர்ப்பக்கம் ஆணின் படம் போட்டுக் காட்டியிருந்த மலசல கூடப்பக்கம் சென்றேன். நான் எனது கடன்களை முடித்து விட்டு, கைகளைச் சுத்தம் செய்து கொண்டு வெளியே வந்து, பூட்கோட்டில் மனைவிக்காகக் காத்திருந்தேன். நேரம் ஓடிக் கொண்டிருந்தது, மனைவியோ வரவில்லை.

எதற்குத் தாமதம், காரணம் என்னவென்று புரியாமல் தவித்தபோது, முன்பு ஒருமுறை டவுன்ரவுனில் பெண்களின் கழிவறைக்குள் புகுந்த மனைவி போன வேகத்தில் விழுந்தடித்து ஓடிவந்தது ஞாபகம் வந்தது. அப்போது நானும் பயந்துபோய் 'என்ன?' என்றேன்

'இல்லை அதற்குள் ஒருத்தன் (Guy) நிற்கிறான். நான் தான் ஆண்களின் கழிவறைக்கு மாறிப் போய்விட்டேனோ தெரியாது,' என்றார்.

நானும் அங்கே சென்று பார்த்தேன். வாசலில் பெண்கள் என்று எழுதிப் படமும் போடப்பட்டிருந்தது. அதற்குள் வேறு ஒரு பெண் உள்ளே செல்வதும் தெரிந்தது. அந்தப் பெண்ணும் போன வேகத்தில் திரும்பி வருவாளோ என்று பார்த்தேன். அப்படித் திரும்பி உடனே வரவில்லை.

யாராவது ஆண்கள் தெரியாமல் மாறி உள்ளே வந்திருக்கலாம் என்று சொல்லிப் பயப்படாமல் உள்ளே போகச் சொன்னேன். உள்ளே சென்ற மனைவி சிறிது நேரத்தால் சிரித்துக் கொண்டு வெளியே வந்தார்.

'அது ஒரு டமி. சுவரைப் பார்த்தபடி ஒரு ஆண் நிற்பதுபோல கோட்டும் சூட்டும் போட்டு தொப்பியும் போட்டுப் பெண்களின் கழிவறையில் வைத்திருக்கிறார்கள். முதற் தடவை உள்ளே செல்பவர்களுக்குப் புதுமையான அனுபவமாய் இருக்கும்' என்றார். இதே போல ஆண்களின் கழிவறையில் பெண்கள் முன்னால் நின்று அவர்களைப் பாரப்பது போன்ற படங்களும் சுவரில் இருக்கின்றன. அன்று நடந்த அந்த சம்பவத்தை இரைமீட்டு மனசுக்குள் சிரித்துக் கொண்டிருந்த போது மனைவி அங்கே வந்தார். நீண்ட நேரத்தின் பின் அங்கே வந்ததால் மனைவியிடம், 'ஏன் இவ்வளவு தாமதம்..?' என்று வினாவினேன்.

'அதுவா, நீண்ட வரிசையில் காத்திருக்க வேண்டியிருந்தது! எவ்வளவு நேரம் எடுக்குது தெரியுமா?' என்றார் சலிப்புடன்.

'பொது இடங்களில் மலசலகூடங்களுக்குப் போவதென்றால் இப்படித்தான், அதற்காக அடக்கிக் கொண்டிருக்க முடியுமா? நல்ல காலம் எங்களுக்கு இப்படியான இடங்களில் அதிக நேரம் காத்திருக்க வேண்டிய கரைச்சல் இல்லை!' என்றேன்.

'ஏன் ஆண்கள் வரிசையில் நின்று கழிவறைக்குப் போவதில்லையா?'

'இப்படி எல்லாம் அதிக நேரம் காத்திருக்கத் தேவையில்லை. உள்ளே ஒருபக்க சுவர்க் கரையிலே நிரையாக மார்பிள் பேழைகள் இருக்கும், நிரையாக நின்று, சுவரைப் பார்த்தபடி மார்பிள் பேழையில் பீ அடித்து விட்டு வந்து விடுவார்கள், நவீன தொழில் நுட்ப வளர்ச்சி காரணமாக லேசர் ஒளியின் செயற்பாடு மூலம் அது தானாகவே இயங்கித் தண்ணீரை அவ்வப்போது பேழையில் ஊற்றும்படி செய்திருக்கிறார்கள்' என்றேன்.

'அப்போ, ஆண்களின் மலசலகூடம், பெண்களின் மலசலகூடம் போல தனித்தனியாக அடைத்தில்லையா?' மனைவி ஆச்சரியப்பட்டார்.

'ஏன் ஒருக்காலும் ஆண்களின் மலசலகூடத்தைப் பார்த்ததில்லையா? ஒரு பகுதி அப்படித்தான் அடைத்திருக்கும், மற்றப் பகுதி பீ அடிப்பதற்கு என்று திறந்தபடிதான் இருக்கும். தேவையென்றால் அங்கே நின்றபடி வசதியாக பீ அடிக்கலாம்.' என்றேன்.

'ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டா?'

'இல்லை, சுவரைப் பார்த்தபடிதான், ஆனாலும் திறந்தே இருப்பதால் ஒருவரை ஒருவர் பார்க்கலாம்! எங்களுக்குப் பழகிப்போச்சு..!' என்றேன்.

இங்கே, புகலிடம் தேடிவந்த இடத்தில் நாங்கள் சில விடயங்களை, கூச்சப்படாமல் மனம் திறந்து பேசப் பழகிக்கொண்டோம். ஒரு காலத்தில் பீ அடிப்பது என்று சொல்லவே நாங்கள் கூச்சப் பட்டிருக்கிறோம். ஊரிலே சின்ன வயதிலே இதை எல்லாம் வாய் திறந்து வெளியே சொல்லவே சங்கடப்பட்-










75ம் பக்கம் பார்க்க...

GP TELECOM
இரமணன் திரு
(முன்னாள் பெல் கனடா, ரோஜேர்ஸ் ஊழியர்)
For Your Business We
- Install, Repair, Sell
- Meridian Phone Systems & System Phones
- Structured Voice & Data Cabling
- Install, Repair Home Phone Wiring
- TV Cable (RGB)
- Network Cable
உங்கள் அழகிய வீட்டில் பழுதுகள் ஏதும் ஏற்பட்டாமல்
சுவர்களுக்கு உள்ளால் வயர் எடுத்து கொடுக்கப்படும்
416.203.0344


# துயர் பகிர்வோம்



## துரையப்பா குலசிங்கம்

மண்டதீவைப் பிறப்பிடமாகவும் உருத்திரபுரத்தை வதிவிடமாகவும் கொண்ட சமாதானநீதவானும் லிங்கம்ஸ்ரோர்ஸ் உரிமையாளருமான துரையப்பா குலசிங்கம் அவர்கள் 22ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அகாலமரணமானார். இவர் சின்னம்மாவின் ஆருயிர்க் கணவரும் காலஞ் சென்றவர்களான துரையப்பா, அன்னம்மா தம்பதிகளின் அன்புமகனும் காலஞ் சென்றவர்களான அப்புக்குட்டி நாகமுத்து தம்பதிகளின் அன்பு மருமகனும் கணநாதன் (லண்டன்), மனோகரி (தமிழ்ஈழம்), லோகநாதன்(கனடா), செந்தில்நாதன்(தமிழ்ஈழம்), ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜெயந்தி(லண்டன்), தர்ம ரெத்தினம் (அதிபர் - கிளி/அக்கரையான், கீதா(கனடா) ஆகியோரின் மாமனாரும் திவ்வியன் (தமிழ்ஈழம்), டினா (தமிழ்ஈழம்), ஹரிஸ்(கனடா) ஆகியோரின் அருமைப்பேரனும் இராசரட்ணம் (தமிழ்ஈழம்) அன்னபூபதி (தமிழ்ஈழம்), சித்தசிகாமணி(தமிழ்ஈழம்), காலஞ்சென்றவர்களான சீவரட்ணம், தர்மலிங்கம், மகாலிங்கம் ஆகியோரின் பாசமுள்ள சகோதரனும், முருகேசு(இந்தியா), மயில்வாகனம்(தமிழ்ஈழம்), காலஞ்சென்ற பார்வதி, தனலஷ்மி(மணி-தமிழ்ஈழம்), கணபதிப்பிள்ளை(கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் 23ம் திகதி நடைபெற்றது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கனா | லண்டன் | 044 | 208 | 205 | 6091 |
| | | 044 | 752 | 970 | 0742 |
| லோகா | கனடா | 1 | 416 | 514 | 0925 |
| | | 1 | 647 | 403 | 0704 |



## நாகலிங்கம் கந்தசாமி

மானிப்பாய்-கட்டுடையைப் பிற்பிடமாகக் கொண்டவரும், வெள்ளவத்தையிலும் பின்னர் ரொறன்ரோவிலும் வாழ்ந்து வந்தவருமான ஓய்வுபெற்ற சுங்க இலாகா பிரதிப் பணிப்பாளர் திரு. நாகலிங்கம் கந்தசாமி அவர்கள் கடந்த 15ம் திகதி ஞாயிற்றுக்கிழமை ரொறன்ரோவில் இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம், சின்னத்தங்கம் இணையரின் மகனும், ஞானேஸ்வரியின் அன்புக் கணவரும், ஊரெழு துரையப்பா தம்பதியினரின் மருமகனும், காலஞ்சென்ற கண்மணி, சீவரத்தினம், காலஞ்சென்ற ரத்தினம் ஆகியோரின் அருமைச் சகோதரரும், காலஞ் சென்ற புவனேஸ்வரி, காலஞ்சென்ற திருச்செல்வம், காலஞ்சென்ற சிவசுந்தரம், காலஞ்சென்ற திருநாமச் சந்திரன், ஜெயகிருஷ்ணன் ஆகியோரின் மைத்துனரும், வசந்தி சாந்தகுமார், பாலகுமார் ஆகியோரின் அன்புத் தந்தையும், சாந்தகுமார், ஷெரீன் ஆகியோரின் மாமனாரும் பிரஜீத்தின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 19-02-2009 அன்று ரொறன்ரோவில் நடைபெற்றது.

| | |
|---|---|
| பாலகுமார்: | 416 421 9450. |
| வசந்தி சாந்தகுமார்: | 416 496 2452. |



## திருமதி செங்கமலம் செல்லத்துரை

வளலாய் அச்சுவேலியை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட செங்கமலம் செல்லத்துரை அவர்கள் பெப்பிரவரி 15ந் திகதி ஞாயிற்றுக்கிழமை வளலாயில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரையின் அன்பு மனைவியும்; காலஞ்சென்றவர்களான நாகராஜா, கந்தவனம் அவர்களின் அருமை மகளும்; வேலாயுதம், பத்மநாதர் (SP Electronic உரிமையாளர் - கனடா), காலஞ்சென்ற குணதேவன், செல்வரத்தினம், காலஞ்சென்ற சிவமயம், கதிர்காம அழகன், குகநேசன், நாகேஸ்வரி, வனிதா, கலா, யோகேஸ்வரி ஆகியவர்களின் பாசமிகு தாயாரும்; மங்களேஸ்வரி, பாக்கியலட்சுமி (SP Electronic and கலைமகள் தையல் நிலையம், கனடா), வசந்தா, சுகுணா, கருணாநிதி, சிவக்குமார், யசோதா ஆகியோரின் ஆசை மாமியாரும்; கிருஷ்ணமேனன், கோகிலமேனன் மற்றும் இலங்கையில் வசிக்கும் பேரப்பிள்ளைகளின் பேத்தியுமாவார்.

| | |
|---|---|
| பத்மநாதர் | 416 264 6400 |
| | 416 729 5592 |




## திருமதி. கமலாவதி சந்திரகாந்தன்

கிளிநொச்சி உருத்திரபுரம் 8ம் வாய்க்காலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. கமலாவதி சந்திரகாந்தன் (உப அதிபர் கிளி/உருத்திரபுரம் மகாவித்தியாலயம்) அவர்கள் 03-02-2009அன்று புதுக்குடியிருப்பில் அகாலமரணமானார்.

அன்னார், காலஞ்சென்ற சின்னத்துரை புனிதவதி ஆகியோரின் அன்புமகளும், காலஞ்சென்ற பத்மநாதன் மகேஸ்வரியின் மருமகளும் சந்திரகாந்தனின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற டினேஸ்காந், கிருசாந், துஸ்யந்தினி, ரஜிதா, விதுசன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், சரஸ்வதி, திலகவதி, மயூரதன் ஆகியோரின் அன்புச்சகோதரியும், கிருஸ்ணபிள்ளையின் மைத்துனியும், ரவிகரன், தர்மினி ஆகியோரின் சிறியதாயும், மயூரா, மயூயன் ஆகியோரின் அத்தையும், சிவக்கொழுந்து, புவனேஸ்வரியின் மருமகளும், சிறி, சீயோ, செல்வா, செந்தி, விஜயா, கேதீஸ், சிவா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மயூரதன் | கனடா | 1 | 514 | 234 | 1743 |
| செல்வா | கனடா | 1 | 514 | 928 | 4545 |
| செந்தி | கனடா | 1 | 514 | 991 | 8141 |
| சீயோ | கனடா | 1 | 514 | 723 | 0505 |
| கேதீஸ் | கனடா | 1 | 514 | 961 | 8141 |




## திரு. கந்தையா பரமசாமி

யாழ்ப்பாணம் நல்லூரைப் பிறப்பிடமாகவும், சாவகச்சேரியை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா பரமசாமி அவர்கள் 12.02.2009 அன்று யாழ்ப்பாணத்தில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா, தெய்வானைப்பிள்ளை ஆகியோரின் சிரேஷ்ட புதல்வனும், காலஞ் சென்ற கந்தையா, வள்ளிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மருமகனும், பவழராணியின் கணவரும் (இளைப்பாறிய ஆசிரியை, இந்துக் கல்லூரி), பரணிதரனின் தந்தையும் (HNB யாழ்ப்பாணம்), துஷ்யந்தியின் மாமனாரும், பங்கஜன், தீபிகா ஆகியோரின் பேரனும், காலஞ்சென்ற பாலசுந்தரம் பொன்னியம்மா (நல்லூர்), பாலசிங்கம் (சித்திராலயா ஸ்டுடியோ, யாழ்ப்பாணம்), லீலாவதி சிவபாக்கியம் (இலங்கை), சரஸ்வதி (கனடா) ஆகியோரின் சகோதரருமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றன.

| | |
|---|---|
| சரஸ்வதி இராமநாதன் (சகோதரி): | 905 509 7115 |
| செல்லையா இராமச்சந்திரன் (மைத்துனர்): | 416 289 1400 |



## திரு. கணபதிப்பிள்ளை அருணாசலம்

அனலைதீவு 7ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் D10 உருத்திரபுரத்தை வதிவிடமாகவும், கிளிநொச்சி காணிக் கந்தோரில் தொழில் புரிந்தவருமான திரு. கணபதிப்பிள்ளை அருணாசலம்அவர்கள் 18.01.2009அன்றும், விசுவமடுவில் அகாலமரணமானார். அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - தெய்வானைப்பிள்ளை அவர்களின் அருமை மகனும் , நாகமணி - மீனாட்சிப்பிள்ளையின் மருமகனும், சதாசிவம் (பிரான்ஸ்), சேதுராணி (சுவிஸ்), பத்மநாதன் (கனடா), காலஞ்சென்ற புஸ்பராணி, யோகராணி (தமிழீழம்), வசந்தராணி (ஜேர்மனி), காலஞ்சென்ற விமலராணி, ரவீந்திரநாதன் (போலந்து), ஆகியோரின் தந்தையும், செல்வமலர் (பிரான்ஸ்), சொக்கலிங்கம்(குலசிங்கம்- சுவிஸ்), சாந்தலட்சுமி (கனடா), நடராஜா (தமிழீழம்), பத்மநாதன் (ஜேர்மனி), ஆகியோரின் மாமனும், காலஞ்சென்ற ஆறுமுகம், கனகசபை, செல்லம்மா, பொன்னுத்துரை, பேரம்பலம் (தமிழீழம்), காலஞ்சென்ற சண்முகம் ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற தையலம்மா, முருகேசு, கோபாலபிள்ளை, பேரம்பலம், கார்திகேசு (கனடா), நாகரெத்திகம் (கனடா), பரஞ்சோதி (கனடா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

| | | |
|---|---|---|
| சதாசிவம் | (பிரான்ஸ்) | 33 95 321 7210, |
| | | 33 69 805 9169. |
| சேதுராணி | (சுவிஸ்) | 41 43 245 8510, |
| பத்மநாதன் | (கனடா) | 1 416 745 7186, |
| வசந்தராணி | (ஜேர்மனி) | 49 713 6961 0332, |
| ரவீந்திரநாதன | (போலந்து), | 48 51 476 4730. |

# துயர் பகிர்வோம்



## திருமதி. வேணுகோபால் சரஸ்வதி (தேவி)

வட்டக்கச்சி சில்வா வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட வேணுகோபால் சரஸ்வதி (தேவி) அவர்கள் 12-02-2009 வியாழக்கிழமை புதுக்குடியிருப்பு இரணைப்பாலையில் அகாலமரணமானார்.

அன்னார், காலஞ்சென்ற சொர்ணலிங்கம் செல்லம்மா தம்பதியினரின் அன்புமகளும், காலஞ்சென்ற பொன்னையா பூரணத்தின் மருமகளும், வேணுகோபால்(அத்தார்) அவர்களின் அன்புத்துணைவியாரும், தீபன்(கனடா), கபிலன், ரமா, துஷ்யந்தன் ஆகியோரின் பாசமிகுதாயாரும், விஜய லட்சுமி, தனபாலசிங்கம், இராசேந்திரம், சகுந்தலா, சாந்த குமார் ஆகியோரின் அன்புச்சகோதரியும், இராஜதுரை தங்கரெத்தினம், பாலநந்தினி, சிறிஆனந்தராசா, கல்பனா ஆகியோரின் மைத்துனியும், இராஜவிஜிகரன், குகராஜ், விஜிராஜ், ஆகியோரின் அன்பு பெரியதாயாரும், நயிந்தன், நகானா ஆகியோரின் அன்பு சிறியதாயாரும் தரணிதரன் யசிகரன் ஜெனா தனேஸ் புவிவண்ணன் நாகார்ஜீ ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் 12.02.2009 அன்று இரணைப்பாலை புதுக்குடியிருப்பில் நடைபெறறது.

| | | |
|---|---|---|
| மகன் தீபன் | கனடா | 1 647 886 7472 |
| சிறி சகுந்தலா | சுவிஸ் | 41 71 244 5054 |
| சாந்தகுமார்(ராசா) | சுவிஸ் | 41 41 410 0624 |



## திரு. கனகராஜா அரசரட்ணம்

கொழும்பை பிறப்பிடமாகவும் Torontoவை வதிவிடமாக வும் கொண்ட கனக அரசரட்ணம் (தமிழர் செந்தாமரை பிரதம, ஆசிரியர்) அவர்கள் 24-02-2009 அன்று Torontoவில் காலமானார்.

அன்னார் அமரர் கார்த்திகேசு கனகராஜா, ஜெயலட்சுமியின் அன்பு மகனும், தம்பிராஜா அமரர் பார்வதி அவர்களின் அன்பு மருமகனும், இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், வினோ, அஜந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சிந்துவின் மாமனாரும், மதுமிதாவின் அன்பு அப்பப்பாவும், விஜயராஜா - மீனா அவர்களின் சம்பந்தியும், புஸ்பம், அமரர்களான இராஜரட்ணம், செல்வரட்ணம், நவரட்ணம், மற்றும் மனோரஞ்சிதம் (கனடா), இராஜேஸ்வரி, குணரட்ணம் (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு சகோதரரும், அமரர் சிவராம், மனோகரி, செந்தில், மனோ(கொழும்பு), அமரர் இராஜேஸ்வரன், ஆனந்தன், ஜெனி(கொழும்பு) பேபி, ரஞ்சன், பவா, ஜெயந்தி, சந்திரன், மோகன் (கனடா), ஆனந்தன், ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமைக்கிரிகைகள் மார்ச் 2ம் திகதி ரொறன்ரோவில் நடைபெற்றது.

| | |
|---|---|
| மனைவி - ராஜி: | 905 477 0076, |
| மகன் - விநோத்: | 416 707 6262, |
| | 416 824 8815 |




## திருமதி சறோசினி கணேசராசா

வவுனியா நொச்சிமோட்டையைப் பிறப்பிடமாகவும், சுவிஸ்ஸில் (Swiss) வசித்தவரும், தற்பொழுது வவுனியா குருமன்காட்டில் வசித்து வந்தவருமாகிய, றஜனி என்று அழைக்கப்படும் திருமதி சறோசினி கணேசராசா அவர்கள் 21.02.2009 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் திரு. திருமதி இரட்ணசிங்கம் இராசலஷ்மியின் அன்பு மகளும், திரு. திருமதி காசிநாதன் இராசம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலம் சென்ற தர்மராசா, திருமதி தர்மராசாவின் பெறாமகளும், கணேசராசாவின் அன்பு மனைவியும், ஜீவனா, ஜீவிதா ஆகியோரின் பாசமிகு தாயாரும், சூரியகலா, (ஆசிரியை CCTMS வவுனியா), வசந்தகலா (ஆசிரியை, தமிழ்மகாவித்தியாலயம், வவுனியா) சிவகுமார் இரட்ணசிங்கம் (Invis Mortgage Consultant, Canada), சுகுணா (கனடா), ஜெயக்குமார் (கனடா), தீபன் (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், தவம், ரகு, குலநாயகி, கேதீஸ்வரன் (லங்கன், சுவிஸ்), காலம் சென்றவர்களான கண்ணன், குலநாதன் மற்றும் குலம்(வவுனியா), தர்மரட்ணம் (ஆசிரியர், வவுனியா), இராசலிங்கம் (கனடா), மாலினி (கனடா) ஆகியோரின் மைத்துணியுமாவார்.

அன்னாரின் ஈமைக்கிரிகைகள் வவுனியாவில் நடைபெற்றது.

| | |
|---|---|
| சிவா இரட்ணசிங்கம் | 416 273 5034, 416 520 1214 |
| சுகுணா | 647 894 1991 |
| தீபன் | 416 871 7286 |
| லிங்கன் (Swiss) | 4179 547 8663 |



## குட்டிப்பிள்ளை நாகலிங்கம்

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் கிளிநொச்சி உருத்திரபுரம் D10ஐ வதிவிடமாகவும் கொண்ட குட்டிப்பிள்ளை நாகலிங்கம் அவர்கள் 14.02.09 அன்று வவுனியாவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலம்சென்ற குட்டிப்பிள்ளை சின்னத்தங்கம் ஆகியோரின் அன்பு மகனும், சின்னம்மாவின்(பரமபூபதி) அன்புக் கணவரும், காலஞ்சென்ற லட்சுமணன் பொன்னம்மாவின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற நாகம்மா, தங்கையா, காலஞ்சென்ற இராமநாதன், பொன்னம்மா, தர்மலிங்கம் (பிரான்ஸ்), காலஞ்சென்ற மயில்வாகனம், பரமலிங்கம், பாரசக்தி, இராசமணி, சற்குணம், மனோன்மணி, நகுலேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும். காலஞ்சென்ற கயிலாயபிள்ளை, பொன்னம்மா, காலஞ்சென்ற நாகேந்திரம், தெய்வானைப்பிள்ளை, அந்தோனிப்பிள்ளை(பிரான்ஸ்), கண்மணி(கனடா), பரமேஸ்வரி, காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், இரகுநாதன், காலஞ்சென்ற பாலசுந்தரம், நல்லையா, காலஞ்சென்ற பரமலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், பத்மாவதி, சிவா, தேவி, ரதி, ரவி(தம்பி), பிறேமா, கலா, கரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற மயில்வாகனம், மேகலா, காலஞ் சென்ற பரஞ்சோதி, சிவம், ஜெயந்தி, இளங்கோ, மோகனதாஸ், ஷாமினி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் வவுனியாவில் நடைபெற்றது.

சிவா 001 705 252 5093, தேவி 0049 4161 2487,
ரதி 0041 33 336 3014, பிறேமா 0041 34437 0351,
கலா 0044 137 565 1416, கரன் 0041 34437 1878,
ரவி(தம்பி) 0041 33 223 1487.




## திரு. வேலுப்பிள்ளை பேரம்பலம்

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும், கிளிநொச்சி திருநகரை வதிவிடமாகவும், தற்போது வவுனியா கற்குழியை வாழ்விடமாகவும் கொண்ட திரு. வேலுப்பிள்ளை பேரம்பலம் (அதிபர்) அவர்கள் 12-02-2009 அன்று வவுனியா காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை பூரணம் தம்பதிகளின் அன்புமகனும், காலஞ்சென்ற இராமலிங்கம் அமிர்தம்மா தம்பதியின் அன்பு மருமகனும்; ஜெராட் மேரிறோஸ் (ஜெயமணி) அவர்களின் அன்புக்கணவரும்; தேவராணி, தேவராஜன், தேவரஞ்சன், தேவமனோகரன்(கச்சேரி வவுனியா) தேவபாஸ்கரன், தேவகாந்தன், சபாராணி, தேவானந்தன் (ஆசிரியர் - சுந்தரபுரம்) மோகன்ராஜ், திலகராஜ் ஆகியோரின் பாசமிகு தந்தையும்; ஜெனச்சந்திரரட்ணம், மைதிலி(ஆசிரியை - வவுனியா), மேரிகென்றிகா, லோகேஸ்வரி, கருணாகரன், நீலவேணி(ஆசிரியை - வவுனியா), சிவமங்களேஸ்வரி ஆகியோரின் அன்புமாமானாரும், காலஞ்சென்ற தர்மலிங்கம், சபாரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரரும்; காலஞ் சென்றவர்களான கீதபொங்கலன், மேரிஜோன், அலோசியஸ், மற்றும் ஜேசுதாசன், மேரிகார்மேலா, மேரிஜெசிந்தா, மேரிஜோசப்பின் அகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 15-02-2009 அன்று வவுனியாவில் நடைபெற்றது

| | | |
|---|---|---|
| மனைவி | (வவுனியா) | 9424 222 2861 |
| ரஞ்சன் | (ரொறொன்ரோ) | 416 829 5253 |
| ரகு | (ரொறொன்ரோ) | 416 736 6310 |
| காந்தன் | (மொன்றியல்) | 450 455 9276 |
| பாபு | (மொன்றியல்) | 514 606 0040 |
| திலகன் | (மொன்றியல்) | 450 424 9624 |



## திரு. கிருஷ்ணபிள்ளை சங்கரப்பிள்ளை

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் இல 322 ஸ்கந்தபுரம் மற்றும் அக்கரையான்குளத்தை வதிவிடமாகவும் கொண்ட, இளைப்பாறிய தபால் ஊழியரும், கிளிநொச்சி மாவட்ட பலநோக்கு கூட்டுறவுச் சங்க தலைவரும், சமாதான நீதவானுமான திரு. கிருஷ்ணபிள்ளை சங்கரப்பிள்ளை அவர்கள் 29-01-2009 அன்று சுதந்திரபுரத்தில் அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம் சொர்ணம் தம்பதிகளின் ஆசை மருமகனும், தங்கலட்சுமியின் பாசமிகு கணவரும், தேவகிருஷ்ணபவானி, தேவகிருஷ்ணதாசன் (மாவீரர்), தேவகிருஷ்ணவாணி, தேவகிருஷ்ணநேசன், நேசினி, வாசினி, விமலினி, கிருபா, கிருஷா ஆகியோரின் அருமைத் தந்தையும், கண்மணி (கனடா), காஞ்சென்ற பராசக்தி, செல்வமணி (கனடா), காஞ்சென்ற முத்துக்குமார், செல்லம்மா (இலங்கை), அனனலட்சுமி (இலங்கை), ஜெயக்குமார் (டென்மார்க்) ஆகியோரின் அனபுச் சகோதரனும் ஆவார். அன்னார் காலஞ்சென்ற மயில்வாகனம், கதிரவேலு (கனடா), சிங்கராஜா (கனடா), அறுபுதமலர் (இலங்கை), நல்லதம்பி (இலங்கை), காலஞ்சென்ற பசுபதி, கிரி (டென்மார்க்), காலஞ்சென்ற காசிநாதன், சுந்தரலிங்கம் (இலங்கை), சொர்ணலட்சுமி, லிங்கநாதன் (சுவிஸ்), யோகநாதன் (கனடா), காலஞ்சென்ற யோகலட்சுமி ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், இராசலிங்கம், விஜயகுமார், தயாநிதி, பவான், சதீஸ்வரம், ஆகியோரின் ஆசை மாமனாருமாவார்.

| | |
|---|---|
| சிங்கராஜா (கனடா): | 905-884-0206 |
| மகேன் சிங்கராஜா: | 416-302-7283 |
| நந்தினி சிங்கராஜா: | 416-704-4006 |

# மலிவு விலைக் கடை



மஞ்சுளா ராஜலிங்கம்

பொருளாதார வீழ்ச்சி, மற்றும் பங்குச்சந்தைகளின் வீழ்ச்சி காரணமாக கடைகளில் பொருட்களின் விலையும் கூடியுள்ளது. இப்போது ஒரு டொலரே நமக்கு ஐந்து டொலருக்குச் சமானமாகத் தோன்றுகின்றது. இந்த நேரத்தில் டொலர்க் கடைகளை ஒரு நோட்டம் விட்டால், நீங்களே நல்ல தரமான பொருட்களும் அங்கே மலிவாகக் கிடைப்பதைக் கண்டு ஆச்சரியப்பட்டுப் போவீர்கள்.

டொலர்க் கடைகளில் நாம் காணும் பொருட்கள் பொதுவாக பெரிய கடைகளில் பார்க்கக் கூடிய ஒன்றுதான். ஏன், வீடுகளில் சுத்திகரிப்பதற்குப் பாவனையிலிருக்கும் பல பொருட்களைக் கூட டொலர்க் கடைகளில் வாங்கிவிடலாம். பொருட்களைத் தயாரிக்கும் நிறுவனங்கள், அவர்களின் உற்பத்தி, கொள்வனவின் அளவைத் தாண்டும்போது, இம்மாதிரி டொலர்க் கடைகளிடம் பேசி, ஒரு தள்ளுபடி விலையில், மிகுந்ததை விற்றுவிடுகிறார்கள். அதற்காச் சில பொருட்களின் தரத்தில் குறையென்று சொல்வதற்கில்லை. பற்பல விற்பனைப் பொருட்கள் மிகவும் பிரபல்யமான விநியோகஸ்தர்களிடம் இருந்துகூட டொலர்க் கடைகளில் விற்பனைக்குக் கொண்டு வரப்படுகின்றன. அத்துடன், ஒரு புது அறிமுகப் பொருள் விற்பனைக்கு வரும்போது, பெரும்பாலும் அவற்றைப் பெரிய கடைகள் தான் முதலில் அறிமுகப் படுத்தும். சில மாதங்கள், அல்லது ஆண்டுகளில் அவற்றின் முக்கியத்துவம் குறைந்து அதேபோன்ற இன்னொரு பொருளுக்கு மவுசு கூட, மறக்கப் பட்ட பழைய பொருளன்கள் டொலர்க் கடைகளுக்கு தள்ளுபடி விலையில் விநியோகிக்கப் படுகின்றன.

ஆரஞ்சு வாசனை கலந்த cleaners மூன்று வருடங்களுக்கு முன் கடைகளில் மிகவும் பிரபலம். தற்போது, மக்கள் அதேபோன்ற வேறு உற்பத்தியை நேசிக்க, மறக்கப்பட்டது orange scented cleanersஇன் அவசியம். தற்போது அவைகளை டொலர்க் கடைகளில். தேவையானபோது வாங்கிக் கொள்ளலாம், ஏனெனில் மொத்தச் சரக்கையும் இம்மாதிரிக் கடைகள் வாங்கி தங்களுக்கு சிறிதளவு இலாபத்தை ஏற்படுத்திக் கொள்கின்றன. இதை வாங்கவும் ஒரு கூட்டம் தொடர்ந்தும் நிச்சயமாய் இருக்கத்தான் செய்கின்றது.

## டொலர்க் கடைகளில் வாங்கத் தரமான பொருட்கள் என்ன?

வீட்டைச் சுத்தப்படுத்தப் பாவிக்கும் விதவித பாவனைக்கான cleaners நிறைய டொலர்க் கடைகளில், பெயர் பெற்ற மற்றும், பெயர்ப் பிரபல்யமல்லாத நிறைய cleaning products கிடைக்கும். பெயர்ப்போன உற்பத்திப் பொருட்கள் சாதாரணக் கடைகளில் கிடைப்பதைவிட, 60 தொடக்கம் 70 சதவிகிதத் தள்ளுபடி விலையில் இங்கே கிடைக்கும். அதேபோல், பெயர் பிரசித்தி இல்லாத பொருட்களிலும் கலக்கப் பட்டிருக்கும் சேர்வைகளின் பட்டியல் பெயர் பெற்றவையில் இருக்கும் சேர்வைகளுடன் ஒத்துப் போகும். அதிலுள்ள ஒரே ஒரு வித்தியாசம், name brand productsஇல் உள்ளதைவிட மெல்லிய கலவைகளைக் கொண்டு, அதாவது less weight and more diluted solutions கொண்டு அக்கலவை உருவாக்கப் பட்டிருக்கும். நாம் வீட்டில் பாத்திரங்களைக் கழுவப் பாவிக்கும் cleanersஐப் பார்த்தால், அவை கொஞ்சம் நீர்த்தன்மையாக இருக்கும். அதற்காக அவைகள் திறமற்றவை என்று சொல்வதற்கில்லை. அவையின் பாவனை சீக்கிரம் முடிந்துவிடும். ஆனால் அம்மாதிரி clenersஐக் கொண்டு பாத்திரங்களைக் கழுவினால் கெடுதல் எதுவும் இல்லை, பலனும் நன்றாகவே இருக்கும். இதில் washing detergents, soaps, window cleaners, bath cleaners போன்றவையும் அடங்கும். washing detergentsஆல் ஆடைகளுக்கும் எந்தக் கெடுதலும் கிடையாது.

உணவுப் பதார்த்தங்களை எடுத்துக் கொண்டால், இவற்றைக் கொஞ்சம் தரம்பிரித்துப் பார்த்துத் தவிர்ப்பது நல்லது, ஏனெனில், திரவம் போன்ற பொருட்களில் கட்டாயம் காலாவதி குறிப்புக்கள் இருப்பினும், அவை காலாவதியாகி பல நாட்களாக இருக்கும். அவற்றை வாங்கி உட்கொண்டால், உடலுக்குக் கேடு விளையும் என்பதை நாம் கருத்தில் கொள்ளல் வேண்டும். அத்துடன், சிலவகை சாக்லெட்டுக்கள், sauces, juices, pudding and cake mix, சில நொறுக்குத் தீனிவகைகள் போன்றவற்றை வாங்காமல் விடல் நல்லது. pasta, candy வகைகள், செல்லப் பிராணிகளுக்கான உணவு வகைகள், சிலவகை chips போன்றவற்றை வேண்டுமானால் வாங்கலாம். இவைகளில் அதிகம் பாதிப்பு விளைவிக்கும் படியாய் எதுவும் கிடையாது.

கொள்வனவாளரின் கணிப்பின்படி, brand name கொண்ட shampooவிற்கும் இம்மாதிரிக் கடைகளில் விற்கும் shampooவிற்கும் அதிக வித்தியாசம் கிடையாது. பெரிய கடைகளில் அதிக விலைக்கு விற்கும் shampoக்களில் இருக்கும் மூலப்பொருட்களே டொலர்க் கடைகளில் விற்கப்படும் shampoo போன்றவற்றிலும் இருக்கின்றன. இதிலுள்ள ஒரேயொரு வித்தியாசம், brand name கொண்ட shampoo வகைகளில் வாசனை அதிகமாக இருக்கும், நம் டொலர்க் கடைகளில் விற்கப்படும் shampooவிற்கு அந்த வாசனை அறவே கிடையாது. ஒரு brand name shampooவையும் ஒரு டொலர்க் கடை shampooவையும் வாங்கி அதிலுள்ள மூலப்பொருட்களைப் படித்துப் பாருங்கள். ஒரு வித்தியாசமும் பெரிதாக நீங்கள் கண்டு பிடிக்கப் போவதில்லை.

குளியலறைப் பொருட்கள், அதாவது, சோப், bubble bath liquids போன்றவைகள் உங்கள் பிள்ளைகளுக்குப் பிடிக்குமாயிருந்தால், அவைகளை வாங்கிப் பயன்படுத்தலாம். இவற்றை dollar கடைகளில் வாங்குவதால், கணிசமான பணம் மிச்சப் படுத்துவதோடு, உடலுக்கு, அல்லது தோலுக்கும் கூட இவற்றைப் பாவிப்பதால் எந்தக் கெடுதலும் இல்லை. இவற்றைச் சமயத்தில், பருவப் பெண்களுக்கும் பரிசுப் பொருட்களாகக் கட்டிக் கொடுக்கலாம், ஏனெனில், இந்த வயதில் வாசனைச் சோப்புக்கள், bath oils, bath sponges மற்றும் body powders போன்றவற்றைப் பாவிப்பதில் அதிக நாட்டம்காட்டுவர், தம்மைப் பிறர் பிரத்தியேகமாகக் கவனிக்க வேண்டுமென்பதற்காக.

சரி, பரிசுப் பொருட்களை அழகாகக் கட்டுவதற்குப் பயன்படுத்தப் படும் வண்ணக் காகிதங்கள், பரிசு அட்டைப் பெட்டிகள், வாழ்த்து மடல்கள், ரிப்பன்கள், அழகிய வேலைப்பாடமைந்த, பெட்டிகளில் ஒட்டக் கூடிய stickers, வண்ணப் பூக்கள் போன்றவற்றையும் இங்கே மிகவும் குறைந்த விலையிலும், நிறைந்த அழகிலும் வாங்கி விரும்பினாற்போல், நம் ரசனைக்கேற்ற வகையில் பரிசுப்பொருட்களை அமைத்துக் கொடுக்கலாம். Walmartஇல் வாங்குவதைப் போலவே, அந்தப் பொருட்களின் வரிசையில் இவற்றைச் சேர்க்கலாம்.



அத்துடன், சமையலறையில் பதார்த்தங்களையும், சரக்குச் சாமான்களையும் போட்டுப் பாதுகாக்கும் பிளாஸ்டிக் பெட்டிகள், பலவித வடிவங்களில், அளவுகளில், நிறங்களில் கிடைக்கும். இவை இன்றையச் சமையலறைப் பகுதிகளுக்கு இன்றியமையாத உபகரணங்களாகும். இத்துடன், கரண்டி, கத்தி முட்கரண்டி மற்றும் இன்னும் எவ்வளவோ வகையான சமையலறை உபகரணங்களும் இங்கே மலிவாகவும், அதே நேரத்தில் தரமானதாகவும் கிடைக்கின்றன. வாங்கிப் பாவிப்பதுடன், சமையலறையையும் அட்டகாசமாக அலங்கரித்ததாகவும் போயிற்று. விலையும் குறைவுதான். சமையலுக்கு இதனால் எந்தக் கெடுதலும் கிடையாது. அதே சுவை, மணத்துடன் தான் சமையலும் இருக்கும்.

இன்னுமோர் பொருளானது, அழகிய கண்ணாடிகளால் செய்யப்பட்டு, hand paint செய்யப்பட்ட குப்பிகள், புட்டிகள் மற்றும் குடிக்கும் தம்ளர் போன்றவை. இவை பரிசுப் பொருட்களாகக் கொடுப்பதற்கு மிகவும் உகந்தவை. இவற்றை வாங்கி, அழகாக ரிப்பன்களைக் கட்டி, அவற்றினுள்ளே இனிப்புக்கள், பிஸ்கட்டுக்கள், மற்றும் அவற்றுள் பொருந்தக் கூடிய நல்ல பரிசுப் பொருட்களையும் அதனுள் அடைத்து, அழகாகக் கலர் பேப்பர் சுற்றிக் கொடுக்கலாம். விலை ஒன்றில், ஒரு டொலர் அல்லது ஒரு டொலருக்கு இரண்டு என்றஅளவில் ஒரு பொருளின் அளவினை நிர்ணயித்து இருக்கும்.

சிறு பிள்ளைகளுக்கான பகுதிகள் என்றிருக்கும் பக்கத்தில், அவர்களுக்குத் தேவையான வர்ணம் தீட்டும், படங்கள் போட்ட அழகிய புத்தகங்கள், மற்றும் கதைப் புத்தகங்கள், குழந்தைகளுக்கான அரிவரிப் புத்தகங்கள், மற்றும் பள்ளிக்கூடத்திற்கு தினப் பாவனைக்கென எடுத்துச் செல்லப்படும், பென்சில், பேனா, ரப்பர் இப்படிப் பலதும் கிடைக்கும். குழந்தைகளுக்கு விலை அதிகம் கொடுத்து வாங்கிக் கொடுக்கும் பள்ளிப் பாவனைப் பொருட்களுக்கும் இவைக்கும் எந்த வித்தியாசமும் இல்லை. அத்துடன், கொடுத்த மறுநாளே பள்ளிக் கூடத்தில் பொருட்களைத் தொலைத்துவிட்டு வந்து நிக்கும் குழந்தைகளுக்கு, விலையுயர்ந்த பொருட்களை வாங்கிக் கொடுப்பானேன்? இந்த வயதில் அந்த பொறுப்புணர்ச்சியின் அர்த்தமும் தெரியாது. இப்போதைக்கு வளரும் பருவத்திற்கு, டொலர்க்கடைப் பொருட்களே மிகவும் உகந்தவை.

இப்படி இன்னும் எத்தனையோ பொருட்களைப் பற்றிச் சொல்லிக்கொண்டே போகலாம். சமயத்தில், எதை எடுப்பது, எதை விடுவதோ என்று ஆசையாய் இருக்கும். வீட்டிற்கு அத்தியாவசியமான, தேவை என்று நினைக்கும் பொருட்களை, செலவினையும் கருத்தில் கொண்டு, தேவைப்பட்டால் வாங்கலாம். டொலர்க்கடை தானே என்பதற்காக பணத்தைக் கொண்டு அங்கே மொத்தமாகக் கொட்ட வேண்டுமென்பதும் இல்லை. மொத்தத்தில், வீட்டின் ஒவ்வொரு மூலை முடுக்கிற்கும் தேவையான பொருட்களை அதிக செலவின்றி டொலர்க் கடைகளிலேயே வாங்கிக் கொள்ளலாம். எளிய செலவில் நிறைந்த அழகைப் பெற்றுக் கொள்ளலாம். கொஞ்சம் கற்பனைத் திறனும், கலைத் திறனும் இருந்தாலே போதுமானது.

சிலபேர் brand name என்று அலைவார்கள். அவர்களுக்கு டொலர்க் கடை என்ற வார்த்தைகளைக் கேட்டாலே கசக்கும். ‘‘ஐயோ, நாங்கள் அங்கேயெல்லாம் போவதில்லை’’ என்று ஏதோ தமது தகுதிக்குக் குறைவான பேச்சைப் பேசி விட்டதைப் போல் நடந்து கொள்வார்கள். ஆனால் அவர்கள் எவ்வளவு பணத்தை அம்மாதிரிக் கடைகளின் மூலம் சேமிக்கலாம் என்பதைப் பற்றி கொஞ்சம் கூடச் சிந்திப்பதில்லை. பெரியவர்கள் தான் அப்படியென்றால், சின்னஞ்சிறு குழந்தைகள் மனதிலும் அப்படியான ஒரு மனப்பாங்கினை வளர்த்து விடுகிறார்கள். குழந்தைகளும், டொலர்க் கடைகளைக் கண்டால் அருவருப்பதும் உண்டு. சிறுவயதிலேயே, பணத்தின் தேவையையும், அத்தியாவசியத்தையும், அதன் முக்கியத்துவத்தையும் குழந்தைகளுக்கு போதிப்பதுடன் நின்றுவிடாமல், அதன் சேமிப்பு உக்தியையும் குழந்தைகள் மனதில் வளர்ப்பதற்கு இம்மாதிரி டொலர்க் கடைகள் மிகவும் சிறந்ததோர் உதாரணமாகும். ‘‘எளிமையிலும் அழகு’’. இந்த மந்திரம் மனதில் இருந்தாலே பணத்தின் அருமையும் புரியும்.

mansu@thaiveedu.com

■ ■ ■

எலி பூச்சித் தொல்லையா...?

RUBAN PEST CONTROL



- வீடுகள்
- தொடர்மாடி வீடுகள்
- தொழிற்சாலைகள்
- வியாபார நிலையங்கள்

ஆகிய அனைத்து இடங்களிலும் எலி, பூச்சித் தொல்லைகளை அறவே நீக்க அழையுங்கள்!

KANTHAN
416•291•3997

# CTR தகவல் பலகை

## ROOMS / BASEMENT RENT

**MCCOWAN & HIGHGLEN**
4 B/R upstairs, 4 BiR basement
Mathy: 416 904 6061 905 248 2077

**MARKHAM & 14TH**
2B/R Basement
416-917-8336

**MCCOWAN & MIRMOTON**
2 bedroom basement
Mrs. Sathya: 416 451 4561

**MARKHAM & ELSON**
2 bedroom basement
Ananthan : 647 896 8687

**MARKHAM & LAWRENCE**
2 bedroom house
647 219 4558

**MARKHAM & ELLESEMERE**
3 bedroom basement
47 808 4542

**NEILSON & SHEPPARD**
2 or 1 basement for rent
Separate path
416 451 2304/416 282 4370

**BRIMELY & DENISON**
2 bedroom basement
Mathan: 905 470 2971

**KEENDY & STEELS**
1 B/R Basement
Shanthi: 416-459-8204

**MARKHAM & STEEL**
2B/R Basement
Vimala: 905-209-1321
416-716-0629

**MORNINGSIDE & SHEPPARD**
3 bedroom with backyard
Ram: 416 845 6732

**MARKHAM & ELLSMERE**
3B/R House
Kannan: 416-433-6344

**BIRCH & MC NICOLL**
3 or 5 B/Rooms (5 Spilt House)
Ganesh: 416-335-8055

**MARKHAM AREA**
3 B/R Basements
Babu: 647-808-4542

## HOUS FOR SAL

**MORNINGSIDE & SHEPPARD**
4 b/m 2 w/r house
Lingam: 905 509 7493

**PASSMORE & MARKHAM**
4 bedroom 2 full washroom
Mrs.suthan: 416 854 3164
Semi detached

**BRAMPTON**
4 bedroom 3000 sq feet
Kumar: 416 400 2222

**BRAMPTON**
3B/R house - Semi House
Mrs.Theivendram: 905-454-3869, 416-389-3434

**NITHARSHAN & BRAMPTON**
4B/R, 3B/R 1700 Sq Feet. $ 335,000
Semi Detach house – 416-400-2222

**MCCOWAN & STEELE**
3B/R
Suganthi: 905-604-0145

## OTHERS

**FURNITURES SALE**
Mrs. Ratnarasa – 416 724 4238
416 270 1362

**FREE YOGA MEDICATION**
Vannipushpa: 647 278 8445

**TUTION**
mccowan and finch
416 335 1477
Mayuran: Preschool gr 1 and 2

**DAY CARE**
(markham & ellesemere)
Malar: 416 431 2495, 416 844 4026

பலகாரம்
செய்து கொடுக்கப்படும்
Ottonpark & Lawrence
Prema: 416-439-1599, 647-802-1599

**PAINTING & CARPET CLEANING**
3B/R Houseற்கு Paint $450(With Paint)
Babu: 647-836-3647

**TUTION**
Brimley/ Steel. 1-8 Math and English
Tharma: 905-479-3024

CTR
கனடியத் தமிழ் வானொலி
416 264 8798

## AUTO FOR SAL

**93 TOYATA CAMERY**
262 km, $1,600
Viji: 905 471 7373, 416 402 1124

**2007 TOYATA JARIG**
Haran: 416 451 5211

**2000 DODGE CARAVAN**
320km
Thusi: 647-500-8215, 647-500-1343

**MOTORCYCLE**
200 CC, 400 CC
Mahendiran: 647-832-7484

**2000 TOYOTA CAMRY**
216 km, Gray 4 Door
Raj: 416-716-2975

**98 TOYOTA SIANNA**
$ 4700.00
Mari: 416-737-1989

**மணமகள் தேவை**
ஜேர்மனியில் Chef ஆகத் தொழில்புரியும்
யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 33வயது
இளைஞனுக்கு
கனடாவில் வசிக்கும்
Sponsor செய்யக்கூடிய பெண் தேவை.
Tel: 94 11 259 0534
E mail: kvijaya@sctnet.lk





**அறியவில்லையானால் அறிந்துகொள்ளுங்கள் - கனடாவில் சில தகவல்கள்**

## கனடாவில் அங்கீகரிக்கப்பட்ட

# லொத்தர்களும் சூதாட்ட விளையாட்டுக்களும்

## (Lotteries & Gamings in Canada)

**தகவல் தொடர் - 27**



சிவ பஞ்சலிங்கம்
- ஆயுட்காப்புறுதி பிரதிநிதி -

- **கனடாவில் அரசினால் அங்கீகரிக்கப்பட்ட லொத்தர்கள் யாவை? இதனை விற்பனை செய்து, நடாத்த உரிமை உள்ள நிறுவனங்கள் யாவை?**
- **கனடாவின் லொத்தர் கூட்டுத்தாபனங்களினால் சட்ட பூர்வமாக நடாத்தப்படும் லொத்தர்கள் எவை?**
- **அதிர்ஷ்டத்தினை எதிர்கொண்டவர் எப்படி தமது அதிர்ஷ்ட பணத்தினை கோருவது?**
- **முன்கூட்டியே பணம் செலுத்தி ஒரு இலக்கத்தில் லொத்தரினை பதிவு செய்வது (Lotto Advance Game) எப்படி?**

இது போன்ற பல்வேறு வகையான கேள்விகளுக்கு விடைகாணமுயல்வதே இக் கட்டுரையின் நோக்கம்.

கனடாவில் உள்ள மாகாண அரசுகளினால், சட்ட ரீதியாக உருவாக்கப்பட்டு ஒழுங்கான கண்காணிப்பின் கீழ் பல்வேறு வகையான லொத்தர்களும், குதிரைப் பந்தயம் உட்பட வித்தியாசம் வித்தியாசமான சூதாட்ட விளையாட்டுக்களையும் தங்களின் 'கசினோ' நிறுவனத்தினூடாக பல வருடங்களாக நடாத்தி பல மில்லியன் டொலர்களை அரசு சம்பாதித்து வருகின்றது. பின்வரும் மாகாண அரசுகளின் கூட்டுத்தாபனங்கள் மட்டுமே பல்வேறு லொத்தர்களையும் குதிரை பந்தயம் உட்பட சூதாட்ட களியாட்டங்களையும் நடாத்த கனடிய அரசினால் அங்கீகரிக்கப்பட்டவை ஆகும். அவையாவன பின்வருமாறு!

### ஒன்ராறியோ லொத்தர் பந்தய கூட்டுத்தாபனம் (Ontario Lottery & Gaming Corporation)

இந்நிறுவனம் ஒன்ராறியோ மாகாணத்தில் மாகாண அரசினால் ஒரு அமைச்சின் கீழ் இயங்கும் நிறுவனம் ஆகும்.

### வெஸ்ரேன் கனடா லொத்தர் கூட்டுத்தாபனம் (Western Canada Lottery Corporation)

அல்போர்ட்டா மாகாணம், சஸ்காச்சுவான் மாகாணம், மனிற்றோபா மாகாணம் ஆகிய மூன்று மாகாண அரசுகளின் இணைப்பில், ஏனைய மக்கள் செறிந்து வாழும் அடர்த்தி குறைந்த வடமேற்கு பிரதேசம், யூகோன் பிரதேசம், நுணாவிற் பிரதேசம் என்று மூன்று ஏனைய மாகாண பிரதேசங்களையும் சேர்த்து உருவாக்கப்பட்ட இலாபகரமற்ற நிறுவனமே "வெஸ்ரேன் கனடா லொத்தர் கூட்டுத்தாபனம்" ஆகும். ஒவ்வொரு மாகாணத்தின் தலைநகரத்திலும் இக் கூட்டுத்தாபனத்தின் பிராந்திய அலுவலகங்கள் உள்ளன.

### அற்லான்ரிக் லொத்தர் கூட்டுத்தாபனம் (Atlantic Lottery Corporation)

கனடாவில் உள்ள நோவாஸ்கோஷியா மாகாணம் (Nova Scotia), நியூபவுண்லாந்து மாகாணம் (Newfoundland), நியூபுரண்ஸ்விக் (New Brunswick), பிறின்ஸ் எட்வோர்ட் ஐலண்ட் (Prince Edward Islands) ஆகிய நான்கு மாகாண அரசுகளும் கூட்டாக சேர்ந்து நடாத்தும் நிறுவனமே "அற்லான்ரிக் லொத்தர் கூட்டுத்தாபனம்" ஆகும்.

### கியுபெக் லொத்தர் நிறுவனம் (Loto- Quebec)

கனடாவின் பிரெஞ்சு மொழி பேசும் கியுபெக் மாகாணத்திலிருந்து, பிரத்தியேகமான இம் மாகாண சட்டப்படி, மாகாண அரசினால் நடாத்தப்படும் லொத்தர் நிறுவனம் ஆகும். மொன்றியல் நகரில் பின்வரும் விலாசத்தில் இதன் தலைமையகம் உள்ளது

**Loto – Quebec**
**500, Sherbrooke St. West**
**Montreal, Quebec H3A 3G6**

தொலைபேசி: (514)-282-8000
தொலைநகல்: (514)-873-8999

இம் மாகாணத்தில் $600 டொலருக்கு உட்பட்ட பணத் தொகை லொத்தர் குலுக்கலில் கிடைத்தால் எந்தவொரு லொத்தர் ரிக்கற் விற்கும் சில்லறை கடைகளில் இதனை பெற்றுக் கொள்ளலாம். அதற்கு மேற்பட்ட தொகையாக இருந்தால் விண்ணப்ப பத்திரத்தினை நிரப்பி அனுப்பி தபால் மூலமோ அல்லது இந் நிறுவனத்தின் தலைமையகத்தில் நேரடியாக சென்று பரிசு பண தொகையினை பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். இத் தலைமை அலுவலகம் வாரத்தில் ஏழு நாளும் திறந்து இருக்கும். ஆனால் ஒவ்வொரு அதிர்ஷ்ட இலாப பரிசு தொகையினையும் குறிப்பிடப்பட்ட ஒரு வருடத்தினுள் பெற்று விடல் வேண்டும்.

### பிரிட்டிஷ் கொலம்பியா லொத்தர் கூட்டுத்தாபனம் (British Columbia Lottery Corporation)

பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தில் அம் மாகாண அரசின் கட்டுப்பாட்டில் இயங்கும் நிறுவனமே இவ் "பிரிட்டிஷ் கொலம்பியா லொத்தர் கூட்டுத்தாபனம்" ஆகும்.

ஒவ்வொரு கூட்டுத்தாபனமும் அந்தந்த மாகாணங்களின் உருவாக்கப்பட்ட சட்ட ஒழுங்கு விதிகளின்படி பல்வேறு வகையான லொத்தர்கள், பல்வேறு வகையான சுரண்டி உடன் அதிர்ஷ்டம் பார்க்கும் ரிக்கற்றுகள் (Instant Lottery Tickets) என வெவ்வேறு விலையில் விற்பனை செய்வதுடன் குதிரை பந்தய அதிர்ஷ்ட மையங்கள், கசினோ களியாட்ட நிலையங்கள் என குறிப்பிடப்பட்ட தங்கள் மாகாண எல்லைக்குள் மாகாண அரசுகளின் சட்ட வரையறையினுள் நின்று நடத்தி வருகின்றன.

> **"அதிர்ஷ்டத்துக்கு என ஒரு சிறு பணத்தினையும் செலவு செய்யாது, திடீர் என எங்களுக்கு பெரிய அதிர்ஷ்டம் காத்து இருக்கின்றது என்று தொலைபேசி மற்றும் தபால் மூலம் தெரிவித்து பணம் கறக்க முயலும் நிறுவனம் ஏராளம் நம்மை சுற்றிக்கொண்டே உள்ளன."**

ஆனால் இவ் ஐந்து கூட்டுத்தாபனங்களும் சேர்ந்து சில பிரதான லொத்தர்களை மட்டும் கனடா முழுவதும் ஒரு ஒன்றிணைந்த கூட்டுத்தாபனத்தின் மூலம் நடாத்தி வருகின்றன.

இவ் ஐந்து கூட்டுத்தாபனங்களும் இவ் ஐந்தினையும் ஒன்றிணைந்த நிறுவனமும் தவிர கனடாவில் சட்டபூர்வமாக இயங்கும் லொத்தர் நிறுவனம் வேறு எதுவும் இல்லை.

### ஒன்றிணைந்த மாகாணங்களின் லொத்தர் கூட்டுத்தாபனம் (Inter Provincial Lottery Corporation)

மேலே குறிப்பிடப்பட்ட கனடா முழுவதும் மாகாண அரசுகளினால் நடாத்தப்படும் ஐந்து கூட்டுத்தாபனங்களையும் ஒன்றிணைத்த ஒரு கூட்டுத்தாபனமாக ரொறன்ரோவினை தலைமையகமாக கொண்டு இவ் ஒன்றிணைக்கப்பட்ட கூட்டுத்தாபனம் இயங்குகின்றது.

ஒவ்வொரு கூட்டுத்தாபனமும் ஏராளமான வகை வகையான லொத்தர்கள், சூதாட்ட களியாட்டங்களையும் அந்தந்த மாகாண அரசுகளின் பிரத்தியேகமான சட்டங்களினால் உருவாக்கப்பட்டு நடாத்துகின்ற போதிலும், இரண்டு மிக பெரிய லொத்தர்களை கனடா முழுவதும் குறிப்பிட்ட நாளில் இவ் ஒன்றிணைக்கப்பட்ட லொத்தர் கூட்டுத்தாபனமே நடாத்துகின்றது. அவையாவன!

**1.லொற்றோ 6/49 (Lotto 6/49)**

புதன், சனி இரவு ரொறன்ரோ நேரத்தில் பத்து மணிக்கு இந் நிறுவனத்தின் ஸ்ருடியோவில் குலுக்கப்பட்டு கனடா முழுவதும் உள்ள தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்டு அதிர்ஷ்டம் பார்க்கப்படுகின்றது. அக்டோபர்/26/2005 இல் அல்போர்ட்டா மாகாணத்தில் உள்ள பெற்றோலியம் கம்பனி ஊழியர்கள் பதினேழு பேர் $54.3 மில்லியன் கூட்டாக பெற்றதே கனடிய வரலாற்றில் மிக அதி கூடிய இக் குறிப்பிட்ட லொத்தர் குலுக்கலின் பரிசு தொகையாகும்.

**லொற்றோ சுப்பர் - 7 (Lotto Super - 7)**


இதே போல வெள்ளி ரொறன்ரோ நேரப்படி இரவு பத்து மணிக்கு குலுக்கப்பட்டு கனடா முழுவதும் அதிர்ஷ்டம் பார்க்கப்படும் இன்னொரு லொத்தர் ஆகும்.

2002 மே மாதம் நான்கு பேர் கூட்டாக பெற்ற $37.8 மில்லியன் டொலர் அதிர்ஷ்டமே இதுவரை வரலாற்றில் இக் குறிப்பிடப்பட்ட லொற்றோ சுப்பர் குலுக்கலின் அதி கூடிய வழங்கப்பட்ட அதிர்ஷ்டமாகும்.

இவ் பிரதான இரு லொத்தர் குலுக்கல்களையும் நடாததும் ஐந்து கூட்டுத்தாபனங்களையும் ஒன்று சேர்த்து ஒரே நேரத்தில் குலுக்கப்பட்டு கனடா முழுவதும் ஒளி, ஒலி பரப்பப்படுவது போல, சில காலங்களில் விசேடமாக உருவாக்கி குலுக்கும் லொத்தர்களும், வருடத்தில் ஒரு முறை என கனடா முழுவதும் இவ் ஒன்றிணைக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தினால் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

71ம் பக்கம் பார்க்க...

**உங்கள் வாகன காப்புறுதிக்கு**
பல்வேறு வகையான காப்புறுதி கம்பனிகளிலும் விலைகளை அறியவேண்டுமா
**To shop around auto insurance price please call**
**Siva Panchalingam,** B.Com.
**(Licensed Insurance Broker)**
**Office: 905-479-3400 Ext. 132**
**Home: 416-321-0999, Cell: 416-990-4908**
**800, Denison Ave., Suite 201, Markham, ON**



# லொத்தர்களும்...

70ம் பக்கத் தொடர்ச்சி...

உதாரணம்: மில்லியனர் லைவ் (Millionaire Life) என்ற வருடம் ஒரு முறை மட்டும் ஒரு ரிக்கற் ஐந்து டொலருக்கு விற்பனை செய்யப்பட்டு குலுக்கும் லொத்தரினை இங்கு குறிப்பிடலாம்.

ஒவ்வொரு லொத்தர்களுக்கும், சூதாட்ட களியாட்டத்திற்கும் சட்ட ஒழுங்கு விதிகளும், மீற முடியாத கண்காணிப்புகளும் மாகாண அரசினால் உருவாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

### ஒன்ராறியோ மாகாண அரசினால் நடாத்தப்படும் லொத்தர் கூட்டுத்தாபனம் (Ontario Lottery & Gaming Corporation)

உதாரணத்திற்கு ஒன்ராறியோ மாகாணத்தில் செயல்படும் லொத்தர் கூட்டுத்தாபனம் எப்படி கடந்த முப்பத்திரண்டு வருடங்களாக இயங்குகின்றது என்பதனை பார்ப்போம்.

ஒன்ராறியோ மாகாண அரசினால் நியமிக்கப்பட்ட இயக்குனர்களை கொண்டு, மாகாண அரசின் அமைச்சு ஒன்றின் கண்காணிப்பில், உருவாக்கப்பட்ட சட்ட திட்டங்களின் அடிப்படையில், மாகாணம் முழுவதும் சுமார் 20,000இற்கு மேற்பட்ட ஊழியர்களைக் கொண்டு நடாத்தி வருகின்ற போதும், இத் தாபனத்தின் செயல்பாடுகளில் இருந்து வரும் வெற்றிகள், அதிர்ஷ்டங்கள் சில மனிதரையும், தோல்விகளும், இழப்புகளும் ஏராளமானோரையும் போய் சேர்ந்தாலும் இவ் வெற்றி, தோல்விகளில் இருந்து வரும் இலாபங்களில் பெருமளவு மாகாணத்தில் உள்ள வைத்தியசாலைகள் உட்பட பல்வேறு தர்ம தாபனங்களுக்கு நன்கொடையாக பரவலாக வழங்கப்பட்டு, அவற்றின் செயல்பாட்டுக்கும் வளர்ச்சிகளுக்கும், தொடாந்து கை கொடுத்து வருகின்றன.

இக் கூட்டுத்தாபனம் லொத்தர்களை மட்டுமல்ல பல்வேறு சூதாட்ட களியாட்டங்களையும், குதிரைப் பந்தய நிகழ்வுகளையும் (Casinos & Slots) மாகாணம் முழுவதும் நடாத்துகின்றது.

### ஒன்ராறியோ லொத்தர் கூட்டுத்தாபனத்தினால் நிர்வகிக்கப்படும் லொத்தர்கள் (OLG Lotteries)

இவ் லொத்தர்களில் இரு வகையான லொத்தர்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. அவையாவன:

- குறிப்பிட்ட தினத்தில் சில குறிப்பிட்ட இலக்கங்களினால் உருவாக்கப்பட்ட சிறு பந்துகளை குலுக்கி உருள விட்டு அதிலிருந்து தெரிவு செய்து அதிர்ஷ்டம் பார்க்கும் லொத்தர்கள்.
- உடனடியாக சுரண்டப்பட்டு அதிர்ஷ்டம் தேடும் லொத்தர்கள் (Instant Lotteries)

குறிப்பிட்ட சில நாட்களுக்கு என விற்பனை செய்யப்பட்டு, குறிப்பிட்ட ஒரே தினத்தில், குறிப்பிட்ட ஒரு நேரத்தில் முற்றாக பாதுகாப்பு வலயங்களாக உருவாக்கப்பட்ட ஸ்ருடியோக்களினுள், தொழில் சட்டவியலாளர்கள், மேற்பார்வையாளர்களின் கண்காணிப்பில் ஒரு சட்ட திட்ட வரையறைக்குட்பட்டு குலுக்கப்படும் லொத்தர்கள் பின்வருமாறு.

### லொற்றோ 6/49 (Lotto 6/49)

கனடா முழுவதும் உள்ள ஐந்து லொத்தர் நிறுவனங்களையும் இணைத்து ஒரு ரிக்கற் இரண்டு டொலர் என குறிப்பிட்ட ஒரு கிழமையினுள் இவ் ஐந்து மாகாண நிறுவனத்தினாலும் விற்பனை செய்யப்பட்டு புதன், சனி இரவு ரொறன்ரோ நேரம் பத்து மணிக்கு மாகாணங்களின் ஐந்து கூட்டுத்தாபனங்களினாலும் ஒன்றிணைக்கப்பட்ட நிறுவனத்தினால் 1-49 வரையிலான இலக்கம் இடப்பட்ட பந்துகளை உருள விட்டு இதில் ஆறு பந்துகளை குலுக்கலில் தெரிவு செய்யப்பட்டு அதிர்ஷ்டம் பார்க்கும் கனடாவின் பிரபல்யமான லொத்தர் ஆகும்.

### சுப்பர் - 7 (Supe –7)

ஒவ்வொரு வெள்ளியும் ரொறன்ரோ நேரப்படி இரவு ஒன்பது மணிக்கு குறிப்பிட்ட சில நாட்களுக்கு இரண்டு டொலர்களுக்கு விற்கப்பட்ட ரிக்கற்றுகளின் அதிர்ஷ்டம் சகல கனடாவின் லொத்தர் கூட்டுத்தாபனங்களையும் இணைத்து நடாத்தும் ஒன்றிணைக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தினால் 1-47 வரையிலான இலக்கம் இடப்பட்ட பந்துகளை உருளவிட்டு இதில் ஏழு பந்துகளை தெரிவு செய்து கனடா முழுவதும் அதிர்ஷ்டம் பார்க்கும் லொத்தர் ஆகும்.

### மில்லியனர் லைவ் (Millionaire life)

வருடம் ஒரு முறை இவ் வருடம் ஜனவரி /26/2009 – பெப்/28/2009 வரை ஒரு ரிக்கற் ஐந்து டொலருக்கு விற்பனை செய்யப்பட்டு கனடாவின் சகல லொத்தர் கூட்டுத்தாபனங்களையும் இணைத்து நாடு பூராவும் அதிர்ஷ்டம் பார்க்கப்படும் லொத்தர் குலுக்கல் ஆகும்.

முதல் தர அதிர்ஷ்டசாலிக்கு வருடம் ஒரு மில்லியன் என்ற தொகையில் இருபத்தைந்து வருடங்களுக்கு தொடர்ந்து பரிசு உண்டு. அல்லது 17 மில்லியன் ஒரே முறையில் பெறலாம். இதற்கு குறைவான பல தொகைகளில் பல மாதிரியான நிலையில் பரிசு தொகை உண்டு.

இறுதியாக கடந்த பெப்வரி/28ஆம் திகதி இரவு 9 மணிக்கு கனடா முழுவதும் இருந்து பல மக்கள் பங்குபற்றி எதிர்பார்த்த இவ் அதிர்ஷ்டத்தின் முடிவு அறிவிக்கப்பட்டது.

### பே டே (Pay Day)

வியாழன் இரவு ஒன்பது மணிக்கு ஒன்ராறியோ லொத்தர் கூட்டுத்தாபனத்தினால், இரு டொலருக்கு விற்பனை செய்யப்பட்ட இக் குறிப்பிடப்பட்ட ரிக்கற்றின் அதிர்ஷ்டம் பார்க்கப்படும்.

1-77 இற்கு இடைப்பட்ட இலக்கத்தில் நான்கு இலக்கம் தெரிவு செய்யப்படும். தெரிவு செய்யப்பட்ட நான்கு இலக்கத்தினையும் சரிவர பொருத்தமாக வைத்து இருப்பவர்களுக்கு கிழமைக்கு $1000 என்ற தொகையில் குறைந்தது இருபது வருடங்களுக்கு சம்பளம் மாதிரி வழங்கப்படும். இதற்கு மாற்றீடாக ஒரே தொகையாக பெற விரும்பினால் $6,75,000 வரை பெறலாம்.

இதற்கு குறைந்த பரிசு தொகைகளும் இவ் லொத்தரில் உண்டு.

### ஒன்ராறியோ 49 (Ontario 49)

புதன், சனி இரவு ஒன்பது மணிக்கு ஒன்ராறியோ லொத்தர் கூட்டுத்தாபனத்தினால் ஐம்பது சதத்திற்கு விற்கப்பட்ட 1-49இற்கு இடைப்பட்ட இலக்கத்தில் ஆறு இலக்கம் இடப்பட்ட பந்துகளை குலுக்கி உருள விட்டு தெரிவு செய்யப்பட்டு அதிர்ஷ்டம் பார்க்கப்படும்.

ஆகக் கூடுதலாக ஒரு மில்லியனில் தொடங்கி குறைந்த தொகை வரை அதிர்ஷ்டங்கள் உண்டு.

### லொற்றாரியோ (Lottario)

ஒவ்வொரு சனி இரவு ஒன்பது மணிக்கு ஒன்ராறியோ லொத்தர் கூட்டுத்தாபனத்தினால் அதிர்ஷ்டம் பார்க்கப்படும். இவ் லொத்தர் குலுக்கலில் ஒரு ரிக்கற் ஒரு டொலருக்கு விற்பனை செய்யப்பட்டு 1-45 இலக்கத்தினுள் ஆறு இலக்கம் இடப்பட்ட பந்துகளை குலுக்கி உருள விட்டு தெரிவு செய்யப்படும்.

### பிக் - 4 (Pick- 4)

தினமும் 9 மணிக்கு ஒன்ராறியோ லொத்தர் கூட்டுத்தாபனத்தினால் அதிர்ஷ்டம் பார்க்கப்படும். இவ் ரிக்கற் ஒரு டொலருக்கு விற்பனை செய்யப்படும். 0-9 வரை இலக்கம் இடப்பட்ட பந்துகள் குலுக்கலில் உருள விட்டு இதில் நான்கு இலக்க பந்துகள் தெரிவு செய்யப்பட்டு அதிர்ஷ்டம் பார்க்கப்படும். ஆக கூடுதலாக $25,000 வரை அதிர்ஷ்டம் கிடைக்கலாம். 0-9இற்கு இடையில் நான்கு இலக்கம் தெரிவு செய்தல் வேண்டும்.

### பிக்-3 (Pick-3)

தினமும் 9 மணிக்கு ஒன்ராறியோ லொத்தர் கூட்டுத்தாபனத்தினால் அதிர்ஷ்டம் பார்க்கப்படும். இவ் ரிக்கற் குறைந்தது ஒரு டொலர் செலவில் 0-9இற்கு இடையில் இலக்கம் இடப்பட்ட மூன்று பந்துகள் தெரிவு செய்யப்பட்டு அதிர்ஷ்டம் பார்க்கப்படும். $10,000 வரை அதிர்ஷ்டம் பெற்றவர்கள் இதுவரை உள்ளனர்.

### டெய்லி கீனோ (Daily Keno)

தினமும் இரவு 9 மணிக்கு ஒன்ராறியோ லொத்தர் கூட்டுத்தாபனத்தினால் குலுக்கப்பட்டு அதிர்ஷ்டம் பார்க்கப்படும். இவ் ரிக்கற் குறைந்தது ஒரு டொலரில் இருந்து விற்கப்படுகின்றது. 1-70 இற்கு இடையில் இலக்கம் இடப்பட்ட பந்துகளை உருள விட்டு தெரிவு செய்யப்பட்டு அதிர்ஷ்டம் பார்க்கப்படும்.

### என்கோர் (Encore)

Lotto 6/49, Super-7,Ontario 49, Lottario, Pay Day, Pick-3, Pick-4, Daily Kero ஆகிய லொத்தர்களில் மேலதிக ஒரு டொலர் கொடுத்து விரும்பினால் சேர்த்து கொள்ளப்படும். அதிர்ஷ்ட குலுக்கல் இதுவாகும்.

ஏழு தனி இலக்கம் தெரிவு செய்யப்படும். ஒரு மில்லியன் டொலர் ஆக கூடுதலான பரிசில் தொடங்கி குறைந்தது பல தொகைகளில் உண்டு.

### சுரண்டும் ரிக்கற்றுகள் (Instant Lottery Tickets)

சுமார் இருபத்தியிரண்டு வகையான சுரண்டும் ரிக்கற்றுகளை தற்போது ஐம்பது சதத்திலிருந்து இருபது டொலர் வரையில் குறிப்பிட்ட ஒரு கால திகதியினை (2010 வரை செல்கின்றது). நிர்ணயித்து அதனுள் மிக பெரும் தொகை பண பரிசு உட்பட பல்வேறு தொகைகளில் பரிசு தொகை உள்ளடக்கப்பட்டு, ஒவ்வொரு சுரண்டும் ரிக்கற்றுகளையும் குறிப்பிடப்பட்ட ஒரு எண்ணிக்கை தொகைகளில் உருவாக்கப்பட்டு தற்போது ஒன்ராறியோ லொத்தர் சபை விற்பனைக்கு விட்டுள்ளது.

72ம் பக்கம் பார்க்க...

S.P ELECTRONICS

அனைத்துத் தமிழ் வானொலிகளும் புதிதாக வாங்குவதற்கும், திருத்திக் கொள்வதற்கும்.

416 264 6400

2641 Eglinton Ave. Scarborough
(Brimley & Eglinton)

J.R.B Universal Inc.

Almost All Services Available

- கடன் - அடமானக்கடன் - காப்புறுதி

- Loans
- Mortgages
- Insurance Claims
- Traffic Ticket
- Auto/Life Insurance
- Scholarship Plan (RESP)
- Real Estate Related
- Credit Counselling
- Accounting
- Tax Services



R.R. Rajkumar
B.Com (Hons) M.B.A
Dip. In Accy.

Bus; 416 • 752 • 7555 Fax: 416 • 752 • 7556
Cell: 416 • 937 • 9081
2390 Eglinton Ave. East, 206B, Scarborough, Ont. M1K 2P5

# லொத்தர்களும்...

71ம் பக்கத் தொடர்ச்சி...

உதாரணமாக பத்து இலட்சம் ரிக்கற்றுகள் ஒர் குறிப்பிட்ட டொலருக்குரிய சுரண்டும் ரிக்கற்றுகள் விற்பனைக்கு விடப்பட்டிருந்தால் அதில் மூன்று ரிக்கற் மட்டும் மில்லியன் டொலர் பரிசு தொகையாக மறைந்து இருக்கும். ஏனையவை சிறு பரிசு தொகையிலும் மறைந்து இருக்கும். பல ரிக்கற்றுகள் பரிசுகள் இல்லாமலும் இருக்கும். இக் குறிப்பிடப்பட்ட இலட்சங்கள் தொகையான ரிக்கற்றுகளில் ஒரு சிலருக்கு மட்டுமே அதிர்ஷ்டம் மறைந்து இருக்கும். குறிப்பிடப்பட்ட இவ் விற்பனை திகதி முடிவடையும் காலத்தினுள் மறைந்துள்ள இவ் அதிர்ஷ்டம் எவரோ ஒருவரின் கையில் போய் சேரலாம்.

மாகாண அரசின் கூட்டுத்தாபனத்தினால் சட்ட ரீதியாக உருவாக்கப்பட்டு தற்போது விற்பனைக்கு விடப்பட்ட இச் சுரண்டும் ரிக்கற்றுகளின் பெயர்கள் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| 01 | Quest for Gold lottery | (Game# 1504) |
| 02 | $500,000 Inferno | (Game # 1386) |
| 03 | $1000,000 Explosion | (Game # 1503) |
| 04 | Red Hot $500s | (Game # 1395) |
| 05 | Deal or No Deal | (Game # 1515) |
| 06 | Lotto 6/49 | (Game # 1501) |
| 07 | Black Jack Multiplier | (Game # 1500) |
| 08 | Cash In | (Game # 1502) |
| 09 | Money Multiplier | (Game # 1379) |
| 10 | Ontario Instant Millions | (Game # 1384) |
| 11 | Holiday Cash | (Game # 1505) |
| 12 | Cash For Life | (Game # 1140) |
| 13 | Double Cash For Life | (Game # 1144) |
| 14 | Instant Crossword | (Game # 1275) |
| 15 | Fruit Smash | (Game # 1397) |
| 16 | Instant Keno | (Game # 0898) |
| 17 | Bonus Keno | (Game # 1401) |
| 18 | More Lucky Lines | (Game # 1388) |
| 19 | Instant Bingo | (Game # 1088) |
| 20 | Super Bingo | (Game # 1089) |
| 21 | Amazing Race | (Game # 1519) |
| 22 | Card Shark | (Game # 1523) |

(மேலே குறிப்பிடப்பட்டவை மட்டுமே தற்போது மாகாண அரசின் லொத்தர் கூட்டுத்தாபனத்தினால் அங்கீகரிக்கப்பட்ட சுரண்டிப் பார்த்து உடனுக்குடன் அதிர்ஷ்டம் பார்க்கும் ரிக்கற்றுகள் ஆகும்)

## அதிர்ஷ்டத்தினை எதிர்கொண்டவர்கள் பரிசு தொகையினை எப்படி பெறுவது? (Claiming Prizes?)

அதிர்ஷ்டத்தினை எதிர் கொண்டவர்கள் நான்கு வழிகளில் தங்கள் அதிர்ஷ்ட பணத்தினை ஒன்ராறியோ மாகாணத்தில் உள்ளவர்கள் பெற்றுக் கொள்ளலாம் (ஆனால் அதிர்ஷ்ட பரிசு தொகையினை கோர முன்பு தங்கள் கையெழுத்து உரிய இடத்திலும் பின்பக்கத்தில் பெயர் விலாசங்களையும் எழுதி விட்டால் மோசடிகளோ, ஏமாற்றங்களோ உருவாகாமல் தடுத்துக் கொள்ளலாம்.)

லொத்தர் சீட்டுகள், ரிக்கற் விற்கும் அனுமதி பெற்று விற்பனை செய்யும் கடைகளிலும் இடங்களிலும் பெற்றுக் கொள்ளுதல்.

ஆனால் $1,000இற்கு உட்பட்ட தொகை மட்டுமே இவ் இடங்களில் பெறலாம். இவ்வாறு பெறும் போது பணம் பெற்றுக் கொண்டதற்கு ரிசீற் தருவார்கள். இவ் ரிசீற்றில் அதிர்ஷ்டம் கோரப்பட்ட ரிக்கற் இலக்கங்களும் எந்த வகையான லொத்தர் ரிக்கற் என்பதும் பதிவு செய்யப்பட்டிருக்கும். இவ்வாறு ரிக்கற்றில் கைச்சாத்திட்டு, பெயர் விலாசமும் எழுதி ரிசீற்றுடன் பெறும் போது எந்த சந்தர்ப்பத்திலும் தப்பான அபிப்பிராயங்கள் இரு பக்கங்களிலும் உருவாக சந்தர்ப்பமே இல்லை.

தபால் மூலம் அனுப்பி பெற்றுக் கொள்ளுதல் இன்னொரு வழியாகும். $1000இற்கு மேற்பட்ட ஆனால் பத்தாயிரம் டொலர் தொகை வரை உள்ள தொகையினையே தபால் மூலம் பின்வரும் விலாசத்திற்கு அனுப்பி பெற்றுக் கொள்ளலாம்.

**Ontario Lottery Gaming Corporation**
**Sault STE Marie Prize Centre**
**P.O.Box. 877**
**ault STE Marie**
**Ontario P6A 5NA**

பெயர், விலாசம் ரிக்கற்றில எழுதி, கைச்சாத்திட வேண்டிய இடத்தில் கைச்சாத்திட்டு, பிரதி ஒன்றினையும் எடுத்து வைத்துக் கொண்டு, அதிர்ஷ்டத்துக்குரியவர் பதினெட்டு வயதுக்கு மேற்பட்டவர் என்பதனை நிரூபிக்கும் வகையில் சட்ட பூர்வமான அடையாள அட்டையின் பிரதி ஒன்றினையும் அனுப்புதல் வேண்டும். இத்துடன் சேர்த்து "வெற்றி பெற்றவரின் பிரகடனப்படுத்தும் விண்ணப்பம்" (Winner Declaration Form") தேவையேற்படின் நிரப்பி அனுப்புதல் வேண்டும். (இவ் விண்ணப்ப படிவம் ஒன்ராறியோ லொத்தர் கூட்டுத்தாபனத்தின் மின் கணனி தொடர் வலயத்தில் பதிவு இறக்கம் செய்து கொள்ளலாம்)

விண்ணப்பம் தபாலில் பெற்று 2-4 கிழமைக்குள் அதிர்ஷ்டத்திற்குரியவராயின் அதிர்ஷ்ட பணத்தினை அதிர்ஷ்டத்திற்குரியவரின் பெயரில் காசோலையாக அனுப்பி வைப்பார்கள். மேலதிக தகவல் தேவையாயின் அல்லது நிராகரிக்கப்பட்டிருந்தாலும், அதனையும் கடித மூலம் அறிவிப்பார்கள்.

ஒன்ராறியோ லொத்தர் கூட்டுத்தாபனத்தின் நிர்வாகத்தில் குதிரை பந்தயங்கள் நடாத்தும் கசினோ நிலைய அலுவலகங்களிலும் (OLG Slots and Casinos) நேரடியாக சென்று அதிர்ஷ்ட தொகையினை பெற்றுக் கொள்ளலாம்.

$250,000 தொகைக்கு உட்பட்ட தொகையினையே இவ் இடங்களில் கோரலாம். ஆனால் இவ் இடங்களுக்குள் செல்வதாக இருந்தால் 19 வயதுக்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்.

நேரடியாக அதிர்ஷ்ட பரிசு கோரும் அலுவலகத்திற்கு சென்று பெற்று கொள்ளுதல் நான்காவது வழியாகும். (Claiming Prize at the Toronto Prize Centre)

இதன் விலாசம் ஒன்ராறியோ மாகாண தலைநகரான ரொறன்ரோவில் பின்வரும் விலாசத்தில் உள்ளது.

**Ontario Lottery Gaming Corporation**
**Toronto Prize Centre**
**20, Dundas St. West**
**Toronto**
**Ontario M5G 2C2**

**தொலைபேசி: 1-800-387-0098**

திங்கள்- வெள்ளி காலை 9 - 5 மணி வரை திறந்து இருக்கும்.

$250,000இற்கு மேற்பட்ட தொகைகள் இந்த இடத்தினைத் தவிர வேறு எந்த இடத்திலும் கோர முடியாது.

பரிசு தொகையினைக் கோரும் போது அதனை அங்கீகரிக்க முன்பு ஏராளமான விசாரணைகள் லொத்தர் கூட்டுத்தாபனத்தின் பரிசு தொகையின் அங்கீகாரத்தினை வழங்கும் உத்தியோகத்தர்களினால் நடாத்தப்படும்.

அதிர்ஷ்டம் கிடைத்த ரிக்கற்றின் உண்மையான உரிமையாளரின் கூட்டாக வேறும் எவராவது உரிமையாளராக இருக்கின்றனரா? என்ற விவரங்கள்

எப்போது? எந்த இடத்தில் ரிக்கற் வாங்கப் பட்டது?

அதிர்ஷ்டத்திற்குரியவரோ அல்லது அவரின் குடும்ப உறவில் உள்ளவர்கள் எவராவது லொத்தர் கூட்டுத்தாபனத்தில் அல்லது ரிக்கற் விற்பனை செய்யும் கடைகளில் பணி புரிபவரா? என்ற தகவல்கள். (If you or any member of your family is affiliated with Ontario Lottery Gaming Corporation or with a person who sells Ontario Lottery Gaming Corporation's products).

அதிர்ஷ்டம் கோருபவரின் அடையாள அட்டைகள்.

பெருந்தொகைகளுக்கு அதிர்ஷ்டம் கோரும் போதே, மோசடிகள் ஏதாவது உள்ளதா? என்பதனை துப்பு துலக்குவதற்காக விசாரணைகள் அதிகமாக இருக்கும். விசாரணைகளில் சந்தேகம் உருவானால் காலதாமதமும் ஏற்படலாம். தடங்கலும் ஏற்படலாம்.

விசாரணைகளில் சந்தேகமற்ற முறையில் நிரூபிக்கப்படும் போது, பரிசு தொகை உரியவருக்கு காசோலையாக வழங்கப்படும். அத்துடன் பெரும் தொகை பணத்தினை எப்படி நிர்வகிக்க வேண்டும் என்பதற்கு வங்கியின் நிதித்துறை நிபுணர்களை அழைத்து ஆலோசனையும் வழங்கப்படும். (இவ் அதிர்ஷ்ட தொகை வருமானங்களுக்கு கனடாவில் வரி என்பது செலுத்தவே தேவையில்லை என்பது இன்னொரு விடயம்).

## ரிக்கற்றின் உரிமையாளர் ஒன்றுக்கு மேற்பட்ட குழுவாக இருந்தால்

"குழுவாக வெற்றிக்குரிய பிரகடன விண்ணப்பம்" (Winner Declaration form- group) பெற்று ஒவ்வொருவரும் தனித்தனியாக நேரடியாக வந்து விண்ணப்பங்கள் நிரப்பி கொடுத்து தங்கள் வயதினை, பெயரினை உறுதிப்படுத்தும் அடையாள அட்டையின் பிரதிகளும் சமர்ப்பித்து அதிர்ஷ்டத்தினை கோருதல் வேண்டும். (ஆனால் குழுவில் உள்ளோரின் பெயர்கள் ரிக்கற்றில் பதிவு செய்யப்பட்டு இருத்தல் வேண்டும்). சகலருக்கும் தனித் தனி காசோலையாக மொத்த தொகை பகிர்ந்து வழங்கப்படும்.

$10,000இற்கு மேற்பட்ட அதிர்ஷ்டம் கோரும் தொகைகள் யாவும் லொத்தர் கூட்டுத்தாபனங்களின் ஊடகங்களில் விளம்பரப்படுத்துவது வழமையாகும். ஆனால் வெற்றி பெற்றவரின் சம்மதத்துடன் மேற்கொள்ளும் இவ் விளம்பரத்தில் பாதுகாப்பு கருதி சில விதி விலக்குகளும் உண்டு.

பதினெட்டு வயதுக்கும் மேற்பட்டவர்கள் மட்டும் வாங்கிக்கொள்ள உரிமையுள்ள இவ் லொத்தர் அதிர்ஷ்டங்களில் குலுக்கல் முடிந்து பன்னிரண்டு மாதத்திற்கு இடையில் அதிர்ஷ்ட தொகையினை பெற்று விடுதல் வேண்டும். அதன் பின்னர் ரிக்கற் காலாவதியாகி விடும். சுரண்டும் ரிக்கற்றுகளில் பரிசு தொகை கோரும் இறுதி திகதி அதே ரிக்கற்றின் பின்பக்கத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும். இவ் இறுதி காலாவதியாகிய திகதியிலிருந்து ஒரு வருடத்தினுள் அதிர்ஷ்ட தொகைக்கு கோரியிருக்க வேண்டும்.

அதிர்ஷ்டம் கிடைத்தும் சில நேரங்களில் துரதிர்ஷ்டவசமாக இறுதி திகதியினை விட்டவர்கள் கதி அதோ கதிதான்!

## லொத்தர் குலுக்கலில் நிரந்தர சந்தாகாரராக சேர்ந்து கொள்ளல் (Lotto Advance Registration)

குலுக்கலுக்கு முன்னரே விண்ணப்பம் எடுத்து நிரப்பி, ஒரு குறிப்பிட்ட எதிர்வரும் ஒரு வருடங்களுக்கு உட்பட்ட குலுக்கல்களுக்கு பணம் செலுத்தி தங்கள் பெயர், விபரங்களை பதிவு செய்து வைத்து விடும் வசதி Lotto6/49 இல் மட்டுமே உள்ளது.

புதன், சனி தோறும் குலுக்கும் இவ் அதிர்ஷ்டத்தில் ஒரே இலக்கத்தினை ஒரு வருடத்திற்கு $208 செலுத்தி பதிவு செய்து விட்டால் போதும். விரும்பினால் ஒன்றுக்கு மேலாகவும் பதிவு செய்யலாம். ஒரு பதிவு இலக்கத்தில் பதிந்து சான்றிதழ் தபாலில் அனுப்பி வைப்பார்கள். அதிர்ஷ்டம் கிடைத்து சிறிய தொகை என்றால் தபாலில் வீடு தேடி வரும். பெரும் தொகையாக இருந்தால் அலுவலகத்திற்கு காசோலையினை பெற வருமாறு அழைப்பு வரும். எதுவிதமான மனஅழுத்தங்களும் ஏமாற்றங்களும் இல்லாது அதிர்ஷ்டத்தில் பங்குபற்றும் முறை இதுவாகும்.

இவ்வாறு பதிந்து வைத்திருப்பவர்கள் விரும்பினால் குழுவாகவும், குழுவின் ஒரு தலைமைக்கு கீழ் பதிந்து ஒழுங்கு முறைகளின் கீழே வைத்திருக்கலாம்.

அதிர்ஷ்டம் என்ற கற்பனையில் உழைக்கும் பணங்களை அழிப்பவர்கள் பலர். கிடைத்த பணத்தை நிர்வகிக்க தெரியாமல் பைத்திய காரர் போல அலைந்து அழித்தவர்கள் பலர், இன்னொருவரின் அதிர்ஷ்டங்களை இரகசியமாக பறித்துக் கொண்ட ரிக்கற் விற்பனையாளர்கள் பலர் என லொத்தர் கூட்டுத்தாபனத்தின் புலன் விசாரணை அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

“ அதிர்ஷ்டம் என்ற கற்பனையில் உழைக்கும் பணங்களை அழிப்பவர்கள் பலர். கிடைத்த பணத்தை நிர்வகிக்க தெரியாமல் பைத்தியகாரர் போல அலைந்தழித்தவர்கள் பலர், இன்னொருவரின் அதிர்ஷ்டங்களை இரகசியமாக பறித்துக் கொண்ட ரிக்கற் விற்பனையாளர்கள் பலர் என லொத்தர் கூட்டுத்தாபனத்தின் புலன் விசாரணை அறிக்கைகள் தெரிவிக்கின்றன. ”

அதிர்ஷ்டத்துக்கு என ஒரு சிறு பணத்தினையும் செலவு செய்யாது, திடீர் என எங்களுக்கு பெரிய அதிர்ஷ்ட தொகை காத்து இருக்கின்றது என தொலைபேசி மற்றும் தபால் மூலம் தெரிவித்து பணம் கறக்க முயலும் பொய்யான நிறுவனங்கள் ஏராளம் நம்மை சுற்றிக் கொண்டே உள்ளது.

இத்தகைய ஏமாற்றங்களில் சிக்காமல் உண்மையான தகவல்களையும் உண்மை நிலைமைகளையும் புரிந்து கொள்வதற்காகவே இத் தகவல் கட்டுரை மொழி பெயர்க்கப்பட்டு இங்கு "தாய்வீடு" வாசகர்களுக்காக தரப்படுகின்றது. உழைக்கும் பணங்களை எல்லாம் அதிர்ஷடம் என்று வீனே தொலைப்பதினை ஊக்குவிக்கும் நோக்கத்தில் இக் கட்டுரை எழுதப்பட்டதல்ல!.

sivapunch@thaiveedu.com

■ ■ ■


S.P. IMPORTERS
Furniture
SP
அனைத்து தளபாடங்களும் மிக மிக மலிவு விலையில்
NO PAYMENT INTEREST for 1 YEAR 416-266-3077
கொள்வனவு விலையில்
மலிவு விற்பனை
S.P. IMPORTERS
Sealy Posturepedic
Special Sealy Mattress on SALE
ஒரே பிளாசாவில் 4 தனிப்பெரும் ஸ்தாபனங்கள்...
2861 Lawrence Ave. East, Scarborough, ON M1P 2S8
(Brimley & Lawrence சந்திப்பில்)

# தாய்வீட்டார் கூடல்

“தாய்வீடு” பத்திரிகையின் எழுத்தாளர்கள், பங்களிப்பாளர்கள் பங்கேற்ற சந்திப்பொன்று கடந்த பெப்ரவரி மாதம் 21ம் திகதி நடைபெற்றது.

எழுத்தாளர்களது ஆலோனைகளை உள்வாங்கவும், விமர்சனங்களை முன்வைக்கவும், தொடர்பினை பேணவும் ஒரு தளத்தினை அமைக்கு முகமாகவே இது ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த சந்திப்பில் தாய்வீடு பத்திரிகையின் எழுத்தாளர்கள் பெரும்பாலானோர் பங்குபற்றியதுடன் ஆரோக்கியமான கலந்துரையாடலும் இடம்பெற்றது. “தாய்வீடு” பத்திரிகையின் ஆக்கங்கள், புதிய எழுத்தாளர்களை உள்வாங்கல், ஆக்கங்களின் தரத்தை பேணுதல், வடிவமைப்பு, தாய்வீடு பத்திரிகையை இணையத்தில் வெளியிடல், வழங்கல் தொடர்பான பல விடயங்கள் கலந்துரையாடப்பட்டன. இந்த சந்திப்பு தாய்வீடு பத்திரிகையை அடுத்த படிக்கு நகர்த்திச்செல்லவும் இன்னும் அதிக எண்ணிக்கையான வாசகர்களை ஈர்க்கவும் உறுதுணையாக அமையும் என நம்புகிறோம்.

சந்திப்பிலிலிருந்து சில புகைப்படங்கள் இவை...















# வெள்ளை மாளிகையின் காதல் கதைகளால் மகிழ்ச்சியடைந்த அமெரிக்கர்கள்



பாலா இராஜேந்திரன்

‘விளையாட்டுத்தனமான கூச்சப்படாத, ஒருவருக்கொருவர் துணையாக இருக்கும் ஒபாமா தம்பதிகள் வாழ்வு அமெரிக்கர்களை உற்சாகத்தில் ஆழ்த்திவிட்டது’

-‘றொரொன்டோ ஸ்டார்’

அமெரிக்க ஜனாதிபதி பரக் ஒபாமா மற்றும் அவர் மனைவி மிச்செல் ஆகிய இருவரின் அன்பு வாழ்க்கை அமெரிக்க மக்களை பிரமிக்கச் செய்துள்ளது. வெள்ளை மாளிகையில் ஒரு கறுப்பு இனத்தம்பதிகளின் அன்பான வாழ்வு காதலர் தினத்தின் போது, உலக மக்கள் எல்லோராலும் பெருமையுடன் பேசப்பட்டது. 21ம் நூற்றாண்டின் வெள்ளை மாளிகையின் சிறந்த ஒரு திருமணத் தம்பதிகளாக அவர்களுடைய நெருக்கமும், அன்பும், பொது இடங்களில் ஒன்றாகக் காணப்படுவதும் அவர்கள் ஒரு இலட்சியத் தம்பதிகளாக மக்கள் கருதுகின்றார்கள்.

இவர்களுக்கு முன் வெள்ளை மாளிகையில் ஜனாதிபதியாக வசித்த Ronald and Nancy Reagam மிகவும் அன்பான தம்பதிகளாக வாழ்ந்தனர்.

ஆனால், ஒபாமா மிச்செல் தம்பதிகள் விஷயத்தில் ஒரு சிறப்பு என்னவென்றில், இருவருமே பொறுப்பான பதவியில் இருந்த-



வர்கள். ஆனாலும், தங்கள் வேலையையும் வாழ்வையும் சிறப்பாக நடத்தினர். அவர்கள் தங்கள் அன்பை வெளிப்படுத்த ஒருபோதும் தயங்கியதில்லை. ஜனாதிபதியாகப் பதவியேற்ற அந்த ஊர்வலத்தில் அவர்கள் ஒருவரை ஒருவர் அணைத்து ‘I love you’ என்று ஒருவருக்கொருவர் சொல்லிக் கொண்டதை ஒரு கணப்பொழுதில் தொலைக்காட்சியில் காட்டினாலும் அது பல லட்சக்கணக்கானவர் மனதில் ஒரு பசுமையான எண்ணங்களைத் தோற்றுவித்தது. குடியரசு கட்சி செனட்டர் Dillard இவர்களைப் பற்றிக் கூறும் போது மிச்செலும் பரக்கும் ஒருவரை ஒருவர் மிகவும் நேசிப்பதாகவும், மிச்சல் பரக்கின் மிக நம்பிக்கைக்குரிய ஒரு நபர் என்றும், அவர்கள் உறவு பல வருடங்களாக நீடித்து நிற்பதாகவும் கூறியுள்ளார். ஒரு பத்திரிகை ஆசிரியையான Joanna coles இந்த அன்புத் தம்பதிகளைப் பற்றிக் கூறும் போது அவர்கள் ஒரு இணைப்பிரியாத ஒருவருக்கொருவர் உதவுகின்ற அன்புள்ளம் கொண்டவர்கள். இதுவரை வெள்ளை மாளிகையில் பார்த்த தம்பதிகள் போலன்றி ஒபாமா தம்பதிகள் வேடிக்கையாகவும் விளையாட்டாகவும் ஒருவரையொருவர் மதித்தும் வாழ்கின்றனர்.

பல வருடங்கள் சென்றாலும் இன்றும் அவர்கள் புதுத் தம்பதிகள் போல் அன்பாகவும் நெருக்கமாகவும் இன்னும் வாழ்ந்து கொண்டிருப்பது பலருக்கு ஆச்சரியமாக இருக்கலாம். பொதுவாக மக்கள் அனைவரும் ஒபாமா தம்பதிகளின் நெருக்கமான உறவையும் ஒருவருக்கொருவர் அவர்கள் தெரிவிக்கும் அன்பையும் பார்த்துப் பெருமைப்படுகிறார்கள்.

ஒரு நாட்டின் தலைவரும் அவருடைய மனைவியான அமெரிக்காவின் முதல் பெண்மணியான மிச்செலும் ஒருவரையொருவர் ஒளிவு மறைவின்றி அன்பு செலுத்துவதை மக்கள் பாராட்டுவதை நாமும் பாராட்டுவோம்.

‘டொறான்டோ ஸ்டார் பத்திரிகையிலிருந்து பெயர்த்தெடுக்கப்பட்டது.

balar@thaiveedu.com

■ ■ ■

# கழிவறையில் காளை...

65ம் பக்கத் தொடர்ச்சி...

டோம். மலசலகூடத்திற் போவதென்றால், தப்பான எதையோ செய்யக் கேட்பதுபோல ‘சூச்சி’க்குப் போகவேணும் என்று பயந்து பயந்து சொன்ன ஞாபகம், கொஞ்சம் வளர்ந்ததும் ரீச்சரிடம் ஒரு விரலை உயர்த்தி ஒண்ணுக்குப் போகனும் என்று அடக்க முடியாமல் கேட்ட ஞாபகம். பாடம் அலுப்புக் கொடுத்தாலும் அப்படிச் செய்வதுண்டு. அப்புறம் வாலிப வயதில் வெட்கப்பட்டு எதுவுமே கேட்காமல் ஒற்றை விரலை மட்டும் காட்டி நம்பர் வண் சைகை மூலம் ஆசிரியரிடம் உத்தரவு பெற்றுச் சென்றதும் ஞாபகம் வந்தது.

இயற்கைக் கடன்கள் என்பது தவிர்க்க முடி-யாதவை. அப்படி இருந்தும் அதைச் செய்ய தற்குக்கூட, தகாத காரியம் செய்வதுபோல சின்ன வயதிலே வெட்கப்பட்டதுண்டு. அப்படித்தான் பெற்றோர்கள் எங்களைச் சில விடயங்களில் வளர்த்தார்கள். பாட்டன், பூட்டன் காலத்தில் இயற்கைக் கடன்களைப் பூர்த்தி செய்ய, நேரத்தோடு எழுந்து திறந்த வெளிகளுக்கோ, அல்லது பற்றை மறைவுகளுக்கோ செல்ல வேண்டியிருந்ததாம். காலப்போக்கில் சுகாதார தேவை கருதி, ஊரிலே மலசலகூடம் தனிமைப் படுத்தப் பட்டு, அனேகமான காணிகளில் அடிவளவிலே அமைக்கப்பட்டன. குந்திக் கொண்டு இருக்கவேண்டிய மலசலகூடங்களாக அவை இருந்தன. ஆதிகாலத்தில் இத்தகைய மலசல கூடங்கள் கிரேக்க நாட்டில் இருந்ததற்கான அடையாளங்கள் இருக்கின்றன. அதேபோல திராவிட நாகரிகமான சிந்துவெளி, மொகஞ்சதாரோ நாகரிகத்தில் (2000 BC) இத்தகைய கழிவறைகள் பாவனையில் இருந்ததற்கான அடையாளங்கள் இருக்கின்றன. காலம் செல்லச் செல்ல, 18ம் நூற்றாண்டளவில் வீட்டோடு சேர்ந்தபடியும், படுக்கை அறையோடு சேர்ந்தபடியும் மலசலகூடங்கள் (commode and Bidet) அமைக்கப்பட்டன. இப்பொழுதெல்லாம் மலசலகூடம் சுத்தமாக இருப்பதால் அங்கே இருந்தபடியே புத்தங்கள் படிக்கவும், தொலைக்காட்சி பார்க்கவும், கணனியைப் பாவிக்கவும் கூடிய வசதிகள் பல இடங்களில் இருக்கின்றன. சில கோடீஸ்வரர்கள் வீட்டு கழிவறைப் பேழைகள் தங்கத்தில் செய்யப் பட்டிருப்பதாகவும் சொல்கிறார்கள். இதைவிட இப்போதெல்லாம் இயற்கையின் தேவை என்பதால் பயணிகளின் வசதி கருதி நெடுந்தூரம் செல்லும் பேருந்துகளிலும், தொடர் வண்டிகளிலும் கழிவறை வசதிகள் பொருத்தப்பட்டுள்ளன. பள்ளிக்கூடங்களில் மலசலகூடம் வித்தியாசமானதாகவும், ஆண்களுக்கும் பெண்களுக்கும் வெவ்வேறானதாகவும் இருந்தன. ஆண்களின் மலசல கூடத்தில் ஆண்கள் என்றும், பெண்களின் மலசலகூடத்தில் பெண்கள் என்றும் எழுதப்பட்டிருந்தன. ஆணின் படமோ அல்லது பெண்ணின் படமோ அதில் வரைந்திருப்பதில்லை. ஆனால் ஆண்களின் கழிவறையில் கரிக்கட்டியாலும், செங்கட்டியாலும் சுவரொட்டிபோல நிறைய விடயங்கள் எழுதப்பட்டிருக்கும். பள்ளிக்கூடத்தின் புதிய சோடிகள் யார், யார்யாருக்கு என்னென்ன தொடர்பு இருக்கிறது என்ற விடையங்கள் மட்டுமல்ல, ஆசிரியர்கள்மீது மாணவர்களுக்கு உள்ள அனாமதேய கோபதாபம் பற்றிய வெளிப்பாடுகளும் சுடச்சுட செய்திபோல அங்கே பிரதிபலிக்கும். பீ அடித்துக் கொண்டே சுவாரஸ்சியமாய் எழுத்துக்கூட்டி அவற்றை வாசிப்பதில் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு மாணவனுக்கும் திருப்தி ஏற்படும். பெண்களின் மலசலகூடத்திலும் இப்படி எல்லாம் எழுதி இருந்ததா என்பது தெரியவில்லை. மாணவர்களுக்கு அது எப்பொழுதும் புரியாத புதிராகவே இருந்தது. பெண்களின் மலசல கூடம் இருந்த பக்கத்தை ‘அந்தப்புரம்’ என்று அழகாக வர்ணித்த சில மாணவர்கள் அது எப்படி இருக்கும் என்று பார்ப்பதில் ஒரு நாள் ஆர்வம் காட்டினார்கள்.

பாடசாலை நடக்கும் நாட்களில் அந்தப் பக்கமே போகமுடியாதாகையால், விடுமுறை நாள்தான் அதற்குச் சிறந்தது என்று திட்டம் போட்டார்கள். அப்படி ஒருமுறை விடுமுறை நாள் வகுப்பு நடந்தபோது, ஒரு நாள் ஏற்கனவே திட்டமிட்டபடி அந்தப் பக்கம் போனார்கள். ஆசிரிய, மாணவர்களின் நடமாட்டம் மிகக் குறைவாகவே இருந்தது. தகுந்த நேரம் பார்த்து சற்றுத் தள்ளி ஒருவன் யாராவது மாணவிகள் வருகிறார்களா என்று காவலிருக்க, மற்றவர்கள் ஒவ்வொருவராகச் சென்று உள்ளே எட்டிப் பார்த்தார்கள். ஆண்களின் கழிவறையில் இருக்கும் மார்பிள் பேழைகளைத் தவிர மற்றவை எல்லாம் அப்படியே இருந்தன. சுவர்கள் எல்லாம் திருஷ்டி படாமல் பளீச்சென்று இருந்தன. இப்படி ஏதாவது பளீச்சென்று, தூய்மையாய் இருந்தால் எங்கள் கூட்டாளி நாதனுக்குப் பொறுக்காது. உள்ளே சென்று எட்டிப் பார்த்த நாதன் பேசாமல் திரும்பி வந்திருக்கலாம். பொறுக்க முடியாமல் அவசரமாக வெளியே ஓடிவந்து ஒரு செங்கட்டித் துண்டை எடுத்துக் கொண்டு மீண்டும் உள்ளே ஓடினான். சற்று நேரத்தால் திரும்பி வந்தவன் இனியும் இங்கே நின்றால் பிரச்சனை வரும் வாங்க ஓடிப் போயிடலாம் என்றான். ஏன் என்று கூடக் கேட்க நேரமில்லாமல் நாங்களும் அவனுக்குப் பின்னால் ஓடிப்போனோம். அன்று இரவு முழுவதும் நாதன் உள்ளே சென்று என்ன செய்திருப்பான் என்ற கற்பனையில், எதுவும் புரியாமல் மண்டையைப் போட்டுக் குழப்பிக் கொண்டிருந்தோம்.

திங்கட்கிழமை மதியத்தின்பின் வழமைபோல தமிழ் பாடம் நடந்தது. தமிழ் வகுப்பில் சொல்வது எழுதுதல், அதாவது ரீச்சர் ஒவ்வொரு சொற்களாகச் சொல்ல, நாங்கள் பிழைவிடாமல் எழுதவேண்டும். இலகுவான சில சொற்களும், சேறு, சோறு, மோளம், மோதகம் போன்ற கடினமான சில சொற்களும் சொல்வதை எழுதுதலில் அடங்கியிருந்தன. க,கா,கி,கீ,கு,கூ என்று அந்த ஒரு வரியை மட்டும் நான் மனனம் செய்து வைத்திருந்தேன். அனேகமான மாணவர்கள் இந்த கெ,கே,கொ,கோவில் தான் பிழை விடுவார்கள். க்கும் எயும் சேர்ந்தால் கெ என்றும், க்கும் ஏயும் சேர்ந்தால் கே என்றும், க்கும் ஒவும் சேர்ந்தால் கொ என்றும், க்கும் ஓவும் சேர்ந்தால் கோ என்றும் தெரிந்து வைத்திருந்தேன். முதலில் குறில் நெடில் தெரியவேண்டும். மெய் எழுத்து எயுடன் சேரும்போது எ என்ற சத்தத்தில் முடியும். ஒவுடன் சேரும்போது ஒ என்ற சத்தத்தோடு முடியும். மெய் எழுத்து எப்படி ஆவன்னாவோடு சேரும்போது அரவு வருமோ, அதே போல ஒ, ஓ வுடன் சேரும்போதும் அரவு வரும். மறுநாள் ரீச்சர் வினாத்தாள்களைத் திருத்திக் கொண்டு வந்து ஒவ்வொருவராகப் பெயர் சொல்லி அழைத்தார். எழுந்து சென்று வாங்கியபோது, எழுத்துப் பிழை விட்டவர்களுக்கு ஒவ்வொன்றாக என்ன பிழை விட்டார்கள் என்று சொல்லிச் சொல்லி அடிவிழுந்தது. நாதனுக்கு மட்டும் ‘ஏன் அடிவிழுகிறது தெரியுமா, பிழைவிடாமல் எழுதத் தெரியாட்டி இனிமேல் பொது இடங்களில் எழுதாதே!’ என்று சொல்லி இரண்டடி அதிகமாகவே விழுந்தது. எங்களில் சிலரைத் தவிர மற்றவர்களுக்கு ஏன் அப்படிச் சொன்னார் என்று புரியவில்லை. நாதன்தான் இதை எழுதினான் என்பதை ரீச்சர் எப்படிக் கண்டு பிடித்தா என்பது எங்களுக்குப் புரியாத புதிராக இருந்தது.

நாதனின் விடைத்தாளை வாங்கிப் பார்த்தேன். சேறு என்பதற்குப் பதிலாக செறு என்றும், மோளம் என்பதற்குப் பதிலாக மொளம் என்றும் ஒற்றைக் கொம்பு போட்டு எழுதியிருந்தான். ‘அதுசரி, நீதான் கழிவறையில் எழுதினாய் என்று எப்படி ரீச்சர் கண்டுபிடித்தா’ என்று அவன் தனியே இருந்தபோது மெல்லக் கேட்டேன்.

‘அதுவா, அவசரமாக கழிவறையில் ஒரு இதயத்தின் படத்தைக் கீறி அதற்குள்ளே சேகரன் - மேரி என்று செங்கட்டியால் எழுதியிருந்தேனா, வழமைபோல எழுதும போது தவறு செய்து விட்டேன். இரட்டைக் கொம்பிற்குப் பதிலாய் ஒற்றைக் கொம்பைப் போட்டு விட்டதால் வந்த வினைதான் இது. அதனால்தான் ரீச்சரிடம் அகப்பட்டுக் கொண்டேன்’ என்றான் நாதன். (ரீச்சர் என்ற சொல்லை அவன் பாவிக்கவில்லை அதற்குப் பதிலாய் ஆத்திரத்தில் வேறு ஒரு தகாத வார்த்தையைப் பாவித்திருந்தான்)

kuru@thaiveedu.com

■ ■ ■

உங்கள் தட்டெழுத்து தேவைகளுக்கு

தமிழிலும் ஆங்கிலத்திலும் தட்டெழுத்து செய்து கொடுக்கப்படும்.

தொடர்பு:

T.P. 416-551-3972


# வீட்டின் உள்புற கதவுகளும் உங்கள் தேர்வும்

உள் அலங்காரக் கதவு வாங்குவது என்று நீங்கள் ஆரம்பிக்கும்போது, அதை வழங்குவதற்கு நிறைய முகவர்கள் இருப்பதை அறிவீர்கள். எல்லா வகையான கொள்முதல், விலை ஒப்பீடு, வடிவமைப்பு போன்றவற்றை ஆய்ந்து நல்ல முடிவு எடுக்க இது உதவியாக இருக்கும். எவ்வளவு பணம் இதற்குச் செலவு செய்யப் போகிறீர்கள் என்பதை முதலில் முடிவு செய்யுங்கள். அப்போதுதான் நீங்கள் எந்த வகையான கதவை வாங்கப் போகிறீர்கள் என்ற ஒரு முடிவுக்கு வர முடியும். உள் அலங்காரக் கதவுகளின் விலைகள் நிறையவே மாறுபடும். கொஞ்சம் அதிகமாகக் கூட செலவு செய்ய தயாராக இருந்தால், பொதுவான வடிவமைப்புப் பட்டியலை நாடுவது ஒரு வழியாக இருக்கும்.

அதிக எடையில்லாத கதவுகள் எளிமையாக, நல்ல வடிமைப்பாக இருக்கும். மரம் போன்ற தோற்றம் தரும் கதவுகளைவிட மரக் கதவுகள் அதிக விலையாகும். ஆனால், மரக் கதவுகள் நீண்ட காலப் பாவனைக்குரியது. பார்க்கவும் ரம்மியமாக இருக்கும். உண்மையான மரத்தாலான கதவை விரும்பினால் நீங்கள் இதைத்தான் தேர்வு செய்ய வேண்டும்.

இந்த மரக்கதவுகளில் உங்கள் எண்ணங்களுக்கு ஏற்ப வண்ணம் தீட்டலாம். மரம் போன்ற தோற்றம் உடைய உள் அலங்காரக் கதவுகள் பல தோற்றங்களில் கிடைக்கும். ஆனால், கிடைக்கிற வண்ணங்களில் இருந்து மட்டும்தான் நீங்கள் தேர்வு செய்ய வேண்டியிருக்கும்.

மரத்தாலான உள்புற கதவுகளைப் பயன்படுத்தினால் குளிர் காலத்தில் வெப்பம்



வெளியேறாமல் பாதுகாக்கப்படும். அதாவது வெப்பம் வெளியேறாமல் தடுக்கும் என்பது கூடுதலாகக் கிடைக்கும் பயனாகும்.

இந்தக் கதவுகளைச் சுத்தம் செய்வது எளிது,

வீட்டை விற்க நீங்கள் விரும்பும்போது வீட்டிற்கு நல்ல விலை கிடைக்கவும் அது உதவியாக இருக்கும்.

எல்லா காலத்துக்கும் பொருந்தும் வடிவமைப்புகளில் மரக் கதவுகளை உருவாக்க முடியும். பாரம்பரியமான வடிவமைப்பில் இருந்து, நவீன கால ரசனைக்கேற்ற வரையிலும் எந்த வகையான உள் அலங்காரம் செய்யவும் இது உதவியாக இருக்கும்.

நீங்கள் குறைந்த செலவில் கதவு வாங்குவதாக இருந்தால் அதிக எடையில்லாத கதவுகள் எளிமையாக, நல்ல வடிமைப்பாக இருக்கும். மரம் போன்ற தோற்றம் தரும். இந்தக் கதவுகள் உங்கள் செலவைக் குறைக்கும். உண்மையான மரத்தாலான கதவுகளைவிட, இந்தக் கதவுகளை வாங்குவதற்கு அரைவாசிக்கும் குறைந்த செலவுதான் ஆகும்.

மரம் போன்ற தோற்றமுடைய கதவுகளைவிட, மரத்தாலான கதவுகளின் பராமரிப்பில் அதிக கவனம் செலுத்த வேண்டியிருக்கும் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

சிறிய குழந்தைகள் இருக்கும் வீடாக இருந்தால் மரத்தைப் போன்ற தோற்றமுள்ள பிளாஸ்டிக் மற்றும் வைனல் கதவுகள் உங்களுக்குப் பொருத்தமானதாக இருக்கும். அதை சுத்தம் செய்வது எளிது. குழந்தைகள் தீட்டும் வண்ணங்களை எளிதில் சுத்தம் செய்யலாம்.

எந்தப் பொருளை வாங்குவதாக இருந்தாலும் வாடிக்கையாளர் திருப்தி மற்றும் உத்தரவாதம் போன்றவற்றின் அடிப்படையில் முன்கூட்டியே அதற்கான வாய்ப்புகளைக் கண்டறியுங்கள். உங்கள் தேவைக்கு ஏற்றபடி செய்யப்படும் கதவுகளை வாங்கும்போது, அது உங்களுக்குப் பிடிக்காமல் போனால், அதை விற்றவரே திரும்ப எடுத்துக் கொள்வதற்கோ அல்லது மாற்றிக் கொள்வதற்கோ என்ன வாய்ப்புகள் இருக்கின்றன என்பதை முடிவு செய்ய வேண்டும், இது மிகவும் முக்கியமானது. எந்தக் கதவாக இருந்தாலும் அதற்கான உத்தரவாதம் மிகவும் முக்கியமானது. குறிப்பாக வாழ்நாள் முழுக்க சேதமடையாது என கூறப்படும் கதவுகளுக்கு இது மிகவும் அவசியம்.

மரக் கதவுகளை எப்படிப் பொருத்துவது என்பதை முதலில் கற்றுக் கொள்ளுங்கள். கதவுக்குத் தரப்படும் உத்தரவாதம் காலாவதியாகாமல் இருக்க வேண்டுமானால், தொழில்முறை வல்லுநரைக் கொண்டுதான் கதவைப் பொருத்த வேண்டுமா என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள். சில நிறுவனங்கள் இலவசமாகவே கதவைப் பொருத்திக் கொடுக்கின்றன. இதுபோன்ற வாய்ப்பு கிடைக்கிறதா என்பதையும் பாருங்கள். நீங்களே கதவைப் பொருத்திக் கொள்வதாக இருந்தால், ஏற்கெனவே துளையிடப்பட்ட கதவுகளைத் தேர்ந்தெடுங்கள். அப்போது தான் பொருத்தும்போது நீங்கள் துளையிட வேண்டிய அவசியம் இருக்காது. மேலும், கதவைப் பொருத்தும் போது நீங்கள் அதை சேதப்படுத்திவிடாமல் இருப்பதும் இதன் மூலம் உறுதி செய்யப்படும்.

## மரக் கதவுகளைப் பராமரித்தல்

மரத்தைப் போன்ற தோற்றம் தரும் கதவுகளைவிட மரக்கதவுகளைப் பராமரிப்புக்கு அதிக கவனம் செலுத்த வேண்டியிருக்கும். ஆனால், அது ஒன்றும் அதிக கூடுதல் வேலையில்லை என்றும், அது நல்ல தோற்றத்தைத் தரக் கூடியது என்றும் சிலர் கூறுகின்றனர். அந்தத் தோற்றத்துக்காக கூடுதல் கவனம் செலுத்துவது தவறில்லை என்கின்றனர்.

கதவுகளுக்கு வண்ணம் பூசினால், பின்னொரு காலத்தில் மீண்டும் வண்ணம் பூச வேண்டிய தேவை வரும். வண்ணம் பூசிய கதவைப் பொறுத்தவரை, மரப்பொருள்களுக்குக் கொடுக்கும் பராமரிப்பு முக்கியத்துவத்தை இதற்கும் கொடுக்க வேண்டும்.

வண்ணம் பூசிய மரக் கதவை சுத்தம் செய்யும்போது தரமான Polish வகைகளைப் பயன்படுத்துங்கள். வேலைப்பாடுகள் அமைந்த மரக் கதவுகளை சுத்தம் செய்ய பிரத்யேகமான தூசு எடுக்கும் கருவிகளை நீங்கள் பெறவேண்டும். வைனல் மற்றும் பிளாஸ்டிக் கதவுகளைப் பராமரிப்பது மிகவும் எளிதாக இருக்கும். உங்கள் வீட்டில் சிறு குழந்தைகள் இருந்தாலோ அல்லது குறைவான பராமரிப்பு மட்டும் செய்யக்கூடிய கதவு வேண்டும் என்று நீங்கள் கருதினாலோ இது பொருத்தமானதாக இருக்கும். எந்த வகையான கதவாக இருந்தாலும் குளியலறை போன்ற ஈரமான சூழ்நிலையில் இருக்கும் பகுதியில் பயன்படுத்துவதாக இருந்தால் பூஞ்சணம் படிகிறதா என்பதையும் பாருங்கள்.

■ ■ ■




# Tutoring

**Grade 1- 7 : English, Math, Science & Social Studies**

**Grade 8- 11: English & Math**


**அஞ்ஜலீன் ஜீவா திசைராஜா**


**B.A (Hons),M.Sc,Ph.D**

**(647) 291 1357**

**(Kennedy & Ellesmere அருகாமையில்)**

Geothermal Energy for the Home



## Our Major Products

**Solar Domestic Hot Water Heating**
**Solar Air Heating Systems**
**Photovoltaic Electricity**
**Wind Turbines**
**Geothermal**
**and Accessories**

## Value to Customer

**FREE Consulting and arrange for Energy audit**
**FREE Information Seminar**
**Long term warranty & ongoing maintenance**
**Assistance to apply for Government Grants**
**Interest Free Loans under Power House Program**

*Dealers and distributors of green energy.*

SEIA Solar Energy Industries Association
CanSIA The Canadian Solar Industries Association
OSEA

BSI BRIGHT SOLAR INC.

**HEAD OFFICE**
5215 Finch Avenue East, Suite 257
Toronto, Ontario
Canada M1S 0C2
Phone : 416-754-8327
Fax : 416-754-8328
Toll 1-877-554-8327

**BRANCH**
1290 Finch Avenue West, Suite 23
Toronto, Ontario
Canada M3J 3K3
Phone: 416 665 4756
Fax: 416 665 0764

**BRANCH**
2166 Rodick Road,
Markham, Ontario
Canada L6C 1S3
Phone: 905 887 8585
Fax: 905 887 7835

**Email: info@brightsolarinc.com**
**www.brightsolarinc.com**

Assistance to apply for Government Grants

BSI BRIGHT SOLAR INC.



## Free Energy for Life from Nature.

www.brightsolarinc.com


## Reduce Pollution and Save the Planet



Carbon dioxide pollution causes global warming which is already affecting the habitats, wildlife and people. It is the cause of earth quakes, hurricanes, floods and frequent changes in weather patterns. In Canada, much of the power generated is from burning coals and fossil fuels. Coal, when burned, releases greenhouse gases into the atmosphere. For every ton of coal, three tons of greenhouse gases are pumped into our air. Over twenty percent of all carbon dioxide pollution in Canada comes from energy used in our homes and businesses.

## Renewable Energy is the Solution to the Problem.

Use renewable or alternative energy, from sun, wind and soil. Solar energy and wind turbines produce no gas emissions and are known as green energy electricity. When you support renewable energy, you are reducing pollution.



The solar energy can be used to heat the hot water, heat the air at winter time or to produce electricity. The benefits from these systems are as follows;

- They are safe, clean and quiet to operate
- They are highly reliable
- They operate cost-effectively in remote areas and for many residential applications
- They give you increased autonomy – independence from the grid or backup during outages

## How do Home owner benefit from using Solar Energy?

- Reduce your Electricity / Gas bill forever.
- Good return on investment. It will last for over 20 years.
- There are many incentives offered at all government levels to reduce your initial energy transformation cost.
- Pilot financing program offers interest free loans for energy investment.
- Increasing the home value.

## The Role of Bright Solar Inc.



With Bright Solar Inc. we are committed to distribute and install environmentally friendly energy solutions to reduce emission. Our product lines are carefully chosen from high quality manufacturers to bring the best value to your investment. Our installers have many years of experience in the plumbing and electrical systems that you can count on

## The Installation Process

The Installation Process is a very easy 5 step process as it is listed here:

1. Energy Inspection of your property to apply for the government grant.
2. Our experts will help you to choose the best solution.
3. Installers will come and perform the work.
4. BSI representative will give all the product warranty details to you.
5. Energy Audit after installation and submit for government grant.

**Introduction to Solar Domestic Hot Water System**

Sun light is collected and converted to heat energy. The heat energy is transferred to storage tank via the circulating fluids. The heated water is stored in an insulated tank for consumer use. Hot water is drawn off when the water is used and the cold make-up water enters at the bottom of the tank.

**Facts about Hot Water System**

Ontario has enough sunlight available for Solar systems.


Solar Hot water systems have been widely used around the world for many years.

There are incentives available at different levels of government based on the geographical location.

A solar water heater works together with your existing water heating system and is not a replacement for the system. Installing a system will significantly reduce your household's CO2 emmissions.

## How does a typical solar thermal system work?

(1) Modern flat plate collector system uses highly selective absorbers to convert solar radiation into heat. A heated liquid then transfers the energy through (2) insulated tubes to the (3) storage device – usually a water reservoir. (4) Pumps and controllers regulate the system and guarantee smooth operation. A (5) heating boiler may provide additional heat, if the solar yield is at times not sufficient.



from the firm foundations of creative photos

l a p h o t o g r a p h i e e s t u n a r t





digimedia creations

# karuna photography

- Wedding Photography
- Bridal Portrait Sessions
- Custom Reception Slideshows
- DVD Slideshows
- Custom Designed Albums
- Parent Albums
- Digital Proofs
- Digital Retouching
- Framed Prints & Canvases

elegant memorable real

www.digimediaphoto.com

416.467.4952

# யார் பெரியவர்?

## குமார் புனிதவேல் பக்கம்

உங்கள் எல்லாருக்குமே தெரிந்த ஒரு விடயம் சண்டித்தனம் பேசுவது. யாராவதுடன் மல்லுக்கட்டச் செல்லுமுன் தன் வீரதீரச் செயல்களை சொல்லி பேச்சாலேயே எதிரியை பயம் கொள்ளச் செய்து துரத்திவிடுவது. இதே தன்மையில் தான் திருவெங்கைக் கலம்பகம் எனும் நூல் ஆகும். இதை இயற்றியவர் சிவப்பிரகாச சுவாமிகள், இவர் பல அருமையான தமிழ் நூல்களைத் தந்த பேரறிஞர். இந்த திருவெங்கை கலம்பகத்தில் நான் படித்துச் சுவைத்த ஒரு இனிமையான பாடலை உங்களுடன் சுவைப்பேன்.

பாடலின் பின்னணியை சற்று பார்ப்போம். வெங்கை என்பது பாண்டிய பேரரசின் கீழ் உள்ள ஒரு சிற்றரசு. அங்கு முருகன் கோவில் கொண்டுள்ளார். அதை வேடன் ஆண்டுவந்தான். அந்த வேட்டுவத்தலைவனுக்கு அழகான மகள் இருந்தாள். அவள் ஒருநாள் தன் தோழிகளுடன் அருவியில் குளித்துவிட்டு மின்னல் கொடிபோல் வீடு திரும்புகையில் பாண்டிய இளவரசன் அவளை கண்டுவிட்டான். கண்டது மட்டுமல்லாமல் தன் மனதையும் அவளிடம் பறிகொடுத்து விட்டான். தன் மனதை கொள்ளையடித்த அந்த திருடி யார் என விசாரித்தபோது அவள் தன் ஆட்சிக்குட்பட்ட ஒரு சிறு நில வேந்தனின் ஏக புதல்வி என்று அறிந்து பெருமகிழ்வு கொண்டான். தனக்கு கீழ் ஆட்சி செய்யும் சிறு நில மன்னன் தானே கேட்டவுடன் திருமணம் நடக்கும் என எண்ணியபடி தனது தலைநகருக்கு திரும்பினான். தனது மந்திரியை அழைத்து தனது விருப்பத்தை தெரிவித்து வேட்டுவத்தலைவனிடம் பெண் கேட்கத் தூது அனுப்பிவைத்தான்.

பெருமன்னன் சொற்கேட்ட முதல் மந்திரியும் பெரும் சீர்வரிசைகளுடன் வீரர்கள் முன்னே செல்ல பெரும் ஆரவாரத்துடன் வெங்கை நாட்டிற்குச் சென்றான்.

ஒரு நாளுமில்லா பெருநாளாய் பரிவாரங்களுடன் வந்த மந்திரியை ஒன்றும் புரியாத வேட்டுவ மன்னனும் உரிய மரியாதைகளுடன் வணங்கி வரவேற்றான். பாண்டிய மந்திரியும் கொண்டுவந்த வெகுமதிகளை வேடர் குலத் தலைவனுக்கு வழங்கினார். ஒரு நாளுமில்லாமல் அரசன் இவ்வளவு வெகுமதிகளை அனுப்பியுள்ளதை நோக்கி வேடர்குலத் தலைவன் திடுக்கிட்டுத் திகைத்து மனம் குழம்பி நின்றான். முன்பெல்லாம் மன்னன் அனுப்பும் சேவகர்களுக்கு அரசனுக்கு கொடுக்கும் படி தான் வெகுமதி அனுப்புவது தான் வழக்கம். கொடுத்துப் பழகிய கையிற்கு எடுத்துக்கொள்ள கூச்சமாய் இருந்தது.

தூதுவந்த பாண்டியநாட்டுத் தலைமை மந்திரி வியந்து நின்ற வேட்டுவத் தலைவனிடம் சொல்கிறார். 'வேடர்குலத் தலைவா'' உமக்கு வந்தது பெரும் யோகம். ஐம்பத்தாறு தேசங்களையும் அரசாளும் எமது பாண்டிய மன்னர் உம்மை நாடி வந்து இவற்றை வழங்கியுள்ளார். ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றார். ஒன்றும் புரியாத வேட்டுவத் தலைவனும் தன்னை மறந்து, 'என்ன' என்று வியந்து நின்றான்.

அவர் ஆச்சரியத்துடன் நோக்கிய வேட்டுவத் தலைவனிடம் பாண்டிய மன்னர் பரம்பரையையும் அவர்கள் வீர பராக்கிரமங்களையும் நீங்கள் நன்றாகவே அறிந்திருப்பீர்கள். சத்திரிய பரம்பரையைச் சேர்ந்த பாண்டியர்கள் ஆரிய வம்சத்தை சார்ந்தவர்கள். வீரத்திலும் தீரத்திலும் ஒப்பாடும் மிக்காடும் இல்லாதவர்கள். அவர்கள் உங்கள் வேட்டுவக் குலத்திலும் எவ்வளவோ உயர்ந்த குடியினர். அப்படி இருக்க அவருடைய சம்பந்தத்தை அடைவதற்கு எத்தனையோ பெரும்பெரும் அரசர்களெல்லாம் ஆவலோடு போட்டிபோடுகையில் அவருடைய ஆட்சியின் கீழ் சிற்றரசாக உங்களுக்கு அதிர்ஷ்டம் வந்துள்ளது. உங்களுடைய மகளை எங்கள் இளவரசர் மணந்துகொள்ள விரும்புகிறார். சந்தேகப்படவேண்டாம். இதோ மணவோலை என்று மந்திரி தாம் கொண்டுவந்த மணவோலையை எடுத்து நீட்டினார்.

அரசகுலத்துக்கு தாழ்ந்ததாக தனது வேட்டுவ குலத்தை மந்திரி கூறியதால் வேட்டுவத் தலைவனுக்கு பொத்துக்கொண்டு வந்தது கோபம். மந்திரியை ஏற இறங்கப் பார்த்தான். என்ன துணிவு இருந்தால் இவர் தன் குலத்தை குறைவுபடுத்தி கூறி இருக்கலாம். எனவே வெங்கை நாட்டின் வேட்டுவத் தலைவன் தமது வீரத்தை விரிவுபடுத்தி விளக்கிக் கூறினான் மந்திரிக்கு.

வந்திருப்பதோ முதல் மந்திரி. பெண் கேட்டு அவரை அனுப்பியவரோ தனக்கு தலைவனான பாண்டியவேந்தன். அப்படி இருப்பினும் அச்சம் சிறிதேனும் இல்லாமல் வீரம் (மறம்) பேசுகிறான் வேட்டுவத் தலைவன்.

சிவப்பிரகாச சுவாமிகள் நமக்கெல்லாம் தெரிந்த விஷயங்களை கோர்வைப்படுத்தி எவ்வளவு அழகான பாட்டாக தருகிறார். இதில் உவமான உவமேயச் சிறப்போ வேறு சொந்தக் கற்பனையோ கிடையாது. ஆனாலும் அவர் கோர்வைப்படுத்தி சொல்லும் விதத்தில் எவ்வளவு இனிமையாக உள்ளது. அவர் கூறிய பாடல் இதோ.

'விற்றதார்? கலைபாதியோடு
வனத்திலே அழவிட்டதார்?
வெஞ்சிறைபுக விட்டதார்?
துகில் உரியவிட்டு விழித்ததார்?
உற்ற தாரமும் வேண்டும் என்று இனி
மன்னர் பெண்டுகொளல் ஒக்குமோ?
உமியடா மணம்என்ற வாய்கிழித்து
ஓலைகாற்றில் உருட்டடா!
வெற்றி யாகிய முத்தி தந்திடும்
வெங்கை மாநகர் வேடர்யாம்
விமல ரானவர் எமையடுத்து இனிது
எங்கள் எச்சில் மிசைந்தபின்
பெற்ற வேலன் தனக்கு நாம்ஒரு
பெண் வளர்ப்பினில் ஈந்தனம்
பெற்ற பெண்ணைக் கொடுப்போமோ இதென்
பேய் பிடித்திடும் தூதரே!''

படிக்கும்போதே பொருள் விளங்கியிருக்கும். முதல் பகுதியில் எதிரியை ஏளனப்படுத்தி இகழ்கிறார். (பாண்டியருடைய அரச குலத்தை) பின் பாதியில் தம் குலப்பெருமையை விளக்கிச் சொல்கிறார்.

முதலாவதாக கேக்கிறார். விற்றதார்? என்று கடைசிவரை காப்பேன் என்று வந்த மனைவியை விற்றது யார்? உமது அரச குலத்தில் பிறந்த அரிச்சந்திர மன்னனல்லவா? அவர் சூரியவம்சத்தவர். இந்தக் கேட்டில் உம்குலத்தவரை நம்பியார் பெண் கொடுப்பார்?

அடுத்து கேக்கிறார். 'கலை பாதியோடு வனத்திலே அழ விட்டதார்?' எத்தனையோ தேவர்கள் வந்து கழுத்தை நீட்ட அவர்களை எல்லாம் ஒதுக்கிவிட்டு தனக்கு மாலை சூடிய தமயந்தியை நடுச் சாமத்தில் நடுக் காட்டில் பாழடைந்த மண்டபத்தில் இருவருமாக கட்டியிருந்த புடவையில் பாதியை கிழித்துக் கொண்டு ஓடிய பாதகனான நளன் ஒரு அரசனல்லவா. அவன் சத்திரிய அரசனல்லவா. எப்படி பெண்ணை பெற்றவன் அக்குலத்தவருக்கு தமது பெற்ற மகளை தரமுடியும் என்கிறார். இத்துடன் அவர் நின்று விடவில்லை. அவதார புருஷராக வந்த அரசன் இராமரையும் சாடுகிறார்.

அடுத்த கேள்வியாக அவர் கேட்டது வெஞ்சிறை புகவிட்டதார்? ஒருநாளும் பிரிந்திருக்கமாட்டேன் என்று தசரத மன்னனால் காட்டுக்கனுப்பப்பட்ட இராமனுடன் கல்லும் முள்ளும் துன்பமும் நிறைந்த காட்டுக்கு வந்த மனைவியை சீ இன்னுமொரு மன்னன் இராவணன் சிறை கொண்டுபோய் வைக்க பார்த்துக்கொண்டிருந்த இராமனும் உம்முடைய மதிப்புக்குரிய மன்னர் பரம்பரை அல்லவா என்று கேட்டு நையாண்டி செய்கிறான் வேட்டுவக்குல தலைவன். இத்துடன் விட்டுவைக்காமல் தொடர்ந்து கேக்கிறார் 'துகில் உரியவிட்டு விழித்தார்?' என்று.

பல ஆடவர் முன்னிலையில் தனது மனைவியான திரௌபதியை அதர்மமான முறையில் வைத்து சூதாடிவிட்டு அவளை சபை முன்னிலையில் துகில் உரிய பார்த்திருந்த தருமம் சகோதரர்களும் நீர் சொன்ன உயர் குலமாகிய சந்திரவம்ச பரம்பரையை சேர்ந்தவர் அல்லவா? என்று கேக்கிறார். இப்படியான இழி செயல் செய்யும் மன்னவர் குலம் இனி பெண் கொள்ளல் தகுமோ எனும் விதத்தில் 'உற்ற தாரமும் வேண்டுமென்று இனிமன்னர் பெண்கொளல் ஒக்குமோ?' என்ற தொனியில் கேக்கிறார் அந்த வேட்டுவத் தலைவன்.

சில சந்தர்ப்பங்களில் நல்ல கோபத்திலிருக்கும் வேளையில் யாராவது எதையாவது கேட்டால் வாயை கொப்பளித்து விட்டுவாரும் என்பது போல் அந்த வேட்டுவத் தலைவன் மந்திரியை நோக்கி மணம் அதாவது கல்யாணம் என்ற வார்த்தையே உமது வாயில் இருக்க தகுதியில்லை. எங்கள் பெண்ணுக்கும் உங்கள் இளவரசனுக்கும் 'மணம் என்று சொன்ன அந்த வார்த்தைகூட உன் வாயில் இருக்கக்கூடாது. துப்பு கீழே அந்த மணம்' என்ற சொல்லை, என்ற கருத்துப்பட 'உமியடா மணம் என்ற வாய்' என்று கூறுகிறார்.

இத்துடன் கொண்டுவந்த ஓலையை கிழித்து எறியடா என்ற கருத்துப்பட 'கிழித்து ஓலை காற்றில் உருட்டா என்று சினத்துடன் கூறுகிறார். இது மணஓலையை நீளத்தில் நடுவிலுள்ள ஈகிலை எடுத்து இரண்டாக கிழித்து வட்டமாக வளைத்துக்கட்டி சிறுவர்களைப் போல் உருட்டி விளையாடு என்பது போல் அல்லவா உள்ளது. தூதுவந்த மந்திரியிடம் அரச பரம்பரையை பற்றி இவ்வளவும் கூறியபின் தன் சொந்த விடயத்துக்கு வருகிறார்.

ஆயுதபலத்தால் உங்கள் மன்னன் அரசியல் வெற்றி பெறலாம். நாம் இருக்கும் இடமோ ஞான பலத்தால் உண்மையான வெற்றியான முக்தியை தரும் முருகக் கடவுள் குடிகொண்டிருக்கும் திருவெங்கை வாழும் வேடர்கள் குடியிருந்து குமரக் கடவுளை கும்பிடுவோம் என்பதை 'வெற்றியாகிய முக்தி தந்திடும் வெங்கை மாநகர் வேடர் நாம்' என கூறி வேந்தர்க்கு வேடர் குறைந்தவரல்ல என்று கூறுகிறார்.

இத்துடன் நில்லாமல் தமது கெட்டித்தனத்தை கூறுகிறார். எல்லாம் கடந்த பரமசிவன் எம்முடன் வந்து தங்கியிருந்து எங்கள் குலத்தலைவனான கண்ணப்பரின் எச்சிலை வெகு இனிய நைவேத்தியமாக உண்டு மகிழ்ந்தபின் அதற்காக செய்ததை குறிப்பிடுகிறார். 'விமலரானார் எமையடுத்து இனிது எங்கள் எச்சில் மிசைந்தபின்' எனும் வாசகத்தால் இதை குறிப்பிடுகிறார். தொடர்ந்து அவர்....

'பெற்ற வேலன் தனக்கு' - அவர் (பரம சிவன்) பிரதியுபகாரமாக தான் பெற்ற மகள், முருகனுக்கு என்ன செய்தார்கள் என அடுத்த அடியில் பார்ப்போம்.

'நாம் ஒரு பெண் வளர்ப்பினில் ஈந்தனம்' என்று முடிக்கிறார். அதாவது முருகனுக்கே சொந்த மகளை கொடுக்காது எடுத்துவளர்த்த வள்ளி எனும் பெண்ணைக் கொடுத்தோம் என்று கூறுகிறார். அந்த ஈசன் மகனுக்கே சொந்த மகளை கொடுக்காது ஊர்பேர் தெரியாது எடுத்து வளர்த்த பெண்ணை கொடுக்கும் போது உமது அரசனுக்கு நாம் பெற்று வளர்த்த பெண்ணை கொடுப்போமா. இதென்ன பேய் பிடித்தவன் பேச்சாய் இருக்கிறதே என்பதை

'பெற்ற பெண்ணைக் கொடுப்போமோ இதென்ன பேய் பிடித்திடும் தூதரே!' என்று கூறி முடிக்கிறார்.

சில புராணக்கதைகளை சேர்த்துச் சொல்லுவது போல் அமைந்த பாடலின் சுவை உங்களை பெரிதும் கவர்ந்திருக்கும் என்று நினைக்கிறேன். எனவே மீண்டும் அந்த பாடலை படித்துப் பாருங்கள்.

'விற்றதார்? கலைபாதியோடு
வனத்திலே அழவிட்டதார்?
வெஞ்சிறைபுக விட்டதார்?
துகில் உரியவிட்டு விழித்ததார்?
உற்ற தாரமும் வேண்டும் என்று இனி
மன்னர் பெண்டுகொளல் ஒக்குமோ?
உமியடா மணம்என்ற வாய்கிழித்து
ஓலைகாற்றில் உருட்டடா!
வெற்றி யாகிய முத்தி தந்திடும்
வெங்கை மாநகர் வேடர்யாம்
விமல ரானவர் எமையடுத்து இனிது
எங்கள் எச்சில் மிசைந்தபின்
பெற்ற வேலன் தனக்கு நாம்ஒரு
பெண் வளர்ப்பினில் ஈந்தனம்
பெற்ற பெண்ணைக் கொடுப்போமோ இதென்
பேய் பிடித்திடும் தூதரே!''

punithavel@thaiveedu.com

■ ■ ■

இளமழலை முதல் தரம் 12 வரையான மாணவர்களுக்கு பல வருடகாலம் பட்டறிவுள்ள ஆசிரியையால் தமிழ் கற்பிக்கப்படுகின்றது.

- உங்கள் பிள்ளைகளும் தமிழில் பேசி, எழுதி, வாசித்து தேர்ச்சி பெற வேண்டுமா?
- பேச்சுப் போட்டிகள், சிறுவர் நாடகங்கள், பட்டிமன்றங்கள், சிறுவர் அபிநயப் பாடல்கள் போன்ற கலைநிகழ்ச்சிகளில் பங்குபற்றி தமது திறன்களை வெளிப்படுத்த வேண்டுமா?
- தொலைக்காட்சி, வானொலி சிறுவர் நிகழ்ச்சிகளில் பங்கேற்று தமது திறன்களை ஆளுமையுடன் வெளிக்கொண்டுவர வேண்டுமா?

அழையுங்கள்: 905-554-2496

"தமிழின் மேன்மை அதன் தொன்மையில் இல்லை அதன் தொடர்ச்சியில் உள்ளது."

நாளைய எமது தமிழ்ச் சந்ததியினர் தமிழ் பேசும் நல்ல தமிழ்ப் பிள்ளைகளாக வளர்வது எமது கரங்களிலேயே உள்ளது.

# ராஜபக்சேயின் அடுத்த யுத்தம்- ஈழத்திலும் நாஜி சித்ரவதை முகாம்கள்!



கிருஸ்னா டாவின்ஸ்

இலங்கையிலிருந்து வரும் யுத்தச் செய்திகள் இப்போதும் குழப்பத்தின் உருவிலிருந்தாலும், ஒரு கசப்பான உண்மையயைத் தமிழுலகம் ஒப்புக் கொண்டாக வேண்டிய நிலையில் தான் இருக்கிறது. அந்த உண்மை, 5,600 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்ட ஈழப் பிரதேசத்தை ஒரு தனிநாடு போலவே ஆண்டு கொண்டிருந்த விடுதலைப் புலிகள் இன்று கிட்டத்தட்ட 58 சதுர கிலோ மீட்டர் பரப்பளவுக்கு முல்லைத்தீவுக் காடுகளில் குறுக்கப்பட்டுவிட்டார்கள் என்பதே. இலங்கை அரசு புலிகளை முற்றிலும் ஒடுக்கி விட்டதாகக் கொண்டாடிக் கொண்டிருக்கிறது. புலிகள் படை அளவிலும், ஆயுதபலத்திலும், மனோ-ரீதியிலான நம்பிக்கைகளிலும் பெரிதும் நிலை குலைந்திருக்கிறார்கள். எத்தனையோ யுத்தங்களை இதுவரை புலிகள் சந்தித்-திருந்தாலும் ஒவ்வோரு முறையும் அவர்க-ளின் அதிகாரபூர்வமான “குரல்” அவர்களின் சார்பான நிலைகளை சர்வதேச சமூகத்துக்கு அப்போதெல்லாம் அறிவித்தே வந்திருக்கிறது.

ஆனால் ராஜபக்சே அரசின் இன்றைய யுத்தத்தில்தான் புலிகளின் நீண்ட மௌனம் முதன்முதலாக உலகத்தமிழர்களை அதிர வைத்திருக்கிறது. “பின்வாங்கல்” என்கிற ராஜதந்திரத்தைத்தான் புலிகள் போர்தந்திர-மாக பிரயோகித்து வருகிறார்கள் என்று நம்பி வந்த அவர்கள், உண்மை அதுவல்ல, புலிகள் இலங்கை ராணுவத்தால் கடுமை-யாக ஒடுக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை அறிந்து தமிழீழக் கனவு சிதைந்து போகு-மோ என்கிற தாங்கொண்ணா துயரத்தில் இருக்கிறார்கள்.

புலிகளுக்கு ஏன் இந்ததப் பின்னடைவு ஏற்-பட்டது, இதிலிருந்து அவர்கள் மீண்டு வருவார்களா, பிரபாகரன் பிடிபடாமல் தப்பித்து விடுவாரா, இந்திய அரசாங்கத்தின் கடைக்கண் ஆதரவுப் பார்வை ஈழத்தமிழர்கள் மீது விழுமா, தங்கள் தோவிகளுக்கான காரணங்களைப் பற்றிய சுய விமர்சனத்தைப் புலிகள் செய்து கொள்வார்களா, இலங்கை அரசுக்கு வழங்கி வரும் கட்டற்ற ஆதரவை இந்தியா விலக்கிக் கொள்ளுமா என்பதைப் போன்ற கேள்விகள் எல்லாம் ஒருபுறம் இருக்க, இப்போது மிக முக்கியமான ஒரு பிரச்னையை உலகின் கவனத்துக்கு கொண்டு வர வேண்டிய பொறுப்பை மீடியா கொண்டிருக்கிறது.

அது-

வன்னிக்காடுகளிலும் முல்லைத்தீவுப் பகுதி-களிலும் உள்நாட்டு அகதிகளாக ஆக்கப்பட்டு விட்ட லட்சக்கணக்கான தமிழர்களைப் பற்றியது. தொண்டு நிறுவனங்களையும், சர்வதேச செஞ்சுலுவைச் சங்கத்தையும் உலக மீடியாக்களையும் வன்னியிலிருந்து வலுக்கட்டாயமாக வெளியேற்றி விட்டது ராஜபக்சேயின் அரசு. “புலிகளுடனான யுத்தம் முடிவடைந்து விட்டது, இனி அடுத்த யுத்தம் அவர்களுக்கு யார் ஆதரவு கொடுக்கிறார்-களோ அவர்களின் மீதுதான்..” என்று ராஜபக்சே சொல்கிறார். அவர் குறிப்பிடுவது நடுநிலை கொண்ட மீடியாவைத்தான் என்பது தெளிவு. சிங்கள மீடியாவின் முற்போக்கான பத்திரிகையாளர்களில் மிக முக்கியமான இருபதுக்கும் மேற்பட்டவர்கள் வெளிநாடு-களுக்குத் தப்பிச் சென்று விட்டார்கள். அரசாங்க ராணுவத்துக்கு ஆதரவாக எழுதி-னாலும் அவர்களின் இழப்புகளைப் பற்றிய உண்மைகளையும் தைரியமாக எழுதி வந்த பத்திரிகையாளர் இக்பால் அப்பாஸ் கூட வெளிநாட்டுக்குப் போய்விட்டார். “சண்டே லீடர்” பத்திரிகை ஆசிரியர் லசந்த விக்ரமதுங்கேயின் பயங்கரப் படுகொலை பத்திரிகையாளர்க-ளுக்கு விடுக்கப்பட்ட பகிரங்க எச்சரிக்கை. உலகிலேயே பத்திரிகையாளர்கள் வாழ்வ-தற்கு ஆபத்தான நாடுகள் என்று கருதப் படும் நாடுகளில் இரண்டாவது இடத்தைப் பிடித்து சாதனை செய்திருக்கிறது இலங்கையின் ராஜபக்சேயின் அரசு (முதலிடம் ஈராக்கிற்கு)

யுத்தம் முடிவுக்கு வரக் கூடிய இன்றைய காலகட்டத்தில் ஏன் தகவல் தொடர்பு சாதனங்கள் மற்றும் தொண்டு நிறுவனங்களை ராஜபக்சே அரசு ஒடுக்குகிறது என்பதற்கான காரணம்தான் அச்சம் தரக்கூடியது. ஈழத் தமிழர்களை சிங்கள அரசாங்கம் என்ன செய்ய திட்டமிட்டிருக்கிறது என்பதைப் பற்றி உலகம் அறியாமல் இருக்கத்தான் அந்த மீடியா இருட்டடிப்பு செய்யப்படுவதாகச் சொல்கிறார்கள் துரத்தப்பட்ட தொண்டு நிறுவனத்தைச் சேர்ந்தவர்களும் மனித உரிமை ஆர்வலர்களும்.

இந்தத் தகவல்கள் பற்றிய ஒரு சுற்றறிக்கை மின்னஞ்சலை தமிழக சட்டமன்ற உறுப்பினர் ரவிக்குமார் நண்பர்களுக்கும் பத்திரிகையா-ளர்களுக்கும் அனுப்பியிருக்கிறார். அதிலி-ருக்கும் விவரங்கள் மிகுந்த கவலைக்குரி-யவை. ஹிட்லரின் “கான்ஸண்ட்ரேஷன் காம்ப்” எனப்படும் சித்ரவதை முகாம்களின் நிகழ்வுகள் இன்றளவும் உலக சரித்திரத்தில் கறுப்பு நினைவுகளாக “ஹோலகோஸ்ட்” பயங்கரங்களாக இருந்து வருகின்றன. ஒரு இன ஒழிப்பை எத்தனை கொடூரமாகச் செய்ய முடியும் என்று உலகத்துக்குச் செய்து காட்டியவர் ஹிட்லர்.

> “ ஹிட்லரின் “கான்ஸண்ட்ரேஷன் காம்ப்” எனப்படும் சித்ரவதை முகாம்களின் நிகழ்வுகள். இன்றளவும் உலக சரித்திரத்தில் கறுப்பு நினைவுகளாக “ஹோலகோஸ்ட்” பயங்கரங்களாக இருந்து வருகின்றது. ஒரு இன ஒழிப்பை எத்தனை கொடூரமாகச் செய்ய முடியும் என்று உலகத்துக்குச் செய்து காட்டியவர் ஹிட்லர். ”

அதே மாதிரியான சித்ரவதை அகதி முகாம்களை ஈழத்தில் அமைப்பதற்கான திட்டங்கள் இப்போது ராஜபக்சே அரசிடம் இருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. வன்னிப்பகுதிகளில் இப்போது சொந்த மண்ணிலேயே அகதிகளாய் ஆக்கப்பட்டி-ருக்கும் சுமார் இரண்டரை லட்சம் தமிழர்களை “நல்வாழ்வு கிராமங்கள்” (welfare villages) என்கிற பெயரில் உருவாக உள்ள ஐந்து அகதி முகாம்களில் அடுத்த மூன்று வருடங்களுக்கு அடைத்து வைப்பதற்கான திட்டம் ஒன்றை இலங்கை அரசு உருவாக்கி-யிருக்கிறது.

விடுதலைப் புலிகளின் பிடியிலிருந்து வன்னி மக்களை விடுவித்து விட்டதாகச் சொல்லும் இலங்கை அரசு அம்மக்களை அவர்களின் இல்லங்களுக்கு அனுப்பாமல் அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு ஏன் அகதி முகாம்களிலே-யே அடைத்து வைக்க விரும்புகிறது என்பது முக்கியமான கேள்வி. இந்தத் திட்டத்தின் விவரங்களைச் சில தொண்டு அமைப்பு-களுக்கும் மேற்குலக அரச அதிகாரிகளுக்கும் இலங்கை அரசு கொடுத்திருக்கிறது. இந்த காம்ப்புகளில் நிகழக்கூடிய மனித உரிமை மீறல்களைப் பற்றிய கவலைகளை இப்போ-தே பல அமைப்புகள் தெரிவிக்கின்றன.

இலங்கை அரசின் “அழிவு கட்டுப்பாடு மற்றும் மனித உரிமைக் கழகத்தின்” செயலாளர் ராஜீவ விஜேயசின்ஹ “இந்த முகாம்கள் அரசாங்கத்தால் அமைக்கப்பட்டாலும், ராணு-வத்தின் கட்டுப்பாடுகள் அங்கே இருக்கும்” என்று குறிப்பிட்டிருப்பது அச்சத்தை மேலும் அதிகரித்திருக்கிறது. இனவெறி கொண்ட ஒரு ராணுவத்தின் கட்டுப்பாட்டின் கீழ் அகதி முகாம்கள் கொண்டு வரப்படும் போது அங்கே என்ன நடக்கும் என்பது நாம் அறியாத ஒன்றல்ல.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு, விசுவமடு போன்ற விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த பகுதிகளை விடுவித்து விட்டதாகக் கூறும் இலங்கை அரசு அங்கே அம்மண்ணுக்குச் சொந்தமான மக்களை குடியிருக்க விடாமல் அகதி முகாம்களில் அடைத்து வைக்க ஏன் விரும்புகிறது என்ப-தற்கான காரணம் இப்போது இந்தத் திட்டத்தின் மூலம் வெளிப்பட்டிருக்கிறது. ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் வவுனியா பகுதியிலும் இதைப் போன்ற மூன்று “நல்வாழ்வு கிராமங்கள்” அமைக்கப்பட உள்ளதாகவும் அரசாங்கம் தெரிவிக்கிறது. இந்த முகாம்களில் அடுத்த சில வருடங்களுக்கு அடை-படப் போகும் லட்சக்கணக்கான ஆதரவற்ற தமிழ் மக்களுக்கு நேரப் போகும் கதியை நினைத்தால் மனம் பதைபதைக்கிறது. மன்னார் பகுதிகளிலும் நூறு ஏக்கர் பரப்பளவில் “நல்வாழ்வு கிராமங்கள்” வரப் போகின்றன. பெயர்தான் நல்வாழ்வு கிராமம், மற்றபடி இவை சித்ரவதை முகாம்களாகத்தான் இருக்கும். எத்தனை உயிர்களை, சொத்தை இழந்து இந்த வெற்றியைப் பெற்றோம் என்-கிற எரிச்சல் சிங்கள ராணுவத்திடம் உண்டு. அந்த எரிச்சலைப் பழிவாங்கும் காரியங்க-ளின் மூலம் தமிழ்மக்களின் மீதுதான் காட்டு-வார்கள் என்பதில் சந்தேகமே கிடையாது. ஏற்கனவே ஆப்பிரிக்க நாடுகளில் ஐ.நா சபையின் அமைதிப் படைப் பணியில் ஈடுபட்-டிருந்த ஆயிரக்கணக்கான சிங்கள ராணு-வத்தினர் ஆப்பிரிக்கப் பெண்கள் மீதான பாலியல் சித்ரவதைப் புகார்களில் வெளி-யேற்றப்பட்டார்கள் என்பதை உலகம் கண்டிருக்கிறது. ஈழத்தமிழர்களிடம் அவர்கள் செய்து வரும் கொடுமைகளும் தெரியாதது அல்ல. அந்த ரத்த வெறி பிடித்தவர்களின் மேற்பார்வையில்தான் இந்த முகாம்கள் இயங்கப் போகின்றன.

விடுதலைப் புலிகளிடமிருந்து கைப்பற்றிய பகுதிகளில், ஏற்கனவே கிழக்குப் பகுதிகளில் செய்யப்பட்டு வரும் சிங்களக் குடியேற்றங்கள் போன்றவற்றை ஏற்படுத்தும் திட்டங்களும் இலங்கை அரசுக்கு இருக்கிறது. விடுதலைப் புலிகளுடனான யுத்தம் ஏறக்-குறைய முடிவுக்கு வந்து விட்டதாக அறிவிக்கும் ராஜபக்சே அடுத்த சித்ரவதை யுத்தத்தை அப்பாவித் தமிழ் மக்களின் மீது “நல்வாழ்வு கிராமங்கள்” என்கிற பெயரில் தொடங்கப் போகிறார். அங்கே என்ன நடக்கும் என்பதை உலகம் அறியுமா? அறிந்தால் அதைத் தடுக்கத்தான் செய்யுமா?

■ ■ ■

**கனடாவில் நடைபெறும் நிகழ்வுகளைப் பார்ப்பதற்கும், உங்கள் நிகழ்வுகளைப் பதிவதற்கும்.**

**www.inayam.net**

**416 400 6406**




அன்பிற்குரியவர்களே:
நமது தாயகத்தின் கல்விப் பாரம்பரியம் மகத்தானது. அதற்குக் காரணமாக அமைந்தவர்கள் சென்ற நூற்றாண்டினிலே எமது பாடசாலைகளுக்காக அர்ப்பணிப்புடன் தன்னலம் கருதாமல் உழைத்த பாடசாலை அதிபர்கள் பலர். அவர்களில் ஒரு சிலரைப் பற்றி தொடர்ந்து எழுதவேண்டும். ஆனால், இந்தப் புனித கைங்கரியத்தினை நிறைவேற்ற நான் ஒருவன் நினைத்தால் மட்டும் சாத்தியமில்லை. அவர்கள் பற்றிய தகவல் முழுமையானதாக அமைவதற்கு உங்களுடைய உதவியை நாடுகிறேன்

| | |
|---|---|
| அருட் தந்தை. லோங் அடிகளார் | புனித சம்பத்திராசிரியர் கல்லூரி |
| புனித. பிக்னெல் | யாழ்ப்பாணக் கல்லூரி |
| ஹண்டி பேரின்பநாயகம் | கொக்குவில் இந்துக் கல்லூரி |
| ஒறேற்றர் சுப்பிரமணியம் | ஸ்கந்தவரேதயாக் கல்லூரி |
| தெ.து. ஜெயரத்தினம் | மகாஜனக் கல்லூரி |
| ஐ. பி. துரைரத்தினம் | யூனியன் கல்லூரி |
| எஸ். குமாரசாமி | சோமாஸ்கந்தகல்லூரி |
| வீ. வீரசிங்கம் | சோமாஸ்கந்தகல்லூரி |
| பூரணம்பிள்ளை | ஹாட்லிக் கல்லூரி |
| நவரத்தினசிங்கம் | நெடுந்தீவு மகாவித்தியாலயம் |
| தம்பு | வேலணை மத்திய மகாவித்தியாலயம் |
| அம்பிகைபாகன் | வைத்தீஸ்வர மகாவித்தியாலயம் |

இத்தகைய பெருமைக்குரிய அதிபர்களுடன் உறவு, நேரடித் தொடர்பு, கற்ற அதிர்ஷ்டம், அவர்கள் பற்றி நீங்கள் கேள்விப்பட்டவை, அறிந்தவை, புகைப்படங்கள் என உங்கள் பலரிடம் திரட்ட வேண்டிய பல விஷயங்கள் உள்ளன.

உங்களால் எனக்கு உதவு முடியும். உதவினீர்கள் என்றால் பெரிதும் நன்றி உடையவனாக இருப்பேன். அவர்களில் ஒரு சிலரின் பெயர்களை இங்கு தந்துள்ளேன்.

நீங்கள் இவைபற்றிய விபரங்களை அனுப்பவேண்டிய முகவரி

**பொ.கனகசபாபதி**
225 John Tabor Trail,
Scarborough.
Ontarion.
M1B 2R5
416 -283 -1544

# "டார்வின்" ஓர் சிறந்த முதலீட்டாளர்

## (Charles Darwin - The Investor)



மாறன் செல்லையா
- நிதி திட்டமிடல் ஆலோசகர் -

தக்கன பிழைத்தல் என்னும் கூர்ப்புத் தத்துவத்தால் கூறிய டார்வின் ஒரு சிறந்த முதலீட்டாளர் என்பது பலருக்குத் தெரியாது. ஆனால் இந்தச் சூழ்நிலையில் முதலீடுகளில் கூட அவரின் கூர்ப்புத் தத்துவம் தெளிவாகத் தெரிவது பலருக்கும் தற்போது தெரிந்திருக்கும்.

டார்வின் இப்போது இருந்தால் என்ன செய்வார்? இந்த முதலீட்டு சூழ்நிலையில் சூழலுக்கு தகுந்தால் போல் தன்னை மாற்றிக் கொள்ளும் தன்மையைக் காட்டும் நிறுவனங்கள் அவரது பட்டியலில் முன்னுரிமை வகிக்கும். உதாரணமாக General Electric Dow Indexஇல் இருக்கும் மிகப் பழைய நிறுவனம், புதுமையான கண்டுபிடிப்புகளுக்கு பெயர்போனது.

இயற்கையில் உயிரினங்களிடையே எப்படி மாற்றம் ஏற்படுத்துகிறது என்பதை வரையறுத்து மக்களின் சிந்தனையில் மாற்றத்தைக் கொண்டுவந்த அவர் தற்போதைய மாறும் நிதிச் சூழலில் வங்கிகள், நிதி நிறுவனங்கள், Mutual Funds, இன்னும் மற்றைய தொழில் துறைகள் எப்படி மாறுகின்றன என்பதை அவதானிப்பதில் அவதானமாக இருப்பார்.


Financial Darwinsm, என்ற பெயரில் புத்தகங்கள் வந்திருக்கிறது. நிதி நிலவர ஆலோசகர்கள் Volatility Riskஐயும் டாவின் பெயரைச் சொல்லி வாடிக்கையாளர்களுக்கு புரிய வைத்துக் கொண்டிருக்கிறார்கள். விளம்பரங்களில் Darwinஇன் பெயர் வந்திருக்கிறது.

தற்போது அவர் என்ன செய்திருப்பார் என்று பார்க்க முன் தனது வாழ்வுக் காலத்தில் அவர் என்ன செய்தார் என்பதை பார்க்கவேண்டும். அவரது காலத்தில் இருந்த விஞ்ஞான மேதாவிகளை விட டாவின் வர்த்தகத்தில் வெற்றிகரமானவராக இருந்தார். முதுசமாக கிடைத்த சொத்தை நிலம், பங்குகள், முறிகள் என்பனவற்றில் மிகுந்த லாபம் தரக்கூடிய வகையில் முதலிட்டார். அவருடைய முதலீடுகளில் பல ரயில்வே கம்பெனிகளும் அடங்கும்.

1840களில் இன்றைய internet போல் அன்றைய ரயில்வே, வளர்ச்சி கண்டு கொண்டிருந்தது. இன்றைய Microsoft போன்ற நிறுவனங்கள் முதலீட்டாளர்களைக் கவர்ந்தது போல ரயில்வே நிறுவனங்கள் முதலீட்டாளர்களைக் கவர்ந்தன. இந்த Internet நிறுவனங்களின் சரிவு போலவே 1845இல் பாரிய சரிவு ரயில்வே நிறுவனங்களின் பங்குகளுக்கு ஏற்பட்டது. ஆனால், டாவின் சரிவு ஏற்பட முன்பே பணத்தைப் திரும்பப் பெற்றுக் கொண்டு வெளியேறி விட்டார்.

ஆனால், 1850ல் தப்பிப் பிழைத்த ரயில்வே நிறுவனங்களில் மீண்டும் முதலிட்டார். ஒரு பத்திரிகையாளரின் கேள்விக்கு தன்னிடம் முதலீட்டுக்கு விசேட திறமைகள் இல்லை என அவர் கூறியிருக்கிறார். ஆனால், இவரது இந்த திறமை இவரது குடும்பத்தினரிடையே இருந்து வந்திருக்கலாம். இவரது தாய்வழிப் பாட்டனார் கால்வாய் கட்டுதலில் முதலிட்டவர். தந்தையார் ஒரு வைத்தியராக இருந்த போதும் வீடு அடமானத்தில் முதலிட்டிருக்கிறார்.

இவர் தனது உறவு பெண் Emmaவை மணந்தபோது 10,000 பவுண் சீதனமாக பெற்றார். இதை முதலீடாக வைத்து அவர் இன்னும் 45,000 பவுண்களை சேர்த்தார். இது அந்தக் காலத்தில் ஒரு பணக்காரரிடம் இருக்கக்கூடிய செல்வமாகும் இது. 1881 அளவில் அவரது செல்வம் 282,000 பவுணாக இருந்தது. புத்தகங்களை வெளியிடுவதன் மூலம் 70,000 பவுண்கள் அவருக்கு கிடைத்திருந்தது. மிகுதி பணம் முதலீடுகளில் கிடைத்த லாபமாகும்.



1809 - 1882
Charles Darwin

இதில் குறிப்பிடத்தக்கது என்னவென்றால் டாவின் 1839 திருமணத்தின் 10 நாட்களுக்குப் பிறகு கணக்குப் புத்தகத்தில் கணக்கு வைக்கத் தொடங்கியவர் 1882ல் தனது மரணத்திற்கு முதல் நாள் வரை கணக்குப் புத்தகத்தை சரிபார்க்கச் தவறவில்லை. இந்த பெரிய விஞ்ஞானியின் இந்தச் சிறிய முக்கிய வழக்கம் முதலீடுகளில் அவருடைய வெற்றியைத் தீர்மானித்திருக்கிறது. கூடுதலாக விஞ்ஞான சிந்தனைகளை சூழ்ந்திருந்த மற்றைய விஞ்ஞானிகளுக்கு முதலீடுகள் பற்றிச் சிந்திக்க நேரம் கிடைப்பதில்லை. நேரம் கிடைத்தாலும் அவர்கள் இப்படி ஒழுங்காக இருந்தது கிடையாது.

மனிதனுடைய இயல்புகள் எழுந்தமானமாக நடக்கும் விவகாரங்களினால் பரம்பரை அலகுகளில் ஏற்படும் மாற்றம், இயல்புகளை மாற்றி தாயிடம் இருந்தும் தந்தையிடம் இருந்தும் அவற்றை பெற்று, சூழல் அதில் பொருத்தமானவற்றை தெரிவு செய்கிறது. அடுத்த சந்ததிக்கு காவிச் செல்லப்படும் இயல்புகள் ஒரு தனின் முதிர்ச்சி அடையும் மட்டும் தப்பிப் பிழைத்து ஒரு சோடியைத் தேர்ந்தெடுத்து, பின் பிறக்கும் சந்ததியை வளர்த்தெடுதலில் இருக்கிறது. இந்த டாவின் தத்துவம் மிக இலகுவானதும் பாரதூரமானதும் ஆகும்.

இதுபோலவே இன்றைய நிதி நிலைமையில் ஒரு முதலீட்டாளரின் மூளை 'தேர்வு' என்பதில் முனைப்பாக இருக்க வேண்டும். ஆயிரக்கணக்கான நிறுவனங்கள் பல்லாயிரக் கணக்கான முதலீட்டு வகைகள் என அதை நிரப்பி வருகிறது. இயற்கைத் தேர்வு தத்துவம் இந்தச் சந்தையிலும் தெரிவினைச் செய்கிறது. முதலீட்டு தேர்வு, தரமான நிர்வாகம், தெளிவான முதலீட்டு ஒழுங்கமைப்பு, தொடர்ச்சியான லாபமீட்டல் போன்ற இயல்புகள் தேர்வினை நடத்த உதவி செய்யும்.

இது ஒருபுறம் இருக்க டாவின் இன்று இருந்தால் என்ன செய்வார்? முதலாவதாக அவருக்கு கடன் இருக்காது. Warren Buffet போல பங்குகளை வாங்க அவர் கடன்பட மாட்டார். அவரின் ரயில்வே முதலீடு புதிய தொழில்நுட்பங்களில் இருந்த ஆர்வத்தைக் காட்டுகிறது. அத்துடன் வீழ்ச்சியடைந்த வங்கிகளுக்கும், கார் நிறுவனங்களுக்கும் அரசாங்கம் கொடுத்த Bail Outஐ விரும்பியிருக்கமாட்டார். ஏனென்றால் தக்கன பிழைத்தல் என்பது அவருடைய தத்துவம். அத்துடன் சட்டங்கள் என்பது வர்த்தகத்திற்கு ஒரு தடை என நம்பியவர் அவர்.

அவர் இன்றைய சூழ்நிலையில் CMHCயின் காப்புறுதிக்கு உட்பட்ட Real Estate முதலீடுகளில் (REIT) முதலிட்டிருப்பார் பாதுகாப்புக்காக. புதிய தொழில்நுட்பங்களை வரவேற்றிருப்பார். Rim, Apple, அமெரிக்க, பிரித்தானிய அரசாங்க முறிகள், CN Rail போன்றவற்றில் முதலிட்டிருப்பார். அவர் ஒரு ரயில்வேயால் கவரப்பட்டவர், Wall mart இந்த நிறுவனத்தின் கணக்குப் புத்தகம் மிக நல்ல நிலையில் இருக்கிறது. அவரது கணக்குப் புத்தகம் போல (Balance Sheet). எனவே அவர் Wall martஇலும் முதலிட்டிருப்பார்.

டாவின் பற்றி எழுத வந்து அவரது தத்துவத்தை சொல்லாமல் கட்டுரையை முடிக்க முடியாது. "இயற்கையில் தப்பிப் பிழைப்பது புத்திக்கூர்மையோ, வலிமையோ கொண்ட இனம் அல்ல. "It's not the strongest species that survive, nor the most intelligent, but the ones most responsive to change" (மாற்றத்திற்கு உணர்வைக் காட்டுவதும் அதற்கேற்ப தன்னை மாற்றிக்கொள்ளும் இனமே ஆகும்") என்பதாகும். இன்றைய காலகட்டத்தில் தமிழினம் கட்டாயம் உணர்ந்து கொள்ள வேண்டிய தத்துவம் ஆகும்.

Feb 12 2009 Charles Darwinனின் 200வது பிறந்த தினமாகும்.

maran@thaiveedu.com

■ ■ ■


# சக்தி என்றால் காப்புறுதி



1983ஆம் ஆண்டிலிருந்து காப்புறுதித்துறையில் முழுநேர நெறியான சேவை

"சகல காப்புறுதி நிறுவனங்களினதும் பிரதிநிதி"

- பாரபட்சமின்றி எந்த நிறுவன திட்டமாக இருப்பினும் தெளிவான துல்லியமான இலகுவில் கிரகிக்கும் வண்ணம் விளக்கம்.
- 9000 இற்கும் மேற்பட்ட திருப்திகரமான வாடிக்கையாளர்கள்
- 90க்கும் மேலான துரித காப்புறுதி இழப்பீடுகள்.
- எனது வாடிக்கையாளர் பட்டியலில் ஒருசில
  - வருமான வரி இலாகா, கணக்கியல் சோதனையாளர்கள் (Revenue Canada Auditors) .
  - நிதியமைச்சு அதிகாரிகள் (Ministry of Financial Services).
  - காப்புறுதி பிரதிநிதிகள், அவர்கள் குடும்ப அங்கத்தவர்கள், முதியோர், சிறார்கள்,
  - பிரபல வர்த்தகர்கள், குடும்பத்தவர்கள்,
  - பிரபல எழுத்தாளர்கள்,
  - வைத்தியர்கள்,
  - வழக்கறிஞர்கள்
- 85 வயதுக்குட்பட்ட எவருக்கும், எச்சூழ்நிலையிலும், நிச்சயமாக காப்புறுதியளிக்கும் திறமை (நிறுவனங்களின் நிபந்தனைப்படி)
- எக்காப்புறுதித் திட்டமாக இருப்பினும், விளக்கத்துடன் மன ஆறுதல் திட்டமாக பெற்றிட தயங்காமல் நாடுங்கள்
- மருத்துவ ரீதியின்றி 275,000 வரை காப்புறுதி

## - சக்திவேல் -

தொலைபேசி: 416.706.3530, 905.428.9299, 905.763.8912
Fax: 905.428.9307 Email: george14@sympatico.ca

**மன்னிக்கவும்!**
வாகனக் காப்புறுதி (Car Insurance), தீ காப்புறுதி (Fire Insurance) செய்வதில்லை!



ABC Abacus



Abacus training for creative minds

* சிறுவர்களை புத்தி நுட்பம் மிக்கவர்களாக வளர்க்கும் பயிற்சிமுறை.

* உலகரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்டு வேகமாக உலகெங்கும் பரவிவரும் கற்கைநெறி.


* கனடிய சூழலுக்கு ஏற்ப வடிவமைக்கப்பட்ட பாடத்திட்டத்தை உடையது, இதன் சிறப்பம்சம்.

* இக் கல்விமுறை உங்கள் பிள்ளைகளை வெற்றியாளராக்கக் கூடியது.

மேலதிகத் தொடர்புகளுக்கு: Active Brain Center

| Head Office: | Brampton | Newmarket | Scarborough N. |
|---|---|---|---|
| 416-615-2520 | 647-476-2532 | 647-890-2768 | 416-754-1141 |
| 2163 Lawrence Ave. E. (Birchmount & Lawrence) | 230 Sandalwood Parkway E. | 905-775-0395 | 80 Nashdene Rd. (Middlefield) |

Web:- www.activebraincenter.com | E-mail:- mail@activebraincenter.com


BUY AND SELL HOMES AND BUSINESS
அனுபவம்! திறமை! நேர்மை!
Hall of fame award
CENTURION AWARDS
for 5 YEARS
1.5%
LOWEST
Commission
கூடிய இலாபம்
Pat 416 490 7653 (SOLD)
PAT Pushpakanthan
Real Estate BROKER
EXPERIENCE! COMMITMENT! RESULTS!
Saint Thomas, Ontario
Gas station with property(2.26 acre)
Own A Branded Gas Station With Diesel And Propane On A Very Busy Highway. Opportunity For U Haul Franchise, Public Storage And Coffee Shop. Comes With Well Kept 2 Bedrooms Apartment. Live In Or Lease For Additional Income
Markham/Denison
43bm/4wsrm Great Family Home In The Area With An In-Law Apartment And Separate Entra
Mccowan/Sheppard
Large unit
3 BM/2WM large condo apt step to 24 hr ttc cl to school.sc twn cntreCall fr viewing
NIELSON/ SHEPPARD
$64 000
1bm condo apt Close To Shopping., and other amenities
Markham / steeles
Land +bldg sale
Automobile mechanical Zoning, excellent locn, multi-unit(6),lots of parkg,behind wallmart, best investment
MARKHAM/14 th ave
$349000
3bm/3wsrm det newer home Move in lots of upgrade.
MARKHAM/ Steeles
$2100
Auto repair garage ready to do your own business
Eglinton/Danforth
NewER HOME
NEWER
Immaculate Monarch Built Home, App. 1,800 Square Feet 3BM/4 WSRM
WARDEN/ST.CLAIR
DET HOME BRANDNEW 4BM/3WM CLSE TO SUBWAY
Jane/Rutherford
markham
3 bm det home close to ttc, school shoping centre
Scarborough
$289000
Kennedy/steeles
$79900
Commercial office/professional offices Good for investment
Selling your home ! ..... Lowest ..... More money for you! ....416-490-7653 (Sold)
Or Dir 416-894-1187
Hwy 7 & 9th Line
$349000
Newer det home
14 th ave/9 thline
sold
$480000
4bm/4 wsrm brand new home
Jane/Major Mckenzie
Brimley/steeles
$359000
3bm/3wsrm det home lots of upgrade, hardwood
Mcleven/Nielson
$129000
Mcleven/Nielson
$124000
2bm t'home newer excelent lon
MARKHAM/ 16 th ave
New home
$299000
Brand New Home Plan With Detached Garage, 9' Ceilings On Main Level, Hardwood On Main Level, Vinyl Windows.
9th Line/16th Ave
$209000
Parks, Schools, Go Train, Public Transportation, Shopping, 407Etr.
St Clair/Victoria Park
Det Bangalow Home Only $235,000
Great Starter Home Or Great Property For Investor.
HWY 401/V.PARK
Cafetaria Excellent location
Mcleven/Nielson
$118000
Indoor Pool, Whirlpool, Sauna, Squash Crt, Tennis Crt, Exercise & Gym, Party Room, 24 Hour Gatehouse Security1 bm
Kennedy/steeles
$89 900
Commercial office/professional offices Good for investment
Rental Corner
3 bdrm/3wsrm newer home1399/-
3bdrm apt 1195/-
Scarborough 3bdrm large bangalaw1150/-
4 bdrm home 1490/-
2bm condo apt Mccowan/shepard 1200/-
3bdm det home Scarborough 1200/-
1bm condo apt Newer in scarborough 1100/-
4 bm home in Markham 1400/-
3bm new home 3wsrm/3bm In markham 1390/-
Century 21
Affiliate Realty Inc.
Tel: 416-290-1200
VISIT....WWW.PATPUSH.COM
தனிநபர், வீடுகள், அலுவலகம், வியாபாரம் முதலியவற்றிற்கு அடமான வசதிகள்ஒழுங்கு செய்யப்படும்.

# மனம் பூரிக்க மங்களகரமான மனையை தேர்ந்தெடுங்கள்...

வீடு வாங்கவும் விற்க்கவும்
குறைந்த வட்டி விகிதத்தில்
மோட்கேஜ் ஒழுங்கு செய்வதற்கும்
அழையுங்கள்

**Ravi. Paramu**
Broker
**Direct: 416-262-4176**

HOMELIFE HIGHER STANDARDS



**$325.000**
McCowan / Denision
3 Bedrooms 2 Washroom
Finished Basement w/o



**$349.000**
Morningside / Staines
3 Bedrooms 3 Washroom



**$479.000**
14th / McCowan
3 Bedrooms 3 Washroom
Part Finished Basement w/o



**HomeLife Today Realty Ltd.,** Brokerage*

**Bus: 416-298-3200**

31 Progress Ave., Suite 210,
Toronto, ON, M1P 4S6

*Independently Owned and Operated, Realtor



**Connectiong tutors & students in the GTA**

# BRILLIANT TUTOR @ YOUR HOME INC.

தமிழ் மாணவர்களின் நலன் கருதி அவர்களின் வீடுகளுக்கு சென்று
பாடங்களை ஒன்ராரியோ பாடத்திட்டத்திற்கு அமைய கற்பித்து வருகின்றோம்.

- SCIENCE
- CHEMISTRY
- PHYSICS
- BIOLOGY
- MATH
- CALCULUS
- ALGEBRA & GEOMETRY
- DATA MANAGEMENT
- ENGLISH
- FRENCH

EQAO Preparation

## Call Kuna Today

Tel: **416-291-4684, 905-507-8470, 647-295-5862,** Fax: **416.264.6306**


E-mail: info@brillianttutor.com

Over 100 Tutors

W e  w i l l  v i s i t  y o u r  h o m e

| JK to GRADE 8 | 1 ON 1 OR GROUP | 9 to University 2nd Year |
|---|---|---|
| $85.00/MONTH | | $90.00/MONTH |

Over 1500 Students



79 Eastvale Drive, Markham, ON, L35 4R9

Markham, Scarborough, Mississauga, Toronto, Etobicoke, Brampton, North York, East York, Richmond Hill, Ajax, Malton, New Market, Vaughan

digi Media - 416-467-4952

# அமினோ அசிட் இரகசியங்கள்- 1
# (Amino Acids)

- சிவா சுப்ரா -

தண்ணீரையும், காற்றையும் போல மனித உடலுக்கு மிக்க அவசியமான இன்னுமொரு பொருள் புரதம் ஆகும். எமது தசையின் பெரும்பகுதி புரதத்தினால் ஆனது. எலும்பு, தோல், இழையங்கள் எல்லாம் புரதத்தினால் ஆனவை ஆகும்.

உடலை எமக்குத் தெரியாமல் இயக்குவதும், உடலை சமர்ச்சீர் நிலையில் பாதுகாக்கும் ஓமோன்கள் எல்லாம் புரதத்தினாலேயே ஆனவை. உதாரணத்திற்கு கூறுவதாயின் நமது குருதியில் உள்ள குளுக்கோசின் அளவைக் கட்டுப்படுத்தும் இன்சுலின் என்கின்ற ஓமோன் புரதத்தினால் ஆனது.

இன்சுலின் புரதத்தினால் ஆன காரணத்தால்தான் ‘டயபட்டிக்’ (இனிப்பு வருத்தம்) உள்ள நோயாளர்கள் இன்சுலினை வாய் ஊடாக எடுக்க முடியாமல் உள்ளனர். அதற்கு பதிலாக ஊசி மூலம் குருதிக்குள் ஏற்றிக் கொள்கின்றார்கள். இன்சுலின் புரதம் என்பதால் அதை வாய் மூலம் உள்ளெடுத்தால் அது நமது குடல் தொகுதியில் சமிபாடு அடைந்து பலன் இல்லாது ஆகிவிடும்.

குருதியில் மட்டும் பல புரதங்கள் உள்ளன. சுவாசப்பையில் இருந்து ஒட்சிசனை உடல் கலங்களுக்கு எடுத்துச் செல்வதும், கலத்தில் கழிவுப் பொருளாக விடப்படுகின்ற காபனீர் ஒட்சைட்டை கலத்தில் இருந்து எடுத்து வந்து சுவாசப்பை வழியாக வெளி மண்டலத்திற்கு வழி அனுப்பி வைப்பதும் ஈமோகுளோபின் (Hemoglobin) ஆகும். இந்த ஈமோகுளோபினில் 95 வீதம் புரதம் உள்ளது. மிகுதி ஐந்து வீதம் அயன் (இரும்பு) ஆகும்.

நம்மை தாக்க உடலுக்குள் புகுகின்ற பற்றீரியா, வைரைசை எல்லாம் எதிர்த்து தாக்குதல் நடாத்தும் தற்காப்பு படைவீரர்கள் எல்லாம் புரதத்தினால் ஆனவர்கள். இவர்கள் நமது குருதியில் பாதுகாப்பு பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர். நமது உடலை தாக்க பல எதிரிகள் உள்ளனர். ஒவ்வொரு வகை எதிரிக்கும் எதிராக ஒவ்வொரு வகை தற்காப்பு படைவீரர்கள் பலவகையான புரதத்தினால் உருவாக்கப்பட்டு பெரும் பாதுகாப்பு அரண் கட்டப்பட்டுள்ளது.

மாப்பொருளை (காபோகைரேற்) எவ்வாறு விலங்குகளால் உருவாக்க முடியாதோ, அதே போல புரதத்தையும் மனிதர்களால் உருவாக்க முடியாது. வழமை போல தாவரங்களே புரதத்தையும் உருவாக்குகின்றன. மண்ணில் உள்ள நைதரசனையும், வளி மண்டலத்தில் உள்ள காபனீர் ஒட்சைட் அத்தோடு தண்ணீரையும் சேர்த்து தாவரங்கள் புரதத்தை உருவாக்குகின்றன. இதற்கு சக்தி தேவை. அந்த சக்தியை தாவரங்கள் சூரிய ஒளியில் இருந்து பெற்றுக் கொள்ளுகின்றன. சில தாவரங்கள் வளிமண்டலத்தில் உள்ள நைதரசனை நேரடியாக பாவித்தும் புரதத்தை உருவாக்கும் சக்தி படைத்துள்ளன.

இந்த சக்தி எதுவும் விலங்குகளுக்கு தற்போது இல்லை. அதனால் தான் எல்லா விலங்குகளும் தமக்கு தேவைான புரதத்தை பெற்றுக் கொள்ளவும், மாப்பொருளை பெற்றுக் கொள்ளவும் தாவரங்களை தேட வேண்டியுள்ளது. அல்லது இந்த தாவரங்களை ஏற்கனவே உண்டு கொளுத்த ஆடு, மாடு, கோழி, மீன் உணவுகளை உண்ண வேண்டியுள்ளது. விஞ்ஞான வளர்ச்சியால், மரபணுங்களில் ஏற்படுத்தப்படும் செயற்கையான மாற்றங்கள் காரணமாக ஏதோ ஒரு மில்லியன் வருடங்களின் பின்னர் மனிதர்களும் சூரிய ஒளியை பாவித்தும், வளியில் உள்ள காபனீர் ஒட்சைட்டையும், நைதரனையும், ஒரு கிளாஸ் தண்ணீரையும் பாவித்து தமக்குரிய உணவை தாமே உருவாக்கும் நிலை வரலாம். அதற்குப் பிறகு இந்த அரிசி, பருப்பு, இறைச்சி எதுவும் மனிதருக்கு தேவையில்லாம் போய்விடும். நாய், பூனையை வீட்டில் ஆசையாக வளர்ப்பது போல சந்தோசத்திற்காக ஒரு கோழியை, ஆட்டை, மாட்டை வளர்க்கின்ற நிலைமை வரலாம்.

உருளைக்கிழங்கை சாப்பிட்டாலும், அரிசியை சாப்பிட்டாலும், ரொட்டி, மற்றும் எல்லா விதமான பழங்கள் என்று எதை சாப்பிட்டாலும் நமது உடற்தொகுதியில் அவை சமிபாடு அடைந்து கடைசியில் குளுக்கோசாக மாறுகின்றன. குடல் தொகுதியில் இருந்து இந்த குளுக்கோசை குருதி உறிஞ்சி எடுத்துக் கொள்கின்றது. ஆக மொத்தத்தில் மாப்பொருளின் அடிநாதம் குளுக்கோஸ்.

அது போல நீங்கள் இறைச்சி சாப்பிட்டால் என்ன, பருப்பு சாப்பிட்டால் என்ன, சோயா, மீன், முட்டை, பால் என்று எந்த வகை புரத உணவை சாப்பிட்டாலும் புரதம் நமது குடற்தொகுதியில் சமிபாடு அடைந்து இறுதியில் அமினோ அமிலம் என்கின்ற நிலையை அடைகின்றன. இந்த அமினோ அமிலத்தை நமது குருதித் தொகுதி எடுத்துக் கொள்கின்றது.

இவ்வாறு எடுத்துக் கொள்ளப்பட்ட அமினோ அமிலம் பின்னர் நமது உடலின் தேவைக்கு ஏற்ப ஓமோன் ஆக, தசையாக, நோய் எதிர்ப்பு சக்தியாக, ஈமோகுளோபினாக, தசை இழையங்களாக என்று விரும்பிய வாறு மாற்றி அமைக்கப்படுகின்றது. இவ்வாறு அமினோ அமிலங்களை வைத்து வித்தை காட்டும் சக்தி நமது உடலுக்கு இருக்கின்றது.

நமது உடல் ஆரோக்கியமாக இயங்குவதற்கு ஒட்டுமொத்தமாக இருபது அமினோ அமிலங்கள் தேவை. இதில் குறைபாடு ஏற்பட்டால் நமது உடல் நலனில் குறைபாடு ஏற்பட்டு மரணம் நிச்சயமாகும். இதில் எட்டு அமினோ அமிலங்கள் Essential Amino Acids என்றும், மிகுதி 12 அமினோ அமிலங்களும் Nonessential Amino Acids என்றும் அழைக்கப்படுகின்றன.

Essential Amino Acids என்று அழைக்கப் படுவன Valine, Lysine, Threonine, Leucine, Isoleucine, Tryptophan, Phenylalanine, Methionine என்பனவாகும்.

இவற்றை மனித உடலினால் ஒரு போதும் உருவாக்க முடியாது. எனவே இவற்றை நாம் தாவரங்களில் இருந்தோ அல்லது ஏனைய விலங்குகளில் இருந்தே பெற்றே ஆகவேண்டும். அவ்வாறு இந்த எட்டு அமினோ அமிலங்களையும் நமது உடல் பெற்றுக் கொண்டால் மிகுதியான 12 அமினோ அமிலங்களை நமது உடலே தயாரித்து விடும்.

உடலுக்கு மிக முக்கியமான இந்த எட்டு அமினோ அமிலங்களையும் நாம் நாம் உண்ணும் உணவுப் பொருட்களில் இருந்து பெற்றுக்கொள்கின்றோமா?

சிலர் மரக்கறி உணவுகளை மட்டும் உண்ணுகின்றனர். சிலர் இதனோடு பால், முட்டையை சேர்த்து உண்ணுகின்றனர். இன்னும் சிலர் மாமிசம் உண்டாலும் பால் சாப்பிடுவதில்லை. இவ்வாறு வகை வகையான உணவுப் பொருட்களை உண்பவர்கள் உள்ளனர். இவர்கள் எல்லாம் தமக்கு அத்தியாவசியமான இந்த எட்டு அமினோ அமிலங்களையும் பெற்றுக் கொள்கின்றார் களா? எந்த உணவில் எந்த வகையான அமினோ அமிலம் உள்ளது? மரக்கறி உணவு மட்டும் உண்பவர்களால் இந்த எட்டு அமினோ அமிலங்களையும் பெற்றுக் கொள்ளமுடியுமா? இது பற்றியும் இன்னும் மேலதிகமான தகவல்கள் பற்றியெல்லாம் நாம் அடுத்த இதழில் பார்க்கலாம்.

siva@thaiveedu.com

■ ■ ■

National Driving Institute

Male & Female Experience Instructors
will Teach For G1, G2 Road Test

Early Appointment For G1, G2 Road Test

Please Call:

Mrs. Saththi 416-816-1500 / 905-653-3878

N.K.S
Drapery & Blinds Fabric LTD



திறமையான
சேவையால் பல
விருதுகளை பெற்ற
நிறுவனம்

உங்கள் வீட்டுக்குனுத் தேவையான சகலவித யன்னல் திரை வகைகளையும், கேட்டின் துணி வகைகளையும் மிகவும் மலிவான விலையில் பெற்றுக் கொள்ள அழையுங்கள்.

கேதா நடராஜா
416.321.6420

Ketha Nadarajah
(President)
Tel: 416.321.6420, 905.944.0218
Fax: 416.321.2217
www.nksdrapery.ca

Drapery & Blinds Fabric Ltd., 210 Silver Star Blvd., Unit #825, Scarborough, ON M1V 5J9

# முதலீட்டுடன் கூடிய நிரந்தர ஆயுட்காப்புறுதி (Universal Life Insurance)

இன்று அதிகமான காப்புறுதி நிறுவனங்களால் பெருமளவில் விற்பனையாகும் திட்டம் இந்த (Universal Life) என அழைக்கப்படும் முதலீட்டுடன் கூடிய ஆயுட்காப்புறுதி திட்டமாகும். கடந்த 20 வருடகாலமாக கனடாவில் இத் திட்டத்தையே பெருந்தொகையான மக்கள் வாங்கியுள்ளார்கள். காரணம் ஆயுட் காப்புறுதியைப் பெற்றுக் கொள்பவர்களைக் கவரும் வகையில் சேர்க்கப்பட்டுள்ளது.

மிகவும் எளிதான பல விடையங்களும் அத்துடன் மிகவும் சிக்கலான சில அம்சங்களும் இந்த ஆயுட்காப்புறுதித் திட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

நிரந்தர ஆயுட்காப்புறுதியும், அத்துடன் ஒரு முதலீட்டுத் திட்டமும் இணைந்ததே இந்த (Universal Life) முதலீட்டுடன் கூடிய நிரந்தர ஆயுட்காப்புறுதி திட்டம்.

ஆயுட் காப்புறுதிக்கான மாதாந்த கட்டுப்பணத்தில் ஒரு பகுதி காப்புறுதிக்கும் மறு பகுதி முதலீட்டுக்கும் செலுத்தப்படும். எனவே ஆயுட்காப்புறுதியுடன் சேர்ந்து ஒரு முதலீட்டுச் சேமிப்பும் இந்த திட்டத்தில் கிடைக்கும்.

ஆயுட் காப்புறுதித் திட்டங்களில் (Whole Life) ஆயுட்காலம் முழுவதற்குமான காப்புறுதியும் (Universal Life) எனப்படும் முதலீட்டுடன் கூடிய இந்த ஆயுட்காப்புறுதியும் பல விடயங்களில் ஒரேமாதிரியாக இருந்தாலும் Universal Life காப்புறுதி பல விஷேட தன்மைகளை கொண்டுள்ளது.

ஒரு Universal Life முதலீட்டுடன் கூடிய ஆயுட்காப்புறுதிக்கான மாதாந்தக் கட்டணத்தை கணிக்கும்போது (Minimum Premium) என்ற மிகக் குறைந்த மாதாந்தக் கட்டணம் ஒரு தொகையை கூறுவார்கள். அத்துடன் அதே காப்புறுதிக்கான (Maximum Premium) ஆகக்கூடிய மாதாந்தக் கட்டணமும் தீர்மானிக்கப்படும்.

எனவே ஒருவர் மிகக் குறைந்த கட்டணமான மாதாந்தக்கட்டணத்தை மட்டும் செலுத்தினால் அது காப்புறுதிக்குமட்டுமே போதியதாகும். இப்படியாக குறைந்த கட்டணம் மட்டும் செலுத்தும் Universal Life திட்டத்தில் முதலீட்டுக்கணக்கில் ஒரு பணமும் கிடைக்காது. மிகக் குறைந்த கட்டணத்திலும் பார்க்க ஒரு சிறுதொகைப் பணத்தை மேலதிகமாக காப்புறுதிக்கான மாதாந்தக் கட்டணமாக செலுத்தினால் அந்தக் காப்புறுதித் திட்டத்துடன் ஒரு முதலீட்டுச் சேமிப்பும் கூடவே இருக்கும். இதனை Fund Value, அல்லது Cash value எனக் கூறுவார்கள். இந்தப் பணத்தை காப்புறுதி உரிமையாளர் கடனாகப் பெறமுடியும். அல்லது காப்புறுதியை இரத்துச் செய்து முழுப்பணத்தையும் பெற்றுக்கொள்ளலாம். அல்லது இந்த முதலீட்டு தொகையை ஆயுட் காப்புறுதியுடன் சேர்த்து ஆயுட்காப்புறுதியின் பணமும் முதலீட்டுப்பணமும் உங்கள் பலன் பெறுபவருக்கு கிடைக்கும்படி செய்யலாம்.

Death Benefit = Face Amount + Fund

### ஆயுட்காப்புறுதியும் முதலீடும் ஒரே திட்டத்தில் இருப்பதால் உள்ள நன்மைகள்.

**"ஆயுட் காப்புறுதித் திட்டத்தில் உள்ள முதலீட்டுச் சேமிப்புக்குக் கிடைக்கும் வட்டி வருமானமாகக் கருதப்பட வேண்டியதில்லை. எனவே அதற்கு வரி கட்ட வேண்டியதும் இல்லை."**

ஆயுட்காப்புறுதிக்கான மாதாந்தக் கட்டணத்தை ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு கட்டிய பின்னர் பின்பு பணம் செலுத்தாமல் காப்புறுதியை ஆயுட்காலம் வரை வைத்திருக்க முடியும். குறிப்பாக 10, 15 அல்லது 20 வருடங்களில் பணம் செலுத்தி முடிக்கலாம்.

ஆயுட்காப்புறுதித்திட்டத்தில் உள்ள முதலீட்டுச் சேமிப்புக்குக் கிடைக்கும் வட்டி வருமானமாகக் கருதப்பட வேண்டியதில்லை. அதற்கு வரி கட்ட வேண்டியதும் இல்லை.

குறிப்பிட்ட காலத்திற்கு பின்பு ஆயுட்காப்புறுதிக்கு பணம் செலுத்த முடியாத நிலை ஏற்பட்டால் முதலீட்டில் உள்ள பணத்தை மாதாந்தத்திற்கு கட்டுப்பணமாக உபயோகிக்க முடியும். இதனை Premium Loan எனக் கூறுவார்கள். இதன் மூலம் உங்கள் காப்புறுதி இரத்து செய்யப்படுவதை தடுக்க முடியும்.

ஒரு ஆயுட்காப்புறுதி பெற்றுக்கொண்ட ஒருவர் 20 வருடங்களின் பின்பு அல்லது ஒரு குறிப்பிட்ட காலத்தின் பின்பு ஆயுட்காப்புறுதி அவசியம் இல்லை என்று கருதி ஆயுட்காப்புறுதியை இரத்து செய்யும் போது கட்டிய பணம் முழுவதையும் மீளப் பெறுவதற்கான வாய்ப்புக்கள் உள்ளது.

மாதாந்தக் கட்டுப்பணத்தை ஒவ்வொருவரும் விரும்பியவாறு அதிகரிக்க முடியும். அதாவது ஆரம்பத்தில் ஒருவர் மிகக் குறைந்த கட்டணத்தில் ஆரம்பித்து வசதிகள் வரும்போது மாதாந்தக் கட்டணத்தை அதிகரிக்க முடியும்.

ஆயுட்காப்புறுதியும் முதலீடும் ஒரே திட்டத்தில் இருப்பதால் ஆயுட்காப்புறுதியும் பாதுகாப்பும் முதலீடும் ஒரு மாதாந்தக் கட்டணத்தில் பெற்றுக்கொள்ள முடியும். வயோதிபமான காலத்தில் பணத்தேவை ஏற்பட்டால் முதலீட்டில் உள்ள பணத்தை பெற்றுக்கொள்ள முடியும்.

'Buy term and Invest the difference' என்று கூறப்படும் தவணைக் காப்புறுதியை வாங்கி மிகிதிப்பணத்தை முதலீடு செய்யுங்கள் என்ற கருத்தை Universal Life என்ற திட்டம் மூலம் நிவர்த்தி செய்ய முடியும்.

### Buy term and invest the difference

Buy term and invest the difference என்று கூறுபவர்கள் ஒரு குறிப்பிட்ட திட்டம் மட்டுமே விற்பனை செய்பவர்கள். தவணைக்காப்புறுதி (Term insurance) மட்டும் விற்பனை செய்யும் நிறுவனங்கள் தவணைக்காப்புறுதியை தனிமையாக ஒரு திட்டமாகவும் (investment) முதலீட்டை இன்னுமொரு தனித்திட்டமாகவும் விற்பனை செய்து, பலருக்கு காப்புறுதியும் இல்லை முதலீடும் இல்லை என்ற நிலைக்குத் தள்ளியுள்ளார்கள். காரணம் தவணைக் காப்புறுதி ஒரு குறிப்பிட்ட வயதில் முடிவடையும் அதன் பின்பு கட்டிய பணமும் இல்லை. காப்புறுதியும் கிடைக்காது. அதேவேளை முதலீட்டில் உள்ள பணம் பங்குச்சந்தையைப் பொறுத்து கூடிக்குறையும் அத்துடன் இந்தப்பணத்தை நீங்கள் எப்போதும் எடுத்து செலவு செய்ய முடியும்.

எனவே (Buy Term insurance and invest the difference) அடிப்படையில் தவணைக் காப்புறுதி வாங்குபவர்கள் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். (Universal Life Insurance) முதலீட்டுடன் கூடிய நிரந்தர காப்புறுதியைப் பெற்றுக்கொள்பவர்கள் பலவிதமான திட்டங்களை பெற்றுக்கொள்ள முடியும்.

### Level Cost Monthly Premium (ஒருபோதும் மாற்றமடையாத மாதாந்த கட்டுப்பணம்)

Level Cost Monthly Premium மாதாந்தக் கட்டணம் ஆரம்பத்தில் இருந்து இறுதிவரை மாறாமல் இருக்கும் திட்டம்.

### வருடாந்தம் அதிகரிக்கும் மாதாந்தக் கட்டுப்பணம்

YRT or ART (Monthly Premium)
YRT – Yearly Renewable Term
ART – Annual Renewable Term அல்லது YRT அல்லது ART எனஅழைக்கப்படும். மாதாந்தக் கட்டணத்தை தெரிவு செய்வதால் ஆரம்பத்தில் மாதாந்தக் கட்டணம் குறைவாக இருக்கும். அதாவது வயது குறைவாக இருக்கும் போது குறைந்த தொகை காப்புறுதியின் கட்டுப்பணமாகவும் கூடிய தொகை முதலீட்டுக்கும் செலுத்தப்படும். அதனால் கூடிய தொகைப்பணம் காப்புறுதித்திட்டத்தில் Cash Value அல்லது (Fund Value) முதலீட்டில் உள்ள பணத்தை எடுத்து காப்புறுதிக்கு செலுத்தப்படும். இப்படியான திட்டத்தில் உள்ள முதலீட்டுக்கணக்கில் பணம் இல்லாவிட்டால் கூடுதலான மாதாந்தக் கட்டணம் கட்ட வேண்டிய நிலை ஏற்படலாம். அல்லது காப்புறுதித்திட்டம் ஒருவரின் ஆயுட்காலம் வரை நீடிக்காது தடைப்படலாம். எனவே YRT அல்லது ART எனப்படும் மாதாந்தக் கட்டுப்பண முறையில் பெற்றுக்கொள்ளப்படும் திட்டங்களுக்கு ஆரம்ப காலத்தில் காப்புறுதியின் குறைந்த மாதாந்தக் கட்டணத்தை விட சற்று அதிகமான பணத்தை செலவு செய்தால் அதிக அளவு முதலீட்டை ஏற்படுத்த முடியும். அதனால் காப்புறுதித்திட்டத்தின் Cash Value கூடிய தொகையாக இருக்கும். அத்துடன் காப்புறுதித் தொகையும் அதிகரிக்கும்.



சிறீதரன் துரைராஜா
- ஆயுட் காப்புறுதி முகவர் -

அதாவது YRT திட்டத்தில் ஒருவர் குறைந்த வயதில் பெற்றுக்கொண்ட காப்புறுதித் தொகையை விட பன்மடங்கு அதிகமான தொகை காப்புறுதிப்பணமாக கிடைக்கும். காரணம் Death Benefit = Face Amount + Fund value

எனவே ஒருவர் வயது குறைவாக இருக்கும் போது குறைந்த அளவு தொகைக்கு காப்புறுதி செய்து வயது அதிகரிக்கும் போது கூடிய தொகைப்பணத்தை காப்புறுதியாக பெறுவதற்கு இந்த முதலீட்டுடன் கூடிய நிரந்தர காப்புறுதி மிகவும் சிறந்தது.

உதாரணமாக ஒருவர் 20 வயதில் 100,000 டொலர்களுக்கு காப்புறுதி செய்து மாதந்தம் 50 டொலர்கள் செலுத்தினால் அவர் 75 ஆவது வயதில் அவரது காப்புறுதித் தொகை 400,000 டொலர்களாக அதிகரிக்க முடியும். அத்துடன் முதலீட்டுச் சேமிப்பில் உள்ள பணத்தொகை 200,000க்கும் அதிகமாக இருக்கும். எனவே சிறுவயதில் ஆரம்பிப்பதன் மூலம் பாதுகாப்பையும் முதலீட்டுத் திட்டத்தையும் ஒரே சமயத்தில் பெற்றுக் கொள்ள முடியும். பாதுகாப்பையும் முதலீட்டுச் சேமிப்பையும் ஒரே நேரத்தில் பெற்றுக் கொள்ள UNIVERAL LIFE INSURANCE மிகவும் சிறந்த திட்டமாகும்.

sritharan@thaiveedu.com

■ ■ ■

சொர்க்கமே என்றாலும் அது சொந்த வீடு போல வருமா...
Uthayan Alex Sivasambu B.Sc. (Hons), M.B.A
Broker
Ottawa: 613.276.SALE (7253)
Toronto: 416.659.SELL (7355)
alex-sivasambu@coldwellbanker.ca, www.sivasamburealty.com
COLDWELL BANKER


# ஆயுட் காப்புறுதியும் சேமிப்புத்திட்டங்களும்

## LIFE INSURANCE & RESP



- வயோதிபர்களுக்கான காப்புறுதி மிகக் குறைந்த செலவில்
  மருத்துவ பரிசோதனை எதுவும் வேண்டியதில்லை
- ஆயுட்காப்புறுதி
  ஆயுட்காலம் வரை ஒரே மாதாந்தக் கட்டணம்
  குறிப்பிட்ட காலத்தின்பின்பு பணம் கட்டவேண்டியதில்லை
  கட்டிய பணத்தை மீளப்பெற முடியும்
- கொடிய நோய்களுக்கான காப்புறுதி
  புற்றுநோய், மாரடைப்பு, பாரிசவாதம்(Stroke) போன்ற
  24 கொடிய நோய்களால் பாதிக்கப்பட்டால் 2மில்லியன் வரை
- குழந்தைகளின் உயர் கல்விக்கான சேமிப்புத்திட்டம் - RESP
  20% - 40% அரச மானியத்துடன் 15% அதிக போனஸ்

**85 வயதுக்குட்பட்டவர்களுக்கான**
**மருத்துவ பரிசோதனையற்ற காப்புறுதி**
**$50,000 வரை**

digi Media

**Are you Looking for a New Career**
**FREE**
**LLQP Lessons and Training to become a Life Insurance Agent**

## சிறீதரன் துரைராஜா

MDRT Member of Million Dollar Round Table

**416.918.9771**

759 Warden Ave. Toronto, ON M1L 4B5, Bus: 416-759-5453 x: 407



INDUSTRIAL ALLIANCE
INSURANCE AND FINANCIAL SERVICES INC.

Assumption Life

LiLand INSURANCE INC.


**மில்லியன் டொலர் பெறுமதி மிக்க இலவச ஆலோசனை**


NEW CREDIT - BAD CREDIT - NO CREDIT
BANKRUPT - NO PROBLEM
On Line - Credit Approvel, All kind of Credit Repairs
உங்கள் வியாபார முதலீடு வீட்டு முதலீடு ஆகியவற்றுக்கான
பணத்தேவைகள் உடன் ஒழுங்கு செய்து தரப்படும்
Shan Kanapathipillai
416.890.2300
e-mail: shankana@juno.com
LIC: M08002487
CENTUM
Looking out for your best interest

• Real Estate Law
• Business Law
YASO SINNADURAI
BARRISTER & SOLICITOR, NOTARY PUBLIC
THE LAW OFFICES OF YASO SINNADURAI
2100 Ellesmere Rd., Suite 202
Scarborough, Ont. M1H3b7
Tel: 416•265•3456
Fax: 416•265•2770

ACCESS LEGAL SERVICES
PROFESSIONAL CORPORATION
INJURED?
Car Accident (MVA) Claims
Work Accident (WSIB) Claims
Bankruptcy
416-733-8880

ஒரே கூரையின் கீழ்
15 வருடங்களாக தரம்மிக்க புடவைகள்,
சுரிதார்கள்... வாடிக்கையாளர்களின் நலன்கருதி
கிளைகளைக் குறைத்து.
விலைகளைக் குறைத்து நம்பமுடியாத
வியக்கவைக்கும் விலைகளில்
புத்தம்புதிய வெளியீடுகள்.
Nallur Kumaran
KUMARANS INC.
நல்லூர் குமரன்
பட்டுச்சேலைகளின் சாம்ராஜ்யம்
Nallur Kumaran Super Store
2776 Kennedy Road (Kennedy & Finch) Scarborough, Ont.
Tel: 416•291•1333 (Nallur Kumaran Plaza)


botanical garden - montreal


Notre Dame - montreal



இம்மாதப் புகைப்படக் கலைஞர்

**துளசி மனோகரலிங்கம்**

கனடா Toronto யோர்க் பல்கலைக்கழகத்தில் மூன்றாம் ஆண்டு கலைத்துறையில் கல்விகற்கும் இவர் தனது ஓய்வுநேரங்களில் புகைப்படத்துறையிலும் ஆர்வம்காட்டி வருகின்றார்.

**உங்களிடம் (நீங்கள் எடுத்த) அழகான புகைப்படங்கள் இருக்கின்றனவா? அவற்றை நாங்கள் பிரசுரிக்க விரும்புகிறோம்.**

புகைப்படம் எடுத்தவரின் பெயர், விலாசம், தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல், புகைப்படம், எடுக்கப்பட்ட காட்சி அல்லது எடுக்கப்பட்டவருடைய விபரங்கள் என்பவற்றுடன் நீங்கள் எடுத்த புகைப்படத்தையும் அனுப்பிவையுங்கள். அவை இந்தப் பகுதியில் பிரசுரமாகும்.

• சுமார் 10 வருடங்கள் Scotia வங்கியில் மோட்கேஜ் அனுபவம்
• 7 நாட்களும்... 24 மணி நேரமும் நட்பான சேவை
• குறைந்த வட்டி வீதம் • 0% Down Payment
Scotiabank
Ragavan Ramanathan
Mortgage Development Manager
• New • Switch • Refinance
Tel: 416•579•7533
Fax: 416•579•9433
ragavan.ramanathan@scotiabank.com

PROTECT YOURSELF AND YOUR LOVED ONES!
Insurance Ocean
Product we serve:
• Accident Death Insurance • Affordable Life Insurance • Critical Illness Insurance
• Disability Income Insurance • Mortgage Insurance • Permanent Life Insurance
• Pet Insurance • Term Life Insurance • Travel Insurance • No Medical Exam Insurance
We provide free training and prepare you for the certification
Now hiring at Ocean Mortgage Include: Marketing Specialist, Sales Reps.
Call today 416-321-2300
Get the best rate online @
www.insuranceocean.com
digi